சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல் (ஆற்றுப்படை நீங்கலாக)

முனைவர் (பிஎச்.டி.) பட்டத்திற்காக
இராணிமேரி கல்லூரி(தன்னாட்சி)க்கு
அளிக்கப்பெற்ற ஆய்வேடு

ஆய்வாளர்

ர. உமா, எம்.ஏ., எம்.ஃபில்.,
தமிழ்த்துறை

ஆய்வு நெறியாளர்

முனைவர் (திருமதி) **ந. கலைவாணி**
எம்.ஏ. (தமிழ்), எம்.ஃபில்., எம்.ஏ.(மொழியியல்),
பி.எட்., பிஎச்.டி., மலையாளம் (சான்றிதழ்)
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை

தமிழ்த்துறை
இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி)
சென்னை 600 004

ஏப்ரல் - 2011

முனைவர் (திருமதி) ந. கலைவாணி,
எம்.ஏ. (தமிழ்), எம்.ஃபில்., எம்.ஏ. (மொழியியல்),
பி.எட்., பிஎச்.டி., மலையாளம்(சான்றிதழ்)
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி),
சென்னை-600 004.

மேற்பார்வையாளர் சான்றிதழ்

"சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல் (ஆற்றுப்படை நீங்கலாக)" என்னும் தலைப்பிலான இவ்ஆய்வேடு சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (பிஎச்.டி.,) பட்டம் பெறுவதற்காக எனது மேற்பார்வையின்கீழ் இராணிமேரி கல்லூரித் தமிழ்த்துறையைச் சேர்ந்த மாணவி செல்வி **ர. உமா, எம்.ஏ., எம்.ஃபில்.,** அவர்களால் ஆய்வு நிகழ்த்தி உருவாக்கப்பட்டதாகும். இவ்ஆய்வேடு இதற்குமுன் வேறு எந்த ஆய்வுப் பட்டத்திற்கோ, ஆய்வரங்கிற்கோ அளிக்கப்பெறவில்லை என்பதற்கும் இவ்ஆய்வு அவருடைய சொந்த முயற்சியில் உருவானது என்பதற்கும் நான் சான்றளிக்கின்றேன்.

(ந. கலைவாணி)
மேற்பார்வையாளர்
Queen Mary's College
Chennai - 4

இடம் : சென்னை – 4.
நாள் : 19. 04 .2011.

செல்வி ர. உமா, எம்.ஏ., எம்ஃபில்.,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி),
சென்னை - 600 004.

ஆய்வாளர் உறுதிமொழி

"சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல் (ஆற்றுப்படை நீங்கலாக)" என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக உருவாக்கப்பெற்ற இவ்ஆய்வேடு எனது சொந்த முயற்சியின் உருவாக்கம் என்றும், இதற்கு முன் வேறெந்த ஆய்வுப்பட்டத்திற்கோ, ஆய்வரங்கிற்கோ இவ்ஆய்வேடு அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

(ர. உமா)
ஆய்வாளர்

இடம் : சென்னை–4.
நாள் : 19.04 .2011.

நன்றியுரை

"சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல் (ஆற்றுப்படை நீங்கலாக)" என்னும் தலைப்பில் ஆய்வு செய்ய எனக்கு வாய்ப்பளித்த **சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு** என் உளங்கனிந்த நன்றி என்றென்றும் உரியது.

பெண்கல்வியை மேம்படுத்தும் உயர்கல்வியில் நாட்டம் கொண்டு முனைவர்பட்ட ஆய்வு மேற்கொள்ள எனக்கு அனுமதியளித்த **இராணிமேரி கல்லூரி**(தன்னாட்சி)**க்கு** நன்றி கூறுவதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

இராணிமேரி கல்லூரித் தமிழ்த்துறை ஆய்வு மையத்தில் ஆய்வினை மேற்கொள்ள எனக்கு அனுமதியளித்த **முன்னாள் முதல்வர் பேராசிரியர் திருமதி லாயிஸ் பாக்கியநாதன்,** ***எம்.ஏ., எம்.ஃபில்.,*** அவர்களுக்கும் இந்நாள் **கல்லூரி முதல்வர்(பொறுப்பு) பேராசிரியர் முனைவர் திருமதி கி. அம்புஜம்,** ***எம்.எஸ்சி., எம்.ஃபில், பிஎச்.டி., எம்.சி.ஏ.*** அவர்களுக்கும் என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அறிவுரை பல கூறி, ஆய்வினை விரைவாகச் செய்து முடித்திட ஊக்கப்படுத்திய **தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர் திருமதி க. பானுமதி,** ***எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.*** அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

தமிழ்ப் பண்பாட்டின் தனித்தன்மையான விருந்தோம்பல் பண்பின் சிறப்பானது சங்க காலத்தில் உயர்ந்தோங்கியிருந்த காரணத்தினால் அதனையே தலைப்பாகத் தெரிவு செய்ய என்னை அனுமதித்தவரும் ஆய்வேட்டினைப் பண்படுத்திய பண்பாளரும், பழமைப் பதிவுகளைப் புதுப்பிக்கும் ஆர்வலரும் எனது ஆய்வினைச் சீரிய முறையில்

நெறிப்படுத்திய நெறியாளருமான **பேராசிரியர் முனைவர் திருமதி ந.கலைவாணி,** ***எம்.ஏ.,(தமிழ்), எம்.ஃபில்., எம்.ஏ. (மொழியியல்), பி.எட்., பிஎச்.டி., மலையாளம்(சான்றிதழ்)*** அவர்களுக்கு என் அன்புள்ளம் என்றென்றும் நன்றி கூறும். என்னை மாணவியாக ஏற்று முன்னிலைப்படுத்திய தமிழ் முனைவரும் தரவு நூல்களைப் பரிந்துரைத்து ஐயங்களைத் தெளிவு படுத்தியும் என்னைச் செந்நெறிப்படுத்திய நேர்மையாளருமான என் நெறியாளருக்கு மீண்டும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

சங்க இலக்கியம் முதல் அனைத்து இலக்கிய இலக்கணங்களில் ஆழங்கால்பட்டவரும் என்னுடைய ஆய்வுக்காலத்தில் பலகாலும் ஆய்வுக் கருத்துகளை வழங்கியவரும் நூல்கள் பல வழங்கி உதவியவருமான மாநிலக்கல்லூரித் **தமிழ்ப்பேராசிரியர் முனைவர் இரா. கண்ணன்,** ***எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,*** அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆய்வுப்பணி தொடங்கிய காலத்திலிருந்து இந்நாள் வரை என்னை வழிநடத்திவரும் **தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்** அனைவருக்கும் நன்றி கூறுவதில் பெருமை அடைகின்றேன்.

என் மீது அன்பையும் பண்பையும் ஊட்டி என் முன்னேற்றத்திற்கு ஊன்றுகோலாய் நின்ற இனிய **பெற்றோருக்கு** இதயம் கனிந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். என் வளர்ச்சியில் அக்கறை காட்டியும் என்னை ஊக்குவித்து அறிவுரைகள் பல வழங்கியும் ஆய்வுப் பணியை அமைதியுடன் செய்வதற்கு அருந்துணையாக இருந்த அண்ணன் **திரு. ஆ. அருள்** அவர்களுக்கு அன்பான நன்றி.

என் ஆய்வுப்பாதையில் இறுதிவரை உறுதுணையாக இருந்த **இனிய தோழிகள்** அனைவருக்கும் என் நன்றி.

தமிழ் இலக்கிய விருந்தோம்பல் தொடர்பான காட்சிகளை நல்கிய இதழ்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த ஆய்வேட்டினை நல்ல முறையில் தட்டச்சு செய்து வடிவமைத்துக் கொடுத்த **'டுடே கிராஃபிக்ஸ்'** நிறுவனத்தார் திரு **ரெ. பாபு** அவர்களுக்கும் நிறுவன ஊழியர்கள் அனைவருக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ர. உமா
(ஆய்வாளர்)

சுருக்கக்குறியீட்டு விளக்கம்

அகம்.	:	அகநானூறு
ஆசாரக்.	:	ஆசாரக்கோவை
இனியவை.	:	இனியவை நாற்பது
ஐங்.	:	ஐங்குறுநூறு
கம்ப.	:	கம்பராமாயணம்
க.பரணி	:	கலிங்கத்துப்பரணி
கலி.	:	கலித்தொகை
குறள்.	:	திருக்குறள்
குறிஞ்சி.	:	குறிஞ்சிப்பாட்டு
குறுந்.	:	குறுந்தொகை
சிலம்பு.	:	சிலப்பதிகாரம்
சிறுபஞ்ச.	:	சிறுபஞ்சமூலம்
தொல்.	:	தொல்காப்பியம்
நல்வழி.	:	நல்வழிப்பாடல்
நற்.	:	நற்றிணை
நாலடி.	:	நாலடியார்
நூற்.	:	நூற்பா
ப.	:	பக்கம்
பக்.	:	பக்கங்கள்
பட்டி.	:	பட்டினப்பாலை
பதி.	:	பதிற்றுப்பத்து
பரி.	:	பரிபாடல்
பா.	:	பாடல்
புறம்.	:	புறநானூறு
பெரிய.	:	பெரியபுராணம்
மணி.	:	மணிமேகலை
மதுரைக்கா.	:	மதுரைக்காஞ்சி
மா.பள்ளு.	:	மாந்தைப்பள்ளு
முதுமொழி.	:	முதுமொழிக்காஞ்சி
மேற்படி	:	மேற்குறிப்பிட்ட நூல்
வில்லி.	:	வில்லிபாரதம்

*****

சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்
(ஆற்றுப்படை நீங்கலாக)

பொருளடக்கம்

இயல்	தலைப்புகள்	பக்க எண்
	முன்னுரை	1
ஒன்று	தமிழ் இலக்கியமும் விருந்தோம்பலும்	16
இரண்டு	சங்க அகஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்	68
மூன்று	சங்கப் புறஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்	119
நான்கு	சங்க இலக்கிய விருந்தோம்பல் உணர்த்தும் மனிதநேயம்	170
ஐந்து	இன்றைய மனிதநேயமும் தமிழரின் விருந்தோம்பலும்	218
	முடிவுரை	268
	துணைநூற்பட்டியல்	277
	பின்னிணைப்புகள்	

முன்னுரை

முன்னுரை

தமிழ்மொழியும் இலக்கியமும்

மக்கள் வாழ்க்கையிலிருந்து தோன்றுவதுதான் இலக்கியம். எனவேதான் 'மொழியே வாழ்க்கையின் கண்ணாடியாக' விளங்குகின்றது. மொழி வாயிலாக வாழ்வினை உணர்த்துவதாக இலக்கியங்கள் திகழ்கின்றன.

சங்ககாலம் எனக் கருதப்படும் கி.பி. இரண்டு, மூன்றாம் நூற்றாண்டு வரையுள்ள காலகட்டத்தில் கற்றறிந்த புலவர்களையும் சான்றோர்களையும் போற்றிப் பாராட்டுவது பண்டைத் தமிழ் அரசர்களின் கடமையாக இருந்தது. இவ்வாறு போற்றிப் பாராட்டப்பட்ட சங்கப்புலவர்கள் இயற்றியதே சங்க இலக்கியம். இவை பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும். சங்க அரசர்களும் வள்ளல்களும் சங்கம் வைத்து உயர்தனிச் செம்மொழியாம் தமிழை வளர்த்தனர்.

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து
இருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை"

(வில்லி. பாயிரம் : 1)

என்ற மேம்பட்டதொரு சிறப்புக்குரியதாக விளங்கியது தமிழ்மொழி. இம்மொழியினது தொன்மையும் செறிவும் நெகிழ்வுமான செவ்விலக்கியத் தன்மைகள் இம்மொழியானது பண்பட்டதொரு உயர்தனிச் செம்மொழியாய்த் திகழும் ஒப்பற்ற தகுதியை வழங்கியுள்ளன.

அறக்கருத்துகள்

இலக்கியங்களில் எண்ணற்ற அறக்கருத்துகள் பற்றிய செய்திகள் உள்ளன. அறம் எனப்படுவது உலகில் உள்ள உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்தல் ஆகும்.

"அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்"

(குறள். 321)

என்பது வள்ளுவர் காட்டும் அறமாகும்.

தமிழர் பண்பாட்டுடன் அவர்தம் வாழ்வுடன் பின்னிப்பிணைந்து கிடப்பன பல்வேறு அறங்கள். வாழ்வில் பின்பற்றக்கூடிய முப்பத்திரண்டு அறங்களாக,

"ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்கு உணவு, அறுசமயத் தோர்க்கு உண்டி, பசுவிற்கு வாயுறை, சிறைச்சோறு, ஐயம் (பிச்சை), தின்பண்டம் நல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப் பிணஞ்சுடல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கு எண்ணெய், பெண்போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தர், மடம், தடம், கா, ஆவுறுஞ்சுதறி, விலங்கிற்கு உணவு, ஏறு விடுத்தல், விலைகொடுத்தல், கன்னிகாதானம்"

என ஆ. சிங்காரவேலு முதலியாரின் அபிதான சிந்தாமணி (ப. 108) திறம்பட உரைக்கின்றது.

விருந்தோம்பல் பெறும் இடம்

தம்மால் இயன்ற உதவிகளுள் சிறப்பானதொன்று விருந்தோம்பல் பண்பு ஆகும். இத்தகைய பண்பே தமிழ்ப்பண்பாட்டின் நாகரிகத்தின் அடிப்படையாகும்.

"பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி"

(புறம். 47)

வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள்.

"இன்னோர்க்கு என்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே"

(புறம். 163)

எனப் பெருஞ்சித்திரனார் தம் மனைவியிடம் அறிவுறுத்துவதாகப் புறப்பாடல் ஒன்று கூறுகின்றது. இது போன்று விருந்தோம்பலின் பண்பினை எடுத்துக்கூறும் எண்ணற்ற பாடல்கள் பல சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. இவ்ஆய்வேடானது சங்க இலக்கியத்தில் இடம்பெறும் விருந்தோம்பும் பண்பினது மாண்பினைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

விருந்தோம்பல் என்னும் பண்பானது பண்டைய காலந்தொட்டு இன்றுவரையில் தமிழர்களிடம் சிறப்புப்பெற்று இருந்து வரும் பண்பாகும்.

சங்ககாலத்தில் மக்கள் தம் இல்லத்திற்கு வரும் புதியவர் எவராயினும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று உணவு முதலியவற்றைக் கொடுத்து விருந்தோம்பி அனுப்பி வைத்தனர். புதியவர்களை இன்முகத்துடன் வரவேற்கும் முறையானது தொடர்ந்து விருந்தோம்பல் பண்பாக மாறியது. அப்பண்பு மக்களிடையே தொன்றுதொட்டு இன்று வரை இருந்து வருகின்றது.

சங்ககால மக்களின் அகவாழ்விலும் புறவாழ்விலும் விருந்தோம்பல் சிறப்பிடம் பெற்றிருந்தது. மக்கள் விருந்தினரைப் பேணுவதை ஒரு கடமையாகவே கருதினர். பசி என்று தம் இல்லம் நாடி வந்தவரை அன்புடன் அழைத்து உணவளித்துப் பசித்துன்பம் போக்கினர். பசியின் தன்மையறிந்து, அப்பசியினைப் போக்குவதற்கான அறச்செயல்களைப் புரிந்துள்ளனர். விருந்தோம்பல் குறித்த செய்திகள் பிற இலக்கியத்தைக் காட்டிலும் மிகுதியாகவே சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

இவ்ஆய்வேட்டினுள் சங்க காலத்தில் இடம் பெற்றுள்ள விருந்தோம்பல் குறித்த செய்திகள் பல்வேறு நிலைகளில் ஆராய்ந்து ஆராயப்பட்டுள்ளன. காலந்தோறும் தமிழர்கள் இப்பண்பிற்குச் சிறப்பிடம் கொடுத்துள்ளமையை தமிழ் இலக்கியங்கள் வாயிலாக இவ்ஆய்வேடு உணர்த்துகின்றது.

சங்கஇலக்கியத்தில் விருந்தினர் என்போர் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் போன்ற கலைஞர்களும் ஆவர். இவர்கள் நானிலத்தில் வாழக்கூடிய மக்களால் உபசரிக்கப்பெற்றனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை ஆகிய நிலங்களில் வாழக்கூடிய மக்கள் தங்களுக்குக் கிடைத்த உணவுப் பொருட்களைக்கொண்டு விருந்தினர்களை உபசரித்தனர். பாலை என்பதோர் நிலம் தனியே இல்லையெனினும் குறிஞ்சியும் முல்லையும் தன் முறைமையில் திரிந்து 'பாலை' என்றோர் படிவம் கொண்டிருந்தது. இவ்ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த சங்ககால மக்கள் அவரவர் நிலத்தில் விளைந்த உணவுப் பொருட்களைப் பண்டமாற்று முறையில் மாற்றிக் கொண்டும் விருந்தளித்தும் வாழ்ந்துள்ளனர்.

ஆய்வின் நோக்கம்

'விருந்தோம்பல்' என்னும் பண்பு இன்றைய மனிதர்களிடையே மிக அரிதாகவே காணப்படுகிறது. புதியவர் என்ற பொருள் நிலையிலிருந்து மாறி உற்றார், உறவினர், நண்பர்களையும் கூட விருந்தினர் என்று அழைப்பது தற்போது வழக்கமாகி விட்டது.

இயந்திர வாழ்க்கை வாழக்கூடிய மனிதர்களிடையே மனித நேயமானது பெரும்பாலும் குறைந்தே காணப்படுகின்றது. மனித நேயத்தின் வெளிப்பாடாக அமைந்த விருந்தோம்பல் பண்பு இன்றைய காலகட்டத்தில் அரிதாகக் காணப்படுகின்றது. தொலைக்காட்சி, தொலைபேசி, கணினி

முதலிய ஊடகங்களின் செல்வாக்கால் ஒரு மனிதன் பிற மனிதருடன் பழகக்கூடிய வாய்ப்பும் குறைந்து கொண்டே வருவதால் விருந்தோம்பல் பண்பும் அரிதாகி வருகின்றது.

இந்நிலைக்குக் காரணங்களாக நேரமின்மை, மேற்கத்திய மோகம், தன்னலப் போக்கு, விளைநிலங்களை விலைநிலங்களாக மாற்றுதல், ஏரி, குளம் போன்ற நீராதாரங்களைக் குடியேற்றப் பகுதிகளாக மாற்றுதல், விலைவாசியேற்றம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும் மக்கள்தொகைப் பெருக்கமும், தொலைத்தொடர்புச் சாதனங்களின் தாக்கமும் விருந்தோம்பல் என்னும் இப்பண்பாட்டினைத் தேய்த்து வருகின்றன.

இன்றைய காலச்சூழலில் அன்பையும், பண்பையும் வளர்க்கும் விருந்தோம்பல் பண்பானது நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றது. எனினும் இத்தகைய சூழலில் தமிழர் வாழ்வில் விருந்தோம்பலுக்கு இன்றியமையாததொரு இடம் கொடுக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இறை வழிபாடு, விழாக்கள், சடங்குகள், நம்பிக்கைகள் போன்ற தமிழ்ப் பாண்பாட்டுச் சின்னங்கள் விருந்தோம்பல் பண்பினை முற்றிலும் அழித்து விடாமல் ஓரளவிற்காவது காத்து வருகின்றன.

மிகத்தொன்மை வாய்ந்த 'விருந்தோம்பல்' என்னும் பண்பாட்டின் மீது கொண்ட ஈர்ப்பினாலும், மக்களிடையே மனித நேயம், மனித உறவு, என்னும் உயர்பண்பாடுகளை மேம்படுத்தும் நோக்கத்துடனும் இவ்வுயர் பண்புகளை வளர்க்கும் 'விருந்தோம்பலின்' அவசியத்தை இன்றைய சூழலில் வலியுறுத்துவது இன்றியமையாததாகின்றது. பிறபண்புகள் வளர்வதற்கு வேர்ப்பண்பாக இருந்த இவ்விருந்தோம்பல் பண்பானது சங்க கால மக்களிடையே எவ்வாறெல்லாம் சிறந்து விளங்கியதென்பதைச் சுட்டிக்காட்டும் முனைப்புடனும் 'சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்'

என்னும் தலைப்பு ஆய்வுத் தலைப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பெறுகின்றது.

ஆய்வின் எல்லை

இவ்ஆய்வேடு 'சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்' (ஆற்றுப்படை நீங்கலாக) என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. 'ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல்' என்னும் தலைப்பில் ஏற்கெனவே ஆய்வு மேற்கொள்ளப்பட்டதால் பத்துப்பாட்டு ஆற்றுப்படை நூல்களைத் தவிர ஏனைய ஐந்து நூல்களும் எட்டுத்தொகை நூல்களும் என இவையே இவ் ஆய்வேட்டினது முதன்மைத் தரவுகளாக்கப் பெற்று ஆய்வெல்லை வரையறுக்கப்பெற்றுள்ளது.

ஆய்வின் பயன்

தமிழரின் தலையாய பண்புகளுள் ஒன்றாகத் திகழும் விருந்தோம்பல் பண்பானது, தமிழனை உலகநாடுகளின் மத்தியில் அடையாளம் காட்டுகின்றது.

ஒரு காலகட்டத்தில் கூட்டுக்குடும்பங்கள் இருந்தன. பல்வேறு காரணங்களால் கூட்டுக்குடும்பங்கள் உடைந்து தனிக் குடும்பங்களாயின. இன்று தனிக்குடும்பங்களும் மாறித் தனித்தனியே வாழும் நிலைக்கு மாறியுள்ளனர் மனிதர்கள். தனிமைப்பட்டவர்களையும், பல குடும்பங்களையும், இணைக்கும் இணையதளம்போல் செயல்படும் ஒரே பண்பு விருந்தோம்பலேயாகும். எதிலும் முழுமை அடையாத மனிதன் தன் சுற்றத்தாருடன் சேர்ந்து உண்ணும் விருந்தினில் முழுமை அடைவதாக உணருகின்றான்.

பழைய உறவுகளை வலுப்படுத்தி நிலைநிறுத்துவதும், புதிய உறவுகளை நாடிச்செல்வதும் விருந்தோம்பல் பண்பின் பயன் ஆகும்.

மனிதநேயம் முற்றிலுமாக மறைந்து விடுமோ? என்று அஞ்சத்தக்க இக்காலகட்டத்தில் மனித நேயத்தை மீட்டுருவாக்கம் செய்யும் தலையாய பண்பான விருந்தோம்பல் இன்றைய சமூகத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒன்றேயாகும். இப்பண்பின் மூலமாக இழந்த நற்குடிப்பண்புகளைச் சிறிது சிறிதாக மீட்டுருவாக்கம் செய்ய இயலும். எனவே பற்பல நற்பண்புகளின் அடிப்படையான இப்பண்பினை வலியுறுத்துவதே இவ்ஆய்வின் நோக்கமாக விளங்குகின்றது.

ஆய்வின் நிலை

'சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்' (ஆற்றுப்படை நூல்கள் நீங்கலாக) என்னும் தலைப்பின் கீழ் நிகழ்த்தப்பட்டுள்ள ஆய்வு முறையானது, 'விளக்கமுறைத் திறனாய்வாகவும்' மனித நேயத்தை மீட்டுருவாக்கம் செய்யும் உயரிய இலக்குடனும் திகழ்கிறது.

ஆய்வேட்டின் அமைப்பு

'சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்' (ஆற்றுப்படை நீங்கலாக) என்னும் தலைப்பில் அமைந்துள்ள ஆய்வேடானது முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. இவ்ஆய்வேட்டின் இயல் பகுப்பும் இயல்கள் பற்றிய விவரமும் பின்வருமாறு:

முன்னுரை

இயல்-1 தமிழ் இலக்கியமும் விருந்தோம்பலும்

இயல்-2 சங்க அகஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்

இயல்-3 சங்கப் புறஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்

இயல்-4 சங்க இலக்கிய விருந்தோம்பல் உணர்த்தும் மனிதநேயம்

இயல்-5 இன்றைய மனித நேயமும் தமிழரின் விருந்தோம்பலும்

முடிவுரை

'சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்' என்னும் இத்தலைப்பின்கீழ் அமையும் ஐந்து இயல்கள் பற்றிய கருத்துகள் சுருக்கமாகக் கீழே வழங்கப்பட்டுள்ளன:

இயல் ஒன்று : தமிழ் இலக்கியமும் விருந்தோம்பலும்

முதல் இயலாக, 'தமிழ் இலக்கியமும் விருந்தோம்பலும்' என்னும் தலைப்பானது அமைந்துள்ளது. இதில் 'சங்க காலம் முதல் தற்காலம் வரை' தோன்றியுள்ள பல்வேறு இலக்கியங்களின் வழி விருந்தோம்பல் பண்பின் வளர்ச்சி நிலையும் தன்மையும் விளக்கப்பெற்றுள்ளன.

இவ்வியலில் 'விருந்து' என்னும் சொல் குறித்து அகராதியியலாளர் கூறும் விளக்கம், விருந்தோம்பலின் தோற்றம், உழவுத்தொழிலின் பங்கு, பசியின் தன்மை, விருந்தில் தமிழர் பண்பு போன்றன குறித்து ஆராயப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் குறிப்பிடும் விருந்திலக்கணம் விளக்கப் பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் விருந்தோம்பலானது மக்களின் வாழ்வில் களவு, கற்பு ஆகிய நிலைகளில் சிறந்து விளங்கியது. விருந்து உபசரிப்பில் தலைவியின் பங்கு, விருந்தில் தமிழரின் நம்பிக்கை, அரசர்கள் அளித்த விருந்து, விழாவில் விருந்து பெறும் இடம், தமிழர் திருமணத்தில் விருந்து, விருந்தினர் வருகைக்காக நடுகல் தொழுதல், கடன் பெற்று விருந்து படைத்த வீரன் பற்றிய செய்தி போன்றவையும் விளக்கப்பட்டுள்ளன.

மேலும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களான நீதி நூல்களில் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருள்களும் 'விருந்தோம்பல்' பண்பினை வலியுறுத்தும் பாங்கு வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

திருக்குறளில் 'விருந்தோம்பல்' பற்றி ஒரு அதிகாரமே உள்ளது. விருந்தினால் கேடு வாராமை, விருந்தினால் உண்டாகும் சொர்க்கம்,

மலருக்கு ஒப்பாகும் விருந்தினர், பஞ்ச காலத்திலும் விருந்தளித்தல், விருந்துணவுக்குத் தகுதியுடையோர் போன்ற கருத்துகள் ஆராயப் பட்டுள்ளன.

இரட்டைக் காப்பியங்களான சிலம்பிலும், மணிமேகலையிலும் விருந்து கொடுக்கும் அறம் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. சிலப்பதிகாரத்தில் இடைக்குல மகளிர் அளித்த விருந்து, கண்ணகி அளித்த விருந்து, மணிமேகலையில் ஊனமுற்றோருக்கு அளித்த விருந்து, கம்பராமாயணத்தில் கோசலை நாட்டு மக்கள் அளித்த விருந்து, சுக்கிரீவன் அளித்த விருந்து, இராவணன் அளித்த விருந்து போன்றவையும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பக்திக் காலத்தில் சைவ வைணவ மதங்கள் தோன்றின. பக்தி வெள்ளம் நாடு முழுவதும் பெருக்கெடுத்தோடியது. சைவ வைணவக் கோயில்கள் கட்டப்பட்டன. கோயில்களின் மூலம் மக்களுக்குப் பல அறிவுரைகள் வழங்கினர். கோயில்கள் பல்துறை நிறுவனமாக இருந்தன. இதன் வழியே மக்களுக்குப் பல உதவிகள் செய்யப்பட்டன. இறைவன் மீது பக்தி கொண்ட தொண்டர்கள் இறையடியார்க்குத் தினந்தோறும் விருந்து அளித்து மகிழ்ந்தனர். அறுபத்து மூன்று நாயன்மார்களின் விருந்தினைப் பற்றிச் சேக்கிழார் தனது பெரியபுராணத்தில் குறிப்பிட்டுள்ளார். இப்பெரியோருள் 'இளையான்குடி மாறநாயனாரின்' விருந்து, 'காரைக்காலம்மையார்' அளித்த விருந்து ஆகிய விருந்தின் தன்மைகள் விளக்கப்பட்டுள்ளன.

சோழர் காலத்தில் தோன்றிய இலக்கியம் காப்பிய இலக்கியம் ஆகும். இதில் கம்பராமாயணத்தில் இடம் பெற்றுள்ள விருந்தோம்பல் பண்பில் சீதை, தான் விருந்து செய்யாததை நினைத்து வருந்தியமை குறிப்பிடப்பட்டுள்ளது.

சிற்றிலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு மேம்பட்டு விளங்கியமையைக் குறித்து ஆராயப்பெற்றுள்ளது. சிற்றிலக்கியத்தில் ஒன்றான கலிங்கத்துப்பரணியில் பேய்கள் விருந்து சமைத்து உண்டமையும் குறிப்பிடப்பட்டுள்ளது. பள்ளு இலக்கியம் உணர்த்தும் (மாந்தைப் பள்ளு) விருந்தோம்பல் பண்பும் ஆராயப்பெற்றுள்ளது.

தற்கால இலக்கியங்களான பாரதியார், பாரதிதாசன் கவிதைகளில் விருந்தோம்பல் குறித்த செய்திகள் ஆயப்பெற்றுள்ளன. இதில் பாரதிதாசனின் 'குடும்ப விளக்கு' உணர்த்தும் விருந்தோம்பல் குறித்த பண்புகள் சிறப்பாகவே ஆராயப்பெற்றுள்ளன.

இயல் இரண்டு: சங்க அகஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்

'சங்க அகஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்' என்னும் தலைப்பானது ஆய்வேட்டின் இரண்டாவது இயலாக அமைந்துள்ளது.

இவ்வியலில் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அகநூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகியவற்றினுள் இடம் பெற்றுள்ள விருந்தோம்பல் குறித்த பாடல்கள் மட்டும் ஆராயப்பட்டுள்ளன.

பழங்கால மக்களின் களவு, கற்பு வாழ்வில் விருந்தோம்பலானது எந்தெந்த நிலைகளில் நிலவி வந்துள்ளது என்பதனை விளக்குவதாகவும் அமைந்துள்ளது இவ்வியல்.

விருந்தினால் தலைவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, தலைவி சமைத்த பாங்கு, விருந்துணவில் இடம் பெறும் ஈயல், வரால்மீன் போன்ற உணவுகள், விருந்தினராக வந்த தலைவன், கூகைக்குக் கொடுத்த விருந்து, கானவன் தலைவி அளித்த விருந்து, காக்கைக்குப் பலி உணவு அளித்தல், விருந்தினருக்கு ஆடிய குரவை, ஊடல் கொள்ள நேரம்

இல்லாத விருந்து, தலைவி பகுத்துக் கொடுத்த உணவு, மரத்தடி விருந்து, குரங்கிற்கு அளித்த விருந்து, விருந்துணவு உண்ண விரைந்த தலைவன், காக்கையைப் போலத் தலைவி சுற்றத்தினரை அழைத்தல், விருந்துணவுக்குச் சிறப்புத் தரும் தலைவன், விருந்திடும் மனைகள், காக்கைக்குக் கொடுத்த விருந்துணவு, தலைவன் இல்லாததால் விருந்தினை ஏற்காத தலைவி, தலைவன் இன்றி தலைவி அளித்த விருந்து, ஊடல் தீர்க்கும் விருந்தினர், தலைவனுடன் சேர்ந்து உண்ணும் உணவு, பொற்கிண்ணத்தில் அளித்த விருந்து, கணவன் இல்லாததால் தடைப்பட்ட விருந்து, விருந்தினால் தலைவியின் மகிழ்ச்சி, விருந்தில் உளுந்து, மாவடு போன்ற உணவு வகைகள், சிறு சோறு ஆக்குதல், களவுக் காலத்தில் விருந்து, விருந்து செய்ய பாலையையும் கடந்து செல்லுதல், கைக்குத்தல் அரிசி விருந்து, தலைவனை விருந்தினராக ஏற்றல், விருந்து செய்ய விழா எடுத்தல், விருந்து கொடுத்து எஞ்சியதை உண்டு மகிழ்தல், உணவு கொடுக்கும் அறச்சாலைகள் போன்றனவும் இவ்வியலின்கண் ஆராயப்படும் பொருட்களாக உள்ளன.

இயல் மூன்று: சங்கப் புறஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்

'சங்கப் புறஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்' என்னும் தலைப்பானது ஆய்வேட்டின் மூன்றாவது இயலாக அமைந்துள்ளது.

இவ்வியலில் சங்க இலக்கியத்தில் காணலாகும் புற நூல்களான புறநானூறு, பதிற்றுப்பத்து, மதுரைக்காஞ்சி ஆகியனவற்றில் உள்ள விருந்தோம்பல் குறித்த பாடல்கள் மட்டும் ஆதாரங்களாக விளங்கி ஆராயப்பெற்றுள்ளன.

புறவாழ்வில் விருந்தோம்பல் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாக விளங்கியமை, பொருளுக்காக மக்கள் போர் புரிதல், பொருளுக்காக வினையை மேற்கொண்டிருந்தமை, வறுமையில் வாடிய

புலவர்களுக்கு அரசர்களும் மக்களும் விருந்து கொடுத்து ஆதரித்தமை, அரசர்களும், மக்களும் விருந்தோம்பல் பண்பிற்குக் கொடுத்த முக்கிய இடம், அரசர்கள் பலர் புலவர்கள் மற்றும் பிற கலைஞர்களை ஆதரித்து விருந்தோம்பிய பான்மை ஆகியன விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

இவ்வியலின் கண் விருந்து கொடுக்க அறத்தொடு ஆட்சி செய்தமை, கொண்டு வந்த பொருட்களைப் பாதீடு செய்தல், மடைத்தொழில், அளவு மிகுந்து பொருட்களை அளித்தல் போன்ற புறச்செய்திகள் ஆராயப்பட்டுள்ளன. பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தான 'இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார்' பாடிய பாடலில் விருந்து, மூன்றாம் பத்தான 'இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனார்' பாடிய பாடலில் விருந்து, நான்காம் பத்தான 'நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார்' பாடிய பாடலில் விருந்து, ஐந்தாம் பத்தான 'கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர்' பாடிய பாடலில் விருந்து, ஆறாம் பத்தான 'ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்' பாடிய பாடலில் விருந்து, ஒன்பதாம் பத்தான 'குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர்க்கிழார்' பாடிய பாடலில் விருந்து ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

புறநானூற்றில் அமைந்துள்ள 'சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியை ஊன்பொதி பசுங்குடையார்' பாடிய பாடலில் விருந்து, 'பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார்' பாடிய பாடலில் விருந்து, 'கிள்ளிவளவனைக் கோவூர் கிழார்' பாடிய பாடலில் விருந்து, 'அதியமான் விருந்தினை ஔவை' பாடியது, 'வேல்பாரியின் விருந்து பற்றிக் கபிலர்' பாடியது, 'மலையமான் திருமுடிக்காரியின் விருந்து பற்றிக் கபிலர்' பாடியது, 'ஆய் அண்டிரனின் விருந்து பற்றி ஏணிச்சேரி முடமோசியார்' பாடியது, 'குமணனின் விருந்து குறித்து பெருஞ்சித்திரனார்' பாடியது, 'சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான்

கௌணியன் விண்ணந்தாயனின் விருந்து பற்றி ஆவூர் மூலங்கிழார்' பாடியது, 'பிட்டங்கொற்றனின் விருந்து பற்றி காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்' பாடியது, 'அள்ளூர் நன்முல்லையார்' விருந்து வர வேண்டி பாடிய பாடல், 'மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார்' அடகு வைத்து விருந்திட்ட வீரனைப் பற்றிப் பாடிய பாடல், 'தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார்' மறக்குடி மகள் அளித்த விருந்து பற்றிப் பாடிய பாடல், 'அதியமான் நெடுமானஞ்சி மகன் பொகுட்டெழினியின் விருந்து பற்றி ஔவை' பாடியது, 'மாறோக்கத்து நப்பசலையார்' பாடிய பாடலில் விருந்து, 'அம்பர்கிழான் அவந்தையின் விருந்து பற்றிக் கல்லாடனார்' பாடிய பாடல், 'சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் விருந்து பற்றி ஆலத்தூர் கிழார்' பாடிய பாடல், 'சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் விருந்து பற்றி எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்' பாடிய பாடல், 'சோழ நாட்டுப் பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தனின் விருந்து பற்றி மதுரை நக்கீரர்' பாடிய பாடல், 'ஓய்மான் நல்லியாதனின் விருந்து பற்றி புறத்திணை நன்னாகனார்' பாடிய பாடல், 'தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் விருந்து பற்றி மாங்குடி மருதனார்' பாடிய பாடல் ஆகியன விரிவாக ஆயப்பட்டுள்ளன.

இயல் நான்கு: சங்க இலக்கிய விருந்தோம்பல் உணர்த்தும் மனித நேயம்

இந்த ஆய்வேட்டின் நான்காவது இயலாக 'சங்க இலக்கிய விருந்தோம்பல் உணர்த்தும் மனித நேயம்' குறித்த கருத்துகள் விரிவாக ஆராயப்பெற்றுள்ளன.

விருந்தோம்பலானது மனித நேயத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. மனித நேயத்தினை வெளிப்படுத்தும் பாடல்கள் மட்டும் ஆராய்ந்து தரப்பட்டுள்ளன. தன்னைச் சார்ந்த மற்றொரு உயிரை

நேசிக்கும் ஒரு மனிதனது பண்பு, மனித நேயத்தினை வெளிப்படுத்து கின்றது. விருந்தோம்பல் பண்பில் மனித நேயமானது எவ்வாறெல்லாம் இடம் பெற்றிருந்தன என்பதனைக் குறிப்பிட்டுள்ளது இவ்வியல்.

மனித நேயம் என்னும் சொல்லுக்கான விளக்கம், மதங்கள் கூறும் மனித நேயம், தொல்காப்பியத்தில் மனித நேயம், பகுத்துண்ணும் மனித நேயம், மனித நேயத்திற்குப் பயன்படும் பொருளின் தேவை, பொருள் ஈட்டுதலின் பயன் ஈதல், கொடுப்பதே புகழ், அறமே தலையாய பண்பு, விருந்திற்கு வாணிபம் செய்தல், புலவனின் மனித நேயம், எதிர்பார்ப்பு இல்லா மனித நேயம், புகழை விரும்பாத மனித நேயம், விருந்தினரை மனித நேயத்தோடு அணுகுதல், தன் உயிரையும் கொடுக்கும் அரசன், பாராட்டப்படும் மனித நேயம், அதியமானின் மனித நேயப்பண்பு, என்றும் கொடுக்கும் மனித நேயம், சோழன் நலங்கிள்ளியின் மனித நேயம், எயினரின் மனித நேயம், மீனவர்களின் மனித நேயம், ஊடல் கொள்ளாத மனித நேயம், அடகு வைத்து விருந்திட்ட மனித நேயம் மற்றும் அஃறிணை உயிர்களுக்கு அளித்த விருந்து போன்றன இவ்வியலின் பொருட்களாக ஆராயப்பட்டுள்ளன.

இயல் ஐந்து: 'இன்றைய மனிதநேயமும் தமிழரின் விருந்தோம்பலும்'

இந்த ஆய்வேட்டின் ஐந்தாவது இயலாக அமைவது 'இன்றைய மனிதநேயமும் தமிழரின் விருந்தோம்பலும்'.

சங்க காலத்தில் மனித நேயத்தின் வெளிப்பாடாக அமைந்த விருந்தோம்பல் இன்றைய காலகட்டத்தில் குறைந்து காணப்படும் தன்மை, இதற்குக் காரணங்களான மக்கள் தொகைப்பெருக்கம், அறிவியல் சாதனங்களின் தாக்கம், விலைவாசி ஏற்றம், காலமின்மை, விளைநிலங்கள் எல்லாம் விலைநிலங்களாக மாறிய தன்மை போன்றனவற்றைக் குறித்து ஆராய்வது இவ்வியல்.

மேலும் சங்கஇலக்கியத்தில் இடம் பெற்றுள்ள விருந் தோம்பலினை வெளிப்படுத்தும் மனிதநேயமானது இன்றைய சூழலில் எவ்வாறு மாறுபட்டுள்ளது என்பதனையும் வெளிப்படுத்தும் ஆய்வாக அமைந்துள்ளது இவ்வியல்.

சங்க காலத்தில் புலவர்கள், தாம் பெற்ற இன்பம் பிறர் பெற வேண்டும் என்று எண்ணினர். அதனால் அவர்களின் வழிகாட்டுதலினால் மனித நேயமானது வெளிப்பட்டது. விருந்தினர் என்போர், மனித நேயத்தினைப் பாதுகாக்கும் சேமிப்புக் கிடங்குகளாக விளங்கியமை, உழவுத்தொழிலின் நிலை, விளைநிலங்களின் நிலை, திருமண வாழ்க்கையில் விருந்து பெறும் இடம், இரவில் விருந்து, விருந்தினரை உபசரிக்கும் முறை, தலைவன் இல்லாத நிலையில் தலைவி விருந்தோம்பலில் காட்டிய மனித நேயம், ஊடல் தீர்க்கும் விருந்தினர், வறுமையிலும் விருந்தோம்பிய மனித நேயம், விருந்தினர்க்கு மனித நேயத்தோடு அளிக்கும் பரிசு, விருந்தில் ஆண்களின் நிலை, விருந்தில் பெண்களின் நிலை, நாட்டுப்புறங்களில் விருந்தும் மனித நேயமும், நகர மக்களின் விருந்தும் மனித நேயமும், நிகழ்ச்சிகளில் விருந்தோம்பல், சடங்குகளில் விருந்தோம்பல் உணர்த்தும் மனித நேயம், மனித நேயத்தினை வெளிப்படுத்தும் அன்னதானம், மனித நேயத்தினை வெளிப்படுத்தும் உணவுத் திட்டம் போன்றன இவ்வியலின் பொருட்களாக அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வேட்டின் இறுதியில் முடிவுரைப் பகுதியில் ஐந்து இயல்களிலும் இடம்பெற்றுள்ள கருத்துக்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. மேலும் இவையேயன்றி, எதிர்காலத்தில் விருந்தோம்பல் தொடர்பான ஆய்வின் நோக்கத்தினைப் பல்வேறு பார்வைகளில் ஆராய்தல் தொடர்பான தலைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. முடிவுரையைத் தொடர்ந்து துணைநூற்பட்டியல் இடம்பெற்றுள்ளது. முதன்மை மற்றும் துணைமை ஆதாரங்கள் இதனுள் அடங்கும் தமிழ் இலக்கிய விருந்தோம்பல் தொடர்பான காட்சிகள் பின்னிணைப்பாக இணைக்கப்பட்டுள்ளன.

[illegible] - [illegible]

தமிழ் இலக்கியமும் விருந்தோம்பலும்

இயல் – ஒன்று

தமிழ் இலக்கியமும் விருந்தோம்பலும்

விருந்தோம்பல் என்னும் பண்பு தமிழ்ப் பண்பாட்டுத் தளத்தில் வேரூன்றிய தொன்மரபாகும். இன்றைய காலச்சூழலில் உற்றார், உறவினர்கள், நண்பர்களைக் கூட விருந்தினர் என்று அழைப்பது இயல்பாகிவிட்டது.

சங்ககாலத்தில் முன்பின் அறிமுகம் இல்லாதவர் எவராயினும் வீடுதேடி வரும் புதியவர்களை மட்டுமே விருந்தினர் என்று குறிப்பிட்டனர். இவ்வாறு வருபவர்களை விருந்தினராக ஏற்று உபசரித்தனர். விருந்தினர்களாலும், விருந்தினைக் கொடுத்தவர்களாலும் இவ் விருந்தோம்பல் பண்பு சிறப்புற்றதுடன், தமிழ்ப் பண்பாட்டின் உயர் அடையாளமாகவும் இருந்து வருகின்றது.

தமிழர்கள் இப்பண்பிற்கு முக்கியத்துவம் கொடுத்ததனால் உலக நாடுகளிடையே இன்றளவும் போற்றப்படும்படி உள்ளனர். தமிழர் என்றாலே விருந்தோம்பலில் சிறந்தவர்கள் என்ற அடையாளப்படுத்தும் வகையில் தமிழர்தம் விருந்தோம்பல் பண்பு அமைந்துள்ளது. தமிழர்க்கும், தமிழ் நாட்டு உணவுக்கும் இன்றளவும் உலக நாடுகளிடையே பெரும் வரவேற்பு உள்ளது. தமிழ்ப்பண்பாட்டின் விளைநிலமாக விளங்குவது விருந்தோம்பல் பண்பு என்பதைத் தமிழ் இலக்கியங்கள் வழி தெளிவாக அறியமுடிகின்றது.

விருந்தோம்பல் பண்பானது மக்களிடையே எவ்வாறு தோன்றியிருக்க முடியும் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியாதெனினும்

அவ்விருந்தோம்பலின் வளர்ச்சியையும், சிறப்பையும் விளக்கும் தமிழ் இலக்கியச் சான்றுகள் தோற்றம் பற்றிய அறிமுகத்தைத் தருகின்றன.

விருந்து - சொற்பொருள் விளக்கம்

"விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே"

(தொல். செய்யுளியல். நூ. 540)

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் விருந்து என்னும் சொல்லுக்குப் புதுமையெனப் பொருள் கூறுகிறார்.

"**விருந்து - அதிதி முதலியோர்க்கு உணவு கொடுத்தல், நூல் வனப்புகளுள் ஒன்று**"[1] என்று ந.சி. கந்தையாப்பிள்ளை செந்தமிழ் அகராதியில் குறிப்பிட்டுள்ளார்.

'**விருந்து - புதியதாய் வந்தவர்க்கு உணவு கொடுத்தல்**'[2] என்று நா. கதிரைவேற்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

"**விருந்தினன் - விருந்தாளி, புதியவன்**
விருந்து - புதுமை
விருந்தோம்பல் - வேளாண்மை மாந்தர் இயல்பில் ஒன்று, புதியதாய் வருபவரை உண்டி முதலியவற்றால் உபசரித்தல்"[3]

என்கின்றது கழகத் தமிழ் அகராதி.

"**ஹாஸ்பிட்டாலிட்டி என்ற சொல் இலத்தீன் பெயர்ச் சொல்லாகிய ஹாஸ்ட்டம் என்பதன் மொழி பெயர்ப்பாகும். இது விருந்து தருபவர், பெறுபவர் ஆகிய இருவரையும் குறிக்கும். இந்த இரு பொருள் எக்ஸ்னஸ் என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வந்தது. இது அந்நியருக்கு அளிக்கப்படும் வரவேற்பைக் குறிக்கும்**"[4] என்கிறது கலைக்களஞ்சியம்.

வீரமாமுனிவர் தனது சதுரகராதியில், **"விருந்தினர், புதியவர் என்றும் விருந்து - புதுமை என்றும் குறிப்பிடுகின்றார்"**[5]

"விருந்து - புதியனவாயினவற்றின் மேலது; அது இப்பொழுதுள்ளாரைப் பாடும் பாட்டு என்றும், புதிதாக வீட்டுக்கு வரும் நண்பர்"[6] என்றும் அபிதான சிந்தாமணி குறிப்பிடும்.

"விருந்து - அதிதி முதலியோருக்கு உணவளித்து உபசரிக்கை புதியவன், புதுமை, நூலுக்குரிய எண்வகை வனப்புகளுள் ஒன்று விருந்தோம்பல் -புதியதாக வருபவரை உண்டி முதலியவற்றால் உபசரிக்கைச் செய்தல்"[7] என்கின்றது தமிழ்ப்பேரகராதி.

"விருந்து - புதுமை; நூலுக்குரிய எண்வகை வனப்புகளில் ஒன்று என்றும், அதிதி முதலியோர்க்கு உணவளித்து உபசரிக்கை செய்தல்"[8] என்றும் தமிழ் இலக்கியக் கலைச்சொல் அகராதி குறிப்பிடுகின்றது.

'விருந்து - அதிதியர்க்கிடுமுணவு, விருந்தினர், புதுமை'[9] என்று தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி பொருள் குறிப்பிடுகின்றது.

"விருந்து - அதிதியருக்கு உணவளித்தல், புதுமை, புதியவர், நூல் வனப்புகளுள் ஒன்று"[10] என மணிமேகலைத் தமிழ்ச் சொல்லகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"விருந்து - அதிதியருக்கு உணவு"[11] என்று எம் வின்சுலோ அவர்கள் தமிழ் ஆங்கில அகராதியில் குறிப்பிட்டுள்ளார்.

"விருந்து - புதுமை, நூலுக்குரிய வனப்புகளுள் ஒன்று, பேருணவு என்றும் விருந்தோம்பல் என்பது புதிதாய் வருபவரை உணவு அளித்து உபசரித்தல்"[12] என்றும் திருமகள் தமிழகராதி குறிப்பிடுகின்றது.

இவ்விதம் அகராதி ஆசிரியர்கள் விருந்து என்னும் சொல்லுக்குப் புதுமை என்று பொருள் தருகிறார்கள். விருந்து என்னும் சொல்லுக்குரிய விளக்கங்களிலிருந்து புதியவர்களை ஓம்பும் பண்பே விருந்தோம்பல் என்பதை உறுதிப்படுத்த முடிகிறது.

விருந்தோம்பலின் தோற்றம்

தமிழர் என்றைக்குப் பண்பட்டு வாழ முற்பட்டனரோ, அன்றுமுதல் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர். தமிழர்கள் விருந்தோம்பல் பண்பினை தம்முடைய வாழ்வியலில் சிறந்த அறமாகவும் தலையாய கடமையாகவும் கருதி வாழ்ந்தனர். மக்களிடையே அகப்புறப் பகிர்வை வளர்க்கும் சிறந்த பண்பாக விளங்கிய விருந்தோம்பல், இன்றுவரை நம்மிடையே இருந்து வந்துள்ளதை இலக்கியங்கள் மெய்ப்பிக்கின்றன.

ஆதிகாலத்தில் விலங்குகளைப் போல் காடுகளில் அலைந்து திரிந்த மனிதன் கூட்டம் கூட்டமாக வாழத் தொடங்கியபோது 'சமூகம்' என்னும் அமைப்பு உருவானது. இச்சமூக அமைப்பில் விலங்குகளை வேட்டையாடி அதில் கிடைத்த உணவினைச் சேர்ந்து உண்டனர்.

ஒரு கூட்டமாகச் சேர்ந்து உண்ணும்போது உணவு இல்லாதவர்க்கும் உணவளித்து உதவினர். இதன் மூலம் மனிதன் தன்னைச் சார்ந்த மற்றொரு மனிதனுக்குக் கொடுக்கக் கூடிய பழக்கமானது ஏற்பட்டது என்பதனையும் உணரமுடிகிறது. இப்படிப் படிப்படியாகத் தோன்றிய கூட்டுணர்வு, தன் தேவைக்கும் அதிகமாக எஞ்சியிருப்பதை, உணவின்றித் தவிர்ப்பவர்களுக்குக் கொடுக்கும் மனநிலையை உருவாக்கியது.

பிறருக்குக் கொடுக்கக்கூடிய எண்ணமே அன்பாக வளர்ந்தது. இந்த அன்பே பகிர்ந்து உண்ணும் பண்பினை வளர்த்தது. இவ்வாறு மனிதன் தனது பண்புகளைப் படிப்படியாக நல்லவழியில் வளர்த்துக் கொண்டான் என்பதனை,

"புலன்களை நெறியில்லா நெறியில் செல்லவிடாமல்

உரிய நெறியில் செலுத்துவதே புலனடக்கம்"[13] **என்பார்**

திரு.வி.க. அவர்கள்.

புலன்களை நல்ல வழியில் செலுத்திய மனிதனிடம் 'விருந்தோம்பல்' என்னும் நற்பண்பு தோன்றியிருக்கக் கூடுமென்பதை அறிய முடிகின்றது.

உழவுத்தொழில்

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு. மனிதனின் பண்பாட்டுச் செழுமைக்கும், பழம்பெருமைக்கும் ஆதாரமாக அமைவது உணவே. இதன் பெருமையை உணர்ந்த அவன் அவற்றின் இன்றியமையாமையை அறிந்து உணவுப் பொருட்களைப் பெருக்க உழவுத் தொழிலில் ஈடுபட்டு விளைச்சலைப் பெருக்கினான்.

உழவுத்தொழிலில் ஈடுபட்டு அதில் விளைந்த பொருட்களைத் தனித்து உண்ணல் பண்பாகாது; பகுத்து உண்ணலே பண்பாகும் என்று கருதினர் பழந்தமிழர். இதனை,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு"

(குறள். 81)

பிறர்க்கு உதவி செய்வதற்காகவே விருந்தோம்பல் மேற்கொண்டதாகத் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

"ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே-ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

(நல்வழி 13)

ஆற்றின் கரையில் உள்ள மரமும் அரசன் போல் பெருமையாக வாழ்கின்ற வாழ்க்கையும் அழிந்து விடும். ஆனால் உழுது பயிர் செய்து உண்டு வாழ்வதே உயர்வாகும். அதற்கு நிகரான வாழ்க்கை வேறொன்றில்லை. பிறதொழில்களுக்கெல்லாம் அழிவு உண்டு. எனவே குற்றமற்றதும் அழிவில்லாததுமான உழவுத் தொழிலை மேற்கொண்டு வாழும் வாழ்க்கையே சிறந்த வழியாகும்.

உலகில் உள்ள தொழில்களுக்கெல்லாம் தலையாய தொழிலாக விளங்குகின்றது உழவுத்தொழில். உழவுத் தொழிலைக் காட்டிலும் வேறு எந்தத் தொழிலும் சிறப்பானதல்ல என்பதனை மேற்கண்ட ஔவையின் நல்வழிப் பாடல் மூலம் அறிய முடிகின்றது.

விருந்தோம்பல் செய்து அன்பு, பண்பு, தொழில் என்னும் பல நிலைகளில் மனிதன் இன்றும் உயர்ந்துள்ளான்.

விருந்தோம்பல் பண்பானது மனிதனின் மற்ற பண்புகளைச் செம்மைப்படுத்தி உள்ளது. இப்பண்பை ஆதாரமாகக் கொண்டு இதன் மூலம் பிற பண்புகள் பிறந்திருக்கின்றன. ஆங்கிலத்தில் 'First is the best' என்பார்கள். இந்த விருந்தோம்பல் பண்பே மற்ற பண்புகளைக் காட்டிலும் சிறப்புடைய தாகவும் முதன்மையானதாகவும் திகழ்கின்றது.

பசியின் தன்மை

'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்' என்பது பழமொழி. பசி மனித உணர்ச்சியின் உச்சநிலையைக் காட்டுகின்றது.

"மானம் குலம்கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம்"

(நல்வழி. 27)

என்னும் இப்பாடல் வழி பசி வந்தால் மானம், குலம், படிப்பு, தாராள மனப்பான்மை, அறிவு, தானம், தவம், உயர்வு, தொழில், முயற்சி, தேன் போல் தித்திக்கப் பேசும் மங்கையர் மீது காமுறுவது ஆகிய இப்பத்துக் குணங்களும் பறந்து போகும் என்பதனை அறியமுடிகின்றது. பசி என்னும் உணர்வின் ஆளுமையை அறிந்ததால் அமுதமாயினும், பழஞ்சோறாயினும் பகுத்து உண்ணும் பழக்கம் ஏற்பட்டது. பகுத்து உண்ணும் பண்பின் மூலம் பசித்த வயிறு என்பது இல்லா நிலையை உருவாக்க முடியும் என்ற எண்ணம் தோன்றியது. இதுவே விருந்தோம்பல் பண்பினை வளர்க்க வழிகோலியுள்ளது. மக்களிடையே தொன்றுதொட்டுப் படிப்படியாக வளர்ந்த இப்பண்பு இன்றளவும் ஓரளவு புகழ்பெற்று விளங்கி வருகின்றது.

> ***"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்***
> ***பிடித்த கல்விப் பெரும்புணை விடுஉம்***
> ***நாண்அணி களையும் மாணெழில் சிதைக்கும்***
> ***பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்***
> ***பசிப்பிணி என்னும் பாவி..."***

(மணிமே. 11 : 36 – 39)

என்ற மணிமேகலைப் பாடல் பசிப்பிணி என்னும் பாவி, தான் பற்றியவருடைய உயர்குடிப் பிறப்பை அழிக்கும்; சிறந்த புகழைக் கெடுக்கும்; பிறவிக் கடலைக் கடப்பதற்குப் பற்று கோடாகக் கொண்ட கல்வியாகிய பெரிய தெப்பத்தை நீக்கும்; நாணாகிய அணியை நீக்கும்; பூண் விளங்குகின்ற முலைகளையுடைய மகளிரோடு பிறருடைய வீட்டுப் புறங்கடையில் நிறுத்தும். இத்தகைய கொடுமைகளை எல்லாம் செய்யும் எனப் பசியின் விளைவைப் பட்டியலிடுகின்றது.

விருந்தில் தமிழர் பண்பு

தமிழர் தமது வீட்டிற்கு வரும் புதியவர் எந்நாட்டினராயினும், எச்சமயத்தவராயினும் வரவேற்று உண்டி முதலியவற்றைக் கொடுத்து உபசரிக்கும் நற்பண்புடையவர்.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்(று) அன்று"

(குறள். 82)

உண்டவரை நீண்ட நாள் வாழச் செய்யும் தேவாமிர்தமே கிடைத்தாலும் அதனைத் தான் மட்டும் தனித்து உண்ண விரும்பாத மனநிலையை இக்குறட்பாவில் திருவள்ளுவர் காட்டுகின்றார்.

எல்லோருக்கும் பகிர்ந்து அளித்துத் தானும் உண்டு மகிழும் தன்மை தமிழர்களுக்கே உரியது. பகிர்ந்துண்ணும் பழக்கத்தினைக் கொன்றை வேந்தனில்,

'மருந்தே யாயினும் விருந்தோடு உண்க'

(கொன்றை வேந்தன். 70)

என ஔவையார் கூறுகின்றார்.

இத்தகைய சிறப்புமிக்க போற்றத்தக்க விருந்தோம்பல் பண்பினைப் பற்றிச் சங்ககால இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை உள்ள பல்வேறு பாடல்களின் வழியே ஆராயலாம்.

தொல்காப்பியத்தில் விருந்தோம்பல்

தமிழர்களுக்குக் கிடைத்த முதல் இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பிய இலக்கணத்தில் விருந்தோம்பல் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. தொல்காப்பியர் அனைத்திற்கும் இலக்கணம் வகுத்துள்ளதைப் போல் இவ்விருந்தோம்பலுக்கும்,

"புகாஅக் காலை புக்கெதிர் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளா ணெதிரும் விருந்தின் கண்ணும்"

(தொல். களவியல் நூ. 105)

என்று இலக்கணம் வகுத்துத் தந்துள்ளார். தலைவன் கூற்று

எவ்விடங்களில் நிகழும் என்பதைப் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடும் இந்நூற்பாவில் தலைவியின் இல்லத்திற்குத் தலைவன் விருந்தினராக வருவதைத் தலைவி எதிர்பார்த்திருப்பதால் தோழி அவனை விருந்தாய் எதிர்கொள்ளும்போது தலைவி கூற்று நிகழும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் தொல்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் விருந்தோம்பல் பண்புக்கான குறிப்பு உள்ளதை அறிய முடிகின்றது. மேலும், அக்காலத்தில் தலைவி, தோழி மற்றும் இல்லத்தார் அனைவருமே விருந்தோம்பலைச் சிறந்த அறமாகக் கருதியிருந்ததையும், ஊடல் தீர்க்கும் வாயிலாக விருந்து அமைந்ததையும் அறிய முடிகின்றது.

விருந்து ஆடவனுக்குரியது

"அருந்தொழில் முடித்த செம்மாற் காலை
விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்"

(தொல். கற்பியல் நூ. 144)

வினையைச் செய்து முடித்து மீண்ட தலைமகன் விருந்தினருடன் நல்ல செயல்களைச் சிறப்பித்துக் கூறும் விருப்பத்தின்கண் செயல்படுவான் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

வினையை மேற்கொள்வதற்குக் காரணம் விருந்தினரைப் பேணிக் காக்கவே என்பதை உணர முடிகிறது. பொருள் இல்லாமல் விருந்தோம்பல் செய்ய இயலாது. அதனால் அக்காலத்தில் பொருளுக்காக ஆண்கள் வினையை மேற்கொண்டனர். பெரும்பாலும் விருந்தினரைப் பேணிக்காப்பது, ஆணின் கடமையாகக் கருதப்பட்டது. ஆண்மகன் விருந்தோம்பல் செய்வதற்குப், பொருளுக்காக வினையை மேற்கொள்ளக் கடமைப்பட்டுள்ளான் என்று தொல்காப்பியரே குறிப்பிட்டுள்ளார்.

இதனையே திருவள்ளுவர் **'பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லை' (குறள். 247)** என்கின்றார்.

விருந்து என்னும் அறத்தைச் செய்ய பொருள் மிகவும் இன்றியமையாதது ஆகும். விருந்து செய்ய முடியாதவர் இவ்வுலகில் இருந்தும் பயனில்லை. உலகில் உள்ள உயிருக்கு உதவக்கூடிய அளவில் பொருள் இல்லையென்றால் அவர்கள் வாழ்வு பயன் தராது என வள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

சுற்றம் ஓம்புதல் பெண்ணின் கடமை

"விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"

(தொல். கற்பியல் நூ. 150)

இந்நூற்பாவின் வழி தலைவியானவள் தமது வீட்டிற்கு வரும் விருந்தினரை ஏற்று நடத்தும் பெற்றிமையையும், சுற்றத்தினரை அன்போடு பாதுகாத்தலையும் தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ள திறத்தை உணர முடிகின்றது.

விருந்தினரைப் பேணிக் காப்பதற்காக ஆண்மகன் வினையை மேற்கொள்கின்றான். அவன் கொண்டு வந்த பொருளைக் கொண்டு பெண்கள் விருந்தினர்களை ஏற்று நடத்தும் பண்பினைக் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். அதனால் சுற்றம் ஓம்புதல் பெண்ணுக்குரியது என்று தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துள்ளார்.

சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்

சங்ககால மக்கள் களவு கொண்டு, பின்னர் கற்பு வாழ்க்கை வாழ்ந்தனர். இத்தகைய களவு வாழ்விலும், கற்பு வாழ்விலும் விருந்தோம்பலானது சிறந்திருந்தது.

சங்க காலத்தில் பெண்கள் தம் கணவரைத் தம் உயிராகக் கருதினர். ஆண்களும் தம் மனைவியருக்காகவே வாழ்ந்தனர் என்று

சங்கப் பாடல்களின் மூலம் அறிய முடிகின்றது. ஒத்த அன்புடைய கணவன் மனைவி இருவரும் சேர்ந்து நடத்தும் குடும்ப வாழ்வில் விருந்தோம்பலானது சிறப்புற்று விளங்கியது.

தலைவியின் விருந்து

சங்க காலத்தில் பெண்கள் விருந்தினரை உபசரிப்பதில் மிகுந்த விருப்பம் கொண்டனர். சங்ககால மகளிரின் உயர்ந்த பண்பாக இவ்விருந்தோம்பல் பண்பு சிறப்புற்று இருந்தது. ஆடவர் கொண்டு வந்த பொருளினைக் கொண்டு மகளிர் விருந்தோம்பினர். திருமண வாழ்வில் ஈடுபட்டுள்ள பெண்கள் விருந்து செய்வதை ஒரு விருப்பமான செயலாகக் கொண்டனர். இதுவே குடும்பத் தலைவியின் கடமை என எண்ணினர்.

நானிலத்திலும் வாழக்கூடிய மக்கள் தங்களுக்குக் கிடைத்த பொருட்களைக் கொண்டு விருந்தோம்பினர். விருந்தினருக்காகச் சமைக்கப்பட்ட உணவானது சிறப்பிடம் பெற்றிருந்தது. விருந்தினருக்காக இறைச்சி உணவினை விருப்பமுடன் சமைத்துக் கொடுத்தனர்.

தலைவி கொண்ட ஊடல் தீர விருந்தினர் வர மாட்டாரா என்று தலைவன் ஏங்கிய காலமும் உண்டு. விருந்தினர் வந்ததால் ஊடல் விலக்கிய தலைவியையும் பார்க்க முடிகின்றது. பரத்தையிடம் சென்ற தலைவனை நினைத்து வருத்தம் கொள்ளாது விருந்தினரை நினைத்த தலைவியும் உண்டு.

"நல்மனை நனிவிருந்து அயரும்
கைதூவின் மையின் எய்தா மாறே"

(நற். 280)

தன் தலைவன் ஆற்றவேண்டிய அறத்தினைத் தலைவி தனியே தான் மட்டுமே செய்துள்ளாள். இங்கு அறம் என்பது விருந்தோம்பலுக்குரிய பொருளில் வருகின்றது. தலைவன் தலைவியை விட்டு ஏதோ ஒரு காரணத்தினால் பிரிந்ததில் தலைவி மட்டுமே விருந்தோம்பல்

அறத்தினைச் செய்தாள் என்பதனை மேற்கண்ட பாடல் வழி அறிய முடிகின்றது.

சங்க காலத்தில் விருந்தோம்பலில் பெண்கள் பெரும்பங்கு பெற்றிருந்தனர்.

"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே"

(நற். 142)

பெண்கள் இரவு நேரத்திலும் விருந்தினரை உபசரித்தனர் என்பதனை இந்நற்றிணைப் பாடல் குறிப்பிடுகின்றது.

தலைவியது விருந்திடும் திறன்

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிது எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று நுண்ணூதல் முகனே"

(குறுந். 167)

இப்பாடலில் தலைவியின் சமைக்கும் பாங்கு வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

'முற்றிய தயிரைத் தனது காந்தள் மெல்விரலால் பிசைந்து தாளிதம் செய்கின்றாள். தாளிதம் செய்யும்போது எழும் புகையானது முகத்தில் பட்டுக் கண்களைச் சிவக்கச்செய்கின்றன. தலைவன் இனிதென்று கூறி உண்பதால் தலைவியின் முகமானது நுண்ணியதாக மகிழ்ந்தது.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞரான பாரதிதாசனும் தான் இயற்றிய குடும்பவிளக்கில் இது போன்ற காட்சியினை வடித்திருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

"உண்டனன் உண்ணக் கண்ட
நகைமுத்தோ உவப்பை உண்டாள்"

(குடும்ப விளக்கு. பகுதி 3 : 77-78)

என்ற அடிகளின் மூலம் அறியமுடிகின்றது.

தமிழரின் நம்பிக்கையும் விருந்தோம்பலும்

தமிழர் தமக்கென்று சில பழக்க வழக்கங்களைக் கடைபிடித்து வாழ்ந்தனர்.

தமிழரின் பழக்க வழக்கங்களில் சில நம்பிக்கைகள் இன்றளவும் கடைப்பிடிக்கப்படுகின்றன. தமிழர்கள் நம்பிக்கையில் மூழ்கியவர்கள்.

விருந்தினர்க்கென்றே சில நம்பிக்கைகள் வைத்திருந்தனர். அந்தக் காலகட்டத்தில் தொலைத்தொடர்பு செய்திகள் பறவைகளின் மூலம் பரிமாறிக் கொள்ளப்பட்டது. பறவை இனங்களில் காக்கைக்கு ஒரு சிறந்த இடத்தினைத் தமிழர்கள் கொடுத்துள்ளனர்.

சங்க காலத்தில் விருந்தினர் வருவர் என எதிர்பார்த்திருந்த மக்களுக்குக் காக்கை கரைந்தால் விருந்தினர் கட்டாயமாக வருவர் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர்.

"பெருந்தோள் நெகிழ்ந்த சொல்லிற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"

(குறுந். 210)

பிரிந்து சென்று மீண்டும் வரும் தலைவனைத் தலைவியானவள் விருந்தினராக ஏற்றுக்கொள்வது வழக்கம்.

விருந்தினர் வருவார் என்று காக்கை கரைந்ததால் தலைவியானவள், காக்கைக்கு நெய்யுடன் கலந்த சோற்றினை இட்டு மகிழ்ந்தாள் என்கின்றது குறுந்தொகைப் பாடல். தன் தலைவன் வருவான்

என்று கரைந்து சொன்ன காக்கைக்கு நெய்யுடைய சோற்றினை மகிழ்ச்சியோடு அளிக்கின்றாள் சங்கத் தலைவி ஒருத்தி.

காகம் கரைந்தால் விருந்தினர் வருவார்கள் என்ற நம்பிக்கை சங்ககால மக்களிடம் காணப்பட்டன. இந்த நம்பிக்கை இன்றும் தொடர்ந்து வருகின்றது. இன்றைக்கும் தமிழர் காக்கைக்குச் சோறிடும் பழக்கத்தினைக் கொண்டுள்ளனர். விருந்தினர் வருகையால் சங்ககால மக்கள் மகிச்சி அடைந்தனர் என்பதனை அறிய முடிகின்றது.

"நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து
உகுபலி அருந்திய தொருவிற் காக்கை"

(நற். 343)

என்ற நற்றிணைப் பாடல், சங்க காலத்தில் ஆலமரத்தடியில் உணவு சமைத்து உண்டனர்; இந்த உணவுப் பலி உணவு என்று அழைக்கப்பட்டது; இந்த பலி உணவுச் சோற்றினை ஆக்கி முதன் முதலில் காக்கைக்குக் கொடுத்துப் பிறகு தன் சுற்றத்தோடு சேர்ந்து உண்ணுகின்றனர்; பலி உணவினை காக்கைக்கு இடுவது ஒரு நம்பிக்கையாகக் கொண்டிருந்தனர் போன்ற கருத்துக்களை உணர்த்தி நிற்கின்றது.

இந்நாளில் ஊர்ப்புறங்களில் (ஆடிமாதத்தில்) மரத்தடியில் இருக்கும் இறைவனுக்குப் பொங்கல் வைத்துத் தன் சுற்றத்தினருடன் சேர்ந்து உண்ணுகின்றனர். குலதெய்வ வழிபாட்டில் ஆடு, கோழி, பன்றி, போன்ற விலங்குகளைப் பலி கொடுத்து அதனைச் சமைத்து முதலில் காக்கைக்கு இடுகின்றனர். பின்னர் தனது சுற்றத்தாருடன் சேர்ந்து உண்டு மகிழும் பண்பு இன்றைக்கும் நடைமுறையில் இருந்து வருகின்றது. காது குத்தல் நிகழ்ச்சியில் குலதெய்வத்திற்குப் பலியிட்டு அதனைச் சமைத்து முதலில் காக்கைக்கு விருந்து கொடுக்கின்றனர். தற்போதும் குலதெய்வ

வழிபாட்டில் காக்கைக்குப் பலிசோறு இடுவது நம்பிக்கையாகவும் வழக்கமாகவும் உள்ளதை காண முடிகின்றது.

அரசர்கள் அளித்த விருந்து

பொதுமக்கள் வரும் விருந்தினரைப் பேணிக்காப்பதில் விருப்பம் கொண்டதைப் போலவே அரசர்களும் தம்மிடம் வரும் விருந்தினர்களை ஏற்று நடத்தினர்.

அரசர்களுக்கென இருக்கும் கடமைகள் ஏராளம் இக்கடமைகளுக்கிடையே தம்மை நாடி வருபவர்களுக்கு (விருந்தினரை) முகம் சுளிக்காமல் வயிறார உணவளித்ததோடு அல்லாமல் அவர்களுக்குப் பொன் பொருள் என விருந்துடன் பரிசுப் பொருட்களையும் கொடுத்து ஆதரித்தார்கள்.

சங்க காலத்தில் அரசர்களின் விருந்தினராகப் புலவர்கள், பொருநர், பாணர், விறலி போன்றோர் விளங்கினர்.

புலவர்கள் வறுமையுற்ற காலத்தில் அரசர்களை நாடிச் சென்று அரசர்களின் பெருமையைப் பாடிப் பெற்ற பரிசுப் பொருட்களைக் கொண்டு வாழ்ந்தனர்.

அரசர்கள் விருந்தினர்களைக் கவனிப்பதற்காகவே அட்டிற் சாலைகளில், சமையல்காரர்(மடையர்)களைப் பணியில் வைத்திருந்தனர்.

"உண்மின் கள்ளே! அடுமின் சோறே!
எறிகதிற்றி! ஏற்றுமின் புழுக்கே!
வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிப்ப"

(பதிற்று. இரண்டாம் பத்து : 18)

இப்பாடலடியால் நெடுஞ்சேரலாதனின் விருந்தோம்பல் பண்பினை அறியலாம். அவனது அரண்மனையில் வரும் விருந்தினருக்குச்

சோற்றினையும், கள்ளினையும் மற்றும் பருப்பு வகைகளையும் அளித்துள்ளனர். தன்னிடம் வரும் விருந்தினர்களுக்கு நெடுஞ்சேரலாதன் விருந்திட்டதைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியுள்ளார்.

சங்ககாலத்தில் அரசர்கள் தங்களிடம் வரும் விருந்தினர்களை உபசரிப்பதில் வள்ளல்களாகத் திகழ்ந்தனர். புலவர்களுக்குப் பொன், பொருட்களைப் பரிசுப் பொருட்களாகக் கொடுத்து வழியனுப்பி உள்ளனர்.

ஆற்றுப்படையில் உள்ள நல்லியக்கோடன், கரிகாலன், கடையெழு வள்ளல்கள் போன்றோர் தம்மிடம் வரும் விருந்தினர்களை ஆதரித்தனர். இன்றைக்கு அவர்கள் வரலாற்றுப் பெருமை உடையவர்களாக இருக்கின்றனர்.

பாரி, காரி, ஓரி போன்றவர்கள் மக்களையும், புலவர்களையும் ஆதரித்து நல்லாட்சி புரிந்தனர். தனக்காக எதையும் வைத்துக் கொள்ளாமல் பிறருக்காகவே வாழ்ந்தனர் போன்ற செய்திகள் குறித்து தமிழ் இலக்கியங்களில் குறிப்புகள் உள்ளன.

விழாவில் விருந்து

சங்ககால மக்கள் தெய்வங்களுக்கு விழா எடுத்துள்ளனர். விழாவின் போது எல்லோருக்கும் விருந்து அளிக்கப்பட்டுள்ளமையை சங்க இலக்கியங்களில் பலவிடங்களில் காணமுடிகின்றது.

'தெய்வ விழாவும் திருந்து விருந்து அயர்வும்'

(பரிபா. செவ்வேல். 17)

என்னும் பாடல், தமிழர் திருந்திய விருந்தோம்பலைச் செய்வர் என்னும் கருத்தை உணர்த்துகின்றது. இங்ஙனம் விழாச் செய்தலும் விருந்தயர்தலும் நன்னெறியாதலின் நல்லொழுக்கமாயிற்று.

பிரிந்த தலைவர் வந்த பிறகு விழாக்காலத்தே அவனுடன் புதுப்புனலாடுதலாகிய விருந்தும், வரும் விருந்தினரைப் பேணுதலுமாகிய அறங்களைச் சங்கஇலக்கிய மகளிர் செய்தனர்.

சங்ககால மக்கள் பலவகைப்பட்ட தொழில்கள் செய்தனர். விழாவின்போது எந்தவிதமான தொழில் ஏற்ற இறக்கங்களும் இல்லாமல் அனைவரும் ஒன்று கூடி விழாவினைக் கொண்டாடினர். விழாவில் ஏற்றத்தாழ்வின்றி அனைவருக்கும் விருந்தளிக்கப்பட்டது.

திருமணத்தில் விருந்து

தமிழர்கள் களவுகொண்டு பின்னர் கற்புடைய வாழ்க்கையை மேற்கொண்டனர். திருமணம் செய்துகொண்டு வாழும் வாழ்வு கற்புடைய வாழ்வாகக் கருதப்பட்டது.

தமிழர் திருமணத்தின்போது மக்களுக்கு விருந்திட்டனர் என்ற குறிப்பானது அகநானூற்றுப் பாடலில் காணமுடிகின்றது.

"உழுந்து தலைபெய்த கொழுங்களி மிதவை
பெருஞ்சோற்(று) அமலை நிற்ப நிரைகால்"

(அகம். 86)

என்னும் அகப்பாடல் வழியே சங்ககாலத் தமிழரது திருமணத்தின்போது உழுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த குழைவாக வெந்த பொங்கலோடு பெருஞ்சோற்றுத் திரளை உண்பது இடைவிடாது நிகழ்ந்து கொண்டே இருந்தது என்பதனை அறிய முடிகின்றது.

சங்கத்தமிழர் திருமணத்தின்போது உழுத்தம்பருப்பு கலந்து சமைத்த பொங்கலினை விருந்தாக அளித்துள்ளனர். பொங்கல் விருந்தினை உண்ணும் மக்களின் ஆரவாரம் மிகுந்து இருந்தது என்பதனை அறிய முடிகின்றது. இன்றைக்கும் தமிழரின் திருமண விழாவின்போது மணப்பொங்கல் வைக்கும் பழக்கம் காணப்படுகின்றது.

நடுகல் தொழுது விருந்து வேண்டல்

சங்க கால மக்கள் இறந்த வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபட்டனர். இது நடுகல் வழிபாடு என்று அழைக்கப்பட்டது. சங்ககாலப் பெண் ஒருத்தி தனது வீட்டிற்கு விருந்தினர் வரவேண்டும்; தான் அவர்களை உபசரிக்க வேண்டும் என்று நடுகல்லை வழிபடுகின்றாள்.

"நடுகல் கைதொழுது பரவும் ஓடியாது
விருந்தெதிர் பெறுகதில் யானே என்னையும்
. . . . . வேந்தனொடு
நாடுதரு விழுப்பகை எய்துக எனவே"

(புறம். 306)

என்று காட்டுகின்றது புறநானூற்றுப் பாடல் ஒன்று.

சங்ககாலத்தில் பெண்கள் நடுகல்லினை வணங்கியுள்ளனர். விருந்தினருக்கு விருந்திடும் அளவிற்குத் தங்களின் வீடுகளில் செல்வம் செழிக்க வேண்டும் என்ற உள்நோக்கமானது வழிபாட்டின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"புதிதாய் வரும் விருந்தினரைச் சிறந்த முன்னோரின் ஆவியாகவும் கடவுளாகவும் கருதி வரவேற்கும் போக்கு பல பழங்குடி மக்களிடம் காணப்படுகின்றது. ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடம் விருந்தினரை முன்னோர் ஆவியாகவும் கடவுளாகவும் கருதும் போக்கு இருந்தது. ஐரோப்பியர் ஆஸ்திரேலியக் கண்டத்துக்கு வந்தபோது உள்நாட்டுப் பழங்குடி மக்களால் கடவுளாகவும் ஆவியாகவும் கருதி வரவேற்கப்பட்டனர்."[14]

என்று கூறும் பேராசிரியர் க.ப. அறவாணன் கருத்து ஈண்டு நோக்கத்தக்கது. இதன் மூலமாக இறந்தவர்களை விருந்தினர்களாக வழிபடும் பழக்கத்தினை அறிய முடிகின்றது.

கடன் கொண்டு விருந்து படைத்த வீரன்

அந்தக் காலகட்டத்தில் விருந்தோம்பலை ஒரு கடமையாகவே மகிழ்ச்சியுடன் மேற்கொண்டனர்.

வாழ்நாளில் முக்கியமாகக் கருதப்பட்ட பொருட்செல்வத்தைக் கொண்டு விருந்தினர்களை உபசரிப்பு செய்யும்விதம் நம்மை வியப்படையச் செய்கின்றது.

"அடைந்தார் துயர்கூரா ஆற்றல் இனிதே
கடன்கொண்டும் செய்வன செய்தல் இனிதே"

(இனியவை. 31)

என்னும் இப்பாடல் பிறர் துன்பம் தீரக் கடன் வாங்கிச் செய்யத்தக்கன செய்வது இனிது என்று இனியவை நாற்பது கூறும் கருத்தைப் புலப்படுத்துகின்றது. விருந்தினருக்காகக் கடன் வாங்கி விருந்தோம்புவது என்பது இனிதே என்று மக்கள் கருதி வந்தனர்.

கடன் வாங்குவது இழிவாகக் கருதப்பட்டாலும், பிறர் பசியின் துன்பம் போக்குவதற்காகத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் கடன் கொண்டு விருந்தோம்பல் செய்துள்ளனர்.

நீதி நூல்களில் விருந்தோம்பல்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை நீதி நூல்கள் என்று குறிப்பிடுகின்றோம். இந்நூல்கள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பொருட்களையும் பற்றிக் குறிப்பிடுகின்றன. அறம், பொருள், இன்பம் எனும் மூன்று உறுதிப் பொருட்களும் விருந்தோம்பல் என்னும் ஒரே பண்பில் அடங்கிவிடுகின்றன. விருந்திடும் பண்பின் தேவை பல நீதி நூல்களின் வழியே மக்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

திருக்குறள்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் காலத்தால் முற்பட்டது திருக்குறளாகும். உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறளில் திருவள்ளுவர் 'விருந்தோம்பல்' பற்றித் தனியொரு அதிகாரம் படைத்துள்ளார். விருந்தோம்பலானது மக்களின் வாழ்வில் எவ்வாறெல்லாம் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

விருந்தினால் கேடு வராது

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று"

(குறள். 83)

ஒருவன் தினந்தோறும் விருந்து ஓம்புவதினால் அவன் செல்வம் அழியாது. விருந்து செய்யச் செய்ய அவன் செல்வ வளமானது பெருகும். தன் வீடு தேடி வரும் விருந்தினரை நாள்தோறும் பேணுபவன் வாழ்க்கை எந்நாளும் கெடுவதில்லை என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

விருந்தினால் சொர்க்கம்

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

(குறள். 90)

என்னும் குறளானது, தன்னிடம் வந்த விருந்தினரை உபசரித்து அனுப்பிய பின்னர் வரும் விருந்தினரை எதிர் நோக்கியிருப்பவன் எந்நாளும் தேவர்களுக்கு விருந்தினராவான் என்று குறிப்பிடுவதிலிருந்து விருந்து செய்வோர் தேவர்களாலேயே வரவேற்கப்படுவர் என்பதனை உணர முடிகின்றது.

மலருக்கு ஒப்பானவர் விருந்தினர்

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

(குறள். 86)

என்னும் குறளின் மூலம், அனிச்சம்பூ என்பது பூ வகைகளுள் ஒன்று; அந்த அனிச்ச மலரானது முகர்ந்தவுடனே வாடும் தன்மை கொண்டது; இந்த அனிச்ச மலரோடு விருந்தினரை ஒப்பீடு செய்கின்றார் வள்ளுவர் போன்ற கருத்துக்களை அறிந்துகொள்ள முடிகின்றது. விருந்தினர் தம் வீடு தேடி வரும்போது, விருந்து கொடுப்பவரின் முகமானது மிக மலர்ச்சியுடன் எதிர்கொண்டு அழைத்து விருந்து கொடுக்க வேண்டும். எதிர்கொண்டு அழைப்பவர்களின் முகமானது சிறிது வாட்டத்துடன் இருந்தாலும் விருந்தினர் முகம் சட்டென்று அனிச்ச மலர் போன்று வாடும் தன்மையுடையதாக மாறிவிடும்.

பஞ்சத்திலும் விருந்தளித்தல்

"பஞ்சப் பொழுதகத்தே பாத்துண்பான் காவாதான்
அஞ்சா(து) உடைபடையுள் பேந்தெறிவான் எஞ்சாதே
உண்பதுமுன் ஈவான் குழவி பலிகொடுப்பான்
எண்பதின் மேலும்வாழ் வான்"

(சிறுபஞ்ச. 79)

என்னும் இப்பாடலின் மூலம் பஞ்ச காலத்திலும் தன்னிடம் உள்ள உணவுப் பொருள்களைப் பலர்க்கும் பகுத்துக் கொடுத்துப் பின் எஞ்சியதைத் தான் உண்டு வாழும் வாழ்க்கையை வாழ்ந்தனர் தமிழர் என்பது புலனாகின்றது. செல்வமுடையவர்களுக்கு மட்டுமின்றி வறியோருக்கும் விருந்தோம்பல் பண்பானது வலியுறுத்தப்படுகின்றது. பஞ்சகாலத்திலும் விருந்தளித்து உண்ண வேண்டும் என்னும் கருத்தையும் இச்சிறுபஞ்சமூலப் பாடல் மூலம் அறிந்துகொள்ளலாம்.

அளிக்கும் உணவுக்குத் தகுதியுடையோர்

"விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
இவர்ஊண் கொடுத்தல்லால் உண்ணாரே என்றும்
ஒழுக்கம் பிழையாதவர்"

(ஆசாரக். 21)

என்ற பாடல் விருந்தினர், வயதில் மூத்தவர், பசுக்கள், பறவைகள், பிள்ளைகள் போன்றோருக்கு உணவினை அளிக்காமல் தான் மட்டும் தனித்து உண்ண மாட்டார்கள் ஒழுக்கம் தவறாதவர்கள் என்பதனை உணர்த்துகின்றது. எனவே விருந்தோம்பல் சிறப்புடையதாக என்றென்றும் கருதப்பட்டது.

அறநெறியில் விருந்திடல்

'அறத்தாற்றின் ஈயாதது ஈகையன்று'

(முதுமொழி. அல்லபத்து 5 : 48)

என்னும் பாடலடி, அறநெறியில் ஈட்டி வந்து பிறருக்குக் கொடுத்தலே சிறந்த ஈகையாகும் என்பதனை வலியுறுத்துகின்றது.

அறம் என்பது வறியவர்க்குக் கொடுத்தல், அறச்சாலை அமைத்தல் என்று முதுமொழிக் காஞ்சி குறிப்பிடுகின்றது.

'பாரம்வெய் யோர்க்குப் பாத்தூண் எளிது'

(முதுமொழி. எளிய பத்து பா. 79)

என்பதன் வழி, மற்றவர் சுமையைத் தாம் ஏற்க விரும்புவர்க்குத் தம்மிடம் உள்ள உணவினைப் பகுத்துத் தந்து தாமும் உண்ணுதல் என்பது எளிதான செயலாகும் என்னும் கருத்து புலனாகின்றது.

தனக்குக் கிடைத்த உணவுப்பொருளினைத் தான் மட்டும் தனித்து உண்ணாது இல்லாதவர்க்குக் கொடுத்து உண்ணுதல் சிறப்பு என்பதனை இப்பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

விருந்துக்குத் தகுதியானவர்

தான் அறநெறியில் ஒழுகிய பொருளினைக் கொண்டு விருந்து கொடுப்பதைச் சிறந்த அறமாகக் கருதினர் தமிழர். அதனால் விருந்துக்குரியவர்களைக் குறித்து ஏலாதி பாடல் குறிப்பிடுவது ஈண்டு நோக்கத்தக்கது.

> ***"துறந்தார் துறவாதார் துப்பிலார் தோன்றார்***
> ***இறந்தார் ஈடற்றார் இளையர் - சிறந்தவர்க்கும்***
> ***பண்ணாரும் சொல்லாய் பழியில்ஊண் பாற்பகுத்தான்***
> ***மண்ணாளும் மன்னாய் மற்று"***

(ஏலாதி : பா. 35)

என்னும் பாடல், ஆதரிப்பவர்களால் கைவிடப்பட்டவர்க்கும், விருந்தினருக்கும், வறியவர்க்கும், காணப்படாத தென்புலத்தார்க்கும், ஏழையர்க்கும், துணையற்ற சிறுவர்க்கும், பெரியோர்க்கும், பழிக்கப்படாத உணவைப் பகுத்து அளித்தவன் மறுமையில் அரசனாய் உலகத்தை ஆள்வான் என்று குறிப்பிடுவதிலிருந்து அறத்தின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றது என்பதனை அறியமுடிகின்றது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இவ்வாறாக விருந்தோம்பல் பண்பு குறித்துப் பலவிடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. விருந்தோம்பலானது அறத்தில் ஒன்றாகவும், கடமையாகவும், நீதி தவறாத நன்னெறிச் செயலாகவும் மக்களிடையே நிகழ்ந்துள்ளதையும் அறிய முடிகின்றது.

காப்பிய நூல்களில் விருந்தோம்பல்

ஐம்பெருங்காப்பியங்களில் இரட்டைக் காப்பியமாக விளங்கும் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் விருந்தோம்பல் குறித்த செய்திகள் பல காணப்படுகின்றன.

மதுரை மாநகரப் பெண்கள் விருந்தோம்பும் பண்பில் சிறந்து விளங்கினர் என்பதனை,

"வருவிருந்(து) ஓம்பி மனையறம் முட்டாப்
பெருமனைக் கிழத்தியர் பெருமகிழ்(வு) எய்தி"

(சிலம்பு. அழற்படுகாதை : 22)

என்ற பாடலடிகளின் மூலம் அறியமுடிகின்றது.

இடைக்குல மகளிர் அளித்த விருந்து

கோவலன் மாதவியின் மோகத்தால் பொன் முதலான பொருட்களை இழந்தான். கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்து கண்ணகியிடம் வந்து சேர்ந்தான். இழந்த செல்வத்தைப் பெற எண்ணிய கோவலன் கண்ணகியை அழைத்துக் கொண்டு மதுரை மாநகர் சேர்கின்றான்.

"அரும்பெறற் பாவையை அடைக்கலம் பெற்ற
இரும்பேர் உவகையின் இடைக்குல மடந்தை
அளைவிலை உணவின் ஆய்ச்சியர் தம்மொடு
மிளைசூழ் கோவலர் இருக்கை அன்றிப்
பூவல் ஊட்டிய புனைமாண் பந்தர்க்
காவற் சிற்றில் கடிமனைப் படுத்து"

(சிலம்பு. கொலைக்களக் காதை 16 : 1 – 5)

என்ற பாடற்பகுதி, கண்ணகி, கோவலன், கவுந்தியடிகள் ஆகிய மூவரும் மதுரை மாநகர் சென்றடைந்த போது அங்குள்ள இடைக்குல மகளிரான மாதரியும், ஐயையும் அவர்கள் மூவரையும் வரவேற்று உணவும் உறைவிடமும் கொடுத்து ஆதரித்துள்ளனர். என்பதனைப் புலப்படுத்துகின்றது.

விருந்து தடைபடுதலால் வருத்தம்

கண்ணகியை விட்டுக் கோவலன் பிரிந்து மாதவியுடன் வாழ்க்கை நடத்தினான். கோவலனைப் பிரிந்த கண்ணகி தனது துயரத்தினால் விருந்தினை மேற்கொள்ளவில்லை.

"அறவோர்க்(கு) அளித்தலும், அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்(கு) எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

(சிலம்பு. கொலைக்களக்காதை. 71 – 73)

என்று கோவலன் பிரிவால் அறவோர்க்கு அளித்தல், துறவிகளை உபசரித்தல், சிறப்பாகத் தொன்றுதொட்டு வரும் விருந்தோம்புதல் முதலிய இல்லறக் கடமைகள் தடைப்பட்டு விட்டன என்று வருத்தத்தோடு கண்ணகி தெரிவிக்கும் கருத்தைச் சிலம்பு புலப்படுத்தியுள்ளது.

காப்பியக் காலத்தில் சுற்றந்தழாஅல், அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கெதிர்தல் போன்ற பண்புகளைச் சிறந்த இல்லறமாகக் கொண்டிருந்தனர்.

ஊனமுற்றோருக்கு அளித்த விருந்து

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை முழுக்க உணவளித்தல் அறத்தினைப் பேசுகின்ற இலக்கியம் ஆகும்.

'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே'

என்ற உன்னத கருத்தை வலியுறுத்தும் இலக்கியம்.

"தானத்தில் சிறந்தது அன்னதானம்"

என்பது பழமொழி. 'உணவுத் தானம்' என்பதும் விருந்தோம்பலில் அடங்கும். அவ்வுணவுத் தானம் ஊனமுடையவர்களுக்கு அளிக்கப்படும்போது சிறப்புடையதாகின்றது.

"காணார் கேளார் கால்முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்"

(மணி : 11 : 95 – 96)

என்ற பாடலடிகள், கண் பார்க்க இயலாதவர், காது கேளாதவர், கைகால் முடக்குவாதம் உடையோர், ஆதரவற்றோர், நோயாளிகள் போன்றோருக்கு அளிக்கப்படும் உணவுத் தானமானது சிறப்புடையதாகும் என்பதைத் தெரிவிக்கின்றன. இதனையே சாத்தனார் தம் நூல் முழுவதும் ஆங்காங்கே வலியுறுத்துகின்றார்.

கம்பராமாயணத்தில் விருந்தோம்பல்

கம்பர் தனது காப்பியத்தில் விருந்தோம்பல் பண்புக்கு மிக உயர்ந்த இடத்தை அளித்துள்ளமையைப் பல பாடல்களின் மூலம் அறிய முடிகின்றது. இருப்பினும் ஒரு சில பாடல்களில் இடம் பெற்றுள்ள விருந்தோம்பல் மட்டும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

கோசலநாட்டு மக்கள் விருந்தினரைக் காண்பதைத் திருவிழாவைக் காண்பது போன்ற நிகழ்வாக மகிழ்ச்சியான சூழலாக எண்ணினன்.

"விருந்தினர் முகங்கண் டன்ன
விழா அணி விரும்புவாகும்"

(கம்ப. 1.2.15,1)

என்று கம்பர் கோசலநாட்டு மக்களின் விருந்தோம்பல் பண்பினைக் குறிப்பிடுகின்றார். விருந்து கையால் இடுவதன்று; மனத்தால் உணர்ந்து மகிழ்ச்சியுடன் இடப்படுவது என்பதனை,

"வெள்ளிய முறுவல் தோன்ற
விருந்தென மகளிர் ஈந்த
தெள்விளிப் பாணித் தீந்தேன்"

(கம்ப. 1.10.12.3 – 4)

என்னும் பாடல் அடிகளின் மூலம் அறியலாம்.

கோசல நாட்டு மகளிர் விருந்தினரை முகமலர்ச்சியுடன் வரவேற்றனர் என்பதனைக் கம்பர் 'விருந்தினரின் வருகை கண்டு உள்ளம் களிக்கும் மகளிரின் மலர்ந்த முகம் போலத் தாமரை மலர்ந்தது என்ற உவமையால் குறிப்பிடுகின்றார். இதனை உணர்த்துவதாக,

"..... விருந்து கண்டு உள்ளம் களிக்கும் மங்கையர் முகம்எனப் பொலிந்த கமலம்"

(கம்ப. 4.10.37.3 – 4)

என்ற பாடலடிகள் அமைந்துள்ளன. விருந்திடுவதற்காக **அன்ன சாலைகள்** இருந்தன. (கம்ப. 1.2.37) வறியவர்களுக்கும் இதன் மூலமாக உணவளித்து ஆதரித்தனர் என்பதனை அறியமுடிகின்றது.

'வைகலும் விருந்து'

(கம்ப. 1.2.36.1 – 3)

என்னும் பாடலடி, கோசலத்தில் விருந்து எந்நேரமும் நடைப்பெற்றுள்ளதைக் கூறுகின்றது. கம்பர் பல இடங்களில் அரசர் முதல் அடியவர் ஈறாக அனைவருக்கும் விருந்திட்டதைக் காட்டுவார். எனவே இப்பாடலுக்கு உரையாக டாக்டர் உ.வே.சா,

"அந்தணர் முதலிய எல்லா வருணத்தாரும் தத்தம் இல்லிலிருந்து விருந்து செய்தனர்"[15]

எனக் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்கது.

சுக்கிரீவன் அளித்த விருந்து

இராமன், இலக்குவன் இருவருக்கும் சுக்கிரீவன் விருந்து செய்தான். அப்போது இராமன், சுக்ரீவனைப் பார்த்து 'நின் மனைவியை பிரிந்துளாய் போலும்' எனக் கேட்பதை

"பொருந்து நன்மனைக்கு உரிய பூவையைப் பிரிந்துளாய் கொலோ நீயும்"

(கம்ப. 4.3.25,1 – 2)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இதை உணர்த்தும் பாடல் வரி இங்கு நோக்கத்தக்கதாகும். விருந்தோம்பல் அறத்தினை மனைவியுடன் சேர்ந்து செய்வதே சிறப்பாகக் கருதப்பட்டுள்ளது. மனைவி இல்லாமல் விருந்தானது நடைபெற்றாலும் அவ்விருந்து முழுமையுடையதாகக் கருதப்படவில்லை என்பதனை அறிய முடிகின்றது.

இராவணன் அளித்த விருந்து

இராவணன் தன் போர் வீரர்களுக்கு பலவகைப்பட்ட பொருட்களைக் கொண்டு விருந்திட்டான். வானுலகத்திலிருந்து நறவு, ஊன், பிற உணவுப்பொருள், ஆடை, சாந்தம், மலர்வகை போன்றவற்றையும் பலவகை நீரும், படுக்கையும் கொண்டு விருந்திட்டான் என்பதனை,

"நறவும் ஊனும் நவையற நல்லன
பிறவும் ஆடையும் சாந்தமும் பெய்ம்மலர்
திறமும் நானப் புனலோடு சேக்கையும்"

(கம்ப. 6.33.4.1 – 3)

என்ற பாடல் அடிகள் தெரிவிக்கின்றது. இராவணன் தனது போர்வீரர்களுக்குத் 'தனி விருந்து' செய்ததையும் இதன் மூலம் அறிய முடிகின்றது.

சீதையின் வருத்தம்

'விருந்து கண்டபோது என்று மோவென்று விம்மும் என்றும்'

(கம்ப. சுந்தரகாண்டம். பா. 5083)

என்ற பாடலடியின் மூலம், சீதை இராமனைப் பிரிந்த நிலையில் விருந்து கண்டபொழுது இராமன் புரந்தருவதற்கு இல்லையே என்று வருந்துகின்றமையை உணர முடிகின்றது.

வில்லிபாரதத்தில் விருந்து

வில்லிபுத்தூர் ஆழ்வார் இனிய செந்தமிழில் செய்யுள் காவியமாக இயற்றிய வில்லிபாரதத்தின்கண் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருட்களை உயர்ந்த முறையில் கூறியுள்ளார். மக்கள் உள்ளங்கவரும் பல நல்லறிவையும், நீதிக்கருத்துக்களையும் கூறும் இதிகாசமாகிய இந்நூலில் இடம் பெற்றுள்ள விருந்தோம்பல் குறித்த கருத்துகளுள் ஒரு சிலவற்றை இங்குக் காண்போம்.

திரௌபதி அளித்த விருந்து

இவ்விருந்து மகாபாரதத்தில் இடம்பெறும் உயர்ந்த விருந்தோம்பல் பண்பினுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும்.

> **"பஞ்சபாண்டவர்கள் கௌரவர்களுடன் சூதாடித் தனது உடைமைகளை இழந்து வனவாசம் சென்று வாழ்ந்தனர். திரௌபதியானவள் வனவாசக் காலத்தின்போது துருவாச முனிவருக்கு அமுது படைக்க வேண்டிக் கண்ணனை வேண்டிட அவனும் அட்சயப் பாத்திரத்தைக் காட்டும்படி கேட்கின்றான். திரௌபதி எடுத்துக் காட்டினாள். அந்த அட்சயப் பாத்திரத்தின் விளிம்பில் கொஞ்சம் கீரையும் ஒரு சோற்றுப் பருக்கையும் ஒட்டிக்கொண்டிருந்தது. அதைக் கண்ணன் கீறி எடுத்து 'இது விசுவரூபனாகிய உறறிக்கு உணவாகி அவன் தீர்ந்து பிரீதி அடைவானாக' என்று மனதில் சொல்லிச் சோற்றுப்பருக்கையையும் வாயில் போட்டுக் கொண்டான்"[16]**

இவ்வாறு திரௌபதி விருந்திட்டதைப் பற்றி ந. இராசகோபாலன் குறிப்பிட்டுள்ளார். வில்லிபாரதத்தில் பாண்டவர் முதலான பாரத மாந்தரும் அரிசிச்சோற்றை உணவாகக் கொண்டிருந்தனர் என்பதும் அதனையே

தம்மிடம் வரும் விருந்தினருக்கும் அளித்துள்ளனர் என்பதும் இதன்மூலம் தெரிய வருகின்றது.

வேள்வியின்போது விருந்தளித்தல்

முன்னைய காலகட்டத்தில் வேள்வியின்போது விருந்திடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதனைப் பற்றிப் பாரதத்திலும் குறிப்பு உள்ளது.

> **"தருமன் இராயசூய வேள்வி நடத்தினான். அப்போது அனைவருக்கும் இன்சுவை மிக்க உணவு சமைக்கும் பொறுப்பினை வீமனிடத்திலே நல்கினான்"**[17]

என்ற குறிப்பின் மூலம் வேள்வியின்போது சுவை மிக்க உணவினை அளித்துள்ளனர் என்பதும் தெளிவாகின்றது.

வீமனின் சமைக்கும் திறன்

போர்த்திறத்தால் உற்றாரையும் பகைவரையும் வியக்க வைக்கும் வீமன், அமைதி மிக்க நாட்களில் பல்சுவை உணவு வகைகளால் யாவரையும் மகிழ வைக்கும் சமையற்கலையில் வல்லவனாகவும் விளங்கினான் என்பதைக் குறிக்கும்.

> ***"வடு அறத் தெவ்வர் போரும், மன்னவன் உணவும் கையால்***
> ***அடு தொழிற்கு உரிய பொன் வரை இரண்டு அனைய தோளான்"***

(வி.பாரதம். பா. 115)

இப்பாடல் மூலம், போர்த்தொழில் புரியும் கைகளே அட்டில் தொழிலையும் செய்துள்ளன என்பதனை அறிய முடிகின்றது.

பக்தி இலக்கியம்

இறைவன் மீது கொண்ட பக்தியின் காரணத்தினால் பல்லவர் காலகட்டத்தில் பக்தி இலக்கியங்கள் பல எழுந்தன. பக்தி இலக்கியக்

காலகட்டத்தில் சைவம், வைணவம் இரண்டும் பெரிதும் போற்றப்பட்டன. சைவம், வைணவம் வளர்த்த பெரியோர்கள் பக்தியின் வாயிலாக மக்களுக்கு அறிவுரைகள் பல வழங்கினர்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'

என்ற கருத்தில் மிகுதியாக நாட்டம் செலுத்தினர். இறைவனுக்குச் செய்யக்கூடிய ஆடம்பர பூசைகளைக் குறைத்துக் கொண்டு வறிய மக்களுக்கு வழங்கி உதவி செய்தல் நன்மையளிக்கும் என்பதையும் உணர்ந்திருந்தனர்.

இறைவன் மீது பக்தி கொண்ட தொண்டர்கள் இறையடியார்க்குத் தினந்தோறும் விருந்திட்டனர். இறையடியார்க்கு அளிக்கப்பட்ட விருந்தானது இறைவனுக்கே அளிக்கப்பட்டதாகக் கருதப்பட்டது. கோவில்களில் இறைவனுக்குத் திருவிழாக்கள் நடத்தப்பட்டு அவ்விழாக்களில் விருந்து அளிக்கப்பட்டது.

பெரியபுராணம் குறிப்பிடும் விருந்தோம்பல்

சைவத்தில் இறைத்தொண்டர்கள் இறையடியார்க்கு அளிக்கும் விருந்தினைப் பற்றிச் சேக்கிழார் தனது பெரிய புராணத்தில் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார்.

"கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆத னத்திடை வைத்த அருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத் திறத்தின ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையின் அமுது செய்ய
அளித்துளார்"

(பெரிய. இளையான்குடி மாறநாயனார் புராணம், பா. 4)

என்னும் பாடலின் மூலம் அடியவர்க்கு நால்வகை உண்டி அளிக்கப்பட்டுள்ளமையை அறியலாம்.

இவ்வாறு இளையான்குடி மாறநாயனாரும் அவர் துணைவியாரும் பல இன்னல்கள் அடைந்து இறைவனுக்கு அமுது படைத்து வீடுபேறு அடைந்த விதம் எண்ணத் தகுந்தது. அறுபத்து மூன்று நாயன்மார்கள் அளித்த விருந்தில் இளையான்குடி மாறநாயனாரின் விருந்தோம்பலானது சிறப்பானது என்று போற்றப்படுகின்றது.

மாறனார் இறைத்தொண்டர்களுக்கு விருந்து செய்யும்போது, அவர்களுக்கு அறுசுவை உணவு அளிக்கப்பட்ட விதமும் இந்நூலின்கண் காணப்படுகின்றது.

> **"உண்ணல், பருகுதல், நக்குதல், கடித்தல் என்னும் நான்கு வகைகளில், இனிப்பு, துவர்ப்பு, காய்ப்பு, உப்பு, புளிப்பு, உவர்ப்பு என்னும் அறுசுவைகளையும் பெற்ற இயல்பை உடைய ஒப்பில்லாத உணவைத் தேவர்களுடைய தலைவராகிய நடராசப்பெருமானின் திருத்தொண்டர்களுக்கு விருப்பத்தோடு திருவமுது செய்யும் வண்ணம் வழங்கி வருபவர்"[18]**

என்று இளையான்குடி மாறனார் சிவனடியாருக்கு அறுசுவை உணவு படைத்ததை கி.வா. ஜகந்நாதன் குறிப்பிட்டுள்ளார்.

காரைக்கால் அம்மையாரின் விருந்து

இல்லற வாழ்வில் விருந்தினரை வரவேற்று உபசரிப்பு செய்வதையே ஒரு அறமாக செய்து வந்தார் புனிதவதியார் என்னும் கருத்தினை,

> ***"விடையவன் தன் அடியாரே***
> ***பெறலரிய விருந்தானால் பேறுஇதன்மேல் இல்லையென்னும்***
> ***அறிவினராய் அவர்அமுது செய்தவனுக்கு ஆதரிப்பார்***
>
> (பெரிய. காரைக்கால் அம்மையார் புராணம். பா. 1735)

இப்பாடல் உணர்த்துகின்றது. சிவபெருமானின் அடியவர்களுக்கு விருந்திடுவதைப் பெறற்கரிய பெரும்பேறாக நினைத்து காரைக்கால் அம்மையார் விருந்திட்டதைப் பற்றி இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது. தினமும் அம்மையார் சிவனடியார்களுக்கு விருந்தோம்புவதை வழக்கமாய்க் கொண்டிருந்தார். ஒருநாள் பரமதத்தனைக் காண வந்தவர் அவனிடம் இரண்டு மாம்பழத்தினைக் கொடுத்துச் சென்றார். அம்மாங்கனிகளை வீட்டில் உள்ள புனிதவதியாரிடம் கொடுக்கும்படி கூறினார் பரமதத்தன். அம்மையார் அப்பழங்களை வாங்கி வைத்திருந்தார்.

அவ்வேளையில் அங்கு ஒரு சிவனடியார் பசியால் வாடி இளைப்புற்றவராய் வந்தார். புனிதவதியார் அவரது நிலைமை கண்டு அவரின் பசித்துன்பம் போக்கக் கால் கழுவ நீர் கொடுத்தார். கலத்திலே திருவமுது படைத்தார். அப்பொழுது கறியமுது சமைக்கப்படாமலிருந்தது. "சிவனடியாரே விருந்தினராய் வந்துள்ளார். இப்பேற்றினுஞ் சிறந்த தொன்றில்லை" என அம்மையார் கருதிக் கணவன் அனுப்பிய இரண்டு பழங்களில் ஒன்றைக் கொண்டு வந்து படைத்தார். சிவனடியார் மாங்கனியுடன் அமுதுண்டு அம்மையாரின் விருந்தோம்பல் செயலைப் பாராட்டிச் சென்றார்.

> ***"இல்லாளன் வைக்க எனத் தம்பக்கல் முன்னிருந்த***
> ***நல்லநறு மாங்கனிகளை இரண்டினில்ஒன்றைக் கொண்டு***
> ***வல்விரைந்துவந்தணைந்து படைத்துமன மகிழ்ச்சியினால்***
> ***அல்லல்தீர்ப் பவர்அடியார் தமையமுது செய்வித்தார்"***

(காரைக்கால் புராணம். 1736)

என்ற பாடலின் மூலம் அம்மையார் அடியவருக்கு மாம்பழ விருந்து அளித்தமையை அறிய முடிகின்றது.

பிறகு அம்மையார் பரமதத்தனுக்கு உணவிட்டார். உணவுடன் தன் கணவன் கொடுத்தனுப்பிய மற்றொரு மாம்பழத்தினைக் கொடுத்தார். அப்பழத்தினை உண்ட பரமதத்தன் மற்றொரு பழத்தினை எடுத்துவா என்று கூறினான். அம்மையார் கணவனின் கட்டளையை மீறாது இறைவனிடம் வேண்டி மாம்பழத்தினைப் பெற்றார். முதலில் கொடுத்த பழத்தினை விட இப்பழம் மிகவும் இனிமையாக உள்ளது என்று பரமதத்தன் கூறினான். உடனே அம்மையார் சிவனது அருளினைக் கூறினார். அப்படியானால் நான் காண வேண்டும் என்று கூற அம்மையார் பரமதத்தன் முன் சிவனை வேண்டி மற்றொரு பழத்தினைப் பெற்றாள். அதனைக் கண்ட பரமதத்தன் வியந்து அம்மையாரைத் தெய்வமாக வணங்கி நின்றான்.

இந்நிகழ்வினை உணர்த்தும் விதமாக இந்நாளிலும் காரைக்காலில் ஆண்டுதோறும் மாங்கனித் திருவிழா நடத்தி வருகின்றனர்.

> **"தொண்டை நாட்டு மருதநில மக்களின் இல்லங்களில் நெற்கூடுகள் மிகுதியாக இருந்துள்ளன என்பதும் திருநாவுக்கரசர் தந்தை புகழனார் விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கினார்"**[19]

என்பதும் க. காமாட்சி அவர்களின் கருத்தாகும். இக்கூற்று விருந்தோம்பல் பண்பு சிறந்திருந்தமையைப் புலப்படுத்துகின்றது.

சிவனடியார்கள் இறைத்தொண்டர்களுக்கு வறுமையிலும் பல நிலைகளில் விருந்து செய்து வீடுபேறு அடைந்தமையைப் பற்றிச் சேக்கிழார் தமது 'திருத்தொண்டர் புராணம்' என்னும் பெரியபுராணத்தில் பலவிடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

வைணவத்தில் விருந்தோம்பல்

இறையடியார்களுக்குச் செய்யும் தொண்டானது இறைவனுக்கே செய்யும் தொண்டாகும் என்று எல்லா மதங்களும் ஒரே கருத்தினை முன் வைக்கின்றன.

சைவ இலக்கியங்களில் அறுபத்து மூன்று நாயன்மார்களும் சிவனடியார்களை உபசரித்து வீடுபேறு பெற்றனர் என்னும் கருத்து பெரியபுராணம் போன்ற நூல்களுள் காணப்படுகின்றது. இதைப்போல வைணவத்திலும் இறையடியார்களுக்கு விருந்து கொடுத்து ஆதரித்துள்ளனர் என்பதனைப் பற்றியும் ஆங்காங்கே இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

பெரியாழ்வார் திருமொழியில் குறிஞ்சி நிலத்தில் வாழும் குறவர்கள் விளைந்ததை அறுவடை செய்வதற்கு நல்ல நாள் பார்ப்பதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்னும் கருத்து,

"இனக்குறவர் புதியதுண்ணல்
எழில் மாலிருஞ் சோலை எந்தாய்"

(பெரியாழ்வார் திருமொழி: 5.4.3)

என்னும் பாடலடியின் மூலம் இயம்பப்படுகின்றது. நல்ல நாள் பார்த்து விளைந்த உணவுப் பொருட்களை அறுத்து அதனைச் சமைத்து விருந்தினருக்கும் கொடுத்து விருந்திட்டதை அறிய முடிகின்றது. எனவே அறுவடையான பிறகு வீட்டிற்கு வந்த நெல் போன்றவற்றை முதன் முதலில் நல்ல நாள் பார்த்து உணவாக்கித் தன் சுற்றத்தாருடன் சேர்ந்து உண்ணும் ஒரு வழக்கம் இன்றும் தமிழர்களிடம் காணப்படுகின்றது.

பாற்சோறு விருந்து

"…. ….. …… பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்த குளிர்ந்த தேலோ ரெம்பாவாய்"

(திருப்பாவை 27 : 6 – 8)

என்ற பாடல் அடிகளின் மூலம் பாற்சோறு மறையும்படியாகப் பெய்த நெய் முழங்கை வழியே வழிய உண்பதை ஆண்டாள் காலத்திய மக்கள் மிகவும் விரும்பினர். இப்பாற்சோற்றினையே வந்த விருந்தினர்க்கும் அளித்துச் சிறப்பித்துள்ளனர்.

பாகுபாடு இல்லாமல் விருந்து கொடுத்தல்

பரத்துவாசர் ஆசிரமத்திற்கு வந்த பரதனுக்கு அவனுடன் வந்த அனைவருக்கும் விருந்திட்டபோது உயர்வு தாழ்வின்றி விருந்திட்டதைக் கம்பர் தனது பாடலின் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

"வேந்தர் ஆதி சிவிகையின் வீங்குதோள்
மாந்தர் காறும் வரிசை வழாமலே"

(கம்ப. 2,12.12,3 – 4)

என்பதன் மூலம் அரசன் முதல் சிவிகை சுமப்போன் வரை அனைவரும் உயர்வு தாழ்வின்றி விருந்து பெற்றதை அறிய முடிகின்றது.

இதைப்போல் இன்றைக்கும் திருமலைக்குச் செல்லும் அடியவர் அனைவருக்கும் உயர்வு தாழ்வின்றி அன்னச்சத்திரத்தில் உணவு அளிக்கப்படுவதை அனைவரும் அறிவோம்.

புரட்டாசி மாதத்தில் திருமலைக்குக் 'குடை' எடுத்துச்செல்லும் அடியவர்கள் அனைவருக்கும் வேறுபாடு பாராமல் வைணவ மடங்களிலும் சத்திரங்களிலும் உணவளிக்கப்படுகின்றது.

சிற்றிலக்கியத்தில் விருந்தோம்பல்

தமிழில் நெடும்பாடல்களாக அமைந்த பிரபந்த வகைகளைச் 'சிற்றிலக்கியம்' என்று குறிப்பிடுகின்றோம். இடைக்காலப் பிற்பகுதி முழுவதும் சிற்றிலக்கியச் செல்வாக்கு மிகுந்த காலகட்டம். தோற்றத்திற்கு சிற்றிலக்கியங்களுக்கான வித்தும், வளர்ச்சியும் சங்க காலத்திலேயே காணப்படுகின்றன. சிற்றிலக்கியங்கள் எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்படினும் குறிப்பிட்ட சிலவே பெருஞ்செல்வாக்கும் படைப்புப் பெருக்கமும் கொண்டுள்ளன. இவற்றுள் தூது, கோவை, உலா பள்ளு, பரணி, பிள்ளைத்தமிழ் போன்றன குறிப்பிடத்தக்கன.

(i) பரணி இலக்கிய விருந்தோம்பல்

தமிழர் நம்பிக்கையில் புரையோடிப் போனவர்கள் என்பதற்கு நமது இலக்கியங்களில் சான்றாதாரங்கள் காணப்படுகின்றன.

கலிங்கத்துப் பரணியில் காணப்படும் விருந்தோம்பல் குறித்த கருத்துக்கள் பல காணப்படுகின்றன. இந்நூலில் இடம் பெற்றுள்ள விருந்தோம்பலானது பேய்கள் கொண்டாடிய விருந்தோம்பலே ஆகும்.

தமிழர்கள் 'பேய்' உண்டு என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். சயங்கொண்டாரும் தமிழர் நம்பிக்கையின் அடிப்படை வாயிலாகவே பேய்கள் சமைத்து விருந்துண்ட காட்சிகளைக் கலிங்கத்துப் பரணியில் காட்டுகின்றார். மானிடர்களின் விருந்தை விடப் பேய்களின் விருந்தானது வேறுபட்டாலும், புதிய பேய்களை அழைத்து விருந்து வைக்கின்ற பழக்கமானது விருந்தோம்பல் பண்பினைக் காட்டுகின்றது. இறந்து பேயாய்ப் போன ஆவிகளும் தனது பண்பாட்டினை மறக்காமல் விருந்தோம்பல் நிகழ்ச்சியில் புதிய பேய்களை அழைத்து வந்து விருந்திட்டு பழகிக் கொள்ள வழிவகுத்துக் கொள்கின்றன.

பேய்களின் வழிபாடு

கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத்தலைவன் 'முதல் குலோத்துங்கன்'. இவ்வரசனின் பெருமையையும், சிறப்பினையும் பற்றிப் பேய்களின் வாயிலாகச் சயங்கொண்டார் வெளிப்படுத்தியுள்ளார்.

பேய்களானது காளியிடம் சென்று தமது தாளாத பசியினைப் போக்குமாறு முறையிடுகின்றன. காளி மனம் இரங்கி பரணிப்போர் நிகழும்; அப்போது உங்கள் பசி தீரும் என்று கூறுகின்றாள். பரணிப்போர் நடந்தது; முதல் குலோத்துங்கன் போரில் வெற்றி பெற்றான்; இவ்வெற்றி விழாவினைக் கொண்டாடும் பேய்கள் முதலில் தங்களை ஒப்பனை செய்து கொண்டன. பின் கூழ் சமைத்து விருந்திட்டு மகிழ்ந்து பாடி ஆடின போன்ற கருத்துக்கள்.

"மாகாயம் மதமலையின் பிணமலைமேல்
வன் கழுகின் சிறகால் செய்த
ஆகாய மேற்கட்டி அதன் கீழே
அடுக்களை கொண்டு அடுமின் அம்மா"

(க. பரணி, பா. 517)

எனக் கூறப்படுவதன் வழி உணரப்படுகின்றன. கூழ் சமைக்கப் பேய்கள் மத யானைகளின் பிணங்களாகிய மலைகளின் மேலே சமையலறை அமைத்துக் கொண்டமையை அறிய முடிகின்றது.

"பொழிமதத்தால் நிலமெழுகிப் பொடிந்து திரிந்த
பொடித்தரளப் பிண்டி தீட்டி
அழிமதத்த மத்தகங்கள் அடுப்பாகக்
கடுப்பாகக் கொண்டு அடுமின் அம்மா"

(க. பரணி, பா. 518)

சமையல் அறையில் போர் யானைகள் பொழிந்த மதநீரால் தரைமெழுகி பொடிப் பொடியாய் உதிர்ந்த முத்துகளால் கோலமிட்டு யானைகளின் தலைகளை அடுப்புகளாக அமைத்துக் கொண்டன.

"கொற்ற வாள் மறவர் ஓச்சக்
குடரொடு தலையும் காலும்
அற்று, வீழ் ஆனைப் பானை
அடுப்பினில் ஏற்றும் அம்மா"[52]

(க. பரணி, பா. 519)

யானைகளின் வயிறுகளாகிய பானைகளை அடுப்பில் ஏற்றின. கூழ் காய்ச்சுவதற்காகக் குதிரையின் குருதி உலைநீராகப் பொழியப்பட்டது, என்னும் கருத்து

"கொலையினுள் படுகரிக்
குழிசியுள் கூழினுக்கு
உலைஎனக் குதிரையின்
உதிரமே சொரிமினோ"

(க. பரணி, பா. 521)

என்ற பாடலடிகளின் மூலம் உணரப்படுகின்றது. குதிரையின் பற்கள் பூண்டாகவும், வீரர்களின் நகங்கள் உப்பாகவும் கூழில் சேர்க்கப்பட்டமையைத்

"துள்ளிவெங் களனில் வீழ்
துரகவெண் பல்எனும்
உள்ளியும் கிள்ளி இட்டு
உகிரின் உப்பு இடுமினோ"

(க. பரணி, பா. 522)

என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன. பல் முறித்துக் குப்புற வீழ்ந்த கலிங்க வீரர்களின் பற்களைத் தகர்த்து அவற்றைப் பேய்கள் அரிசிகளாகப் பயன்படுத்திய விதத்தைக்

"கல்லைக் கறித்துப் பல்முறித்து
கவிழ்த்து வீழ்ந்த கலிங்கர்தம்

பல்லைத் தகர்த்துப் பழஅரிசி
ஆகப் பண்ணிக் கொள்வீரே”

(க. பரணி, பா. 525)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. பின் அந்த அரிசியினை முரசங்களாகிய உரங்களில் கொட்டி யானைகளின் தந்தங்களாகிய உலக்கைகளால் குற்றுகின்றன பேய்கள். பின்னர் தூற்றிய அரிசியை வைத்துக் கூழ் சமைத்தன அவை. பரணி விழாவினைக் கொண்டாடும்போது கூழ் சமைக்க அழைத்த பேய்களும், அழைக்கப்பட்ட பேய்களும் ஒன்று கூடி சமைக்கின்றன. இவ்வாறு பரணிப் போரில் பேய்கள் கூழ் சமைத்து, பேய்களுக்கு விருந்திட்டன என்று கலிங்கத்துப் பரணி கூறுகின்றது. மானுட விருந்தினைக் கண்ட நமக்குப் பேய்களின் விருந்தினையும் இந்நூலின் மூலம் சயங்கொண்டார் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

(ii) பள்ளு இலக்கியங்கள் உணர்த்தும் விருந்தோம்பல்

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று ‘பள்ளு’ இலக்கியமாகும். ‘பள்ளு’ இலக்கியங்கள் பல இருப்பினும் ஒரு சில சான்றுகள் மட்டும் இவ்ஆய்வினுக்கு எடுத்தாளப்பட்டுள்ளன.

அவற்றினுள் மாந்தைப் பள்ளு என்னும் பள்ளு இலக்கியத்தில் உழவுத்தொழிலின் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது. இதில் நெல்அளத்தல், புலவர்களுக்குக் கொடுத்தல், கோயில்களுக்கு நெல்லை தானமாகக் கொடுத்தல் போன்ற நிகழ்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நெல்அளத்தல்

“கட்டளையுண் டவனெனுங்கண் ணாளரைச்சேர்
கோவிலுக்குக்
கட்டளைநெல் கலங்கோட்டைக் கணக்கா யளந்தனரே

(மா.ப. : 167)

என்னும் பாடலடிகள், கட்டளைக்கலி, அகவல், கலிப்பா, வஞ்சி, வெண்பா ஆகிய பாவகைகளைப் பாடும் புலவர்கள் மனம் மகிழ்ந்து பாடுதற்கு உரியவரான கண்ணாளர்தம் கோயிலுக்குக் கலமாகவும் கோட்டையாகவும் நெல்லை முறைப்படி கட்டளையாக அளந்தனர் என்பதனை உணர்த்துகின்றன. இப்பாடலின் மூலம் கோயில்களில் பாடும் புலவர்களுக்குக் கலமாகவும், கோட்டையாகவும் நெல்லினை முறைப்படி அளந்து கொடுத்துள்ளனர் என்பது தெரியவருகின்றது.

"நடம்புரி சிவம் திகழ் சிதம்பரம் வேளார்க்கு
நாலாயிரம் கலம் நெல்லை நாடி அளந்தார்
தடம்பெறு சண்பைநகர் மாயூரம் இந்நகர்க்குச்
சம்பாநெல் ஆயிரங் கோட்டை அளந்தார்'

(மா.ப. : பா. 168)

பலவகைப்பட்ட பாநயங்களோடு பாடக்கூடிய புலவர்களுக்கு மட்டுமல்லாமல் சில கோயில்களுக்கும் நெல்லினைக் கொடுத்துள்ளமை இப்பாடல்வழி புலனாகின்றது.

நடனம் புரியும் சிவபெருமான் வீற்றிருக்கும் சிதம்பரக் கோயிலுக்கும், புள்ளிருக்கு வேளூர் திருக்கோயிலுக்கும் நாலாயிரம் கல நெல்லை அளந்தனர். சண்பை நகர், மாயூரம் ஆகிய தலங்களுக்குச் சம்பா நெல்லை ஆயிரம் கோட்டை அளவு அளந்தனர் என்பதைக் கூறும்,

"ஆரூர் குடந்தை இடைமருதுர் திருக்கடவூர்
ஆலயத்துக்கு ஆயிரம் கோட்டை அளந்தார்
பேரூர் திருப்புகலூர் கண்ணபுரம் கோவிலுக்குப்
பிறங்கு எழுநூறு கோட்டை நெல்லை அளந்தார்"

(மா.ப. : பா. 169)

என்னும் இப்பாடல், திருவாரூர், குடந்தை, திருவிடைமருதூர், திருக்கடவூர்

ஆகிய தலங்களுக்கு ஆயிரம் கோட்டை அளவு பேரூர், திருப்புலூர், கண்ணபுரம் ஆகிய தலங்களுக்கு நூறு கோட்டை அளவும் நெல்லைக் கட்டளையாக அளந்த நிகழ்வினை உணர்த்துகின்றது.

"செங்காட்டங்குடி நகர் அமுது படையலுக்கு
இருஎண் ஆயிரம் கலம் நெல்லை அளந்தார்
அங்காட்டம் விற்ற மதுராபுரிச் சொக்கலிங்கர்க்கு
ஆயிரம் பொதி நெல்லை அன்பாய் அளந்தார்"

(மா. ப. : பா. 170)

என்னும் பாடலின் மூலம், செங்கட்டான்குடி கோயிலில் அமுது படையலுக்கு எட்டாயிரம் கலம் நெல்லை அளந்தனர்; விறகு விற்ற மதுராபுரி சொக்கலிங்கருக்கு ஆயிரம் பொதி நெல்லை அளந்தனர், போன்ற கருத்துக்கள் புலனாகின்றன. அந்தக் காலக்கட்டத்தில் மக்கள் கோயில்களில் அன்னதானம் செய்வதற்காக அமுது படையலுக்கு எட்டாயிரம் கலம் நெல்லை அளந்து தானமாகக் கொடுத்துள்ளதை இந்நூல் மூலம் அறிய முடிகின்றது.

"திருப்பரங்குன்று திருச் செந்தூர் திருநெல்வேலி
திருக்குற்றாலங்களுக்குச் சேர் நெல் அளந்தார்
மருப்பு ஒலி ராமேசுரம் திருப்பதி பாவநாசம்
மகிமைக் கட்டளை நெல்லை வாரி அளந்தார்"

(மா. ப. : பா. 171)

என்னும் பாடலில், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருநெல்வேலி, குற்றாலம் ஆகிய தலங்களுக்குச் சேர்அளவு நெல்லையும் கடல் ஒலிக்கும் இராமேஸ்வரம், பாபநாசம் ஆகிய தலங்களுக்கு அளவிலாது கட்டளையாக நெல் அனுப்பப்பட்டுள்ள செய்திகளை அறியமுடிகின்றது.

"அன்ன அபிடேகம் கொள் பரசமையர் மடத்துக்கு
ஆயிரம் கோட்டை நெல்லை அன்பாய் அளந்தார்

தென்னாரும ராசைநகர் கணவ நகர் எனும் பல்
தேவாலயங்களுக்கும் சேர்நெல் அளந்தார்"

(மா. ப. : பா. 172)

என்னும் இப்பாடலடிகள், ஆதிரை நாளன்று அன்ன அயிடேகம் கொள்ளும் சிவபெருமானின் அடியார் மடத்துக்கு ஆயிரம் கோட்டை அளவு நெல்லையும் இராசை நகர், கருவை நகர் ஆகிய தலங்களில் உள்ள சிவாலயங்களுக்குச் சேர் அளவு நெல்லையும் அளந்து கொடுத்தனர் போன்ற கருத்துக்கள் புலப்படுகின்றன.

அந்தக் காலக்கட்டத்தில் கோயிலுக்கு என்று நிலங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அந்நிலத்தில் விளைந்த உணவுப்பொருள்களைக் கொண்டு கோயில்களில் விருந்தோம்பல் நடைபெற்றுள்ளது என்பதை இப்பள்ளு இலக்கியத்தின் வாயிலாக அறிய முடிகின்றது.

தற்கால இலக்கியங்களில் விருந்தோம்பல்

இக்கால இலக்கியத்தில் விருந்தோம்பலுக்குப் பாரதிதாசனின் குடும்பவிளக்கு மூலாதாரமாய் அமைகின்றது.

"தனியொரு மனிதனுக்கு உணவு இல்லையெனில்
சகத்தினை அழித்திடுவோம்"

என்கிறார் பாரதி.

உணவு இல்லையேல் உயிர்வாழ முடியாது என்பது நாம் அறிந்த ஒன்றே. பாரதி இவ்வாறு கூறியதற்குக் காரணம் தனியொரு மனிதனின் அடிப்படை வசதிகளுள் அடிப்படையாகக் கருதப்பட்டது உணவு. இந்த உணவு ஒரு தனிமனிதனுக்கு கிடைக்கவில்லையெனில் இந்த உலகம் எதற்கு என்று பாரதி உணவின் இன்றியமையாமையைத் தனது பாடலின் மூலம் வெளிப்படுத்தியுள்ளதை அறியமுடிகின்றது.

(i) குடும்ப விளக்கும் விருந்தோம்பலும்

'குடும்ப விளக்கு' என்னும் குறுங்காவியத்துள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'விருந்தோம்பல்' பண்பினைக் குறிப்பிட்டுள்ளார்.

"நற்றமிழ் சேர்த்த புகழ் ஞாலத்தில் என்னவெனில்
உற்ற விருந்தை உயிரென்று போற்றுவித்தல்"

(குடும்பவிளக்கு : பகுதி 2 : 8-9)

என்கிறார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

பொதுவாக பெண்கள் தங்களிடம் வரும் சுற்றத்தினரை அன்போடு விருந்தோம்புவதைத் தம் உயர்பண்பாக கருதுகின்றனர். அதனால்தான் கவிஞர்கள் பெண்களைக் கரும்பிற்கு ஒப்பாகக் கருதுகின்றனரோ? என ஐயத்தை எழுப்புகிறார் மு. கோவிந்தசாமி. இதனை,

"கவிஞர் பெண்ணைக் கரும்பென்பதெல்லாம் வந்த விருந்தினரை விருந்தோம்பும் மேன்மையினாலன்றோ என்று மு. கோவிந்தசாமி குறிப்பிடுகின்றார்"[20]

தங்கத்தின் இல்லறத்திற்கு வந்த விருந்தினர் நகைமுத்து என்ற மணமாகாத நங்கையை அழைத்து வந்துள்ளனர். விருந்தளித்த தங்கம் வீட்டில் வேடப்பன் என்ற இளையன் இருந்தான். நங்கைக்கும், இளையனுக்கும் காதல் கனிகின்றது. இவ்விருவரின் காதலாடல்களைக் கவின்பெற எழுதிக் காட்டுகிறார் பாவேந்தர். விருந்தில் இதுவும் ஒரு வகை விருந்துதானே. விருந்து என்பது புதுமை; இப்புதுமை நினைவை பாவேந்தரின் விருந்தோம்பல் பகுதியில் காணமுடிகின்றது.

தமிழர்கள் விருந்துணவினை வாழை இலையில் இடுவதை ஒரு வழக்கமாகக் கொண்டு இருந்தனர்.

"குமரி வாழையின் குருந்தகம் விரித்து ஈங்கு
அமுதம் உண்க அடிகள்"

(சிலம்பு. 16 : 42 - 43)

எனக் கண்ணகி கோவலனுக்கு விருந்திடும்போது வாழைக்குருத்தை விரித்து உணவு இட்டு உண்ணச் செய்ததாக சிலப்பதிகாரத்தில் குறிப்புள்ளது.

'செழுங்கோள் வாழை அகல்இலைப் பகுக்கும்'

(புறம். : 168 : 13)

இதே போன்று புறப்பாட்டில் தினையை அரைத்து அகன்ற வாழை இலையில் வைத்துப் பலருக்கும் உணவு கொடுத்து விருந்தோம்பினர் என்னும் கருத்து காணப்படுகின்றது.

> **"மகளிர் நின்று கொண்டு முன்பே பிசைந்து வைத்த ஆகாரங்களை விருந்தினர்களுக்குக் குனிந்து பரிமாறினர். உணவு வாழையிலையில் பரிமாறப்பட்டது"[21]**

என்று ந. சுப்பிரமணியன் சங்க காலத்தில் பெண்கள் வாழையிலையில் உணவு பரிமாறியதைக் குறிப்பிட்டுள்ளார்.

பாரதிதாசனும் விருந்தில் வாழை இலையின் அவசியம் குறித்துக் குறிப்பிடுகின்றார்.

> **"வாழை இலையின் அடிப்பகுதி உண்பவரின் வலப்பக்கத்தில் இருக்குமாறு விரித்துவை. இலையைச் சுற்றிலும் கறி வகைகளை வை. தண்ணீரையும், வெந்நீரையும் தனித்தனியே வை. சோறு இலையில் இடும் முன்னர் இனிப்பான பணியாரத்தையும் முக்கனி தேன் கலந்த நெய்யில் துவைத்த மா, பலா, வாழையாகிய முக்கனியையும் உண்ட பின்னர், நின்று சோறு இலையில் இடு. தகுந்தவாறு கேட்டும், குறிப்பறிந்தும், பலமுறை வேண்டியும் தாயைப் போல மிகுந்த அன்பால் விருந்தினரை உண்ணுமாறு செய்தல் வேண்டும்"[22]**

என்று பாரதிதாசனின் குடும்பவிளக்கு விருந்தோம்பல் பகுதியில் இடம்பெறும் விருந்துணவில் வாழையிலையுடன் பரிமாறும் பாங்கையும்,

பரிமாறப்படும் உணவு வகைகளையும் குறித்து சே. சுந்தரராசன் குறிப்பிட்டுள்ளார்.

தற்காலக் கவிதையாளரான பாரதிதாசன் 'விருந்தோம்பல்' பண்பினைக் குறிப்பிடும்போது சமையற்கலை பற்றிக் குறிப்பிடுகின்றார். விருந்தினர்களால் சமையற்கலை சிறப்புறுகின்றது என்பதையும், புதிய உறவினைத் தேடிக்கொள்ளும் இடமாக விருந்தோம்பல் பண்பு அமைந்திருப்பதையும் தமது குடும்ப விளக்குப் பகுதியில் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார்.

புதுக்கவிதையில் விருந்தோம்பல்

தற்காலத்தில் புதுக்கவிதைகள் புற்றீசல்போல் பெருகி வந்து கொண்டிருக்கின்றன. சமூகம் சார்ந்த பொருளாதாரம் குடும்பம் போன்ற பல சிக்கல்கள் புதுக்கவிதையின் பாடுபொருளாய் உள்ளன. விருந்தோம்பல் குறித்த கருத்துக்களும் புதுக்கவிதையில் இடம்பெற்றுள்ளன. விருந்தோம்பலின் மேன்மையை எடுத்துக் கூறுவதாகவும் பல கவிதைகள் காணப்படுகின்றன.

"பசியைப் போலொரு
விருந்தும் இல்லை
பகையைப் போலொரு
நட்பும் இல்லை"[23]

என்று கவிக்கோ அப்துல் ரகுமானின் தம் கவிதையில் பசிக்குத் தேவை விருந்து என்பதனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மற்றவரின் பசியை அறிந்து அவர்களுக்கு அளிக்கக்கூடிய விருந்தானது சிறப்படையும் என்று கவிஞர் விருந்தின் சிறப்பினைத் தமது கவிதையின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

"பிறர் இதயங்களில்
விருந்தாளியாகவே
தங்குகிறாயே
காதலே!
உனக்கென்ன
வீடில்லையா?"[24]

இக்கவிஞர் 'காதலை' விருந்தாளியுடன் ஒப்பீடு செய்துள்ளார். காதல் என்றும் அழிவதில்லை. அப்படிப்பட்ட புனிதமான காதலை விருந்தாளியுடன் ஒப்பிட்டுள்ளார். இக்கவிதையின் மூலம் கவிஞர் தற்போது இப்பண்பு எத்தகையதாய் விளங்குகிறது என்பதைப் பிடித்துக் காட்டியுள்ளார்.

இல்வாழ்க்கை

"பழியஞ்சல் பகுத்துண்ணல்
வாழ்வின்
மரபு!"[25]

இந்த ஐக்கூ வடிவிலான கவிதையில் விருந்தோம்பல் பண்பான பகுத்துண்ணல் என்பது இல்வாழ்க்கையில் இடம்பெற வேண்டிய சிறந்த பண்பு என்பது புலப்படுத்தப்பட்டுள்ளது. 'பகுத்துண்ணும்' வாழ்வே சிறப்படையும் என்பதனை இக்கவிதையின்வழி அறிய முடிகின்றது.

இல்வாழ்வில் விருந்தோம்பல் சிறப்பிடம் பெற்றிருப்பதை இக்கவிஞர் தம் கவிதையின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

"வாழ்வின் பயன்
நல்விருந்து
ஓம்புதல்
.....

முகவேறுபாடு காட்டின்

விருந்து

வருந்தும்[26]

என விருந்தோம்பலை வலியுறுத்தும் கவிதைகள் பல தற்காலத்திலும் இடம்பெற்றுள்ளன.

சங்ககாலம் முதல் தற்காலம் வரை கவிஞர்கள் தங்கள் படைப்பின் மூலம் நாட்டின் பல குழப்பங்களுக்குத் தீர்வுகளைக் கண்டுள்ளனர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அத்தகு குழப்பங்கள் பல இருப்பினும் தமிழரின் தலையாய பண்பான விருந்தோம்பல் பண்பினைப் பற்றியும் பல்வேறு இலக்கியங்கள் ஆங்காங்கே எடுத்துக் குறிப்பிடுவது விருந்தோம்பல் பண்பிலே அவர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டினை வெளிப்படுத்துகின்றது.

மனிதன் தனது வாழ்க்கையில் பல பகுதிகளைக் கடந்தாலும், பல சாதனைகள் புரிந்தாலும் எதிலும் இன்பமில்லாத மன நிறைவு அடையாத மனிதன் தனது சுற்றத்தாருடன் சேர்ந்து உண்ணக்கூடிய விருந்தின் இன்பத்தை மிகச் சிறப்பான ஒன்றாகக் கருதுகின்றான்.

தொகுப்புரை

- இவ்வாறாக தொல்காப்பியக் காலம் முதல் தற்காலம் வரை பற்பல இலக்கியங்களும், விருந்தோம்பல் என்னும் பண்பின் சிறப்பை வலியுறுத்துவதில் முதலிடம் வகிக்கின்றன.

- தொல்காப்பியமும், விருந்தோம்பல் பண்பில் ஆண், பெண் என இருபாலருக்கும் இருந்த பெரும்பங்கினை எடுத்துக் கூறியுள்ளது. சங்க காலத்தில் தலைவி அளித்த விருந்து, தமிழரின் நம்பிக்கையில் விருந்து பெறும் இடம், அரசர்கள் அளித்த விருந்து, விழாவில் அளித்த விருந்து, திருமண விழாவில் விருந்து பெறும் இடம், விருந்தினர் வருகைக்காக நடுகல் தொழுது அப்பண்பில் நாட்டம் கொண்டு விருந்தோம்பியது போன்ற பண்புகள் சிறப்புற்றிருந்தன.

- நீதி நூல்களான திருக்குறள், ஏலாதி, முதுமொழிக் காஞ்சி, பழமொழி, சிறுபஞ்சமூலம், ஆசாரக்கோவை போன்றனவற்றுள் இடம் பெற்றுள்ள விருந்தோம்பல் குறித்த செய்திகள் ஆய்ந்து தரப்பட்டுள்ளன.

- மதுரை மாநகரப் பெண்கள் விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கியமையும் கண்ணகி, ஐயை, மாதரி ஆகியோரின் விருந்தும், மணிமேகலையில் விருந்தின் மாட்சிமையும் கம்பராமாயணத்தில் சீதையின் விருந்தும் குறிப்பிடப்பட்டுள்ளன. பக்தி இலக்கியக் காலகட்டத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கியமையும் அவர்களுள் இளையான்குடி மாறநாயனாரின் விருந்தின் மேன்மையும் உணர்த்தப்படுகின்றது.

- சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான கலிங்கத்துப்பரணியில் சயங்கொண்டார் பேய்களின் விருந்தினை பற்றிக் குறிப்பிட்டுள்ளமையும் பல்வேறு பள்ளு இலக்கியங்கள் உணர்த்தும்

விருந்தோம்பலின் சிறப்பும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தற்காலக் கவிஞர்களுள் பாரதிதாசன் குடும்பவிளக்கில் விருந்தோம்பலின் பண்பினை மிகவும் வலியுறுத்தியுள்ளார். பாரதிதாசன் குடும்பவிளக்கில் விருந்தோம்பல் நிகழ்ச்சி என்னும் பகுதியில் தமிழர்களின் விருந்தோம்பல் குறித்துக் கூறிய பகுதிகளையும் இவ்வியல் உணர்த்தி நிற்கின்றது.

- தமிழிலக்கியங்களுக்கான படைப்புக் காரணிகள் பல இருப்பினும் அவற்றுள் அறத்தின் அடிப்படையிலான விருந்தோம்பலின் சிறப்பே மேலோங்கி இருப்பதை இவ்வியல் தெளிவாக விளக்கியுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. 'கந்தையாபிள்ளை, ந.சி., செந்தமிழ் அகராதி', ப. 621.
2. 'கதிரைவேற்பிள்ளை, நா., தமிழ்மொழியகராதி', ப. 1307.
3. 'கழகப் புலவர் குழுவின் கழகத் தமிழ் அகராதி', ப. 859.
4. 'கலைக்களஞ்சியம்', (The Encyclopedia of Religion Volume - 6), பக். 470 - 471.
5. இன்னாசி, சூ., 'வீரமாமுனிவர் அருளிய சதுரகராதி', ப. 177.
6. சிங்காரவேலு முதலியார், ஆ., 'அபிதானசிந்தாமணி', ப. 1467.
7. 'தமிழ்ப் பேரகராதி', தொகுதி - 6, ப. 3704.
8. கோபாலன், ப., 'தமிழ் இலக்கியக் கலைச்சொல்லகராதி', ப. 244.
9. பவானந்தம்பிள்ளை, ச., 'தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி', ப. 427.
10. லேனா தமிழ்வாணன், 'மணிமேகலைத் தமிழ்ச் சொல்லகராதி', ப. 583.
11. வின்சுலோ, எம்., 'தமிழ் ஆங்கில அகராதி', ப. 295.
12. இராம சுப்பிரமணியம், வ.த., 'திருமகள் தமிழகராதி', ப. 853.
13. திரு. கல்யாண சுந்தரனார், வி., 'பெண்ணின் பெருமை', ப. 13.
14. அறவாணன், க.ப., 'தமிழரின் தாயகம்' ப. 58.
15. டாக்டர் உ.வே.சா., 'பாலகாண்டம்', (உரை), ப. 59.
16. இராசகோபாலன், நா., 'வில்லிபாரதத்தில் மனித மாண்பியல்', ப. 147.
17. சுப்பிரமணியன், க., 'தமிழ்ப் பண்பாட்டில் பாரதச் செல்வாக்கு', பக். 53 - 54.

18. ஜகந்நாதன், கி.வா., 'பெரிய புராணம் காட்டும் சமுதாய நிலை', ப. 178.

19. காமாட்சி, க., 'பெரிய புராணம் காட்டும் சமுதாய நிலை', ப. 142.

20. கோவிந்தசாமி, மு., 'பாரதிதாசன் கவித்திறன்', ப. 30.

21. சுப்பிரமணியன், ந., 'சங்க கால வாழ்வியல்', ப. 370.

22. சுந்தரராசன், சே., 'குடும்ப விளக்கு', விளக்கவுரை, ப. 51.

23. கவிக்கோ அப்துல் ரகுமான் கவிதை, 'இராகசியம் பூ', ப. 32.

24. மேலது, ப. 47.

25. ஜெயபாரதி யு., 'ஹைக்கூ வடிவில் திருக்குறள் கருத்துகள்', ப. 33.

26. மேலது, பக். 32 - 33.

[illegible] - [illegible]

சங்க அகஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்

இயல் - இரண்டு

சங்க அகஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்

ஒத்த அன்புடைய தலைவனும், தலைவியும் கூடி வாழும் இன்பமுடைய வாழ்க்கை மற்றவர்க்குப் புலனாகாமல் தம் உள்ளத்து உணர்வால் மட்டும் உணரத்தக்கதாய் உள்ளது. இத்தகைய இன்பவாழ்வை *'அகம்' என்றனர். அக வாழ்வு களவு, கற்பு என்ற இரு பிரிவுகளைக் கொண்டது.

தலைவனும், தலைவியும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொண்டு பிறர் அறியாமல் மறைவாகக் காதல் புரிந்து வாழும் வாழ்க்கையானது களவு வாழ்க்கையாகும். பின்பு ஊர் அறியுமாறு திருமணம் செய்து கொண்டு வாழும் இல்லற வாழ்க்கையை கற்புடைய வாழ்க்கை என்று குறிப்பிட்டுள்ளனர்.

தொல்காப்பியர் அகப்பொருளை ஏழு திணைகளாகப் பகுத்துள்ளார். 'திணை' என்பது ஒழுக்கம் என்று பொருள்படும்.

> **"தொல்காப்பியர் செய்யுளியலில் 'திணை' என்பதற்கு விளக்கங் கூறுகையில் அகத்திணை ஏழினையே காட்டுவதையும், அவற்றுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணையையும் அன்பின் ஐந்திணை என அடை கொடுத்துச் சிறப்பித்தலையும் நோக்க, அகப்பொருளுக்கு அவர் வழங்கிய தலைமையறியப்படும்"**[1]

> **"உரையாசிரியர் இளம்பூரணர் 'ஏழ்பெருந்திணை' எனத் தொல்காப்பியர் குறிப்பதனுள் புறத்திணைகளும் அடங்குமென்பர்"**[2] பேராசிரியர்.

"அகம் என்பது முதன்மையையே காட்டுகின்றது. இளம்பூரணர் 'அகம்' என்பதை உரிப்பொருளுள் முதற்கூறாக எண்ணி, அகத்திணைகளின் மாட்டேறாக வருவனவே புறம் எனக் கூறுகிறார். அகப்பொருள் என்பதற்கு மறஞ்செய்தலும், அறஞ்செய்தலும் என்றும் அவர் பொருள் கூறுவர்"[3]

என்று கு.வெ. பாலசுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார்.

"நச்சினார்க்கினியர் அகத்திற்குரிய விளக்கங்கூறி, இதனை ஒழிந்தன புறம் எனக் கூறுகின்றார்"[4]

என்று கு.வெ. பாலசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார்.

"மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்"

(தொ.பொருள். இளம். நூ. பா. 57)

"புறத்திணை மருங்கின் பொருந்தின் அல்லது
அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே"

(தொல்.பொருள். இளம். நூ. பா. 58)

என்ற நூற்பாக்கள் அகத்திணையில் அகத்திணை மாந்தர்கள் பெயர் சுட்டிப் பிறர்க்குப் புலனாகுதல் இல்லை என்பதைக் காட்டுகின்றது.

அகம் என்ற சொல்லுக்கு அகராதி ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கூறும் பொருள் விளக்கம் பின்வருமாறு:

மணிமேகலைத் தமிழ்ச்சொல் அகராதி,

"அகம் என்ற சொல்லுக்கு மனம், வீடு, இடம்"[5]

என்று மூன்று பொருட்களைக் குறிப்பிடுகின்றது. அகம் என்ற சொல்லுக்கு மற்றொரு அகராதியில்,

> **"அகக்கூத்து, அகங்காரம், அகநானூறென்னும் நூல், ஆசௌசம், இருப்பிடம், சரீரம், சீவன், ஆகாயம், ஆழம், ஆன்மா, இடம், உபத்திரம், உள், உள்ளிடம், ஏழனுருபு, ஒரு மரம், துக்கம், நாள், பகல், மருதம், மார்பு, பள்ளம், பாம்பு, பாவம், பூமி, மரப்பொந்து, மலை, மனம், வீடு, குறைகுணம், இருதயம்,"[6]**

என்னும் பல பொருட்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அகத்திணை என்ற சொல்,

> **"கைக்கிளை, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல், பெருந்திணை என்னும் ஏழுதிணைகள் பற்றிக் குறிப்பிடுகிறது"[7]**

என்று சங்கரலிங்க முதலியார் குறிப்பிடுகின்றார்.

> **"களவு, கற்பு என்னும் இருநிலைகளிலும், நாகரிக நிலை கடவாமல் தொடர்புடைய இருவர் அளவில் இடம்பெறும் பாலுணர்ச்சியே அகமெனப்பட்டது. பிறரறியப் புலனான காமமும், பாலுணர்வும், வாழ்வின் பிற உணர்ச்சிகளும், நினைவுகளும், செயல்களும் புறமெனப்பட்டன. ஆகவே, புறமென்பதற்கு, மறைவாக அமையாது பிறரறிய வெளியாவது என்றும், பலர்க்குரியதாகிய பொதுமைப் பண்பு உடையது என்றும் பொருள் கூறலாம்"[8]**

என்று அகம், புறம் பற்றி கு.வெ. பாலசுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார்.

சங்கப்பாடல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் இருபிரிவிலும் அகம், புறம் தொடர்பான பாடல்கள் பல காணப்படுகின்றன.

எட்டுத்தொகை அகநூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியனவும் பத்துப்பாட்டு அகநூல்களான முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகியனவும் இவ்வியலின் முதன்மை ஆதாரங்களாக விளங்குகின்றன.

சங்க இலக்கிய அகநூல்களில் இடம் பெற்றுள்ள பாடல்களில் காணலாகும் விருந்தோம்பல் பண்பு குறித்த கருத்துக்களே இவ்வியலின்கண் ஆராயப்படுகின்றன.

சங்ககால மக்கள்தம் இல்லத்திற்கு வரும் புதியவர் எவராயினும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று உண்டி, உறையுள் முதலியவற்றைக் கொடுத்து உபசரித்து அனுப்பி வைப்பர். தங்கள் இல்லம் தேடி வரும் புதியவரை விருந்தினர் என்று அழைத்தனர். இப்புதியவராகிய விருந்தினருக்குச் செய்யும் உபசரிப்பு நண்பர், சுற்றத்தினர் என அனைவரையும் விருந்தோம்பும் பண்பாக மாறியது. விருந்தினரை (அறிமுகமானவரையும்) விருந்தோம்பும் இப்பண்பு தொன்றுதொட்டு தமிழரிடையே இன்றுவரை தொடர்ந்துவரும் பண்பாகவும் உள்ளது. விருந்தோம்பல் பண்பு குறித்த செய்திகளானது மற்ற இலக்கியங்களைக் காட்டிலும் செவ்வியல் தொகுதியில் முதன்மையாக விளங்கும் 'சங்க இலக்கியத்தில்' பல்வேறு இடங்களில் காணப்படுகின்றது. சங்க இலக்கிய அகநூல்களில் மட்டும் இடம் பெற்றுள்ள விருந்தோம்பல் பண்பு குறித்த பாடல்கள் மட்டும் இவ்இயலின்கண் ஆராயப்பட உள்ளன.

அன்பும் அறனும்

உலகப்பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறளில் திருவள்ளுவர் விருந்தோம்பல் பற்றித் தனியொரு அதிகாரம் படைத்துள்ளார். விருந்தோம்பலானது மக்களின் வாழ்வில் எவ்வாறெல்லாம் இடம் பெற்றுள்ளது என்பதனைத் தனியொரு அதிகாரத்தில் பத்துக் குறட்பாக்களில் விளக்கியுள்ளார் வள்ளுவர்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

(குறள். 45)

என இல்வாழ்க்கையின் பயனை உணர்த்துகின்றார். அன்பு இல்வாழ்க்கைக்கு அடிப்படையாகவும் அறம் அதற்குப் பயனாகவும் அமைகின்றது. அன்பு இல்லாதவர் வாழ்வில் அறம் செய்ய முடியாது. அறம் செய்ய அவர்களின் உள்ளத்தில் அன்பு இருக்க வேண்டும். திருவள்ளுவர் தனது இல்லறவியலில் ஐந்தாவது அதிகாரத்தில் இல்வாழ்க்கையைக் கூறி, இல்வாழ்க்கைக்கு உறுதுணையான வாழ்க்கைத் துணையைக் கூறிப் பின்னர் இல்வாழ்க்கைக்கு மங்கலமான நல்ல மக்களைக் கூறுகின்றார். பின்னர் இந்நான்கிற்கும் அடிப்படையாக அமைந்த அன்புடைமையைக் கூறுகின்றார். இந்த அன்பின் காரணமாக நல்ல குடும்ப வாழ்க்கை அமைகின்றது.

நல்ல குடும்பத்தில்தான் விருந்தோம்பல் பண்பு சிறந்து விளங்குகின்றது. இதன் முக்கியத்துவம் உணர்ந்தே திருவள்ளுவர் மக்களின் வாழ்வில் விருந்தோம்பலானது கடமையாகவும், அறமாகவும், நம்பிக்கையாகவும், உபசரிக்கும் பண்பாகவும், அதன் பயனாகவும் விளங்குகின்றது எனத் தனித்தனியே பிரித்துப் பத்துக் குறட்பாக்களின் மூலம் விளக்கியுள்ளார்.

சங்ககாலத்தில் விருந்தோம்பல் தலைமைப் பண்பாகக் கொண்டது. தலைவனும், தலைவியும் சேர்ந்து வாழ்ந்தனர். ஒரு நல்ல குடும்பம் அமைத்து அதில் விருந்தினரைப் பேணிக்காப்பது அறமாகக் கருதப்பட்டது.

சங்ககாலத்தில் மக்கள் விருந்தோம்பல் செய்யவே திருமணம் செய்து கொண்டனரோ என எண்ணும் அளவிற்கு அவர்தம் விருந்தோம்பல் பண்பு முக்கிய இடம்பெற்றமையைக் காணமுடிகின்றது. தலைவன் தலைவி திருமணம் செய்துகொண்டு விருந்தினரைப் பேணிக்காத்தனர். இதுவே அறமுடைய வாழ்க்கை என்று கருதினர்.

தலைவன், தலைவி இல்லாத குடும்பத்தில் விருந்தோம்பல் பண்பானது நடைபெறும் வாய்ப்பானது குறைந்தே காணப்படும் எனக் கருதினர்.

தலைவன் பொருளினை ஈட்டி வரத் தலைவியானவள் அப்பொருளினைக் கொண்டு தம்மில்லம் வரும் புதியவர்க்கு (விருந்தினர்க்கு) விருந்து படைப்பவளாகத் திகழ்ந்தாள். விருந்தோம்பல் பண்பானது தலைவன், தலைவி சேர்ந்த நிலையில் சிறப்புப்பெற்று விளங்கின என்பதனை இலக்கியச் சான்றுகள் மெய்ப்பிக்கின்றன.

> **"விருந்தோம்பல் பணியைக் கணவனும் மனைவியும் விரும்பினால் மட்டுமே செய்ய இயலும். இருவரும் மாறுபடினும், விருந்து நன்முறையில் நடைபெறாது. எனவே, விருந்து போற்றும் கணவனும், மனைவியும் ஒத்த உணர்ச்சி உடையவராகயிருத்தல் இன்றியமையாதது. ஆகவே விருந்து நடைபெறும் இல்லத்தில் உள்ள கணவனும், மனைவியும் மனம் ஒத்து வாழ்கின்றனர் என்பதை உணர முடியும். அஃதாவது அவர்களது இல்வாழ்க்கை செம்மையாக நடைபெறுகின்றது என்பதே பொருளாகும்."**[9]

என்று மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுகின்றார்.

திருமணம் செய்துகொண்டு தம்மிடம் வருவோர்க்கு எல்லாம் வரையாமல் விருந்து கொடுத்துப் பிறகு எஞ்சியதைத் தான் உண்டு வாழும் வாழ்க்கையானது சிறப்புடைய வாழ்க்கை என்று சங்க இலக்கியம் கருதுகின்றது.

விருந்தோம்பல் செய்வதற்குப் பொருள் மிக முக்கியமாகக் கருதப்பட்டது. தலைவன் பொருள் ஈட்டி வரவும் அதனைக் கொண்டு மனைவி விருந்து செய்து தன் சுற்றத்தினரைப் பேணியுள்ளாள்.

தலைவன் இல்லாத காலத்தில் தலைவி விருந்தோம்பல் செய்ய இயலாமல் துன்பப்பட்டுள்ளாள். விருந்து செய்வதற்காக எல்லாப் பொருட்களும் இருந்தும் தலைவியின் மனம் தலைவனை நினைத்து வருந்துவதால் விருந்து செய்யமுடியாமல் போயிற்று. தலைவன் தன்னுடன் இருந்தால் தலைவி மகிழ்ச்சியோடு இருக்கும் நிலையில் நல்விருந்து செய்வாள். தலைவியர் சிலர் தலைவன் தன்னைப் பிரிந்த காலத்திலும் வரும் விருந்தினரைப் பேணிக் காத்துள்ளமையையும் அறியலாம்.

தலைவியைத் தலைவன் பரத்தையின் காரணத்தால் பிரிந்து மீண்டும் தலைவியைக் காண வரும்போது தலைமகள் வாயில் மறுத்து மொழியும் அகப்பாடல் ஒன்றில் 'எனது நல்ல மனையிடத்து வருகின்ற விருந்தினரைப் பேணுதலால் ஓய்வு இன்மையின் தலைவனை எதிர்ப்படப் பெற்றிலேன்' என்று தலைவி கூறுகின்றாள்.

"நல்மனை நனிவிருந்து அயரும்
கைதூவின் மையின் எய்தா மாறே"

(நற். 280)

சங்ககாலத்தில் பாணன், பாடினி, விறலி, பொருநன் ஆகியோர் விருந்துக்குரியவர்களாக இருந்துள்ளனர். வறுமையில் வாடியபோது இவர்களை ஆதரிக்கும் அரசர்களை நம்பி வாழ்ந்தனர். அரசர்களைக் காண்பதற்குச் செல்லும்போது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலத்தில் வாழக்கூடிய மக்களால் ஆதரிக்கப்பெற்றனர்.

ஒரு சிற்றூர்க்குப் பாணன் தன் சுற்றத்துடன் சென்றான். குடிப்பதற்கும் நீர் கிடைக்காத ஊர் அவ்வூர். ஊர்த் தலைவனும் இல்லை. சென்ற பாணனுக்கு ஏமாற்றம் ஏற்படாவண்ணம் அவன் மனைவி கூறுமிடத்து,

"படலை முன்றில் சிறுதினை உணங்கல்
புறவும் இதலும் அறவும் உண்கெனப்
பெய்தற்கு எல்லின்று பொழுதே; அதனான்,
முயல்சுட்ட வாயினும் தருவோம்; புகுதந்து
ஈங்கு இருந்தீமோ, முதுவாய்ப் பாண!
கொடுங்கோட்டு ஆமான் நடுங்குதலைக் குழவி
புன்தலைச் சிறாஅர் கன்றுஎனப் பூட்டும்
சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்,
வேந்துவிடு தொழிலொடு சென்றனன் வந்து, நின்
பாடினி மாலை யணிய
வாடாத் தாமரை சூட்டுவன் நினக்கே"

(புறம். 319)

என்ற பாடலில், தலைவி தம் வீட்டிற்கு வந்த பாணர் சுற்றத்தினைப் பார்த்து 'பாணனே சிறிய வீட்டின் முற்றத்தில் உள்ள சாடியின் அடியில் சிறிது நீரே உள்ளது. அது தூய நீர்தான் படல் கட்டிய முற்றத்தில் உலர்ந்த தினையைத் தெளித்து அதை உண்ண வரும் புறாக்களையும், இதல் பறவைகளையும் பிடித்துச் சமைப்பதற்கு நேரமில்லை. ஞாயிறு மறைந்து விட்டது. ஆகவே வீட்டில் இருப்பது சுட்ட முயல்கறிதான்; அதைத் தருகிறோம். எம் கணவன் பெருவேந்தன் பொருட்டுப் போர்த்தொழிலை மேற்கொண்டு சென்றுள்ளான். வினை முடித்து நாளை வந்து உனக்கு பொற்றாமரைப் பூவும், பாடினிக்குப் பொன்னரி மாலையும் தருவான்' என்கின்றாள்.

தலைவியானவள் தலைவன் இல்லாத நிலையினும் தன்னிடம் உள்ள பொருட்களைக் கொண்டு விருந்தோம்பியுள்ளாள் என்பதனை இப்பாடல் வழியே அறியமுடிகின்றது.

நற்றிணையில் விருந்து

ஒன்பது அடி முதல் பன்னிரண்டு அடிவரையிலுள்ள ஐந்திணை தழுவிய நானூறு பாடல்களைக் கொண்ட நற்றியையில் இருநூற்று

எழுபத்தைந்து புலவர்களின் அரிய பல கருத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றுள் விருந்தோம்பல் குறித்த பாடல்கள் சிலவற்றில் தமிழரின் விருந்தோம்பும் பண்பினைச் செவ்வனே காணமுடிகின்றது.

தலைவன் மகிழ்ச்சி

"எல்லி வந்த நல்இசை விருந்திற்கு
கிளர்இழை அரிவை! நெய் துழந்து அட்ட
விளர்ஊன் அம்புகை எறிந்த நெற்றி,
சிறுநுண் பல்வியர் பொறித்த
குறுநடைக் கூட்டம் வேண்டு வோரே"

(நற். 41)

என்ற பாடலிலிருந்து சங்கத் தலைவியானவள் தம்மிடம் வந்துள்ள விருந்தினர்களுக்காகச் சமைக்கும்போது தாளிதம் செய்தாள். தாளிதம் செய்ததினால் ஏற்பட்ட புகையானது நெற்றியில் துளிகளாக வியர்த்து இருந்தது. தலைவன் பொருள் ஈட்டிவரத் தலைவியைப் பிரிந்த நிலையில் தலைவி சமைத்த விதத்தினை நினைத்து இன்புறுகின்றான் என்னும் உயர்ந்த கருத்து தெரிய வருகின்றது.

விருந்தினருக்கு ஈயல் உணவு

தமிழர்கள் ஈயலை உணவாக உண்டனர். 'ஈயல் உணவு' உண்ணும் பொருட்களுள் மிக முக்கிய ஒன்4றாகக் கருதப்பட்டது.

"உடும்பு கொலீஇ வரிநுணல் அகழ்ந்து
நெடுங் கோட்டுப் புற்றத்து ஈயல் கொண்டி
எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல"

(நற். 59)

என்னும் பாடலில், புற்றில் வாழும் ஈயலை உணவாகக் கொள்ளும் வேட்டுவர்கள் புற்றினைத் தோண்டுதல் வழக்கமாகக் கொண்டிருந்தனர்;

புற்றினைத் தோண்டி அதில் உள்ள ஈயலைக் கொண்டு அதனைத் தன்னிடம் வரும் விருந்தினருக்கு விருந்திட்டனர் போன்ற கருத்துக்கள் புலப்படுகின்றன.

'செம்புற்று ஈயலின் இன்அளைப் புளித்து'

(புறம். 119)

"சிறுதலைத் துருவின் பழுப்புஉறு விளைதயிர்,
இதைப்புன வரகின் அவைப்புமாண் அரிசியொடு
கார்வாய்த்து ஒழிந்த ஈர்வாய்ப் புற்றத்து
ஈயல் பெய்துஅட்ட இன்புளி வெஞ்சோறு
சேதான் வெண்ணெய் வெம்புறுத்து உருக
இளையர் அருந்த, பின்றை, நீயும் -
இடுமுள் வேலி முடக்கால் பந்தர்
புதுக்கலத்து அன்ன செவ்வாய்ச் சிற்றில்
புனைஇருங் கதுப்பின்நின் மனையோள் அயர
பாலுடை அடிசில் தொடீஇய, ஒருநாள்
மாவண் தோன்றல், வந்தனை சென்மோ"

(அகம். 394)

என்னும் அகப்பாடலிலும் ஈயல் உணவு குறித்து கூறப்பட்டுள்ளது. சிறிய தலையினையுடைய செம்மறியாட்டினது பழுப்பு நிறம் வாய்ந்த முற்றிய தயிரை உலை நீராக்கிப் புதுக்கொல்லையில் விளைந்த நன்கு குற்றிய வரகினது அரிசியை அதில்போட்டு, மழை மிகுதியாகப் பெய்தமையால் புற்றிலிருந்து வெளிவந்து அழிந்த ஈயலையும் அதில் இட்டுச் சமைத்து இனிய புளிப்புடைய சோற்றில் கிடந்து உருகுமாறு பசுவின் வெண்ணெய்யைப் பெய்து தலைவனது ஏவலர் முன்பு உண்ண, தலைவனானவன் வளைந்த கால்களையுடைய பந்தலையுடையதும் செம்மண் பூசப்பட்டதுமாகிய சிற்றில்லில், கருமையான கூந்தலையுடைய அவனது மனைவி விருந்து செய்ய, பாலிற் சமைத்த உணவினை உண்ணுதற்கு என்றேனும் ஒருநாள் வந்து செல்ல வேண்டும் என்ற

எண்ணத்துடன் தலைவியின் விருந்தோம்பல் மாண்பினை தலைவனிடம் தோழி உரைக்கின்றாள். இப்பாடலிலிருந்து ஈயல் என்னும் உணவு விருந்தோம்பலுக்கு மிகவும் பயனுடையதாக விளங்கியமை தெரிய வருகின்றது.

ஈயல் என்பது ஒரு வகை பறக்கும் எறும்பு வகை. இந்த ஈயல் சங்ககால உணவு மட்டும் அன்று. இன்றைக்கும் நாட்டு மக்கள் ஈயலை உணவாக உட்கொள்கின்றனர். 'ஈயல்' என்பது நாட்டுப்புறங்களில் 'ஈசல்' என்று அழைக்கப்படுகின்றது. வருடத்தில் சில மாதம் மட்டும் இதன் பெருக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக ஆடி மாதத்தில் இதனைப் பிடித்துப் பதப்படுத்தி உண்ணுகின்றனர். இந்த ஈயலை எடுப்பது மிகச்சிரமமான ஒன்றாகும். காரணம் ஈயலை நச்சுத்தன்மை கொண்ட நாகம் மற்றும் சில கொடிய விலங்குகள் வந்து உண்ணும் தன்மை கொண்டவை. இன்றைக்கும் மக்கள் ஈயலை விரும்பி உண்ணுகின்றனர். விருந்தினருக்கும் அளிக்கக்கூடிய உணவுப் பொருட்களில் இதுவும் ஒன்று.

விருந்தில் வரால்மீன்

"கருங்கண் வராஅல் பெருந்தடி மிளர்வையொடு
புகர்வை அரிசிப் பொம்மற் பெருஞ்சோறு
கவர்படு கையை கழும மாந்தி"

(நற். 60)

என்னும் பாடல், கரிய கண்களைக் கொண்ட வரால் மீனின் பெரிய துண்டங்களைக் குறித்துக் கூறுகின்றது. அவை மிளிரும் வண்ணம் குழம்பிலே பிறழவிட்டு உணவுக்குரிய அளவியாற் சமைத்த சோற்றுத் திரளை விரும்பி உண்ணும் கையை உடையவனாம் தலைவன். அவ்வுணவினை மயக்கம் உண்டாக உண்டு நின் உழத்தியரோடு நீர் மிக்க

சேற்றிலே நாற்றுகளை நடுவதற்குச் செல்வான் அவன் என்னும் கருத்தைத் தெரிவிக்கின்றது இப்பாடல்.

வரால்மீனைத் துண்டித்து உண்ணுதலைப் பற்றி அகநானூற்றிலும்,

'வராஅற் துடிக்கட் கொழுங்குறை'

(அகம். 196)

எனக் கூறப்பட்டுள்ளது. சங்ககால மக்கள் உணவில் வரால் மீன் சிறப்பிடம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. வரால் மீன் என்பது கொழுப்பு மீன் வகைகளில் ஒன்று. வரால் மீன், வாளை மீன், நண்டு, நத்தை போன்றவை இன்றைக்கும் தமிழர் உணவில் சிறப்பிடம் பெற்றுள்ள உணவு வகைகள் ஆகும்.

விருந்தினனாக வந்த தலைவன்

தலைவி விருந்தினருக்கு விருப்பத்தோடு சமைப்பது போலவே தன் தலைவனுக்கும் விருப்போடு சமைக்கின்றாள் என்பதனை,

"..... அம்மா அரிவை
விருந்துஅயர் விருப்பொடு விருந்தினள் அசைஇய
முறுவல் இன்நகை காண்கம்!"

(நற். 81)

என்னும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன. தலைவன் தலைவியை விட்டு வினையின் காரணமாகப் பிரிந்து செல்கின்றான். மீண்டும் தலைவியைக் காண வருகின்றான். தலைவன் தலைவியைக் காண வருகின்றான் என்பதனை அறிந்த தலைவி தலைவனை விருந்தினனாக ஏற்றுக்கொள்ளுகிறாள். விருந்தினருக்குச் சமைக்கும் உணவிற்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டதைப்போல் தலைவனுக்கு அளிக்கும் விருந்தினுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. தலைவன் வரவைக்கண்டு தலைவி மகிழ்ந்தாள். மீண்டும் தலைவனோடு

விருந்தோம்பல் அறத்தினைச் செய்யலாம் என்னும் ஆர்வமே அதற்குக் காரணமாக அமைகின்றது.

கூகைக்குக் கொடுத்த விருந்து

“..... வலிமுந்து கூகை!
மை ஊன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்,
எலி வான் சூட்டொடு மலியப் பேணுதும்”

(நற். 83)

என்னும் சங்கப்பாடல் கூகைக்கும் விருந்து வழங்கப்பட்ட கருத்தைப் புலப்படுத்துகின்றது. களவுக்காலத்தில் தலைவி தலைவனைச் சந்திக்கின்றாள். கூகையானது இரவில் கூவும் தன்மை கொண்ட பறவை இனத்தில் ஒன்று. இரவுப் பொழுது கூகை கூவாமல் இருப்பதற்குத் தலைவி ஆட்டிறைச்சியுடன் நெய் கலந்தும் வெண்மையான சோற்றில் சூட்டிறைச்சியைச் சேர்த்தும் நிறையுமாறு விருப்பத்துடன் தருகின்றாள்.

கூகை கூவாமல் இருக்க அதற்கு நெய்யுடன் அரிசிச் சோற்றில் ஆட்டிறைச்சியைக் கலந்து தந்துள்ளதை அறிவதிலிருந்து தன்னிடம் வரும் விருந்தினருக்கு மட்டுமன்றி கூகைக்கும் தலைவி விருந்திட்டதை அறிய முடிகின்றது.

கானவன் தலைவி அளித்த விருந்து

“கானவன் எய்த முளவு மான் கொழுங்குறை
தேம்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு
காந்தள்அம் சிறுகுடிப் பகுக்கும்
ஓங்கு மலைநாடன் நீன் நசையினானே”

(நற். 85)

என்ற பாடலின் மூலம் கொடிச்சியினது விருந்தோம்பல் பண்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ‘காட்டில் கானவன் அம்பெய்து கொன்ற முள்ளம்பன்றியின் கொழுத்த இறைச்சியைக் கிழங்கொடு தேன் மணம்

கமழும் கூந்தலையுடைய கொடிச்சி தம்குடியினர் பலருக்கும் பகுத்துக் கொடுக்கின்றாள்' என்னும் கருத்தை உணர முடிகின்றது.

தினம் உணவுக்காகக் கானவர் வேட்டையாடிக் கொண்டுவந்த முள்ளம்பன்றி, கிழங்கு, தேன் போன்ற உணவுவகைகளைத் தான் மட்டும் வைத்து உண்ணாமல் தன்னிடம் வரும் விருந்தினருக்கும் தனது சுற்றத்தினருக்கும் பகுத்துக் கொடுக்கின்றாள் கானவன் தலைவி என்ற செய்தியானது இதன் மூலம் தெரியவருகின்றது.

வேட்டுவர் உணவில் முள்ளம்பன்றி சிறப்பிடம் பெற்றிருந்தது. முள்ளம்பன்றியைக் கானவர் சமைத்து உண்ணுதலை

'விருந்து விருப்புறூஉம் பெருந்தோட் குறுமகள்'

(நற். 221)

என்ற பாடல் உணர்த்துகின்றது. காதலி விருந்தினரை எதிர்கொண்டு போற்றும் சிறப்பினைப் பெற்றவள் என்பதனை இடைக்காடனார் குறிப்பிடுகின்றார்.

குதிரைக்கு அளித்த விருந்து

"உமணர் தந்த உப்பு நொடை நெல்லின்
அயனி மா இன்று அருந்த"

(நற். 254)

சங்க காலத்தில் மக்கள் பெரும்பாலும் தங்களின் பயணத்தினை பெரும்பாலும் கால்நடை மூலம் மேற்கொண்டிருந்தனர். நீண்ட தூரம் செல்ல வேண்டிய இடத்திற்கு ஒரு சிலர் குதிரைகளைப் பயன்படுத்தியுள்ளனர். குதிரையுடன் சென்ற விருந்தினர்களுக்கு மட்டும் உணவு கொடுத்து விருந்தோம்பல் அவர்களுடன் சென்ற குதிரைக்கும் விருந்து கொடுத்துள்ளனர்.

குதிரைதானே ஏதாவது உண்ணட்டும் என்று பாராமல் அக்குதிரை உண்ண வேண்டிய உணவுப் பொருளை இட்டு குதிரைக்கு விருந்திட்டனர். இதன் மூலம் சங்ககால மக்கள் விருந்தினருடன் வந்த கால்நடைகளுக்கும் விருந்திட்டுள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது.

காக்கைக்குப் பலி உணவு அளித்தல்

சங்க காலத்தில் இறைவனுக்குப் படைக்கப்பட்ட உணவினைப் பலி உணவு என்று அழைத்தனர். முன்னோர்களை வழிபடும்போது அவர்களுக்கு இத்தகைய பலி உணவு வைத்துப் படைத்தனர். இதனையே காக்கைக்கும் அளித்தனர்.

"திருவுடை வியல்நகர் வருவிருந்து அயர்மார்,
பொற்றொடி மகளிர் புறங்கடை உகுத்த
கொக்குஉகிர் நிமிரல் மாந்தி, எல்பட,"

(நற். 258)

என்ற பாடலின் வழியே, அகன்ற மனையில் வரும் விருந்தினரை வரவேற்பதற்காகப் பொன்னாலாகிய தொடியுடைய மகளிர் உணவு சமைத்தனர்; அவர்கள் அவ்வுணவில் கவளம் எடுத்து முற்றத்தில் பலியாக இட்டனர்; கொக்கின் நகம் போன்றதான சோற்றைப் பலியாக இட்டதும் பசிய கண்களைக் கொண்ட காக்கைகள் தின்றன என்னும் கருத்து புலப்படுகின்றது.

'பெருஞ்செய் நெல்லின் கொக்குகிர் நிமிரல்'

(புறம். 395)

என்ற புறப்பாடலும் இதையே குறிப்பிடுகின்றது.

அக்கால மகளிர் தாங்கள் சமைத்த உணவினை எடுத்துக் காக்கைக்குக் கொடுத்துள்ளனர். என்பதனை,

"மாசுஇல் மரத்த பலிஉண் காக்கை
வளிபொரு நெடுஞ்சினை தளியொடு தூங்கி,
வெல்போர்ச் சோழர் கழாஅர்க் கொள்ளும்
நல்வகை மிகுபலிக் கொடையொடு உவக்கும்"

(நற். 281)

என்ற பாடல் உணர்த்துகின்றது. அளவில்லாத சோற்றை அழகிய பலவாகிய புதிய ஊன் துண்டங்களோடு கூடிய பெருவிருந்தாகப் பெறுவதற்கு அக்காக்கை கருதியிருக்கும் என்னும் கருத்தை,

"பலிக்கள் ஆர்கைப் பார்முது குயவன்
இடுபலி நுவலும் அகன்தலை மன்றத்து"

(நற். 293)

என்ற பாடல் புலப்படுத்துகின்றது. பலிநுவலும் குயவன் தெய்வங்களையும் காக்கைகளையும் ஊரறியக் கூவி அழைப்பான்.

'மாசுஇல் மரத்த பலிஉண் காக்கை'

(நற். 281)

'உகுபலி அருந்திய தொகுவிரற் காக்கை'

(நற். 343)

என்ற பாடல் அடிகளின் மூலம், தாங்கள் தெய்வத்திற்குப் படைத்த உணவு வகைகளை முதன்முதலில் காக்கைக்குக் கொடுக்கும் பழக்கம் நீண்டகாலமாகவே இருந்துள்ளதை அறியமுடிகின்றது. காக்கை உண்டால் முன்னோர்கள் உண்ணுவதாக நம்பிக்கை கொண்டிருந்தனர். இதிலிருந்து தமிழர்கள் நம்பிக்கையில் மூழ்கியவர்கள் என்பதனையும், பலியுணவினைக் காக்கைக்கு அளித்து மகிழ்ந்தனர் என்பதனையும் அறியமுடிகின்றது.

விருந்தினருக்குக் குரவை

"வாங்கு அமைப் பழுநிய நறவு உண்டு
வேங்கை முன்றில் குரவையும் கண்டே"

(நற். 276)

என்ற பாடல், தன்னிடம் விருந்தாய் வருபவரை ஏற்று நடத்தும் இயல்புடைய குறவர் மகளிரின் விருந்தோம்பல் பண்பினை நுவல்கின்றது. தலைவன் வரின், உவந்து ஏற்று உண்பதற்கேற்ப கள்ளினையளிப்பர் குறவர் பெண்கள். வேங்கை முன்றிலிலாடும் குரவையாட்டமும் தலைவன் காணலாம் என்று உலகியலாய் விருந்து புறந்தருதலை உணர்த்துகின்றது இப்பாடல். சங்ககாலத்தில் குறவர் பெண்கள் தம்மிடம் வரும் விருந்தினர்களை உபசரித்த பிறகு 'கள்' கொடுத்தனர். 'கள்' விருந்துணவில் முக்கிய இடம் பெற்றுள்ளது. கள்ளுண்ட களிப்பில் அவர்களை மகிழ்விப்பதற்குக் குரவையும் ஆடப்பட்டது.

அன்றைய விருந்தினர்களுக்குப் பொழுதுபோக்கு என்பது கள்ளுண்டு ஆடுவது ஆகும். தம்மிடம் வந்த விருந்தினர்க்குக் கள் கொடுத்துக் 'குரவை' என்னும் நடனம் ஆடி மகிழ்வித்துள்ளனர். பாணன், பாடினி, விறலி, பொருநன், கூத்தர் போன்ற கலைஞர்களும் விருந்தினர்களாகச் சென்ற இடத்தில் விருந்து கொடுப்பவரின் மனைகளில் ஆடிப்பாடி மகிழ்வித்துள்ளனர். இப்பாணர் அக்கால மக்களின் பொழுதுபோக்குக் கலைஞர்களாகவும், தொலைத் தொடர்பு தகவலர்களாகவும் விளங்கியமையும் காணமுடிகின்றது. ஊடல் தீர்க்கும் வாயில்களாகவும் விளங்கியுள்ளமை புலனாகின்றது.

ஊடல் கொள்ள வாய்ப்பில்லை

தலைவியானவள் இல்லத்தின்கண் வருகின்ற விருந்தினரை ஓம்புவதில் கையொழியாமையினால் தலைவனை எதிர்ப்படவில்லை.

அதனால் அவனோடு ஊடவும் இல்லை. சங்ககாலத்தில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்ததில் தலைவி வருத்தம் கொள்ளாமல் மீண்டு வந்த தலைவனுடன் ஊடல் கொள்ளாமல் பேணிக்காப்பதில் பெரிதும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள். அதனால் தலைவிக்குத் தலைவனுடன் ஊடி நிற்பதற்கு நேரமில்லாமல் போனமையும் தெரியவருகின்றது. தலைவன் இல்லாத நிலையிலும் தலைவி விருந்து கொடுத்து ஆதரித்துள்ளாள்.

"நல்மனை நனி விருந்து அயரும்
கைதூவின் மையின் எய்தா மாறே"

(நற். 280)

என்ற பாடல் மூலம், தலைவன் இருந்து ஆற்ற வேண்டிய அறத்தைத் தான் ஒருத்தியே ஆற்ற வேண்டியதாயிற்று எனக் கூறும் தலைவியையும் அறிய முடிகின்றது.

உணவினைப் பகுத்துக்கொடுக்கும் தலைவியது இயல்பு

".....கானவன்
வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை
புனைஇருங் கதுப்பின் மனையோள் கெண்டி
குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட!"

(நற். 336)

என்ற பாடலடிகள், 'தினையைத் தின்ற பன்றியைக் கானவன் அம்பினால் கொன்று, கொண்டுவந்து தர அவன் மனைவியானவள் தனது சுற்றத்தாருக்குப் பகுத்துக் கொடுத்தாள்' என்பதனை உணர்த்துகின்றது.

குறிஞ்சிக் காட்டுப்பகுதியில் வாழும் கானவரின் முக்கியமான தொழில் வேட்டையாடுதல். காட்டில் வேட்டையாடிக் கொண்டுவந்த பன்றியிறைச்சியைத் தலைவியானவள் தான் மட்டும் வைத்துக்

கொள்ளாமல் தனது சுற்றத்தினருக்குப் பகுத்துக்கொடுக்கின்றாள். உணவுக்காகத் தேடுதல் வேட்டைத்தொழில் குறிஞ்சி மக்களின் முக்கியத் தொழிலாக இருந்துள்ளமையை அறிய முடிகின்றது.

தலைவனும், தலைவியும் மணந்து இல்லறம் நிகழ்த்துகையில் பகைப்புலம் சென்று அடங்காத பகைவரை வென்று பொருளீட்டித் தலைவியிடம் தர அவளும் தெய்வம், விருந்து, சுற்றம் என முறையே பகிர்ந்து தந்து இன்புறுமாறு செய்தல் வேண்டும் என விளக்கப்பட்டுள்ளது.

மரத்தடி விருந்து

சங்ககால மக்கள் ஆலமரத்தடியில் உணவு சமைத்து உண்டனர். சமைத்த உணவினைக் காக்கைக்குக் கொடுத்தனர். ஆலமரத்தடியில் தெய்வம் உறையும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். அதனால் ஆலமரத்தடியில் சமைத்த பலி உணவினைக் காக்கைக்குக் கொடுத்தனர்.

"நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து
உகுபலி அருந்திய தொகுவிரற் காக்கை"

(நற். 343)

'அலமர் கடவுளன்ன நின்செல்வம்'

(புறம். 198)

'கடவுள் மரத்த முள்மிடை குடம்பை'

(அகம். 270)

முதலிய பாடலடிகளின் மூலம், அக்கால மக்கள் ஆலமரத்தின் கீழ் உணவு படைத்ததை அறியமுடிகின்றது. இத்தகைய உணவினைத் தனது சுற்றத்தாருடன் சேர்ந்து உண்டுள்ளனர்.

> **"மரத்தை அடிப்படையாகக் கொண்டு பல நம்பிக்கைகள் உலகில் நிலவுகின்றன என்று கோ. சுப்பிரமணியப்பிள்ளை கூறுகிறார்"[10]**

என்று செ. பழனிச்சாமி கூறுகின்றார்

இன்றைக்கும் சில இனமக்கள் மரத்தடியில் பொங்கல் வைத்துத் தனது சுற்றத்தாருடன் சேர்ந்து உண்ணும் வழக்கத்தினைக் கொண்டிருக்கின்றனர். பெரும்பாலும் மக்கள் தற்போதும் குல தெய்வங்களுக்கு மரத்தடியில் பொங்கல் வைத்து அதனைக் காக்கைக்கு இட்ட பிறகு சுற்றத்தினருடன் சேர்ந்து உண்ணுகின்றனர்.

குரங்கிற்கு அளித்த விருந்து

குறவர் மடமகள் பலாச்சுளைகளைக் கொண்டு குரங்கிற்கு விருந்து கொடுத்தாள்.

"முடமுதிர் பலவின் குடம்மருள் பெரும்பழம்
கல்கெழு குறவர் காதல் மடமகள்
கருவிரல் மந்திக்கு வருவிருந்து அயரும்"

(நற். 353)

என்ற நற்றிணைப் பாடல், குறவர்கள் காட்டுப் பகுதியில் வசிப்பதால் அங்கு விளையக்கூடிய பலாப்பழங்களைக் கொண்டு அங்குள்ள குரங்கிற்குக் குறவன் மகள் விருந்து கொடுக்கின்றாள் என்னும் கருத்தை உணர்த்துகின்றது. மக்கள் காக்கைக்கு மட்டுமன்றி, குரங்கிற்கும் விருந்து கொடுத்து மகிழ்ந்தனர் என்ற குறிப்பினை இப்பாடல்வழி அறிய முடிகின்றது.

விருந்துண்ண விரைந்த தலைவன்

"தந்தன நெடுந்தகை தேரே; என்றும்
அரும்படர் அகல நீக்கி,
விருந்துஅயர் விருப்பினள் திருந்து இழையோளே"

(நற். 361)

என்ற நற்றிணைப் பாடல் அடிகள் தலைவன் விரும்பிய விருந்தினைக் குறித்துக் கூறுகின்றன. தன் தலைவியை வினையின் காரணமாகப் பிரிந்து சென்றான். தலைவனது வினை முடிந்த பிறகு மீண்டும் தலைவியை காண வருகின்றான். தலைவனது வரவைக் கண்ட தலைவி

தன் துன்பம் தீர்ந்து விருந்து கொடுக்க விருப்பத்துடன் செயல்படுவாள். அதனால் அவள் துன்பம் தீர தேரை விரைந்து செல்லுமாறு பணிக்கின்றான் தலைவன்.

"ஊதுஉலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி
மரம்பயில் இறும்பின் ஆர்ப்ப, சுரன் இழுப்,
மாலை நனிவிருந்து அயர்மார்
தேர்வரும் என்னும் உரை வாராதே"

(குறுந். 155)

என்று குறுந்தொகையும் விளக்குகின்றது.

காக்கை போல் தலைவி சுற்றத்தினை அழைத்தல்

"கொடுங்கண் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்கு சிறைப் பிள்ளை தழீஇ, கிளை பயிர்ந்து,
கருங்கண் கருணைச் செந்நெல் வெண்சோறு
கூருடைப் பலியொடு கவரிய, குறுங்கால்
கூழுடை நல்மனைக் குழுவின இருக்கும்"

(நற். 367)

என்னும் பாடல் காக்கையினது ஒருமைப்பாட்டை விளக்கி நிற்கின்றது. வளைந்த கண்களை உடைய கூரிய வாய்கொண்ட காக்கைப் பேடை நடுங்குகின்ற சிறகையுடைய தன் பிள்ளையைத் தழுவிக்கொண்டு தன் கிளையாகிய காக்கைகளை அழைக்கும் என்பது புலனாகின்றது.

தலைவி கருணைக்கிழங்குப் பொரியலுடன் செந்நெல்லாற் சமைத்த வெண்மையான சோற்றுப் பலியைத் தெய்வத்துக்கிடுவர். இதனையே காக்கைக்கும் இட்டனர். இந்தப் பலி உணவினை உண்ட காக்கை தன் சுற்றத்தினை அழைத்து உண்ணச் செய்வதுபோலக் குடும்பத்தினைக் காக்கும் தலைவி தலைவன் கொண்டுவந்த பொருளினைக்கொண்டு தன் சுற்றத்தினரையும் அழைத்து விருந்திட்டு மகிழ்வாள்.

விருந்துணவுக்குச் சிறப்புத் தரும் தலைவன்

"விருந்துஅயர் விரு(ப்)பினள் வருந்தும்
திருந்துகுழை அரிவைத் தேமொழி நிலையே"

(நற். 374)

என்ற பாடலானது, தலைவன் வினையின் காரணமாகத் தலைவியை விட்டுப் பிரிந்து மீண்டும் தலைவியைக் காண விரும்புவதையும், தலைவி தன் துன்பத்தையெல்லாம் விட்டுத் தன் கணவனுக்காக விருப்பத்துடன் சமைத்த செயலையும் உணர்த்துகின்றது.

தலைவியானவள் தலைவனைப் பிரிந்த நிலையில் சமைக்கும் தொழிலை வெறுத்து விருந்தினருக்கு விருந்து கொடுக்க முடியாத அளவிற்கு வருத்தத்துடன் இருந்துள்ளாள் என்பதும் தெரியவருகின்றது.

பிரிந்து சென்ற தலைவன் மீண்டும் தன்னைக் காண வருகின்றான் என்பதை அறிந்த தலைவி தலைவனுக்குத் தானே முன்வந்து விருப்பத்துடன் சமைக்கின்றாள். தினமும் சமைத்து உண்ணும் உணவைவிட விருந்தினருக்கு அளிக்கப்படும் உணவு சிறப்பிடம் பெற்றதைப்போலத் தலைவனுக்குச் சிறப்பான உணவினைச் சமைக்கின்றாள் தலைவி.

'முற்றையும் உடையமோ மற்றே'

(நற். 374)

என்னும் பாடலடி, செல்வர் வீட்டுப் பெண்கள் இதுவரை பிறர் சமைக்க உண்டனர்; இப்போது தானே முன்வந்து சமைக்கும் புதுமை உடையவராய்த் திகழ்கின்றனர் என்று தலைவனது வியப்புக் குறித்து கூறுகின்றது. தலைவியின் வீட்டில் தினம் சமைக்கும் உணவைக்காட்டிலும் தன் தலைவனுக்குச் சமைக்கும் உணவு சிறப்பிடம் பெற்றதாய்த் திகழ்கின்றது.

குறுந்தொகை புலப்படுத்தும் விருந்தோம்பல்

நாலடி முதல் எட்டடி வரையுள்ள ஐந்திணை தழுவிய நானூறு பாக்களைக் கொண்ட குறுந்தொகையில் இருநூற்றுஐந்து புலவர்கள் தம் கருத்துக்களைப் பெய்துள்ளனர். இதில் விருந்தோம்பல் குறித்து இடம் பெற்றுள்ள பாடல்கள் பல உள்ளன.

பாணர்களும் விருந்தோம்பலும்

பாண்மகன் முதுமைக் காலத்திலும் விருந்து கொடுக்கக்கூடிய தகுதியுடையவன்; கல்வியில் சிறந்தவன்; யானை, குதிரை, தேர் ஆகியவற்றில் ஊர்ந்து செல்லும் தலைமையுடையவன் எனத் தோழி பாணனைப் பற்றித் தலைவியிடம்,

"அன்னாய் இவன் ஓர்இள மாணாக்கன்
தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ?
இரந்தூண் நிரம்பா மேனியொடு
விருந்தி னூரும் பெருஞ் செம்மலனே"

(குறுந். 33)

என்ற பாடல்வழி உரைக்கின்றாள். சங்க காலத்தில் பாணர்கள் கல்வி கற்றவர்களாகவும், அரசர்களிடம் யானை, குதிரை, தேர் போன்றவற்றைப் பரிசுப்பொருட்களாகப் பெறத் தகுதியுடையவராகவும், முதுமைக் காலத்திலும் விருந்திட்டு வாழும் தகுதியுடையவராகவும் விளங்கினர் என்பதனையும் சங்கப்பாடல் உணர்த்துகின்றது.

விருந்திடும் மனைகள்

சங்கப்பாடல்கள் வழியே பலர் புகுந்து உண்ணக்கூடிய பெரிய அளவிலான வளமனைகள் அக்காலத்தில் இருந்தன என்னும் கருத்து தெரியவருகின்றது. பாணர், பொருநர், விறலி, கூத்தர் போன்றோர் கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தக் கூடியவர்கள். பெருங்கூட்டமாக வந்தால்

அவர்களை அழைத்துத் மனையில் தங்கவைப்பதற்குரிய பெரிய அளவிலான வளமனைகள் இருந்தன.

மாலை நேரம் வந்தபிறகு வாயில் கதவை அடைப்பதற்கு முன் விருந்தினராக உள்ளவர் யாராவது உள்ளே வருவார்களா என எதிர்பார்த்துக் கதவடைத்தனர் என்னும் கருத்தை,

"புள்ளு மாவும் புலம்பொடு வதிய
நள்ளென வந்த நார்இல் மாலை
பலர்புகு வாயி லடைப்பக் கடவுநர்,
வருவீர் உளீரோ எனவும்
வாரார் தோழி! - நம் காதலோரே"

(குறுந். 118)

என்ற குறுந்தொகைப் பாடலின் மூலம் அறிய முடிகின்றது. சங்கத் தமிழர்கள் விருந்தினர்களுக்காக வளமனைகளைக் கட்டியும் வாழ்ந்துள்ளனர்.

"மாலை நனிவிருந்து அயர்மார்
தேர்வரும் என்னும் உரை வாராதே"

(குறுந்.155)

என்னும் பாடலின் மூலம், வினை முடித்த தலைவன், மீண்டு வரும் நாளில் விருந்தயரும் மரபும், அதாவது வினையை முடித்து வீடு திரும்பும் தலைவனை 'விருந்தினராக' ஏற்கும் இயல்பும் அக்காலத்தில் இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

"வினைகலந்து வென்றீக வேந்தன், மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து"

(குறள். 1268)

எனத் திருக்குறளிலும் இக்குறிப்பு இடம் பெற்றுள்ளது.

'திருந்து வேல் அண்ணற்கு விருந்திறை சான்ம்'

(மலைபடு. 319)

'அரும்பெறல் காதலர் விருந்தென விருந்து அயர்வு'

(குறுந். 398)

என்ற பாடல் அடிகளிலும் இச்செய்தி இடம்பெற்றுள்ளது.

காக்கைக்கு விருந்து

சங்ககாலப் பெண்பால் புலவர்களில் ஒருவர் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார். இவர் காக்கையைச் சிறப்பித்துப் பாடியதாலேயே இப்பெயர் பெற்றார் எனவும் கூறுவர். காக்கைக்குப் பலியிடும் வழக்கம் இருந்து வந்துள்ளதை இவர் பாடல்வழியும் அறியமுடிகின்றது.

"திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யின், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலந்து ஏந்தினும் சிறிதுஎன் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"

(குறுந். 210)

என்னும் பாடல் இதனை மெய்ப்பிக்கின்றது. தலைவி தலைவனைப் பிரிந்து இருக்கையில் அவனை நினைந்து வருத்தமாக இருக்கும்பொழுது காக்கையானது கரைந்து நின்றது. காக்கை கரைந்தால் தன் தலைவன் வருவான் என்ற மகிழ்ச்சியில் நெய்யுடன் கலந்த சோற்றினை இட்டு மகிழ்கின்றாள் தலைவி. காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை அக்கால மக்களிடம் இருந்துள்ளதை இப்பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

> **"காக்கை கரைதலாகிய நிமித்தமும், அதன் பயனாகிய தலைவனது வருகையும் உடன் நிகழ்ந்தன. காக்கைக்குப் பலியிடுதல் பற்றிய நம்பிக்கை இப்பாடலில் குறிப்பிடப் பட்டுள்ளது என ரா. இராகவையங்கார் கூறுவர்"[11]**

என்று வி. நாகராஜன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைக்கும் தமிழர்களின் வீடுகளில் பலர் காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என நம்புகின்றனர். குறிப்பாகக் நாட்டுப்புறங்களில் இந்நம்பிக்கை கூடுதலாகக் காணப்படுகின்றது. நடைமுறை வாழ்வில் ஒருசிலர் இந்நம்பிக்கை கொண்டுள்ளதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம்.

தலைவன் இல்லாமையும் விருந்தோம்பாமையும்

சங்க காலத்தில் தலைவன் தலைவியை விட்டு வினையின் காரணமாகப் பிரிந்த நிலையில் தலைவி தலைவனை நினைத்து வருத்தம் கொள்கிறான். தலைவன் கார்ப்பருவத்தில் வருவதாகக் கூறிப் பிரிந்து சென்றான். கூதிர் காலமும் வந்தது. அக்காலத்து மாலைப் பொழுதும் சேர்ந்து தலைவியை வருத்த அவள் ஆற்றாமையால் கண்ணீர் பெருக்கினாள். விருந்து செய்ய முடியாமல் போனநிலை காணப்படுகின்றது.

"அரும்பெறற் காதலர் வந்தென, விருந்து அயர்வு
மெய்ம்மலி உவகையின் எழுதரு
கண்கலிழ் உகுபனி அரக்குவோரே"

(குறுந். 398)

என்ற பாடலடிகள், 'காதலர் வினைமுற்றி மீண்ட வழி அவரைக் கண்ட மகிழ்ச்சியால், உவகைக் கண்ணீர் பெருகிய நிலையில், அதனைத் துடைப்பதற்குத் துணையாக வருபவரைப் பெற்ற யான், அவன் பிரிந்து சென்றவழி ஆற்றாமையால் பெருகும் கண்ணீரைத் துடைப்பவரைப் பெற்றிலேன்' எனத் தலைவி வருந்துவதைத் தெரிவிக்கின்றது.

'விருந்தின் ஊரும் பெருஞ் செம்மலனே'

(குறுந். 33)

'துன்பத்திற்கு யாரே துணையாவார்'

(குறள். 1299)

என்னும் குறட்பா அடிகளும் தலைவியின் நிலையினை உணர்த்துகின்றன. துன்ப நிலையில் தலைவியானவள் விருந்தினரை ஏற்க விரும்பிலள் என்பதனை அறியமுடிகின்றது.

ஐங்குறுநூறு உணர்த்தும் விருந்தோம்பல்

மூன்றடி முதல் ஆறடிக்கு உட்பட்ட பாக்களை உடைய மருதம், நெய்தல், குறிஞ்சி, முல்லை, பாலை என்னும் ஐந்து திணைகளைப் பற்றியும் முறையே ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் என்னும் ஐவரால் திணைக்கு நூறாகப் பாடப்பட்ட ஐந்நூறு பாட்டுக்களைக் கொண்ட நூலாகத் திகழும் ஐங்குறுநூற்றில் விருந்தோம்பல் குறித்த பாடல்கள் பல காணப்படுகின்றன.

விருந்தே நாட்டின் சிறப்பு

"வாழி ஆதன், வாழி அவினி!
பசி இல்லாகுக! பிணிசேண் நீங்குக!"

(ஐங்குறு. வேட்கைப்பத்து : 5)

என்ற பாடல் மூலம் நாட்டில் பசியாகிய பிணி இல்லாது நீங்கியும் ஏனைய நோய்கள் நீங்கியும் வாழ விரும்புகின்றாள் தலைவி என்பது புலனாகின்றது. இதனையேதான்,

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

(குறள். 734)

என்றார் திருவள்ளுவர்.

சங்ககால மக்கள் இல்லற வாழ்வு சிறக்க வேண்டுமெனில் உறுபசி, பிணி, நலிவு ஆகிய இந்த மூன்றும் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதனை உணர்ந்திருந்தனர். இம்மூன்றும் இல்லாமல் இருந்தால் நாட்டில் எல்லாம் சிறப்படையும்; எனவே இம்மூன்றும் ஒழிய வாழ்தலே சிறப்புடைய வாழ்வாகக் கருதப்பட்டது.

தலைவன் இன்றித் தலைவி அளித்த விருந்து

"இருங்கழிச் சேயிறா இனப்புள் ஆரும்
கொற்கைக் கோமான் கொற்கைஅம் பெருந்துறை
வைகறை மலரும் நெய்தல் போலத்
தகைபெரிது உடைய, காதலி கண்ணே!"

(ஐங். 10)

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல், விருந்து வாயிலாகப் புகுந்த தலைமகன் தலைவியினது இல்வாழ்க்கைச் சிறப்பு கண்டு மகிழ்வதை விளக்குகின்றது. கணவன் பரத்தையிடம் சென்றகாலை தலைவியானவள் 'விருந்தினைச்' சிறப்பாகச் செய்து முடித்தாள் என்று அறிய முடிகின்றது. பரத்தை வீட்டிலிருந்து திரும்பிய தலைவன் தன் இல்லில் நுழைந்தபோது தன் மனைவி தான் இல்லாத நிலையிலும் இல்லறத்தைச் சிறப்பாக நடத்தியது கண்டு மகிழ்கிறான்.

தலைவியின் இல்லத்தில் விருந்தினர் யாரும் தடையின்றி நுழைந்து உணவு உண்டு மகிழ்ந்தனர் என்னும் குறிப்புப் பொருளை உணர்த்தும் வகையில் பறவையினம் குழுமியிருந்து பெரிய கழிகளில் இறால்மீன் உண்ணும் என்ற அடிகள் அமைந்துள்ளன.

ஊடல் தீர்க்கும் வாயில்கள் விருந்தினர்

"நல்மனை நனி விருந்து அயரும்
கைதூவு இன்மையின் எய்தாமாறே"

(நற். 280)

தலைவன் தலைவியை வினையின் காரணமாக மட்டும் பிரியவில்லை. தலைவன் பரத்தையின் காரணமாகவும் பிரிந்துள்ளான். தன்னை விட்டுப் பிரிந்த தலைவனிடம் தலைவி ஊடல் கொள்ளுவது வழக்கம்.

ஊடலானது நீண்ட நேரம் நீடித்தால் அக்குடும்பத்தில் இன்பம் இருக்காது. அதனால் ஊடல் வந்தபின் உடனே கூடி வாழ வேண்டும்

என்று திருவள்ளுவரும்,

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"

(குறள். 1330)

எனக் குறிப்பிட்டுள்ளார். தலைவன், தலைவி இருவரிடையே ஊடலினைத் தணிப்பவர்களாக விருந்தினர் இருந்துள்ளனர். ஊடல் கொண்டுள்ள குடும்பத்தில் விருந்தினர் வந்தால் தனது ஊடலினை விடுத்துத் தலைவன், தலைவி இருவரும் சேர்ந்து தன்னிடம் வரும் விருந்தினரை அன்புடன் அழைத்து உபசரிப்புச் செய்தனர். அக்காலத்தில் விருந்தினர்கள் ஊடல் தீர்ப்பவர்களாகவும் செயல்பட்டுள்ளனர்.

தலைவனுடன் சேர்ந்து உண்ணும் உணவு

"தேன் மயங்கு பாலினும் இனிய - அவர் நாட்டு
உவலைக் கூவற் கீழ
மான்உண்டு எஞ்சிய கலிழி நீரே"

(ஐங். 203)

என்னும் இப்பாடல் தலைவன் மீது தலைவி கொண்ட பேரன்பினைப் புலப்படுத்தி நிற்கின்றது.

"தலைவனோடு இருந்து விருந்தோம்பி நல்லறம் செய்து எஞ்சியது உண்ணலின் தந்தை மனையில் தன் உடலாக்கம் ஒன்றே கருதிப் பருகும் தேன்பாலினும் கலிழி நீர் இனிதாயிற்று"என்பார் பெருமழைப்புலவர்"[12]

என அ. தட்சிணாமூர்த்தி தம் உரையில் குறிப்பிட்டுள்ளார். தலைவனோடு சேர்ந்து விருந்தோம்பி நல்லறம் செய்வதை அக்கால மகளிர் சிறப்பாகக் கருதினர். தந்தையின் வீட்டில் எவ்வளவு செல்வம் இருந்தாலும் தன் கணவனோடு சேர்ந்து நடத்தும் வாழ்க்கையே தலைவிக்குச் சிறப்பானது.

பால்சோறு உண்ட தலைவி, தலைவன் வீட்டில் மானுண்டு எஞ்சிய சிறிது கலங்கிய நீர் உண்ணுவதையே சிறப்பாகக் கருதினாள்.

பொற்கிண்ணத்தில் அளிக்கப்பட்ட சோறு

பொற்கிண்ணத்தில் பாணர் போன்ற கலைஞர்களுக்கு விருந்திட்டுள்ளனர். பாணர்களுக்கு மட்டுமன்றி காக்கைக்கும் பொற்கிண்ணத்தில் சோறு அளித்துள்ளனர். விருந்தினர் வரவைக் காக்கைச் சொன்னதால்,

'பசிய ஊனும், நிணமும் கலந்து சமைக்கப்பட்ட உயர்ந்த உணவைப் பொற்கலத்தில் உண்ணுதல் செல்வர்க்கே இயல்பாதலாயினும் சிற்றினப் பறவையினம் நினக்கு மானுடர் உணவைப் பொற்கிண்ணத்தில் தருவேன்' என்று தலைவி கூறுவதைக் காணமுடிகின்றது.

'விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே'

(குறுந். 210)

என்கிறாள் தலைவி. அக்காலத்தில் காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என நம்பினர். முன்னரே குறிப்பிட்டது போல இது இன்றைக்கும் தமிழரின் நம்பிக்கைகளுள் ஒன்றாக உள்ளது.

கணவன் இல்லாமையால் கெட்ட விருந்து

'விருந்து நனி பெறுதலும் உரியள் மாதோ'

(ஐங். 442)

என்னும் பாடலில், வினையின் காரணமாகப் பிரிந்த தலைவன் வராததால் தலைவி விருந்து செய்ய முடியவில்லையே என வருந்துகிறாள். அவன் மீண்டும் வந்தால் விருந்தோம்பும் வாய்ப்பைப் பெறுவேன்; தற்போது எனக்கு அந்த வாய்ப்பு இல்லையே என்று வருத்தத்துடன் தெரிவிக்கின்றாள்.

தலைவியின் மகிழ்ச்சி

தலைவன் வந்ததால் மீண்டும் விருந்தோம்பல் சிறக்கும் என்பதனை நினைத்து மகிழ்ச்சியுற்றதை,

"தெரி இழை அரிவைக்குப் பெரு விருந்து ஆக
வல் விரைந்து கடவுமதி பாக!"

(ஐங். 482)

என்னும் பாடலடி புலப்படுத்துகின்றது. விருந்து நடைபெறும் வீடானது ஆரவாரத்துடன் காணப்பட்டது. கலைஞர்கள் விருந்து கொடுப்பவர்களை மகிழ்விப்பதற்காக ஆடிப் பாடினர். விருந்து இல்லாத வீடானது இருண்டு காணப்பட்டது. அதனால் தலைவியானவள் மீண்டும் தலைவன் வந்தால் விருந்து செய்யும் வாய்ப்பு வரும் என்பதைக் கருதி மகிழ்ச்சியும் விருந்து செய்யாததை நினைத்து வருத்தமும் அடைகின்றாள்.

தலைவனுடன் இல்லாத மகளிர் விருந்தோம்பல் செய்ய முடியவில்லையே என்று வருந்தினர். பின்னர் தலைவன் மீண்டு வந்தால் அத்தகையதொரு அரிய வாய்ப்பைப் பெறுவேன் என்று தலைவி கூறுவதால் விருந்தோம்பலின் சிறப்பினை அறிய முடிகின்றது.

விருந்தில் உளுந்து வடகமு(வற்றல்)ம் மாவடுவும்

"நெய்யொடு மயங்கிய உழுந்து நூற்றன்ன
வயலை அம் சிலம்பின் தலையது
செயலை அம் பகைத்தழை வாடும் - அன்னாய்"

(ஐங். 211)

என்னும் பாடலின்வழி, சங்ககாலப் பெண்கள் உளுத்த மாவினை நெய்யொடு கலந்து பிசைந்து கையால் திரித்துப் பரப்பிய கருத்துப் புலனாகின்றது. அது வெள்வயலைக் கொடி போன்று தோற்றமளித்தது. இன்றைக்குத் தமிழர் உணவில் அரிசி வடகம் சிறப்பிடம் பெற்றுள்ளதைப்

போன்று சங்ககாலத்தில் உளுந்து வடகம் இருந்துள்ளதை அறிய முடிகின்றது. இதனை இக்காலத்தார் 'வற்றல்' என்பர்.

'நறுவடி மாஅத்து மூக்கு இறுபு உதிர்ந்த'

(ஐங். 213)

மாவடுவினைப் பயன்படுத்தினர் என்பதனை அறிய முடிகின்றது.

சங்ககால மக்கள் உளுத்தம் பருப்பு மாவில் வடகம் (வற்றல்) செய்துள்ளனர். உளுத்தம்பருப்பில் மணப்பொங்கல் செய்தனர் என்ற குறிப்பானது அகநானூற்றிலும் காணப்படுகின்றது. 'வடுமாங்காய்' உணவில் சிறப்பிடம் பெற்றிருந்தது. சங்கத்தமிழர் உணவில் மாவடு ஊறுகாய் சிறப்பிடம் பெற்றுள்ளதை அறியமுடிகின்றது.

அகநானூறும் விருந்தோம்பலும்

அகநானூறு, பன்னிரண்டு அடிக்கு மேற்பட்ட ஐந்திணை தழுவிய நானூறு செய்யுட்களை உடையது. நீண்ட அடிகளைக் கொண்டுள்ள நெடுந்தொகை என்று அழைக்கப்படும் அகநானூறு நூற்று நாற்பத்து ஐந்து புலவர்கள் பாடியுள்ள கருத்துக்களைக் கொண்டது. இந்நூலுள் விருந்தோம்பலைக் குறிக்கும் பாடல்கள் பலவற்றை ஆங்காங்கே காணலாம்.

சிற்றரசரும் திறையும்

சிற்றரசர் பலரும் அரிய அணிகலன்களைத் திறையாகக் கொண்டு வந்து குவித்தனர்.

'விருந்தின் மன்னர் அருங்கலம் தெறுப்ப'

(அகம். 54)

'விருந்திற் புன்கணோ உடையர்'

(புறம். 46)

என்னும் பாடலடிகளின் மூலம், சங்க காலத்தில் விருந்து செய்வதற்காகப் புதிய மன்னர்கள் ஈட்டிவந்த பொருட்களைத் திறையாகக் கொடுத்துள்ளனர் என்பதனை அறியமுடிகின்றது. இதனையே,

'விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி'

(சிலம்பு. 26)

என்னும் சிலம்பினது அடி இயம்புகின்றது.

சிறுசோறு ஆக்குதல் (கூட்டாஞ் சோறு)

சிறுவர் சிறுமியர் விளையாடும்போது சேர்ந்து சமைத்து உண்ணுவர். இதனையே நாட்டுப்புறங்களில் கூட்டாஞ் சோறு என்பர்.

'சிற்றில் இழைத்தும், சிறுசோறு குவைஇயும்'

(அகம். 110)

என்று அகப்பாடல், சிற்றில் புனைந்தும் சிறுசோறு ஆக்கிக் குவித்தும் விளையாடிய செய்தியைக் கூறுகின்றது.

'மெல்லிய இலைப் பரப்பின் நீவிர் ஆக்கிய சிறு சோற்றை விருந்துண்டு இச்சிறுகுடித் தங்கின் மற்று எவனோ?' என மொழிந்த கருத்தும்

'மெல்இலைப் பரப்பின் விருந்து உண்டு யானும் '

(அகம். 110)

என்ற பாடல் வழி புலனாகின்றது.

அக்காலத்துச் சிறுவர், சிறுமியர் விளையாடும்போதே 'விருந்தோம்பும்' முறையில் விளையாடியுள்ளனர். நாட்டுப்புறங்களில் கூட்டாஞ்சோறு ஆக்கிப் படைத்துள்ளனர் என்பதனையும் அறிய முடிகின்றது.

களவுக் காலத்தில் விருந்து அளித்தல்

வேறொரு அகநானூற்றுப் பாடல் ஒன்றில் தோழி தலைவனைப் பார்த்து, 'பெரும! நீ ஆரவாரமிக்க எம் அழகிய சிறுகுடிக்கண் வந்து இரவு

தங்கினால் யாம் நினக்கும் நின் இளையருக்கும் நல்வினை அயர்வோம்' எனக் கூறுகின்றாள். இக்கருத்து,

"எமர்குறை கூறத் தங்கி, ஏமுற
இளையரும் புரவியும் இன்புற, நீயும்
இல்உறை நல்விருந்து அயர்தல்
ஒல்லுதும், பெரும! நீ நல்குதல் பெறினே"

(அகம். 300)

என்ற அகப்பாடல் வழி அறியலாகின்றது. 'பகலை எம்மொடு கழித்து இரவுவரின் நும் ஊருக்குச் செல்லாமல் எம் பகுதியில் தங்குவீராயின் யாங்களும் இயன்ற அளவு பேணுதல் செய்வோம்' எனத் தோழி தலைவனிடம் கூறுவதாகவும் அகப்பாடல் அமைந்துள்ளது.

"எல்லை எம்மொடு கழிப்பி, எல்உற
நல்தேர் பூட்டலும் உரியீர், அற்றன்று,
சேந்தனிர் செல்குவிர் ஆயின்'

(அகம். 200)

'உறைவதற்கினிய எம் ஊரில் நீ இன்று தங்கிச் செல்க' எனத்தோழி தலைவனிடம் வலியுறுத்துகிறாள்.

பண்டமாற்றலும் விருந்தோம்பலும்

"பசுமீன் நொடுத்த வெண்நெல் மாஅத்
தயிர்மிதி மிதவை ஆர்த்துவம் நினக்கே;
வடவர் தந்த வான்கேழ் வட்டம்
குடபுல உறுப்பின் கூட்டுபு நிகழ்த்திய
வண்டுஇமிர் நறுஞ்சாந்து அணிகுவம் - திண்திமில்
எல்லுத்தொழில் மடுத்த வல்வினைப் பரதவர்"

(அகம். 340)

என்னும் மற்றொரு அகப் பாடலில் தோழி, தலைனிடம் 'இன்றிரவு எம்மிடையே தங்கிச் சென்றால், புதிய மீனை விற்று அதற்கு மாறாக வாங்கி வந்த வெள்ளிய நெல்லை இடித்து ஆக்கிய மாவின்கண்

தயிரிட்டுப் பிசைந்த உணவினை நும்முடைய குதிரைகளுக்கு உணவாகக் கொடுப்போம்' என்று கூறுகின்றாள்.

இப்பாடலிலிருந்து தலைவனுடன் வந்த குதிரைக்கும் உணவு கொடுத்துள்ளனர் என்பதையும் உணர முடிகின்றது. இவ்விருந்தோம்பல் பண்பினைக் களவுக்காலத்தில் தலைவனுக்கு மறைமுகமாக செய்தனர் என்பதனையும் அறிய முடிகின்றது.

தலைவன் மணம் செய்துகொள்வதற்கு முன் தலைவியின் வீட்டில் விருந்தினனாகத் தங்கும் பழக்கம் இருந்துள்ளது. விருந்தினனாகத் தங்குவதன் மூலம் அவர்களுக்கிடையேயான காதல் மேலும் இறுக்கம் பெற்று வளர்ச்சியடைந்த நிலையில் திருமணம் செய்துகொண்டு 'விருந்தோம்பல்' அறத்தினைச் செய்துள்ளனர்.

திருமணத்தில் விருந்து

சங்ககாலத்தில் திருமண நிகழ்ச்சியினை நல்ல (நன்முழுத்த) முகூர்த்த நாளில் வளர்பிறையில் நடத்தினர். பூவையும், நெல்லையும் தூவி வாழ்த்தினர். அப்போது புரோகிதர்கள் இல்லை. வயது முதிர்ந்த பெண்கள் முன்னின்று திருமணத்தை நடத்தியுள்ளனர்.

"உழுந்து தலைப்பெய்த கொழுங் களிமிதவை
பெருஞ்சோற்று அமலி நிற்ப நிரைகால்"

(அகம். 86)

என்ற பாடலடிகள் உளுத்தம் பருப்பு இட்டுச் செய்த பொங்கலானது திருமண விருந்தாக இடப்பட்ட செய்தியை உணர்த்துகின்றன.

"மைப்புஅறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி,
புள்ளுப் புணர்ந்து இனிய ஆக"

(அகம். 136)

என்ற அகப்பாடல் மூலம் சங்க மகளிர், நெய்மிக்க வெண்மையான சோற்றினை இறைச்சியுடன் சேர்த்துக் குற்றமற ஆக்கினர். அளவற்ற வள்ளன்மையுடன் உயர்ந்தோரை உண்பித்தனர் என்பது உணரமுடிகின்றது.

சில இடங்களில் திருமணத்தின்போது தற்காலத்தில் உளுத்தம் பருப்பை விடுத்து, சிறுபருப்புப் பொங்கலும், இறைச்சி கலந்த சோறும் விருந்தாக அளிக்கப்பெற்றதைக் காணலாம்.

"காவிரிப் படப்பைப் பட்டினத் தன்ன
செழுநகர் நல்விருந்து அயர்மார், ஏமுற
விழுநிதி எளிதினின் எய்துக தில்ல"

(அகம். 205)

என்ற அகப்பாடல் மூலமாக, விருந்தோம்ப செல்வம் ஈட்ட பாலையைக் கடந்து சென்றான் தலைவன் என்ற நிகழ்வும் அறியப்படுகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தைப் போன்ற வளஞ்சான்ற ஊரின்கண் வரும் விருந்தினரை மகிழ்ச்சியின் பேணுதற்குப் பாலையைக் கடந்து சிறந்த பொருளை எளிதிற் பெற்று மீளத் தலைவனும் சென்றுள்ளான் என்ற கருத்தும் இப்பாடல் வழி புலப்படுகின்றது.

அக்காலத் தலைவர்கள் பொருள் கொண்டு விருந்தோம்பல் செய்து, பொருட்களை விருந்தினருக்குப் பரிசாகக் கொடுத்துள்ளனர். பொருளீட்டுவதற்குக் கொடுமையான பாலை நிலத்தையும் பாராமல் கடந்து சென்றனர்.

அக்காலத் தலைவர்கள் சுயநலமாக இல்லாமல் பொதுநல நோக்குடையவர்களாகத் திகழ்ந்தமையை இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது. பொருளுக்காக வினை மேற்கொள்ளப்பட்டது என்றாலும் பொருளினை ஈட்டி விருந்தோம்பல் அறத்தினைச் செய்வதற்காக கடுமையான வெப்பம் காய்ந்து அழிக்கும் பாலைநிலத்தையும் கடந்து சென்றுள்ளனர் என்பதனையும் புரிந்து கொள்ள முடிகின்றது.

கைக்குத்தல் அரிசி விருந்து

"புதுமண மகடூஉ அயினிய கடிநகர்ப்
பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇ,
கூழைக் கூந்தற் குறுந்தொடி மகளிர்
பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்து
பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கை"

(அகம். 141)

என்ற பாடல் வழி, அக்கால மகளிர் வலிமைவாய்ந்த உலக்கையைக் கொண்டு அரிசி குற்றியதை அறியமுடிகின்றது. விருந்தோம்பலுக்கு அடிப்படையான சோற்றுணவிற்காக அரிசி குற்றப்பட்ட செய்தி புலனாகின்றது.

விருந்தினருக்குக் கொடுத்த உணவு: (அவல், தினைச்சோறு, இறைச்சி)

". . . . . கனைதிறல்
செந்தீ அணங்கிய செழுநிணக் கொழுங்குறை
மென்தினைப் புன்கம் உதிர்த்த மண்டையொடு
இருங்கதிர் அலமரும் கழனிக் கரும்பின்
விளைகழை பிழிந்த அம்தீம் சோற்றோடு
பால்பெய் செந்நெற் பாசவல் பகுக்கும்"

(அகம். 237)

என்னும் அகப்பாடலின் வழியே விருந்தினருக்குச் செந்தீயில் சுடப்பட்டக் கொழுத்த இறைச்சித் துண்டங்களையும், தினைச்சோற்றினையும், முற்றிய கரும்பில் எடுத்த சாற்றில் காய்ச்சிய பாகுடன் பாலினை ஊற்றிக் கலந்த செந்நெல்லால் ஆன அவலையும், கலத்தில் இட்டுப் பாணர் முதலானோர்க்குப் பகுத்துக் கொடுத்தனர் என்னும் கருத்துக்கள் புலனாகின்றன.

"களவும் புளித்தன, விளவும் பழுநின
சிறுதலைத் துருவின் பழுப்புஉறு விளைதயிர்

இதைப்புன வரகின் அவைப்புமாண் அரிசியோடு,
கார்வாய்த்து ஒழிந்த ஈர்வாய்ப் புற்றத்து
ஈயல் பெய்துஅட்ட இன்புளி வெஞ்சோறு
சேதான் வெண்ணெய் வெம்புற்று உருக"

(அகம். 394)

என்னும் அகப்பாடலின் மூலமாக, வரும் விருந்தினருக்குப் பாலில் சமைத்த உணவினையும், ஈயல், தயிர், களாப்பழம், விளாம்பழம் போன்றவற்றையும் அளித்தனர் என்பதனையும் அறியமுடிகின்றது.

தலைவனை விருந்தினராக ஏற்றல்

"இளையரும் புரவியும் இன்புற, நீயும்
இல்உறை நல்விருந்து அயர்தல்"

(அகம். 300)

என்ற பாடலின் மூலம், விருந்தினர் இரவின்போது தலைவியின் வீட்டில் தங்கிச்செல்வதுண்டு என்று தலைவனைக் கண்டு தலைவி கூறிய கருத்தும் புலனாகின்றது. அக்கால மகளிர் களவுக் காலத்தில் விருந்தினன் போலத் தலைவனை அழைத்து மகிழ்ந்ததை இப்பாடலின் மூலம் அறியமுடிகின்றது.

"விருந்தும் பெறுகுநள் போலும், திருந்துஇழைத்
தடமென் பணைத்தோள் மடமொழி அரிவை"

(அகம். 324)

என்ற பாடலடிகள், 'தலைவியானவள் தலைவனுக்கு விருந்து செய்யும் பேற்றினைப் பெறுவாள்' என்பதைப் புலப்படுத்துகின்றது.

"மனைக்கொண்டு புக்கனன், நெடுந்தகை
விருந்துஏர் பெற்றனள், திருந்திழை யோளே"

(அகம். 384)

என்ற பாடலடிகளும்,

"பெருந்தோள் நுணுகிய நுசும்பின்
திருந்துஇழை, அரிவை விருந்துஎதிர் கொளவே!"

(அகம். 374)

என்னும் அடிகளும், தலைவியானவள் தலைவனை விருந்தாக ஏற்றுக் கொள்ளும் நிகழ்வினைத் தெளிவுறுத்துகின்றது. தலைவனும் இவ்வாய்ப்பைத் தலைவிக்கு அளிக்க விரும்பி, தேரை விரைந்து செலுத்துமாறு தேர்ப்பாகனிடம் கூறுகின்றான்.

கலித்தொகையும் விருந்தோம்பலும்

நூற்று நாற்பத்தொன்று பாடல்களைக் கொண்ட கலித்தொகையில், பாலைக்கலியைப் பெருங்கடுங்கோவும், குறிஞ்சிக்கலியைக் கபிலரும், மருதக்கலியை மருதனிளநாகனாரும், முல்லைக்கலியைச் சோழன் நல்லுருத்திரனும், நெய்தற்கலியை நல்லந்துவனாருமாக ஐந்து புலவர்கள் பாடித் தம் அரிய கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். ஒப்பற்ற பண்பாகக் கருதப்பட்ட விருந்தோம்பல் குறித்த பாடல்கள் பல இந்நூலுள் காணப்படுகின்றன.

"நச்சல் கூடாது பெரும! இச்செலவு
ஒழிதல் வேண்டுவல், கழின், பழிஇன்று;
மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பித்
தன்நகர் விழையக் கூடின்,
இன்உறல் வியன்மார்ப! அதுமனும் பொருளே"

(கலித். 8)

என்னும் கலித்தொகைப் பாடலில் அமைந்த தோழி கூற்று விருந்தோம்பலைச் சிறப்பிக்கின்றது. 'பெரும் பொருள் நச்சுதல் நினக்குப் பொருந்தாது. ஆராயின் பழி இல்லையாம்படி இப்போக்கினை நீ ஒழியுமாறு யான் வேண்டினேன். அரசன் நம்மைப் பாதுகாக்க வருகின்ற விருந்தினர்களைப் பேணிக் காத்துத் தன் மனைவி விரும்பியாங்கு

அவளுடன் கூடி இருந்து, இனிய முயக்கத்தைப் பெறுதலே, அகன்ற மார்பனே, நிலைபேறுடைய பொருள் அது காண்', என்ற தோழிகூற்றுப் பாடல்கருத்து விருந்தோம்பலின் மேன்மையை பறைசாற்றி நிற்கின்றது.

தலைவனிடம் தோழி செலவினைத் தவிர்க்குமாறு கூறுவதைக் காணமுடிகின்றது. தங்களை ஆட்சி செய்யும் அரசன் தலைவியை விட்டு நீங்காது விருந்தோம்பல் செய்து நாட்டினைக் காப்பதுபோல தலைவனும் தலைவியை விட்டுப் பிரியாமல் இருப்பதைக்கொண்டு விருந்து செய்து வாழ வேண்டும் என்று சங்ககால மக்கள் விரும்பினர்.

இல்லறத்தின் சிறப்பு விருந்தோம்பல் என்பதை வலியுறுத்துகின்றது. பல பாடல்கள் வருவிருந்து ஓம்பல் இல்லறத்தார் கடன் என கூறப்படுகின்றது.

"தூது வந்தன்றே, தோழி!
துயர்அறு கிளவியோடு அயர்ந்தீகம் விருந்தே"

(கலித். 32)

என்ற பாடலடிகள் மூலம், 'முயங்கிய காதலருடைய தூதராய் இளவேனில் வந்தது. ஆதலின் தூதராய்க் கருதப்பட்ட அக்காலத்திற்கு, விருந்தானவற்றைச் செய்ய வேண்டும்' என்று தோழி விரும்புவதை உணர்த்துகின்றது இப்பாடல்.

> **"விருந்து போற்றுதல் தமிழர்களின் பண்பு. இளவேனில் தூதாக வந்தது. அதற்கு விருந்து போற்றுவோம் என்று கூறியது பண்பாட்டு அடிப்படையாகும்"**[13] என்று விருந்தோம்பல் பண்பாட்டினைப் பற்றி அ. விசுவநாதன் குறிப்பிட்டுள்ளார்.

'ஆங்குஅவை விருந்துஆற்ற பகல்அல்கிக் கங்குலான்'

(கலி. 66)

களிற்றின் நாறுகின்ற நாற்றத்தை உடைய செறிந்த மதநீரிலே முன்பு படிந்திருந்த வண்டுகள், விருந்து செய்தன. அப்பூவொடு வந்த வண்டுகள் பகற்பொழுதெல்லாம் தங்கி விருந்தயர்ந்தன.

தலைவன் பரத்தையிடம் சென்று பின்பு தலைவியிடம் இன்புறுதலும் விருந்தாக ஒப்பிடப்பட்டுள்ளது.

"எல்லினை வருதி; எவன் குறித்தனை? எனச்
சொல்லா திருப்பே னாயின் ஒல்லென
விரிஉளைக் கலிமான் தேரொடு வந்த
விருந்து எதிர் கோடலின் மறப்பல் என்றும்"

(கலி. 75)

என்னும் இப்பாடலின் வழியே தலைவி தலைவனிடம் ஊடல் நீண்ட நேரம் நிற்பதற்கான வாய்ப்பினை இழந்து விடுகின்றேன் என்று புலம்புவது புலனாகின்றது. காரணம் தலைவன் நாள்தோறும் புதிய புதிய பரத்தையரை விரும்பும் இயல்பினை உடையவன். அவன் பரத்தையரை விட்டு நீங்கி மீண்டும் தன்னிடம் வருவதைத் தலைவி விரும்பினாள். தலைவன் வரும்பொழுதே பரந்த கழுத்தின் மயிரினையும் மனச் செருக்கினையுமுடைய குதிரை பூண்ட தேரின்கண் விருந்தினரை ஏற்றி வருகின்றான். கொண்டுவந்த விருந்தினரை எதிர்சென்று வரவேற்கும் முறையினால் நாளும் புலவியைத் தலைவியும் மறக்கின்றாள்.

சங்க காலத்தில் தலைவன் பரத்தையிடம் சென்று மீண்டும் தலைவியிடம் வரும்போது ஊடல் கொள்ள நேரிடுகின்றது. இதை உணர்ந்த தலைவன் தலைவியின் ஊடலினைத் தணிவிக்க விருந்தினரோடு வருகின்றான். தலைவியானவள் தலைவனை விருந்தினருடன் கண்டதுமே தன் ஊடலினைக் கைவிடுத்து வரும் விருந்தினரைப் பேணிக் காப்பவளாக உள்ளாள் என்பதனை மேற்கூறிய பாடல்வழி அறிய முடிகின்றது.

தலைவி தான் ஊடல் கொள்ளக் கருதி இருந்தும் தலைவன் விருந்தினருடன் வந்ததால் ஊடலைக் கொள்ள முடியாத நிலையினைத் தன் தோழியிடம் கூறுவதாக அமைந்துள்ளது இப்பாடல். தலைவியின் இல்லறப் பண்பு அவள்தன் செயலால் உயர்ந்து நிற்பதை இத்தகைய பாடல்கள் புலப்படுத்துகின்றன.

'பெரும! விருந்தொடு கைதூவா எம்மையும் உள்ளாய்'

(கலி. 81)

'அரிதாய அறன் எய்தி! அருளியோர்க்கு அளித்தலும்"

(கலி. 11)

என்ற பாடல் அடிகள், தம்மிடம் வந்தோர்க்குப் பெறுதற்கரிய அறச்செயலில் பொருந்தி ஈட்டிய செல்வத்தை வேண்டும் அளவு கொடுத்தல் வேண்டும் என விருந்தினருக்குச் செய்யும் அறத்தினைப் பற்றிய செய்தியைக் குறிப்பிடுகின்றன.

விழா விருந்துகள்

காமன் திருவிழாவின்போது மக்களுக்குச் சிறப்பாக விருந்து அளிக்கப்பட்டுள்ளது என்பதனையும் சங்கப் பாடல்கள் வழி அறியமுடிகின்றது.

"நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்
தேன்இமிர் காவில் புணர்ந்திருந்து ஆடுமார்
ஆனா விருப்போடு அணிஅயர்ப, காமற்கு
வேனில் விருந்து எதிர் கொண்டு"

(கலி. 92)

என்ற கலித்தொகை அடிகள், காமற்கு வேனில் விருந்தெதிர் கொண்ட செய்தியைக் கூறுகின்றன. மதுரை மாநகர மக்கள் வேனிற்காலத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவர் என்பது புலனாகின்றது.

"பலி, என்ற சொல்லுக்குப் பல பொருள் உள்ளன. கொழித்தல், கொடுத்தல், விசாரித்தல் என்ற அர்த்தமும்

> **உண்டு. பெற்ற பயனை மற்றவர்களுக்கு அளிப்பது, 'பலிவிழா' எனப்பட்டது. எல்லோருக்கும் அன்னமிட்டுப் பசிப்பிணியைப் போக்குவதையே முக்கிய நோக்கமாக இவ்விழா வற்புறுத்துகின்றது"[14]**

என்று வே. செல்வராஜ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். பிறருக்கு உணவு அளிக்கவே விழாவானது கொண்டாடப்பட்டுள்ளது என்பதனை அறிய முடிகின்றது.

குறிஞ்சிப்பாட்டும் விருந்தோம்பலும்

இருநூற்றி அறுபத்தி ஒன்று அடிகளை உடைய இந்நூல், குறிஞ்சி நில அமைப்பு, தாவரங்கள், விலங்குகள், தெய்வம், மாலைக் கால இயல்பு, எண்வகை மெய்ப்பாடுகள் ஆகியனவற்றை விரிவாக விளக்குவதோடு விருந்தோம்பல் பண்பின் மேன்மையையும் புலப்படுத்துவதை அறிய முடிகின்றது.

இல்லறத்தார் விருந்தினருக்கு விருந்திட்டு எஞ்சியதையே உண்டு மகிழ்ந்தனர் என்பதனை,

> ***"வருநர்க்கு வரையா, வளநகர் பொற்ப***
> ***மலரத் திறந்த வாயில் பலர் உண***
> ***பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்***
> ***வசைஇல் வான்திணைப் புரையோர் கடும்பொடு***
> ***விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை***
> ***நின்னோடு உண்டலும் புரைவது என்று ஆங்கு"***
>
> (குறிஞ்சி. 202 – 207)

என்கிறது குறிஞ்சிப்பாட்டு. அதாவது, 'பலரும் உண்ணும்படி அகன்று, கதவு திறந்து கிடக்கும் வாயிலை உடைய வளம் பொருந்திய இல்லத்தை மிடாச் சோற்றினை வருவோர்க்கு எல்லாம் வரையாமல் இடுகின்ற விழாக் கொண்டாடினார் போல, செல்வத்தையுடைய தம் இல்லம் பொலிவு

பெறும்படி, பசிய நிணம் ஒழுகிய நெய் மிக்க அடிசிலைத் தலைவி இடுகையால் குற்றம் இல்லாத உயர்ந்த குலத்தில் பிறந்த உயர்ந்தோர், தம்முடைய சுற்றத்தாருடன் விருந்துண்டு எஞ்சிய உணவினைப் பெருந் தகுதிப்பாடுடைய தலைவனானவன் உண்ணுதலும் உயர்ந்ததாகும்'. அச்செயல்தான் இல்வாழ்வோர் தாம் கரையேறுவதற்குரிய வழியாகவும் கருதப்படுகின்றது என்னும் உயர்ந்த கருத்துக்களை குறிஞ்சிப்பாட்டு வலியுறுத்தி நிற்கின்ற தகைமையைக் காண முடிகின்றது.

விழாக்காலங்களில், ஊரில் வாழ்வோர், தங்கள் வீடுகளுக்கு வருவோர்க்கு வரையாது, உணவளித்து, விருந்தோம்பும் இயல்பும், தலைவன் தலைவியை மணம்புரிந்து யாவர்க்கும் உணவளித்து மகிழ விரும்பும் வேட்கையும், வழங்கப்படும் உணவு சிறந்தாக இருந்தமையும், உண்பவர் உயர்குடியில் பிறந்தவராகக் கருதப்பட்டமையும் எனப் பல்வேறு கருத்துகள் இதன்வழி புலனாகின்றன.

விருந்துண்டு எஞ்சிய உணவினைத் தலைவி வழங்க, தான் உண்ணும் இன்பமே சிறந்தது எனத் தலைவனும் கருதினான். அக்காலத்தில் தலைவன், தலைவி சேர்ந்து நடத்தக்கூடிய வாழ்க்கையில் விருந்தோம்பல் சிறப்பிடம் பெற்றுள்ளதையும், விருந்து கொடுக்கும் வளம் பொருந்திய பெரிய இல்லம் இருந்துள்ளதையும் அறிய முடிகின்றது.

வருவோர்க்கெல்லாம் வரையாது உணவளித்து ஆதரித்துள்ளனர். இத்தகைய 'விருந்தோம்பலில்' இடம்பெற்றுள்ள தலைவியை மணந்து கொள்வதில் தலைவன் மகிழ்ச்சியடைவதை அறிய முடிகின்றது. விருந்தோம்பல் சிறந்து விளங்கிய குடும்பத்தில் பெண் எடுப்பதைப் பெருமையாக நினைத்துள்ளதை உணர முடிகின்றது. தலைவன், தலைவி சேர்ந்து விருந்தோம்பல் செய்து முடித்த பின்னர் எஞ்சியதை இருவரும் சேர்ந்து உண்ணுதலை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்ததையும் அறிய முடிகின்றது.

பட்டினப்பாலையும் விருந்தோம்பலும்

புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் முன்னூற்றி ஒன்று அடிகளைக் கொண்டு பாடிய பட்டினப்பாலை சிறப்பு மிக்க காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்பினைப் புலப்படுத்தும் நூல். இந்நூலும் பண்பினுள் சிறந்த விருந்தோம்பலின் மேன்மையை உணர்த்துவதாக அமைந்துள்ள திறத்தைக் காணமுடிகின்றது.

காவிரிப்பூம்பட்டினத்தில் அகன்ற 'உணவுச் சாலைகள்' இருந்தன. அவற்றில் சோற்றை வடிக்கும்போது ஒழுகும் வளமான கஞ்சி, ஆறு போல் எங்கும் பரவி ஓடும். அதனை உண்ண வரும் காளைகள் தம்முள் மோதிக் கொள்வதால், அக்கஞ்சி சேறாக ஓடும். பல தேர்களும் அவ்வழியே செல்லுவதால் அக்கஞ்சியின் சேறு காய்ந்து துகளாகப் பரவும். அக்கஞ்சியின் துகள், வேறுபட்ட தொழில் திறமுடைய ஓவியங்கள், தீட்டப்பட்ட வெண்ணிற மாடங்கள் ஆகியவற்றின் மேல் படியும். அம்மாடங்கள் புழுதியைத் தன்மேல் பூசிக் கொண்ட யானை போலக் காட்சியளித்தன" என்னும் கருத்துகள்,

"புகழ் நிலைஇய மொழி வளர
அறம் நிலைஇய அகன் அட்டில்
சோறு வாக்கிய கொழுங் கஞ்சி
யாறு போலப் பரந்து ஒழுகி,
ஏறு பொரச் சேறாகித்
தேர் ஓடத் துகள் கெழுமி
நீறு ஆடிய களிறு போல
வேறு பட்ட வினை ஓவத்து
வெண் கோயில் மாசு ஊட்டும்"

(பட்டின. 42 – 50)

மேற்கூறிய பாடலடிகளின் வழி புலனாகின்றன.

அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தை ஆண்ட சோழப் பேரரசாட்சியில் மக்களுக்கு உணவும், நீரும், உறையுளும் தடையின்றிக் கிடைத்தமையை நன்கு அறியமுடிகின்றது.

சோழ நாட்டை நாடி வருவோர்க்கு உணவளிக்கும் அறச்சாலைகள் புகார் நகரில் இருந்தமையை அறியமுடிகின்றது. **"தானத்தில் சிறந்தது அன்னதானம்"** என்ற பழமொழிக்கேற்றவாறு 'சோறு அளிக்கும் அறச்சாலைகள்' எவ்விடத்திலும் காணப்பட்டன. **"சோழநாடு சோறுடைத்து"** என்ற பெருமைக்கேற்றவாறு காவிரிப்பூம்பட்டினத்து விருந்தோம்பலை 'அறச்சாலையின்' மூலம் அறியமுடிகின்றது.

"பண்ணியம் அட்டியும், பசும்பதம் கொடுத்தும்
புண்ணியம் முட்டாத் தண்நிழல் வாழ்க்கை"

(பட்டின. 203 – 204)

என்னும் பாடலடிகள், காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் சிலர் தானம் வழங்கியும், விளைந்த நெல்லையும் பாக்கையும் உணவாகத் தந்தும் வாழ்ந்தனர் என்பதனையும், இவ்வாறு அறச்செயல்கள் பலவற்றைத் தடையின்றிச் செய்து இல்லற வாழ்க்கையில் சிறந்து நிற்கும் வணிகர் பலர் புகார் நகரில் வாழ்ந்தனர் என்பதனையும் உணர்த்துகின்றன.

"கொடுங்கால் மாடத்து நெடுங்கடைத் துவன்றி,
விருந்துஉண்டு ஆனாப் பெருஞ்சோற்று அட்டில்"

(பட்டின. 261 – 262)

என வரும் அடிகளின் மூலம், வளைந்த திண்ணைகள் உடைய மாடங்களின் நெடிய வாயிலில் விருந்தினர்கள் திரண்டு உணவு உண்டமையும், இவர்கள் உண்டு சென்ற பின்னரும் மிகுதியாகக் கிடக்கும் பெருஞ்சோற்றினை உடைய அடுக்களைகள் கொண்ட ஊராகப் புகார் விளங்கினமையும் புலப்படுகின்றன.

இதிலிருந்து விருந்தினர் எப்பொழுது வந்தாலும் அவர்களுக்கு வேண்டிய அளவு உணவு கொடுக்கும் பெருஞ்சோற்றினை உடையதாக காவிரிப்பூம்பட்டினம் விளங்கிற்று என்பதும் பட்டினப்பாலை மூலம் அறியலாகின்றது.

தொகுப்புரை

- சங்க இலக்கிய அக இலக்கியப் பாடல்களில் விருந்தோம்பல் குறித்த பாடல்கள் மட்டும் ஆராயப்பட்டுள்ளன.
- அகவாழ்வில் விருந்தோம்பலானது சிறந்து விளங்கியுள்ளது. கணவனைப் பிரிந்த காலத்தில் 'விருந்தோம்பல்' சில இடங்களில் மட்டும் நடைபெற்றுள்ளமை அகப்பாடலில் காணலாகும் சில பாடல்களின் மூலம் அறியப்படுகின்றன.
- களவு வாழ்விலும், கற்பு வாழ்விலும் 'விருந்தோம்பல்' சிறந்து விளங்கியுள்ளது. கற்புடைய மகளிர் கணவனைப் பிரிந்த காலத்தில் தலைவனிடம் ஊடல் கொள்ளாமல் 'விருந்தினரை' மட்டும் பேணிக் காப்பதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதால் ஊடலுக்கான இடம் இல்லாமல் போயிற்று என்ற செய்தியையும் அறியமுடிகின்றது.
- தலைவனானவன் வினையின் காரணமாகத் தலைவியை விட்டுப் பிரிந்து மீண்டும் தலைவியைக் காண வரும்போது, விருந்தினருக்கு ஒப்பாக ஆகின்றான். விருந்தினரை எதிர்பார்த்து இருப்பதுபோலத் தலைவனைத் தலைவி எதிர்பார்த்து இருப்பதையும் உணர முடிகின்றது.
- தலைவியானவள் இரவின்கண் வரும் சுற்றத்தினரை அன்போடு அழைத்து விருந்து கொடுத்ததையும் அறியமுடிகின்றது. குறைந்த அளவு உணவு இருந்தபோதிலும், தம்மிடம் வந்த விருந்தினரை வரிசையாக அமரவைத்து அவர்களுக்கு, இருக்கும் உணவுப் பொருளினைச் சரிசமமாகப் பகிர்ந்து விருந்திட்ட செய்தியையும் அறியமுடிகின்றது.
- விருந்தினர்களுக்கு அளித்தது போக எஞ்சிய விருந்துணவைப் பகிர்ந்து தலைவனும் தலைவியும் 'உண்ணக்கூடிய வாழ்க்கையை

ஒரு சிறந்த வாழ்வாக எண்ணினர்' என்பதும் புலனாகின்றது.

- தலைவனின் உள்ளத்தில் நின்ற தலைவியின் இல்லத்தில் 'விருந்தோம்பல்' சிறந்து நடந்தமையால் அறத்தோடு விளங்குகின்ற தலைவியை மணம்முடித்தலைப் பெருமையுடையதாக நினைக்கின்றான் தலைவன். அவன் மணம் செய்துகொள்ளும் பெண்ணானவள் வரும் விருந்தினரைப் பேணிக்காப்பவளாக இருத்தல் வேண்டும் என அவன் விரும்புகின்றான். இல்லத்தில் நடைபெறுகின்ற 'விருந்தோம்பல்' என்னும் பண்பு சிறந்து விளங்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவனாகத் தலைவன் விளங்கினமையையும் உணரமுடிகின்றது.
- தன்னிடம் வரும் விருந்தினருக்கு மட்டும் அல்லாமல் அவர்களுடன் வந்துள்ள அஃறிணை உயிர்களான 'குதிரை' போன்ற கால்நடைகளுக்கும் விருந்து அளிக்கப்பட்டுள்ளமையும் தெரிய வருகின்றது.
- 'பலிஉணவு' பற்றிய செய்திகள் உள்ளன. பலி உணவு என்பது இறைவனுக்கு (அ) இறந்தவர்க்குப் படைக்கப்பட்ட உணவாகும். இந்தப் பலிச்சோறு காக்கைக்கு அளிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சி பல பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. விருந்துணவில் காக்கை பெரும் பங்கு வகிக்கின்றது. காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை சங்ககால மக்களிடம் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. இன்றும் அத்தகைய நம்பிக்கை நடைமுறையில் பலரிடம் காணப்படுகின்றது.
- மக்கள் ஆலமரத்தடியில் உணவு சமைத்துத் தனது சுற்றத்தாரோடு சேர்ந்து உண்டதை அறியமுடிகின்றது. இன்றைக்கும் ஆல், அரசு, வேம்பு போன்ற மரத்தடியில் சமைக்கப்படும் உணவினைக்

குலதெய்வ வழிபாட்டு உணவாக உண்டு மகிழ்கின்றனர் என்பதனை அளிக்கப்பட்டன.

- ஆலமரத்தடியில் தெய்வம் வாழும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆலமரத்தடியில் 'பலிஉணவைச்' சேர்ந்து உண்டனர். இத்தகைய பலி உணவைக் காக்கைக்கும், குரங்கிற்கும் இட்டு மகிழ்ந்தனர்.
- விருந்துணவில் கள், மீன் இறைச்சி, ஆட்டிறைச்சி, அவல், புற்றீயல், பலா, விளாம்பழம் போன்றவை சிறப்பிடம் வகிக்கின்றன.
- களவுக்காலத்தில் காதலன் விருந்தினராகத் தலைவியின் வீட்டில் தங்குவது வழக்கத்தில் இருந்துள்ளது.
- திருமணத்தில் உளுந்தங்களிச் சோறும், ஊன் சோற்றுடன் கூடிய விருந்தும் அளிக்கப்பட்டுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. தொல். பொருள். 'இளம்பூரணர் உரை', ப. 487.
2. தொல். பொருள். 'இளம்பூரணர் உரை', ப. 487.
3. பாலசுப்பிரமணியன், கு.வெ., 'சங்க இலக்கியத்தில் புறப்பொருள்', பக். 23 - 24.
4. மேலது, ப. 24.
5. 'மணிமேகலைத் தமிழ்ச்சொல் அகராதி', மணிமேகலைப் பிரசுரம், ப. 2.
6. சந்தியா நடராசன், 'மதுரைத் தமிழ்ப் பேரகராதி', சந்தியாப் பதிப்பகம், ப. 5.
7. சங்கரலிங்க முதலியார், 'நெல்லை எஸ். வெள்ளிவிழா தமிழ்ப்பேரகராதி', பாகம் - 3, ப. 205.
8. பாலசுப்பிரமணியன், கு.வெ., 'சங்க இலக்கியத்தில் புறப்பொருள்' ப. 25.
9. இராசமாணிக்கனார், மா., 'பத்துப்பாட்டு ஆராய்ச்சி', பக். 572 - 573.
10. பழனிச்சாமி, செ., 'புறநானூற்றில் தமிழர் பண்பாடு' ப. 107.
11. நாகராஜன், வி., 'குறுந்தொகை மூலமும் உரையும்', ப. 484.
12. தட்சிணாமூர்த்தி, அ., 'ஐங்குறுநூறு மூலமும் உரையும்', ப. 430.
13. விசுவநாதன், அ., 'கலித்தொகை மூலமும் உரையும்', ப. 119.
14. செல்வராஜ், வே., 'நாட்டுப்புறத்தெய்வங்களும், திருவிழாக்களும்', ப. 99.

[redacted] - [redacted]

சங்கப் புறஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்

இயல் - மூன்று

சங்கப் புறஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்

சங்க இலக்கியங்களில் உள்ள பாடல்கள் அகம், புறம் என்னும் இரு பெரும் பாகுபாடுடையன. பண்டைத் தமிழரின் காதல், வீரம் என்னும் பேருணர்வுகளின் அடிப்படையில் இப்பாகுபாடு அமைந்துள்ளது. காதலும், வீரமும் இரு கண்களாக இருந்துள்ளதைப்போல் விருந்தோம்பலும் அவர்களின் தலையாய பண்பாக விளங்கியுள்ளதைப் பல்வேறு புலவர்கள் தம் பாடல் மூலம் அறியமுடிகின்றது.

சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றில் அகப் புறப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வியலின்கண் சங்க இலக்கியப் புறநூல்களில் இடம்பெற்றுள்ள விருந்தோம்பல் பண்பு பண்டைத் தமிழரின் வாழ்வில் எவ்வாறெல்லாம் இருந்துள்ளது என்பது பல்வேறு சங்க இலக்கியச் சான்றாதாரங்களிலிருந்து ஆராய்ந்து கொடுக்கப்பட்டுள்ளது.

> **"புறப்பொருளானது மறம் செய்தலும், அறம் செய்தலும் ஆகும். ஆகலான் அவற்றான் ஆன பயன் பிறருக்குப் புலனாதலின் புறம்"[1]**

என்பர். அறம் செய்தலினால் ஆன பயன் என்பது விருந்தோம்பல் பண்பினைக் குறிப்பிடுகின்றது.

> **"புறத்தில் போரும் போருக்கு அடிப்படையான வீரமும் சிறப்புப் பெற்றாலும் புறம் என்பது வெறும் போரைக் குறிப்பது மட்டுமன்று. அறம், பொருள், இன்பம் என வகுக்கப்பட்ட மூன்றில் அறத்தையும், பொருளையும் விரிவாகத் தன்னுள் ஆட்படுத்திக் கொண்டிருப்பது ஆகும்"[2].**

பொருளைக் கொண்டு விருந்தோம்பும் அறச்செயல் வெளிப்படையாக அமைவதால் விருந்தோம்பல் பண்பு அகத்தில் தோன்றி புறத்தில் முடிகின்றது எனலாம்.

புறம் என்ற இச்சொல்லிற்குப் பல்வேறு 'அகராதிகள்' பல்வேறு சொற்பொருட்களைக் குறிப்பிடுகின்றன.

> **"பக்கம், பின்புறம், வெளியிடம், அன்னியம், முதுகு, புறத்திணை, புறநானூறு, வீரம், புறங்கூறுதல், இறையிலி நிலம், திசை, காலம், உடம்பு, ஊர், மதில்"[3]**

ஆகிய வெவ்வேறு பொருளைக் குறிக்கும் வகையில் இச்சொல் அமைந்துள்ளது.

மணிமேகலை தமிழ்ச்சொல் அகராதி, புறம் என்ற சொல்லுக்கு

> **"சுற்று, பக்கம், பின்புறம், மதில், முதுகு, வீரம், வெளியிடம், வெளிவளம், அன்னியம், புறத்திணை, புறநானூறு, இறையிலி நிலம், மருதநிலத்து ஊர், திசை, காலம், உடல், புறணி"[4]**

போன்ற பொருட்களைச் சுட்டுகின்றது.

> **"புறப்பொருள் பற்றி விரிவாகத் திறனாய்வு நெறியில் முதல் முதலில் எண்ணிய பெருமைக்குரியவராய்ப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தர் தோன்றுகிறார்"[5]**

என்று கு.வெ. பாலசுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார். அ.ச. ஞானசம்பந்தர் புறப்பொருட் பண்புகளுள் பல பண்புகளை அடக்குங்கால் விருந்தோம்பலும் அதனுள் அடங்கி நிற்கின்றது. இப்பண்புடன் தொடர்பு கொண்டதால் ஈதல் பண்பினுள் இறையிலி நிலங்களை வழங்குவதும் ஒரு பண்பாகப் பின்பற்றப்பட்டது.

சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள புற நூல்கள்

சங்கப் பாடல்களைத் தொகையும், பாட்டும் எனப் பாகுபாடு புலவர்கள் பலர் நூற்றுக்கணக்கான பாடல்களை அகமாகவும், புறமாகவும் அமைத்துப் பாடியுள்ளனர்.

எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் (ஆற்றுப்படை நீங்கலாக) இடம் பெற்றுள்ள புறநூல்களான புறநானூறு, பதிற்றுப்பத்து, மதுரைக்காஞ்சி ஆகிய நூல்களிள்கண் காணப்படுகின்ற விருந்தோம்பல் பண்பானது, மக்களின் வாழ்வில் எவ்வாறெல்லாம் பின்னிப்பிணைந்து விளங்கியது என்பதை உணர்த்தும் நோக்குடன் இவ்வியல் அமைக்கப்பட்டுள்ளது.

பெருநில வேந்தர்களின் போர்த்திறன், வெற்றிச்சிறப்புடன் விளங்கும் பான்மை, மறக்குடி மகளிர் மாண்பு போன்றவை பற்றிய வரலாற்றுச் செய்திக் குறிப்புகள் பல ஆங்காங்கே புறநூல்களின்கண் காணப்படுகின்றன.

விருந்தோம்பல்

தமிழரின் தலையாய பண்புகளுள் ஒன்று விருந்தோம்பல் பண்பாகும். தன் வீடு தேடி வரும் புதியவர் எவராயினும் அவருக்கு உண்டி, உறையுள் அளித்து விருந்தோம்புவதில் தமிழருக்கு நிகர் தமிழரே.

"உண்டால் அம்ம, இவ்வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே"

(புறம். 182)

என்று புறநானூற்றுப் பாடல் குறிப்பிடுகின்றது.

தேவர்கள் உண்ணக்கூடிய அமிழ்தமே கிடைத்தாலும் அதனைத் தாம் மட்டும் உண்ணாது தன்னிடம் வரும் விருந்தினருக்குக் கொடுத்து உண்ணக்கூடியவர்கள் தமிழர்கள்.

"உறவினரும் நண்பரும் இன்றிப் புதிதாய் வருபவரை
விருந்தினர் என்று தமிழ் மக்கள் கருதினர்"[6]

என்று செ. பழனிச்சாமி குறிப்பிட்டுள்ளார்.

விருந்தோம்பலும் அறமும்

'வருநர்க்கு வரையா'

(புறம். 10)

'வருவிருந் தயரும்'

(புறம். 42)

'வருநர்க்கு வரையாது'

(புறம். 177)

'வருவிருந்து அயரும் விருப்பினள்'

(புறம்.326)

போன்ற பாடலடிகளின் வழி விருந்தினர் பலர் அவ்வப்போது வருகை புரிந்துள்ளமையை அறிய முடிகின்றது.

மக்களை உயிர் வாழச் செய்வன உணவும், நீரும் ஆகும். உணவையும் நீரையும் மக்கள் அனைவரும் உண்ணச் செய்கின்றவன் மன்னன். அதனால் மன்னனை மக்கள் உயிராக மதித்தனர்

***"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால் யானுயிர் என்பதறிகை
வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே"***

(புறம். 186)

என்பதனை மோசிகீரனாரின் புறப்பாடல் மூலம் அறியமுடிகின்றது.

ஒரு நாட்டின் நீர் வளம் அந்நாட்டின் உணவு வளமாகக் கருதப்படுகின்றது. ஒருநாட்டின் உணவுப் பொருள் பெருக்கத்திற்கு நீர் இன்றியமையாதது. அதனால் மன்னர் ஆங்காங்குக் குளங்களை வெட்டினர்; ஏரிகளை அமைத்தனர்; கல்லணைகளைக் கட்டினர். இதன்

மூலம் அக்கால மன்னர்கள் நீர் வளத்தினைப் பெருக்கினர். நீர் வளத்தைப் பெருக்கினால் அந்நாட்டில் உணவு வளத்தினைப் பெருக்கி விடலாம் என்ற எண்ணமே நீர் வளத்தைப் பெருக்கக் காரணமாய் அமைந்தது.

இவ்வுணவுப் பொருட்களைக் கொண்டு தம்மிடம் வரும் புதியவர்களை (விருந்தினர்களை) அழைத்து விருந்தோம்பினர். நீர் வளம் மிகுந்த நாட்டில் உணவு வளமும் மிகுந்து காணப்பட்டதால் அந்நாட்டு மன்னரும், மக்களும் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர்.

> **"புலவர்கள் அரசாளும் வாய்ப்பைப் பெற்றிலர். ஆனால் மன்னர்கள் புலவர்களாக இருந்தனர். ஆதலின் அறநெறியிற் சென்ற அவர்கள் ஆட்சி எவரும் போற்றும் நிலையில் இருந்தது"[7]**

என்று சி. இலக்குவனார் குறிப்பிட்டுள்ளார்.

> ***"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்***
> ***அடிதழீஇ நிற்கு முலகு"***

(குறள். 544)

எனத் வள்ளுவரும் அரசர்களின் மாண்பினைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசர்கள் அறத்தின் ஆற்றலை நன்கு உணர்த்திருந்தனர்.

'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'

(புறம். 55)

என்பது அக்காலக் கொள்கை.

> ***"அருளும், அன்பும் நீக்கி நீங்கா***
> ***நீரயங் கொள்பவரோ டொன்றாது காவல்***
> ***குழவி கொள்பவரி ஓம்புமதி"***

(புறம்.5)

என்னும் புறப்பாடல் அடிகள் அரசருக்குரிய கடைமையை எடுத்துக் கூறுகிறது. 'பெற்ற தாய் குழந்தையைப் பேணுவதுபோல் நின் நாட்டைப்

அரசன் பேணிக் காத்து வரவேண்டும். நாட்டு அரசனாவது எளிதில் வாய்ப்பதன்று. எனவே, அருளோடு காவல் நடத்த வேண்டும்' என்று நரிவெரூஉத்தலையார், சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரலிரும் பொறைக்கு அறிவுத்துகின்றார்.

அரசர்கள் குடிமக்களால் இகழப்படுதலைக் கொடிய துன்பமாகவும், புலவர்களால் புகழ்ந்து பாடப்படுதலைப் பெரிய பரிசாகவும் கருதி நாட்டைப் பகைவர்களிடமிருந்து காத்து நல்லாட்சிச் செய்தனர்.

> **"புறப்பொருளிலோ நடவாத ஒன்றைப் பாடுவதிற்கில்லை. நடந்த ஒன்றையும் அளவு மிகுத்துச் சொல்லும் நெறி சங்க காலத்தில் இல்லை. வாழ்வில் நிகழ்ந்தவற்றையே உணர்ச்சி உந்த புலவர்கள் புறப்பாடல்களாகப் பாடினர் என்பார் இராம. பெரிய கருப்பன்"[8]**

என்று கு. வெ. பாலசுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.

புலவர்கள் வறுமையில் வாடியபோது அவர்களை அன்புடன் அழைத்து விருந்தோம்பி பொன், பொருட்களைக் கொடுத்து அனுப்பியதால் புலவர்கள் அரசர்களைப் பற்றியும் அவர்கள் கொடுத்த விருந்தினைப் பற்றியும் உணர்ச்சி உந்த புறப்பாடல்களாகப் பாடியுள்ளனர்.

விருந்தோம்பல் செய்ததன் மூலம் அரசர்களின் கொடைத் தன்மை இன்றைக்கும் புகழும்படியாக உள்ளது. ஈகை அறத்தில் அரசர்கள் தலை சிறந்தவர்களாக விளங்கினர்.

'வறியார்க்கொன்று ஈவதே ஈகை'

(குறள்.221)

எனத் வள்ளுவர் ஈகைக்கு விளக்கம் தருகிறார். பொருள் இல்லாதவர்க்கும் வறுமையால் வாடுவோருக்கும் பொருள் வழங்கி அவர்தம் வறுமைத் துன்பத்தைப் போக்குவதை ஈடு இணையற்ற அறமாகக் கருதினர் பண்டைத் தமிழர்.

சங்ககாலத்தில் வறுமையுற்றோருக்கு வரையாது வழங்கி அவர்களை வாழவைத்த வள்ளல்களையே புலவர்கள் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

பாதீடு

போருக்குச் சென்ற அரசன் வேற்றுநாட்டிலிருந்து கொண்டு வந்த பொருட்களைப் பகிர்ந்து கொடுத்தான்.

போரில் வெற்றி பெறுவதற்குக் காரணமாய் இருந்த ஒற்றர்களுக்கும், தூதுவர்களுக்கும், கொண்டுவந்த பொருட்களைப் பகிர்ந்தளித்தான். இதனைப் 'பாதீடு' என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

"நோயின்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்
தந்துநிரை பாதீடு உண்டாட்டுக் கொடையென"

(தொல். புறத்திணையியல் 20 : 1004)

என்னும் நூற்பாவில் தற்காலத்தில் பங்கீடு என்பதை அக்காலத்திலேயே பாதீடு என்ற துறையாகத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

பாதீடு என்பது வெட்சி மறவர்கள் பகைப்புலத்தில் இருந்து தாம் கவர்ந்து வந்த பசுக்களைத் தம் பணிக்கு உதவிய ஒற்றர் முதலிய யாவருக்கும் பகிர்ந்து கொடுத்தலே ஆகும். பகுத்துக் கொடுத்த பொருட்களை வைத்து விருந்தோம்பலை மேற்கொண்டனர்.

அக்கால மன்னர்கள் பொருளுக்காகப் போர் புரிந்தனர். பொருள் ஈட்டுவதற்காக தலைவன் வினையை மேற்கொண்டுள்ளனர் என்ற கருத்துகள் தெரியவருகின்றன. பொருள் ஈட்டுவதன் நோக்கம் தம்மைக் காத்தலோடு தம்மிடம் வரும் விருந்தினரைப் பேணிக் காத்தலுமேயாம்.

முன்னோர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தாம் என்று சொல்லப்பட்ட ஐந்து வழியிலும் அறம் வழுவாது செயல்படுவது இல்லத்தாருடைய தலையாய கடமையாகும். இதனை,

"தென்புலத்தார் தெய்வம்விருந்து ஒக்கல்தான் என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

(குறள். 43)

என்கின்றது குறள். வினையின் காரணமாகக் கொண்டுவந்த பொருட்களைத் தான், சுற்றம், தேடிவரும் விருந்து, தெய்வம், தென்புலம் ஆகிய ஐந்து நிலைகளில் பிரித்துத் தரப்படும் நிலையையும் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

'இழைத்து ஒண்பொருள் முடியவும் பிரிவே'

(தொல். 30)

எனத் தலைவன் பிரிவுக்குக் காரணத்தைக் கூறுகின்றார் தொல்காப்பியர். ஒள்ளிய பொருளை ஈட்டும் பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். பொருளுக்காக வினை முடித்து மீண்ட தலைமகன் விருந்தினருடன் நற்செயல்களைச் சிறப்பித்துக் கூறும் விருப்பத்தின்கண் செயல்படுவான் என்று ஆண்மகனுக்குரிய முக்கிய செயல்களுள் ஒன்றாக விருந்தோம்பல் பண்பினை பற்றிக் குறிப்பிடுகின்றார்.

"தலைமகனின் பெரும் பொறுப்பிற்கு உரியதாக இருந்த விருந்தோம்பல் போன்றன படிப்படியாக ஆடவருடன் இருந்து செய்யப்படும் சமுதாயப் பணிகளாக மாறிப் பின்னர் ஆடவர்க் குரியனவாக மாறி இருக்கவேண்டும் என உய்த்துணர முடிகிறது"[9]

என்று கு. மோகனராசு குறிப்பிடுகின்றார்.

வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருளைத் தேடும் முயற்சி சங்க இலக்கியங்களில் பெரிதும் காணப்படுகின்றது.

"வினையே யாடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க் காடவ ருயிரென
நமக்குரைத் தோரும் தாமே
அழாஅ றோழி யழுங்குவர் செலவே"

(குறுந். 135)

என்ற பாடல் பொருள்வயிற் பிரிதலை உணர்த்துகின்றது.

பாலைப் பெருவழிகளைத் தாண்டி நெடுந்தொலைவு சென்று பொருள் தேடும் ஆடவரையும் அவர் வரும்வரை ஆற்றியிருக்கும் மகளிரையும் பற்றிக் குறுந்தொகையின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

"முதைப் புனங் கொன்றை ஆர்கலி உழவர்
விதைக்குறு வட்டிப் போதொடு பொதுளப்
பொழுதோ தான் வந்தன்றே கான்று
ஊதுலைப் பெய்த பகுவாய்த் தெண்மணி
மரம்பயில் இறும்பி னார்ப்பச் சுரனிழிவு
மாலை நனி விருந்து அயர் மார்
தேர்வரு மென்னு முரைவா ராதே"

(குறுந். 155)

என்னும் குறுந்தொகைப் பாடலின் மூலம் மாலைக் காலத்தில் பெரு விருந்து நுகரும் பொருட்டு வரும் தலைவனைக் குறித்து அறியலாம். மாலைக் காலத்து விருந்துண்ண வரும் தலைவனைச் சுமந்து தேரும் வருகின்றதென்பதையும் பழந்தமிழ் மக்களின் இல்லச் சிறப்பையும் வினைமேற் சென்றவர்களுக்கு மாலை நேரங்களில் உணவு படைப்பது வழக்கமாக இருந்தது என்பதனையும் அறிய முடிகின்றது.

மடைத்தொழில் (உணவு சமைப்பவர்)

அக்கால அரசர்கள் விருந்தினருக்குச் சமைப்பதற்காகவே அட்டில் சாலைகளையும் சமையல் தொழில் புரிபவர்களையும் வைத்திருந்தனர். உணவு சமைக்கும் பகுதியை அட்டில் என்பர்.

'ஊன் துவை கறிசோறு'

(புறம். 14)

இத்தகைய அட்டிலில் சமைத்தும் உண்டனர். கோல்களில் கோத்து

இறைச்சியைச் சுட்டு உண்டனர் என்ற செய்திகளை புறப்பாடல்களின் வழி அறிய இயலுகின்றது.

புளிக்கூழ் முதலியன சமைத்து உண்டனர்; 'கள்' முதலிய பானங்களைத் தயாரித்துப் பருகினர். சங்க கால மக்கள் பலவகைப்பட்ட உணவு வகைகளைச் சமைத்து உண்டனர் என அறிய முடிகின்றது. சமைக்கும் கலனை, **'அடுகலன்'**, (புறம். 32-17) என்றும் சமைக்கின்ற பெண்ணை **'அடுமகள்'** (புறம். 399) என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

அக்கால அரசர்கள் விருந்தோம்புவதற்காக அறச்சாலைகளை வைத்திருந்தனர். இத்தகைய அறச்சாலைகளில் மடைத்தொழிலாளர்கள் இருந்தனர். இம்மை வாழ்விற்கு ஏதுவாகிய புகழ்பெற்ற சொல் எங்கும் பரவி விளங்கவும், மறுமை வாழ்விற்கு ஏதுவாகிய அறம் நிலைபெற்று விளங்கவும், அறச்சாலைகளில் வடித்த சோறின் கஞ்சியானது ஆறு போலப் பரந்து சென்றது என்பதை,

புகழ் நிலைஇய மொழி வளர
அறம் நிலைஇய அகன் அட்டில்
சோறு வாக்கிய கொழுங் கஞ்சி
யாறு போலப் பரந்து ஒழுகி,

(பட்டின. 44 - 46)

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. அறச்சாலைகளில் உண்ணுவோரின் ஆரவாரம் மிகுந்து இருந்தது. இதனை,

"கொடைக்கடன் ஏன்ற கோடா நெஞ்சின்
உதியன் அட்டில்போல ஒலி எழுந்து"

(அகம். 168)

என்ற பாடல் அடிகள் மூலம் அறியமுடிகின்றது.

ஊன் உணவு பெரிதும் விரும்பி உண்ணப்பட்டது. சங்க கால விருந்தில் ஊன் உணவு சிறப்பிடம் பெற்றுள்ளதைப் புறப்பாட்டின் மூலம் அறியமுடிகின்றது.

ஊன் உணவு ஆக்கும் தொழில் புரிந்தோன் **'வல்ல மடையன்'** (சிறந்த சமையற்காரன்) எனப்பட்டான்.

"எமர்க்கும், பிறர்க்கும், யாவர் ஆயினும்,
பரிசில் மாக்கள் வல்லார் ஆயினும்,
கொடைக் கூன் அமர்ந்த கோட நெஞ்சினன்

(பதிற்று. 2 ஆம் பத்து, 20 : 21 – 23)

என்ற பாடலில், 'நம்மவரென்றும், பிறரென்றும் பாராமல் ஈயும் ஒரு பாற் கோடாத நெஞ்சினையுடையவன்; குளிர்ந்த இயல்புடைய மேகம் போன்று தன்னைச் சார்ந்தவர் வயிறு பசிக்கும்படி ஈயாமல் இருக்க மாட்டான் என்று இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் விருந்தோம்பல் கொடையைப் பற்றிப் பதிற்றுப்பத்தில் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

சேரமான் குட்டுவன் கோதை என்ற அரசன் தன்னை நாடி வந்த இரவலர்களுக்கு இவ்வளவுதான் கொடுக்க வேண்டும் என்று எண்ணாமல் மிகுத்துக் கொடுக்கும் தன்மையை உடையவன் என்பது,

"இரவலர்க்கு எண்மை யல்லது புரவு எதிர்ந்து
வானம் நாண, வரையாது, சென்றோர்க்கு
ஆனாது ஈயும் கவிகை வண்மைக்
கடுமான் கோதை"

(புறம். 54)

என்ற புறப்பாடல் மூலம் தெரிய வருகின்றது.

வறுமை கொண்ட புலவர்கள் அரசனிடம் செல்ல அரசர்கள் புலவர்களுக்கு வானம் நாணும் அளவிற்குப் பொருட்களை வாரி வழங்கி ஆதரித்தனர்.

அளவு மிகுத்து அளித்தல்

அரசர்களும் மக்களும், அக்காலப் புலவர்களையும், கலைஞர்களையும் ஆதரிப்பதில் மிகுதியான அக்கறை காட்டியுள்ளனர்.

குறிப்பிட்ட அரசனையோ, குறுநில மன்னனையோ காணச் செல்லும்போது வழியில் உள்ள ஊர்களில் (குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல், பாலை) வாழும் மக்களால் வழிப்போக்கர்களான இவர்கள் ஆதரிக்கப்பட்டுள்ளனர்.

நானிலத்தில் வாழக்கூடிய மக்கள் தங்களால் முடிந்த அளவில் தம்மிடம் வரும் கலைஞர்களை ஆதரித்துள்ளதைப் புறப்பாடல் வழியே அறியமுடிகின்றது.

'பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்' என்ற அரசனைப்பற்றி மாமூலனார் பாடியுள்ளார். வள்ளல் தன்மையில் உயர்ந்தவனாக விளங்கியுள்ளான் அம்மன்னன்.

> **"கி.பி. 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெருஞ்சோற்று உதியன் சேரலாதனும் கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த சேரனும் ஒருவரே எனக் கொண்டு சிலர் வரலாற்றைக் குழப்பியுள்ளனர். புறநானூறு 2, 3வது பாடல் பெருஞ்சோற்று உதியன் சேரலாதனையும், அகநானூறு 65, 168, 233 ஆகிய பாடல்கள் குறிப்பிடும் உதியன் சேரலாதனும் ஒருவனே எனக் கொண்டால் குழப்பத்திற்கு இடம் இல்லை என்று சு. இரத்தினசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்"[10]**

என்று அ. ஜம்புலிங்கம் குறிப்பிடுகின்றார். இவ்வரலாற்றுச் சிக்கலுக்கு ஆளாகியுள்ள இப்பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் பாரதப் போரில் பெருஞ்சோறு அளித்துச் சமூகப்பணி ஆற்றினான் என்பதனை அறியமுடிகின்றது.

> **"விருந்து வரவில்லை என்றால் அதற்கென வருந்தி விருந்தினரைத் தேடித் தேரில் அழைத்து வந்து உண்பித்த அரசரும் அக்காலத்தில் இருந்தனர்"[11]**

என்று லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் மன்னனது விருந்தோம்பலைக் குறிப்பிடுகின்றார்.அக்கால அரசர் விருந்தோம்பல் செய்வதில் பெரிதும்

விருப்பமும் ஆர்வமும் கொண்டவர்களாக இருந்துள்ளமையை அறிய முடிகின்றது.

புலவனின் வறுமையைப் போக்கவேண்டும் என்று கூறும் புறப்பாடலை இங்குக் காணலாம்.

"வான்தோய் நீள்குடை, வயமான் சென்னி!
சான்றோர் இருந்த அவையத்து உற்றோன்,
'ஆசு ஆகு' என்னும் பூசல் போல,
வல்லே களைமதி அத்தை - உள்ளிய
விருந்து கண்டு ஒளிக்கும் திருந்தா வாழ்க்கை
பொறிப் புணர் உடம்பில் தோன்றி என்
அறிவு கெட நின்ற நல்கூர்மையே"

(புறம். 266)

என்ற பாடலில் விருந்தோம்ப இயலா நிலையில் வருந்தும் புலவனைக் குறித்து அறிய முடிகின்றது. 'என்னை நாடிவரும் விருந்தினரைக் கண்டும் நான் அவர்களுக்கு விருந்தளிக்கும் நிலையில் இல்லாமையால், நான் பயனற்ற இல்வாழ்க்கை உடையவனாய் உள்ளேன்; என்னைக் கருதிவரும் விருந்தினரைக் கண்டும் அவர்களுக்கு விருந்தளிக்க இயலாமையால் அவர்கள் கண்களில் படாமல் ஒளிந்துகொள்ளும் பயனற்ற இல்வாழ்க்கை என்னிடம் பொருந்தும்படி வறுமை நிலைபெற்றுள்ளது; இக்கொடிய வறுமையை நீக்கி அருள்வாயாக' என்று புலவர் மன்னனைப் பார்த்து வேண்டுவதாக இப்புறப்பாடல் அமைந்துள்ளது.

"குப்பைக் கீரை கொய்கண் அகைத்த
முற்றா இளந்தளிர் கொய்து கொண்டுஉப்புஇன்று
நீருலையாக வேற்றி மோரின்
றவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து"

(புறம். 159)

என்னும் புறப்பாடல், குப்பைக் கீரையை உப்பு இல்லாமல் வேக வைத்து உண்ணும் நிலையில் புலவர்கள் வறுமையில் வாடியுள்ளனர் என்பதனைத் தெரிவிக்கின்றது. இத்தகைய வறுமை நிலையிலும் விருந்தோம்பலில் நாட்டம் கொண்டுவராகத் திகழ்ந்தனர்.

பதிற்றுப்பத்தும் விருந்தோம்பலும்

எட்டுத்தொகை நூல்களில் நான்காவதாக அமைந்த நூல் பதிற்றுப்பத்து ஆகும்.

இந்நூல் பத்துச் சேரமன்னர்களைக் குறித்து ஒவ்வொரு மன்னருக்கும் பத்துப் பாடல்கள் வீதமாகப் பத்துப் புலவர் பெருமக்களால் பாடப்பெற்ற நூறு செய்யுள்கள் அடங்கிய நூல். ஆதலால் பதிற்றுப்பத்து என்னும் பெயர்பெற்றது. இதில் முதல் பத்தும் இறுதிப்பத்தும் கிடைக்கவில்லை. எஞ்சியுள்ள எண்பது பாடல்களுள் பெரும்பான்மையான பாடல்கள் அரசனின் விருந்தோம்பல் பண்பினைக் கூறுவதாக அமைந்துள்ளன.

> **"சங்க காலச் சேர மன்னர்கள் செங்கோன்மை, கொடைத்திறன், படைப்பெருமை, வீரமிகுதி முதலியவற்றை மட்டுமின்றி சங்ககாலச் சேரமக்களின் வாழ்க்கைமுறை ஆடல் மற்றும் இசைக் கலைஞர்களாகிய கூத்தர், பாணர், பொருநர், விறலியர் முதலியவர் பற்றிய செய்திகளையும் கூறுவதால் சிறந்த நூலாக இந்நூல் விளங்குகிறது"**[12]

என்று முனைவர் அ. ஆலீஸ் தனது முன்னுரைப் பகுதியில் குறிப்பிட்டுள்ளார். சேரர்கள் ஆட்சியில் ஆதரிக்கப்பட்ட புலவர்கள் தாங்கள் அனுபவித்த விருந்து கொடை முதலியவற்றினைத் தம் பாடலில் பாடியுள்ளனர்.

இமயவரம்பன் சேரலாதனின் விருந்தோம்பல்

"தொல்பசி உழந்த பழங்கண் வீழ
எஃகு போழ்ந்து அறுத்த வால் நிணக் கொழுங்குறை
மைஊன் பெய்த வெண்ணெல் வெண்சோறு
நனை அமை கள்ளின் தேறலொடு மாந்தி
நீர்ப்படு பருந்தின் இளஞ்சிறகு அன்ன
நிலம்தின் சிதாஅர் களைந்த பின்றை.
நூலாக் கலிங்கம் வால் அரைக் கொளீஇ
வணர் இருங் கதுப்பின் வாங்கு அமைமென்தோள்
வசை இல் மகளிர் வயங்கு இழை அணிய
அமர்பு மெய் ஆர்த்த சுற்றமொடு
நுகர்தற்கு இனிது நின் பெருங்கலி மகிழ்வே"

(பதிற்று. 2ஆம் பத்து, 12 : 15 – 25)

எனும் பதிற்றுப் பத்துப் பாடலானது, இமயவரம்பனின் விருந்தோம்பலினைச் சிறப்பிக்கின்றது. 'நீண்ட நாட்களாகப் பசியால் வருந்திய துன்பம் உடைய புலவர் சுற்றத்தினைப் பார்த்து அரசன் முதலில் அவர்களுக்கு உணவளித்துப் பசித்துன்பத்தினைப் போக்கினான். இரவலர்களுக்கு அரிவாளால் பிளந்து அறுத்த வெள்ளிய நிணத்தோடு கூடிய கொழுவிய துண்டாகிய ஆட்டின் இறைச்சி கலந்து சமைக்கப்பட்ட வெண்ணெல் அரிசியால் ஆன வெண்சோற்றைக் கொடுத்தான். சோறானது பூக்களின் அரும்புகள் போல இருந்தன. உணவோடு கள்ளையும் சேர்த்துத் தந்தான். அவர்களின் ஆடையானது மழையில் நனைந்த பருந்தின் சிறகு போல இருந்தது. மண்ணால் அரிக்கப்பட்ட கந்தையாகவும் இருந்தது. விருந்துணவு உண்டபின் கந்தல் ஆடையைக் களைந்து பட்டாடை அணியுமாறு அளித்தான்' என்று சேரமன்னனது விருந்தோம்பும் பண்பினைக் கூறுவதாக அமைந்துள்ளது. இப்பாடல் விறலிக்கு ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்து கொள்ளக் கொடுத்தான். இங்ஙனம் நெடுஞ்சேரலாதனின் விருந்தின் சிறப்பினைப்

குமட்டூர்க் கண்ணனார் சிறப்பாகப் பாடியுள்ளார்.

"உண்மின் கள்ளே அடுமின் சோறே
ஏறிகதிற்றி ஏற்றுமின் புழுக்கே
வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிர்ப்ப
இருள்வணர் ஒலிவரும் புரிஅவிழ் ஐம்பால்
ஏந்து கோட்டு அல்குல் முகிழ்நகை, மடவரல்
கூந்தல் விறலியர் வழங்குக அடுப்பே
பெற்றது உதவுமின் தப்பு இன்று பின்னும்
மன்உயிர் அழிய யாண்டு பல துளக்கி
மண்ணுடை ஞாலம் புரவு எதிர்கொண்ட
தண்இயல் எழிலி தலையாது மாறி
மாரி பொய்க்குவது ஆயினும்
சேரலாதன் பொய்யலன் நசையே"

(பதிற்று. 2ஆம் பத்து, 18 : 1 – 12)

என்னும் பிறிதொரு பாடலில், சேரலாதனிடம் பரிசில் பெற்றுக்கொண்டு வந்த பாணன் ஒருவன் தன் உடன் இருப்பவரைப் பார்த்துச் சொல்லுகின்றான். தன்னிடம் வருகின்ற மக்களுக்கு இல்லை என்று கூறாது அவர்களுக்கு உணவளிக்கும் விதத்தினைப் புலவர் குறிப்பிட்டுள்ளார். அவனது விருந்தளிக்கும் கொடைச் சிறப்பினை இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது.

புலவர்களைப் பார்த்து நீர் கள்ளினைப் பருகுங்கள்; சோற்றினைச் சமையுங்ஒகள்; தின்னுதற்குரிய இறைச்சியை அறுப்பீர்களாக; புழுக்குதற்குரிய பிற பருப்பு வகைகளை அடுப்பிலே ஏற்றுங்கள் என்றெல்லாம் கூறுகிறான் மன்னன்.

இப்பாடலின் மூலம் சேரலாதனின் விருந்தின் (கொடையின்) இயல்பினைப் பற்றி அறியலாம். தன்னிடம் வந்த விருந்தினருக்கு இல்லை என்னாது அவர்களைக் கண்டவுடன் அவர்களுக்குக்

குடிப்பதற்குக் கள்ளும், உணவும், இறைச்சியும் சமைத்து வழங்கிய விதத்தினை இப்பாடல் சிறப்பிக்கின்றது.

மன்னனின் கொடுக்கும் குணம்

"எமர்க்கும் பிறர்க்கும் யாவர் ஆயினும்
பரிசில் மாக்கள் வல்லார் ஆயினும்
கொடைக் கடன் அமர்ந்த கோடா நெஞ்சினன்
மண்உயிர் அழிய யாண்டு பல மாறி
தண்இயல் எழிலி தலையாது ஆயினும்
வயிறு பசி கூர ஈயலன்
வயிறு மாசு இலீயர் அவன் ஈன்ற தாயே"

(பதிற்று. 2ஆம் பத்து 20 : 20 – 27)

என்னும் பாடல் வழி அனைவருக்கும் பரிசில் நல்கும் தன்மை அறியப்படுகின்றது. பாடலடியிலிருந்து, பாணர், கூத்தர், பொருநர் போன்றவர்களுக்கும் இவர்களன்றித் தம்பால் பரிசு பெறவரும் வேறு யாவராயினும் பரிசில் பெறுவதற்குரிய தகுதியுடைய எவ்விதக் கலைகளிலும் வல்லவராக இல்லாமல் இருந்தாலும், கொடுத்தலாகிய கடமையை நோக்கி இல்லை என்னாது தம்மிடம் வருபவர்களுக்கு வாரி வழங்கும் கொடைத்தன்மை உடையவர் பண்டைய மன்னர் என்பதனை உணரலாம்.

கொடை செய்வது மன்னனது கடமையாகும். பல ஆண்டுகளாக வானும் பொய்த்து விளைச்சலும் இன்றி வறட்சியாகக் காணப்பட்டாலும் தன்னிடம் வரும் இரவலர்களுக்கு வயிற்றின் பசியினைப் போக்குவதற்குக் குறைவாகக் கொடுக்கமாட்டான் மன்னன். அவர்கள் வேண்டும் அளவிற்கு மிகுத்துக் கொடுக்கும் உள்ளம் கொண்டவன்.

பாலைக் கௌதமனார் குறிப்பிடும் விருந்தோம்பல்

"வருநர் வரையார் வார வேண்டி
விருந்து கண்மாறாது உணிஇய பாசவர்
ஊனத்து அழித்த வால் நிணக் கொழுங் குறை
குய் இடுதோறும் ஆனாது ஆர்ப்பக்
கடல் ஒலிகொண்டு செழு நகர் நடுவண்
அருமை எழுந்த அடு நெய் அவுதி"

(பதிற்று. 3ஆம் பத்து, 21 : 8 – 13)

என்னும் பாடல், தன்னிடம் வரும் சுற்றத்தாரை இங்கு விருந்தினர் எனக் குறிப்பிடுகின்றது. தன்னிடம் வரும் விருந்தினர் வேற்று இடம் செல்லாதவாறு அவர்களுக்கு உணவையும் இறைச்சியையும் கொடுத்து விருந்தளித்த செய்தியும் புலனாகின்றது.

ஆட்டு வணிகர் இறைச்சியைக் கட்டையின் மீது வைத்துக் கொத்திய வெள்ளிய நிணத்தோடு கூடிய அளவு மிகுந்த இறைச்சியைத் தாளிதம் செய்யும்போது எழும் ஓசையானது கடல் ஓசைபோல ஓயாமல் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இறைச்சியைத் தாளிதம் செய்யும்போது எழும் புகையானது ஆவுதியின் புகை என்று குறிப்பிடப்படுகிறது. இப்பாடலில் வரும் அடுநெய்யாவுதி என்பது அடிசில் நெய்யாகிய ஆவுதி ஆகும்.

"தெய்வங்களுக்கு விருந்தளிப்பது வேதவேள்வி,
மனிதனுக்கு விருந்தளிப்பது மானுட வேள்வி"[13]

என்று சாமி சிதம்பரனார் குறிப்பிடுவதிலிருந்து 'விருந்து' என்பது அக்காலத்தில் ஒரு வேள்விச் சடங்காகவும் இருந்துள்ளது என்பதனை அறிய முடிகின்றது.

இதனையே,

"விருந்து புறந்தருதலையும் ஒரு வேள்வியாக்கி அடுநெய்யை ஆவுதி என்றார். அடுநெய் ஆவுதி என்பது ஆவுதிப் புகையைக் குறிக்கும்"[14]

என்று முனைவர் அ. ஆலிஸ் குறிப்பிடுகின்றார்.

"வேற்றுப்பொருள் வெஃகாது
மைஇல் அறிவினர் செவ்விதின் நடந்துதம்
அமர்துணைப் பிரியாது, பாத்து உண்டு மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணி இன்று கழிய
ஊழி உய்த்த உரவோர் உம்பல்"

(பதிற்று. 3 ஆம் பத்து, 22 : 6 – 11)

என்னும் பாடல் மூலம், தம்மிடம் வரும் விருந்தினரைப் பேணிக் காப்பதற்காக அவர்கள் கொண்டு வந்த பொருளானது செந்நெறியில் கொண்டு வந்த பொருளாக உள்ளதை அறிய முடிகின்றது. தன் மனைவியைப் பிரியாது செந்நெறியில் கொண்டுவந்த பொருளினால் விருந்தினரைப் பேணிக் காப்பதாலும் தானும் வாழ்வதாலும் என்றைக்கும் முதுமையும் நோயும் இல்லாமல் நல்ல உடல் நலத்துடன் நெடுநாள் வாழும் வகையில் ஆட்சி செய்துள்ளான் மன்னன். அவன் மட்டுமல்லாது அவன் முன்னோர்களும் அவ்வாறே விளங்கினர் என்பதனையும் இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது.

"வயிரிய மாக்கள் கடும்பசி நீங்க
பொன்செய் புனைஇழை ஒலிப்ப, பெரிது உவந்து
நெஞ்சு மலி உவகையர் உண்டு மலிந்து ஆட
சிறு மகிழானும் பெருங் கலம் வீசும்
போர் அரு தானைப் பொலந்தார்க் குட்டுவ"

(பதிற்று. 3 ஆம் பத்து, 23 : வரி 1–10)

என்னும் மற்றுமொரு பாடலின் மூலம், அக்காலப் புலவர்கள் அரசர்களைக் காண்பதற்கு முன் கொடிய பசியுடன் இருந்துள்ளனர் என்பதனை

உணரமுடிகின்றது. கொடிய பசியுடன் இருந்த புலவர்களின் பசியினைத் தங்களின் விருந்தோம்பலால் நீக்கினர் அரசர் என்பது தெரிய வருகின்றது. பசி நீங்கிய பின்னர் அவர்களுக்கு அளவுக்கு மிகுந்த பொன் பொருட்கள் அணிகலன்கள் கொடுக்கப்படுகின்றன. இதனுடன் கள்ளுண்டு மகிழ்ச்சியாகவும் ஆடுகின்றனர். இதனை 'நெஞ்சு மலி உவகையர் உண்டு' என்கின்றார் புலவர். மலிந்து என்பது கடும் பசியில் உழன்ற துயரம். தன் பசி தீர்ந்ததும் பரிசுப் பொருட்களைக்கொண்டு கள்ளுண்டு ஆடிப்பாடி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர் புலவர்கள்.

மன்னவன் விருந்து கொடுக்கும் பெருமை

> ***"உண்மரும், தின்மரும், வரைகோள்அறியாது***
> ***குரைத்தொடி மழுகிய உலக்கை வயின்தோறு***
> ***அடைச் சேம்பு எழுந்த ஆடுறும் மடாவின்***
> ***எஃகு உறச் சிவந்த ஊனத்து யாவரும்***
> ***கண்டு மதி மருளும்"***

(பதிற்று. 3ஆம் பத்து, 24 : 18 – 22)

என்னும் பாடலடிகள், உண்போரும் தின்போருமாய் இருக்கின்ற அவர்களின் எண்ணிக்கை அறியமுடியாத அளவையுடையது என்பதைப் புலப்படுத்துகின்றன. வருவார்க்கெல்லாம் சோறு இடுதல் பொருட்டு, வேண்டிய நெல்லை குத்துவதால் தொடி மழுங்கியது உலக்கை. இம்மழுங்கிய உலக்கையினைக் கொண்டு, அட்டிற் சாலையில் இடங்கள்தோறும் அரிசி குத்தப்படுகின்றது. மடாவில் சமையல் செய்யப்படுகின்றது. அரிவாளால் வெட்டப்பட்டு இரத்தத்தால் சிவந்த இறைச்சியுடன் காண்கின்றவர் யாவரும் கண்டு வியக்கும் அளவிற்கு குறையாத உணவினை மாறாது சேர மன்னன் வழங்குவதாகக் கூறகின்றது இப்பாடல்.

தன்னிடம் வரும் விருந்தினர்களுக்குச் சமைக்கக் கைக்குத்தல் அரிசியைப் பயன்படுத்தினர் என்பது தெரிய வருகின்றது. சமைக்கும் இடமானது பெரியதாக இருந்தது. இறைச்சி உணவே பெரும்பாலும் விரும்பி அளிக்கப்பட்டது.

இறைச்சி உணவானது அரிவாளால் கொத்தப்பட்டு இரத்தத்தால் சிவந்து தோன்றும். இவ்விறைச்சி உணவினை உண்ண வருபவரின் கூட்டம் யாவரும் கண்டு வியக்கும் வண்ணம் இருந்தது. உணவினை உண்பவரின் எண்ணிக்கையானது அளவு இல்லாமல் இருந்தது என்று குறிப்பிடப்படுகின்றது.

படை வீரர்களுக்குக் 'கள்' அளித்தல்

தாம் வாங்கும் கள்ளுக்கு விலையாக ஆமானின் இறைச்சியையும், யானையின் தந்தத்தினையும் வேட்டுவர் கொடுக்கின்றனர் என்னும் கருத்தானது,

> ***"காந்தள்அம் கண்ணிக் கொலை வில் வேட்டுவர்***
> ***செங்கோட்டு ஆமான் ஊனொடு காட்ட***
> ***மதனுடை வேழத்து வெண் கோடு கொண்டு***
> ***பொன்னுடை நியமத்துப் பிழி நொடை கொடுக்கும்***
> ***குன்று தலை மணந்த புன்புல வைப்பு"***

(பதிற்று. 3ஆம் பத்து, 30 : 9 – 13)

என்ற பாடலடிகளால் தெரிய வருகின்றது. போர் சென்ற மன்னன் தன் படைவீரர்களுக்கு ஊக்கமளித்தல் பொருட்டு அவர்களுக்குப் பெருவிருந்தளித்தான்.

சங்க கால மக்களின் விருந்துணவில் கள் வாங்குவதற்காக ஆமானின் இறைச்சி, யானைத் தந்தம் முதலியவற்றைப் பண்டமாற்று முறையில் கொடுத்துள்ளனர். விருந்தினர்களுக்குக் கள்ளையும்

இறைச்சியையும் கொடுப்பதைப் பெருமையாக நினைக்கின்றனர்.

காப்பியாற்றுக் காப்பியனார் குறிப்பிடும் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரலின் விருந்தோம்பல்

"இனியவை பெறினே தனிதனி நுகர்கேம்
தருக என விழையாத் தாஇல் நெஞ்சத்து
பகுத்தூண் தொகுத்த ஆண்மை
பிறர்க்கு என வாழ்தி நீ ஆகன்மாறே"

(பதிற்று. 3ஆம் பத்து, 38 : 13 – 16)

என்னும் காப்பியாற்றுக் காப்பியனாரின் பாடல், தம்மிடம் வரும் இரவலர்களுக்குப் உணவினைப் பகுத்துக் கொடுத்ததும், அவ்வாறு உண்ணும் உணவு சிறப்புடையதாகவும் கருதப்படும் நிகழ்வுகளையும் குறிக்கின்றது. பகுத்துக் கொடுத்து உண்ணும் சிறப்பானது அரசனின் ஈகைச் சிறப்பினை வெளிப்படுத்துகின்றது.

காலையில் கள் விருந்து

"புன்கால் உன்னம் சாய தெண்கண்
வறிது கூட்டு அரியல் இரவலர்த் தடுப்ப
தான்தர உண்ட நனை நறவு மகிழ்ந்து
நீர் இமிழ் சிலம்பின் நேரியோனே"

(பதிற்று. 3ஆம் பத்து, 40 : 17 – 20)

என்னும் பாடலடிகளின் மூலம் தம்மிடம் வரும் இரவலர்களுக்குக் காலைவேளையில் 'கள்' வழங்கப்பட்டுள்ளமையை அறியமுடிகின்றது. காலைப்பொழுதிலேயே அரசர்களும் புலவர்களும் கள் அருந்தியுள்ளனர் என்ற குறிப்பை இப்பாடல் வழங்குகின்றது.

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனின் விருந்தோம்பல்

வெற்றியினைப் பெற்ற அரசன் தனது வீரர்களுக்கு ஊன்துவை அடிசில் உணவினை விருந்தாகக் கொடுத்தான் என்பதனை,

"குண்டு கண் அகழிய மதில் பல கடந்து
பண்டும் பண்டும் தாம் உள் அழித்து உண்ட
நாடு கெழு தாயத்து நனந் தலை அருப்பத்துக்
கதவம் காக்கும் கணை எழு அன்ன
நிலம் பெறு திணி தோள் உயர ஓச்சி
பிணம் பிறங்கு அழுவத்து, துணங்கை ஆடி
சோறு வேறு என்னா ஊன்துவை அடிசில்
ஓடாப் பீடர் உள்வழி இறுத்து"

(பதிற்று. 4ஆம் பத்து, 45 : 7 – 14)

என்னும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன. பகைவர் கடத்துதற்குரிய ஆழ்ந்த அகழி சூழ்ந்த புறமதில் முதலாக உள்மதில்கள் பலவற்றையும் கடந்து அரணினுள்ளே சென்று அழித்து, மதிலகத்துள்ளிருந்து சமைத்து உண்டனர்; அகன்ற இடத்தையுடைய அரண்களின் கதவுகளைக் காக்கும் கணைய மரத்தைப் போன்ற பகைவர் நிலத்தை பெறுவதற்குக் காரணமான திணிந்த கைகளைக் கொண்டு, வெற்றி பெற்ற வீரர்களும், மன்னரும் துணங்கைக் கூத்து ஆடி மகிழ்ந்தனர். அரசனுக்குச் சோறு வேறு, வீரர்களுக்குச் சோறு வேறு உள்ளதென்று சொல்ல முடியாத வகையில் எல்லோருக்கும் ஒரே மாதிரி உயர்ந்த ஊனையும் துவையலையும், உடைய உணவு அளிக்கப்பட்டது; போரில் புறங்கொடுத்து ஓடாத பெருமையமைந்த தம் வீரர்களுக்கு அவர்கள் அமர்ந்து இருக்கும் இடங்களுக்கே சென்று அளித்து வந்தனர் என்றும் உணர்த்துகின்றன.

ஊன்துவை அடிசில் என்பது ஊன் குழையச் சமைத்த உணவு என்பதாகும்; ஊனினை அரிசியோடு கலந்து குழைய வேக வைப்பதாகும். வெற்றி பெற்ற அரசன் தனது வீரர்களுக்கு ஊன் துவை அடிசிலைக் கொடுத்துப் பெருவிருந்தளித்தான்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் விருந்தோம்பல்

தேர் கொண்டு இரவலர்களை அழைத்து விருந்து கொடுத்தல்

"வாரார் ஆயினும் இரவலர், வேண்டி
தேரின் தந்து, அவர்க்கு ஆர் பதன் நல்கும்
நசை சால் வாய் மொழி இசை சால் தோன்றல்
வேண்டுவ அளவையுள் யாண்டு பல கழிய
பெய்து புறந்தந்து, பொங்கல் ஆடி
விண்டுச் சேர்ந்த வெண்மழை போலச்
சென்றாலியரோ பெரும"

(பதிற்று. 6ஆம் பத்து, 55 : 10 – 16)

என்னும் பாடலடிகள், இரவலர்கள் வறுமை இல்லாமல் இருந்துள்ளனர்; தம்மிடம் வராத இரவலர்களைத் தேரினை அனுப்பி வைத்து அழைத்து வந்து விருந்திட்டு அரசர்கள் அனுப்பி வைத்துள்ளனர் போன்ற கருத்துக்களை உணர்த்துகின்றன.

வழி எங்கும் பழ மரம்

"மிறு புறம் மூசவும் தீம் சுவை திரியாது
அரம் போழ்கல்லா மரம் படு தீம் கனி
அம்சோறு அமைந்த முண்டை விளை பழம்
ஆறு செல் மாக்கட்கு ஓய் தகை தடுக்கும்"

(பதிற்று. 6ஆம் பத்து, 60 : 4 – 7)

என்ற ஆறாம் பத்துப்பாடலின் மூலம், அரசரது விருந்தோம்பல் பண்பின் சிறப்புப் புலனாகின்றது. இரவலர்கள் அரசர்களை நாடிச் செல்லும் வழிகள் எல்லாம் பழமரங்கள் வைக்கப்பட்டிருந்தன; அரசனைக் காண்பதற்கு வரும் இரவலர்களுக்கு, மரங்களில் உள்ள பழங்கள் உணவாக அமைந்திருந்தன; வழியில் செல்லும் களைப்பினைத் தீர்த்துக் கொள்ள மரங்களின் நிழல்கள் உதவின. எனவே சங்க காலத்தில் மக்கள் வழி எங்கும் பயன் தரக்கூடிய பழ மரங்களை வளர்த்திருந்தமையை

அறிய முடிகின்றது. அசோகர் காலத்திலும் நிழலுக்காக மரத்தினை நட்டனர் என்ற வரலாற்றுக் குறிப்புடன், இச்செய்திகள் ஒப்பு நோக்கத்தக்கன.

பாசறையில் மன்னனைப் புகழ்ந்து பாடியது

"மாஇரு விசும்பில் பல்மீன் ஒளிகெட
ஞாயிறு தோன்றியாங்கு மாற்றார்
உறுமுரண் சிதைத்தநின் நோன்தாள் வாழ்த்தி
காண்கு வந்திசின் - கழல்தொடி அண்ணல்"

(பதிற்று. 7ஆம் பத்து, 64 : 12 - 15)

என்னும் பாடல், இரவலர்களின் பசியைப் போக்கிய மன்னனின் கொடைச் சிறப்பினை விளக்குகின்றது; அம்மன்னனைக் குறித்துப் பாசறையிலே புலவன் புகழ்ந்து பாடியதைக் குறித்துக் கூறுகின்றது. அக்கால அரசர்கள் இரவலர்களின் கொடிய பசியைத் தீர்க்க இரக்கக் குணம் உடையவர்களாகவும் விளங்கியுள்ளனர்; பகை என்று வந்து விட்டால் அதனைப் போரிட்டு வெல்லும் வெற்றிக்குணம் கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர்.

குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையினது விருந்தோம்பல்

இரவலர்க்கு அளித்த பொருட்கள்

"முழவின் அமைந்த பெரும் பழம் மிசைந்து
சாரு அயர்ந் தன்ன கார் அணி யாணர்த்
தூம்பு அகம் பழுனிய தீம் பிழி மாந்தி
காந்தள் அம் கண்ணிச் செழுங்குடிச் செல்வர்
கலி மகிழ் மேவலர், இரவலர்க்கு ஈயும்"

(பதிற்று. 9ஆம் பத்து, 81 : 19 - 23)

என்னும் பாடலிலிருந்து இளஞ்சேரலின் விருந்தோம்பல் புலனாகின்றது.

'முழவு போல் வடிவம் அமைந்த பெரிய பலாப்பழத்தின் சுளைகளை உண்டு வெற்றி விழாக் கொண்டாடினர் அதுபோன்று புதுமையினை உடைய கரிய அழகிய மூங்கிற் குழாயில் பெய்து முதிர்வித்த இனிய கள்ளை மன்னன் அளிக்க வீரர்கள் உண்டு களித்தனர்; காந்தட் பூவாலாகிய கண்ணியை அணிந்த செழித்த குடியிற் பிறந்த அவனது நாட்டு செல்வர் ஆரவாரத்தையுடைய மகிழ்ச்சியுடையராகித் தம்பால் வந்து இரப்போர்க்கு பொருள் இல்லை என்னாது வாரிவாரிக் கொடுத்தனர்'.

புறநானூறும் விருந்தோம்பலும்

புலவர்கள் பலரால் பாடப்பெற்ற புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களின் தொகுப்பாகப் 'புறநானூறு' விளங்குகின்றது.

இந்நூலில் மூவேந்தர் குறித்த பாடல்கள் பல இடம் பெற்றுள்ளன. புலவர்களை அரசர்கள் எவ்வாறெல்லாம் விருந்தோம்பினர் என்பதனைப் பற்றிய பல நிகழ்வுகளைப் புறநானூற்றால் அறிய முடிகின்றது.

புலவர்கள் அரசர்களுக்கு நண்பராக இருந்துள்ளனர். தவறான ஆட்சி செய்யும் அரசர்களைக் கண்டிக்க வேண்டிய காலத்தில் கண்டித்தும் பாடியுள்ளனர். புலவர்கள் சங்ககால அரசர்களின் ஆட்சி முறையில் நிகழ்ந்தவற்றைச் சங்கப்பாடல்களின் மூலம் வெளிப்படுத்தி உள்ளனர்.

வறுமையுற்ற புலவர்களை அரசர்கள் எவ்வாறெல்லாம் விருந்தோம்பி, பொன், பொருட்களைக் கொடுத்து அனுப்பியுள்ளனர் என்பதனைப் புறநானூற்றுப் பாடல்கள் வழி அறிந்து கொள்ளலாம்.

சங்க காலத்தில் வறுமையுற்றோர்க்கு வரையாது பொருளை வழங்கிச் சிறப்பித்து, அவர்களை வாழ வைத்த வள்ளல்களையே புலவர்கள் மிகுதியாகச் சிறப்பித்துப் பாடினர். புலவர்களால் பாடப்பெறும் இச்சிறப்பினைப் பெறுவோரே பாகனால் செலுத்தப் பெறாத வானவூர்தியை

எய்தி விண்ணுலக இன்பத்தைத் துய்ப்பர் எனவும் புறநானூற்றுப் பாடலொன்று தெரிவிக்கின்றது.

"புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப வென்பதஞ் செய்வினை முடித்தென"

(புறம். 27)

என்னும் பாடலடிகளின் மூலம் வள்ளல் தன்மை உடையோரின் சிறப்பினை உணர முடிகின்றது. பல மன்னர்களும் குறுநில மன்னர்களும் பாணர்கள், பொருநர், விறலியர் போன்றோர்க்குப் பரிசில்கள் நல்கி அவர்களுடைய வறுமையைப் போக்கிய கொடைத்திறனைப் புறப்பாடல்கள் வழி அறிகின்றோம்.

இளஞ்சேட் சென்னியின் விருந்தோம்பல்

"அமிழ்து அட்டு ஆனாக் கமழ் குய் அடிசில்
வருநர்க்கு வரையா வசை இல் வாழ்க்கை"

(புறம். 10)

என்ற பாடலும் இளஞ்சேட் சென்னியினது சிறப்பினை உணர்த்துகின்றது. அமிழ்தத்தையே சுவையால் வென்ற, உண்ண உண்ண தெவிட்டாத, மணம் நிறைந்த தாளிப்புடன் செய்த சிறந்த உணவினை, தம்மை நாடி வரும் விருந்தினருக்கு மிகுதியாக அளித்து மகிழ்ந்தான் அம்மன்னன் என்பதனை அறியமுடிகின்றது. அக்கால மகளிரும் தம் வீடு தேடி வரும் விருந்தினர்களுக்கு அமிழ்தம் ஒத்த சுவை உடைய தாளிப்பினால் ஆன உணவினை அளித்தனர்.

பாண்டியன் நெடுஞ்செழியனின் விருந்தோம்பல்

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்

உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே"

(புறம். 18)

என்னும் இப்புறப்பாடல் 'உணவின்' இன்றியமையாமை பற்றிக் குறிப்பிடுகின்றது. உணவு இல்லையென்றால் உயிர் வாழ முடியாது; உணவையே முதன்மையாகக் கொண்டது உடல்; இந்த உடலுக்கு உணவு தந்தவர் உயிர் தந்தவராவார்; எனவே, உணவு என்று சொல்லப்படுவது நிலத்துடன் நீருமாகும்; நிலத்தையும் நீரையும் ஒன்றாகச் சேர்த்தவர் இவ்வுலகில் உடலையும் உயிரையும் ஒன்றாகச் சேர்த்துப் படைத்தவராவார் போன்ற கருத்துக்கள் புலனாகின்றன. உணவே உடலையும் உயிரையும் வளர்க்கும் திறன் வாய்ந்தது என்பது தெளிவாகின்றது.

கிள்ளி வளவனின் விருந்தோம்பல்

"அடுதீ அல்லது சுடுதீ அறியாது
இருமருந்து விளைக்கும் நல்நாட்டுப் பொருநன்
கிள்ளி வளவன் நல்இசை உள்ளி"

(புறம். 70)

என்னும் பாடல், 'உணவிற்கென உண்டாக்கப்பட்ட நெருப்புப் பயின்ற ஊரின் சிறப்பினை உணர்த்தி நிற்கின்றது. தண்ணீரும் உணவுமாகிய இருமருந்தைப் பசிப்பிணிக்குத் தரும் நல்ல நாட்டையுடைய தலைவனாகிய கிள்ளிவளவன்' என அச்சோழ மன்னனைச் சிறப்பிக்கின்றது. நீரும், உணவும், பசிப்பிணியை நீக்கி உயிரைக் காக்கும் என்பதனால் இதனை 'இருமருந்து' என்று குறிப்பிடப்பட்டுள்ளார். இங்கு பசிப்பிணிக்கு மருந்து தரும் மருத்துவனாகக் கிள்ளிவளவன் சிறப்புற்று விளங்குகின்றான்.

அதியமான் அளித்த விருந்து

"மன்னுக பெரும! நீயே தொல் நிலைப்
பெருமலை விடரகத்து அரு மிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின் அகத்து அடக்கி
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே"

(புறம். 91)

என்னும் இப்பாடல், ஓர் அரிய நெல்லிக்கனி கிடைத்ததனால் அதியன் ஔவைக்கு அதனை வழங்கிய தன்மையைக் குறிக்கின்றது. அதியனுக்கு மிகுதியான நெல்லிக்கனிகள் கிடைத்திருந்தால் அதனைத் தம்மிடம் வரும் எல்லாப் புலவர்களுக்கும் கொடுத்து மகிழ்ந்திருப்பான் அதியன். ஒன்று என்பதால் அவ்வைக்கு மட்டும் கொடுக்க நேர்ந்தது. பல நெல்லிக்கனிகள் கிடைத்திருந்தால் அதனைத் தான்மட்டும் உண்ணாது தமிழினை வாழவைக்கும் புலவர்கள் அனைவருக்கும் கொடுத்து மகிழ்வான் என்ற உண்மையை இப்பாடலின் வழி அறிய முடிகின்றது.

தம்மிடம் வரும் விருந்தினர்களை இத்தகைய அரிய வகைப் பொருட்களைக் கொண்டு உபசரித்தனர் எனவெல்லாம் அறிய முடிகின்றது.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவாமருந்தெனினும்
வேண்டற் பாற்(று) அன்று"

(குறள். 82)

என வள்ளுவர் இக்குறட்பாவில், உண்டால் சாவு வாராமல் தடுக்கக்கூடிய அமிழ்தமே உண்ணக் கிடைத்ததானாலும் விருந்தினர் வெளியே காத்திருக்கத் தான் மட்டும் உண்ணுதல் கூடாது என்பதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அக்கால அரசர்கள் புலவர்களை வாழ வைப்பதற்காகவே

தனக்குக் கிடைக்கக் கூடிய அரிய பொருள்களைக் கூடப் புலவர்களுக்கு அளித்துள்ளனர்.

"ஔவைக்கு அதியமான் நெல்லிக்கனி" கொடுத்ததிலிருந்து எத்தகையதொரு உயர்ந்த இடத்தை அடைந்துள்ளான் என்பதனை,

"ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பன்னாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன்"

(புறம். 101 : 1 – 3)

என்னும் இப்பாடல், அக்காலத்தில் புலவர்கள் தங்களை ஆதரிக்கும் அரசர்களை பலமுறைசென்று பார்த்தாலும் அவர்களை முதல் நாள் எங்ஙனம் விருந்தோம்பினரோ அது போன்றே தம்மிடம் வரும் நாளெல்லாம் உபசரித்தனர் என்பதனை உணர்த்துகின்றது.

"பொழுது இடைப்படாஅப் புலரா மண்டை
மெழுகுமெல் அடையின் கொழு நிணம் கொடுப்ப"

(புறம். 103)

என்ற அடிகளும், அக்கால அரசர்கள் தங்களிடம் வரும் விருந்தினர் எப்பொழுது வந்தாலும் அவர்களை எதிர்கொண்டு உபசரித்தனர் என்பதனை உணர்த்துகின்றது.

வேள்பாரியின் விருந்தோம்பல்

சங்ககால மக்கள் நிலத்தில் புதைக்கப்பட்ட முற்றிய மதுவையும், உணவையும் தந்தும் விருந்தினரை உபசரித்தனர் என்பதனை,

"நிலம் புதைப் பழுனிய மட்டின் தேறல்
புல்வேய்க் குரம்பைக் குடிதொறும் பகர்ந்து
நறுநெய்க் கடலை விசைப்பச் சோறு அட்டு"

(புறம். 120)

என்னும் புறப்பாடல் புலப்படுத்துகின்றது. மண்ணில் புதைக்கப்பட்ட

கள்ளினைத் தம்மிடம் வரும் விருந்தினருக்குக் கொடுத்து மகிழ்ந்துள்ளனர் மன்னர். இத்தகைய விருந்தோம்பலின்போது ஆரவாரத்துடன் இருந்தது பாரியின் நாடு. மதுவை மூங்கிற் குழாயில் இட்டு களிப்பு மிக வேண்டிச் சிறிது நாட்கள் வைத்திருந்து உண்ணுதல் அக்கால வழக்கமாகவும் இருந்துள்ளது.

வையாவிக் கோப்பெரும்பேகனின் விருந்தோம்பல் பண்பு

"பாணன் சூடிய பசும்பொன் தாமரை
மாண் இழை விறலி மாலையொடு விளங்க"

(புறம். 141)

என்னும் பாடலடிகள், பேகன் தன்னிடம் வரும் விருந்தினர்களுக்குப் பொன்னறிமாலையையும், பொற்றாமரைப் பூவையும் பரிசுப்பொருளாக வழங்கி உள்ளான் என்னும் கருத்தைப் பறைசாற்றுகின்றன.

மலையமான் திருமுடிக்காரியின் விருந்தோம்பல்

"ஒன்னார் யானை ஓடைப் பொன் கொண்டு
பாணர் சென்னி பொலியத் தைஇ
வாடாத் தாமரை சூட்டிய விழுச் சீர்
ஓடாப் பூட்கை உரவோன் மருக"

(புறம். 126)

என்ற புறப்பாடல், பகைவருடைய யானையைக் கொன்று அவற்றின் நெற்றிப் பட்டத்துப் பொன்னைக் கொண்டு, தாமரைப் பூக்கள் செய்து பாணர்க்கு வழங்குவது பண்டைத்தமிழர் மரபு என்பதனை உணர்த்துகின்றது. தங்களிடம் வரும் விருந்தினர்களை விருந்தோம்பிய பின்னர் அவர்களுக்குப் பொன்னால் செய்யப்பட்ட தாமரைப் பூக்களைப் பரிசுப்பொருளாக மன்னர் வழங்கியமையை இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது.

ஆய் அண்டிரனின் விருந்தோம்பல்

'களிறு மிக உடைய இக்கவின் பெறு காடே'

(புறம். 131)

என்னும் இப்புறப்பாடலின் மூலம் அண்டிரனைப் பாடிய பரிசிலர் அவன் நல்கும் உணவாலும், அணிகலன்களாலும், கவின் பெறுவதோடு களிறுகளையும் மிகப் பெற்றுச்செல்வது பற்றி 'கவின்பெறு காடு'' எனச் சிறப்பித்துள்ளமையையும் உணர முடிகின்றது.

இரவலர்கள் அரசனிடம் பரிசுப்பொருட்களைப் பெற்ற மகிழ்ச்சியால் கள் குடித்துக் குரவை என்னும் நடனமாடி மகிழ்ந்தனர். புலவர்கள் வறுமையில் வாடியபொழுது, பசியினால் உடல் சுருங்கி முகம் வாடி இருந்தனர். இவர்தம் வறுமையைப் போக்கி அவர்களுக்கு பரிசுப் பொருட்களும் கொடுத்துள்ளனர் அரசர் என்பதனை,

"வாங்கு அமைப் பழுனிய தேறல் மகிழ்ந்து
வேங்கை முன்றில் குரவை அயரும்"

(புறம். 129)

"காரென் ஒக்கல், கடும் பசி இரவல"

(புறம். 141)

என்னும் பாடலடிகள் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது.

குமணனின் விருந்தோம்பல்

குமணனின் வள்ளல் தன்மையைச் சான்றோர் போற்றிப் புகழ்ந்து பாடி ஆற்றுப்படுத்தி, அவனை நாடி வந்து பரிசில் பெற்று தம் வறுமைத் துன்பத்தை நீங்கிக் கொண்டனர். இத்தகைய சிறப்புடைய குமணனின் விருந்தோம்பல் பண்பினை,

"உருகெழு ஞாயிற்று ஒண்கதிர் மிசைந்த
முளிபுற் கானம் குழைப்ப, கல்லென

அதிர் குரல் ஏறொடு துளி சொரிந்தாங்கு
பசி தினத் திரங்கிய கசிவுடை யாக்கை
அவிழ் புகுவு அறியாது ஆகலின், வாடிய
நெறி கொள் வரிக் குடர் குளிப்பத் தண்ணென
குய் கொள் கொழுந்துவை நெய்யுடை அடிசில்
மதிசேர் நாள் மீன் போல நவின்ற
சிறுபொன் நன் கலம் சுற்ற இரீஇ
கேடு இன்றாக பாடுநர் கடும்பு"

(புறம். 160)

என்ற புறப்பாடல் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. வறண்ட காடு, மழை பெற்றுப் பொலிவடைந்தது போலப் பசியால் வாடிய தமது உள்ளமும் உடலும் குளிர, முடக்கம் கொண்ட குடர் நிறையும்படி, தாளிப்புச் செய்த கொழுந்துவையோடு கூடிய நெய்யுடைய உணவை இரவலர்க்கு வழங்குகின்றான் குமணன். நிலவைச் சுற்றி விளங்கும் விண்மீனுக்கு ஒப்பாக விளங்கும் பொன்னால் செய்யப்பட்ட சிறுசிறு உண் கலங்களைச் சூழ வைத்திருந்து இரவலர்க்கு ஊட்டுகிறான். பின் கேடில்லையாகப் பாடுவாரது சுற்றமெனச் சொல்லிப் பெறற்கரிய பொன் அணிகலன்களை எளிதாக வழங்குகிறான் என்பதும் புலனாகின்றது. தாளிப்புச் செய்த கொழுந்துவையோடு கூடிய நெய்யுடைய உணவை, நிலவைச் சேர்ந்த நாளாகிய விண்மீனை ஒப்பப் பொன்னாற் செய்யப்பட்ட பிற நல்ல கலங்களைச் சூழ வைத்து இருந்து ஊட்டினான் குமண மன்னன்.

பண்டைய காலத்தில் அரசர்கள் தங்களிடம் வரும் புலவர்களுக்கு உணவினைப் பொன்னால் செய்யப்பட்ட கலத்தில் பக்கமிருந்து விருந்தோம்பி உள்ளனர். விருந்தினர்களை உபசரிப்பதற்காகவே பொன்னால் செய்யப்பட்ட கலன்களை பயன்படுத்தி உள்ளனர் அக்கால மன்னர்.

சேணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பன் கௌணியன் விண்ணந்தாயனின் விருந்தோம்பல்

வேள்வியின் முடிவில் அனைவர்க்கும் விருந்து செய்யும் வழக்கத்தை 'விருந்துற்ற' நின் திருந்து ஏந்துநிலை' என்று குறிப்பிட்டுள்ளனர். அக்காலத்தில் அரசர்கள் வேள்வியின் முடிவில் அனைவருக்கும் விருந்து கொடுப்பதை வழக்கமாக வைத்திருந்தனர் என்பதனை,

'விருந்துற்ற நின் திருந்து ஏந்து நிலை'

(புறம். 166)

என்னும் இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது.

பிட்டங் கொற்றனின் விருந்தோம்பல்

அக்காலத்தில் மக்கள் விருந்தினர்களைப் பேணிக்காப்பதற்குப் பொருள் மிக அவசியமானதாகக் கருதப்பட்டதால் தன்னிடம் பொருட்கள் இல்லை என்ற வருத்தத்தைப் போக்க தன் வறுமை ஒழித்து சிறப்புடைய 'விருந்தோம்பல்' செய்ய நல்வாழ்க்கை தனக்கு அமையும்படி வேண்டுகின்றான் அரசன் என்னும் இக்கருத்தினை,

"இன்று செலினும் தருமே; சிறுவரை
நின்று செலினும் தருமே; பின்னும்
'முன்னே தந்தனென்' என்னாது, துன்னி
வைகலும் செய்யினும் பொய்யலன் ஆகி
யாம் வேண்டியாங்கு எம் வறுங்கலம் நிறைப்போன்"

(புறம். 171)

என்னும் இப்பாடல் மூலம் அறிய முடிகின்றது.

அள்ளூர் நன்முல்லையார் பாடியது

சங்க காலத்தில் மறக்குடி மகள் ஒருத்தி நடுகல் தொழும்போது "என்றும் தவிராது யான் விருந்தினர்களை எதிர்கொள்ளப் பெறுவேன்

ஆகுக" என்றும் நடுகல் தெய்வமாக நின்றவனைக் (கொழுநன்) கைக்கூப்பித் துதிக்கிறாள் என்பதனை,

'ஒலிமென் கூந்தல் ஒள்நுதல் அரிவை
நடுகல் கைதொழுது பரவும் ஓடியாது
விருந்து எதிர் பெறுகதில் யானே என்னையும்
ஓ ..... வேந்தனொடு
நாடு தரு விழுப்பகை எய்துக எனவே'

(புறம். 306)

என்னும் பாடலடி உணர்த்துகின்றது. தன் கணவன் போரில் வெற்றி பெற வேண்டும்; தன்னிடம் வரும் விருந்தினரைத் தாம் காக்க வேண்டும் என்று நடுகல்லினைத் தொழுது பெண்கள் வழிபட்டுள்ளமையை அறியமுடிகின்றது.

மதுரைக் கள்ளிற் கடையத்தனின் விருந்தோம்பல்

இக்காலத்தில் ஒருவர்க்குப் பட்டங்கள் எவ்வளவு முக்கியமோ அந்த அளவிற்கு அக்கால மக்களுக்கு வாளும் கேடயமும் மிக முக்கியமாகக் கருதப்பட்டன. விருந்தினர்களை விருந்தோம்ப ஒன்றும் இல்லா நிலையிலும் இல்லை என்று சொல்லுவதை ஒரு இழிவாகக் கருதினர். இருப்பினும் விருந்தினருக்காக இத்தகைய பொருட்களை (போர்க்கருவிகளை) இழந்து விருந்து செய்வதைப் பெருமையாக நினைத்துள்ளனர் சங்க மன்னர்.

"நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்(று)இக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம் கொண்டு
ஈவதிலாளன் என்னாது நீயும்"

(புறம். 316)

என்ற இப்பாடல் மூலம் கடையத்தின் விருந்தோம்பல் பண்பு உணர்த்தப்படுகின்றது. தன்னிடம் வரும் விருந்தினரை உபசரிக்க வாள்,

கேடயம் போன்ற விலை மதிப்புமிக்க பொருள்களை அடகு வைத்து விருந்தோம்பியமையை அறிய முடிகின்றது.

தங்கால் பொற்கொல்லனார் பாடியது

வேட்டையாடிக் கொண்டு வந்த உடும்பின் இறைச்சியோடு பெய்யப்பட்ட தயிருடன் கூட்டிய கூழினையும், புதிதாகச் சமைத்த பிற நல்ல உணவு வகைகளையும் பாணர்களோடு உடன் வந்த விருந்தினர் பலருக்கும் வழங்கும் விருப்பத்தினை உடையவளாக இருந்தாள் தலைவி என்பதனை,

"படமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்குறிணம் பெய்த தயிர்க்கண் மிதவை
யாணர் நல்லவை பாணரொடு ஓராங்கு
வருவிருந்து அயரும் விருப்பினள்"

(புறம். 326)

என்னும் புறப்பாடல் மூலம் உணரலாம்

தலைவனானவன் பெருவேந்தனொடு சென்று பகைவரின் பட்டத்து யானையை வீழ்த்தி அதன் முகப்படாத்தைப் பரிசாகப் பெற்றுத் தகுதியுடைய பாணர்களுக்கு அளிப்பான் என்பதும் தெரியவருகின்றது.

"எருதுகால் உறாஅது இளைஞர் கொன்ற
சில்விளை வரகின் புல்லென் குப்பை
தொடுத்த கடவர்க்குக் கொடுத்த மிச்சில்
பசித்த பாணர் உண்டு கடை தப்பலின்"

(புறம். 327)

என்னும் புறநானூற்றுப் பாடலில், பகிர்ந்தளிக்கும் பண்பு பாராட்டப்படுகின்றது. 'புல்லென் குப்பை' என்பது நெல்லைப் போல தடி கொண்டு அடித்து தூற்றிப் பிரித்து எடுக்கும் வரகாகும் இத்தகைய வரகினைப் பாணர் கூட்டத்துக்குச் சமைத்து விருந்தாகக் கொடுத்தனர் என்பது புலனாகின்றது.

கடன் தந்தோர்க்குக் கொடுத்தல், பாணர்க்கு வழங்குதல், சுற்றத்தாரை உண்பித்தல் ஆகிய மூன்று நிலைகளிலும் வீரன் ஈட்டிய பொருளின் பயன்பாடு குறிக்கப்பட்டது.

"புன்புலச் சீறூர், நெல் விளையாதே
வரகும் தினையும் உள்ளவை எல்லாம்
இரவல் மாக்களுக்கு ஈயத் தொலைந்தன
....
....
..... *தருகுவன் மாதோ-*
தாளிமுதல் நீடிய சிறுநறு முஞ்ஞை
முயல்வந்து கறிக்கும் முன்றில்
சீறூர் மன்னனைப் பாடினை செலினே."

(புறம். 328)

என்னும் புறநானூற்றுப் பாடல், சீறார் மன்னனின் விருந்தோம்பும் திறத்தைப் பறைசாற்றி நிற்கின்றது. முல்லை நிலத்தைச் சார்ந்திருக்கும் சிறிய ஊரின் தலைவன் அவன்; புன்செய் நிலங்களில் விளைந்த வரகும், தினையுமாகிய உணவுப் பொருள்களைத் தம்மிடம் வரும் இரவலருக்கு வழங்கும் தன்மையுடையவன்; அவை தீர்ந்தபோது தன்னை நாடி வரும் பாணர் முதலியோர்க்கு களாப் பழத்தின் புளிப்பினைப் போன்ற உறை ஊற்றப்பட்ட தயிரோடு, காய்ந்த கறித்துண்டுகளையும், வெண்ணெல் அரிசிச் சோற்றில் நெய் பெய்து துழாவி அட்ட களியினையும் கொடுத்து உண்ணச் செய்கின்றான்; அவர்கள் உண்ட பின் அணிகலன்களையும் பரிசாகக் கொடுக்கும் தன்மையுடையவன் அவன். சீறூர் மன்னனின் கொடைத்திறத்தையும் விருந்தோம்பல் மாண்பினையும் புலப்படுத்தும் பாடல் இது; அக்காலப் பேரரசர்களைப் போன்று சிற்றூர் மன்னனின் கொடைத்திறனும் விருந்தோம்பும் பண்பும் அமைந்திருப்பதை அறிய முடிகின்றது.

"தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாவ்
நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்
இற்பொலி மகடூஉப் போல------

(புறம். 331)

என்ற பாடல் மூலம் இல்ல மகளிரின் மாண்பும் புலனாகின்றது. தம்மிடம் உள்ள உணவு குறைவாக இருந்தபோதிலும் விருந்தினர் பல வந்தமை குறித்துக் கவலையுறாமல் நீண்ட நெடிய பந்தலில் உணவினை முறையாக உண்பிக்கின்ற இல்லறத்தில் பொலிவு தோன்றும் தலைவியர் பலர் அக்காலத்தில் இருந்துள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது.

அதியமான் நெடுமானஞ்சியின் மகன் பொகுட்டெழினியின் விருந்தோம்பல்

அதியமான் நெடுமானஞ்சியின் மகன் பொகுட்டெழினி ஆவான். இவனிடம் சென்ற பொருநனின் கிழிந்த உடையைக் களைந்து நுண்ணிய நூலினால் நெய்யப்பட்ட உடையைத் தந்து உடுக்குமாறு செய்து, பொற்கலத்தில் கள்ளினை அளித்தான் என்றும் பின்னர் உண்ணுமாறு செய்து சிறப்பித்தான் என்றும் அவனது விருந்தோம்பும் தன்மை புலப்படுத்தப்படுகின்றது. இந்நிகழ்வினை,

"ஊர்உண் கேணிப் பகட்டு இலைப் பாசி
வேர்புரை சிதாஅர் நீக்கி, நேர்கரை
நுண்நூல் கலிங்கம் உடீஇ 'உண்' எனத்
தேட்கடுப்பு அன்ன நாட்படு தேறல்
கோள்மீன் அன்ன பொலங்கலத்து அளைஇ
ஊண்முறை ஈத்தல் அன்றியும், கோள்முறை
விருந்துஇறை நல்கி யோனே"

(புறம். 392)

என்ற புறப்பாடலின் மூலம் அறியமுடிகின்றது.

சேரமான் வஞ்சனின் விருந்து

"நிழல்காண் தேறல் நிறைய வாக்கி,
யான்உண அருளல் அன்றியும், தான்உண்
மண்டைய கண்ட மான்வறைக் கருணை
கொக்குஉகிர் நிமிரல் ஒக்கல் ஆர"

(புறம். 398)

என்னும் பாடலடிகளின் மூலம் சேரமான் வஞ்சனின் உயர்வு சிறப்பிக்கப்படுகின்றது. பொருநன் ஒருவன் மன்னனை விடியற்காலத்தில் அணுகித் தடாரிப் பறையை இசைத்துத் தம் வரவைத் தெரிவிக்கின்றான்; மன்னன் பெரிதும் மகிழ்ந்து பொருநனின் கிழிந்திருந்த உடையை நீக்கி, உயர்ந்த உடையைக் கொடுக்கின்றான்; உண்கலத்தில் தெளிந்த கட்டெளிவையும், மானிறைச்சியையும் வறுத்த பொரிக்கறியையும், கொக்கின் நகம் போன்ற முகம் முறியாத நெல்லரிசிச் சோற்றையும், உணவாக அளித்ததோடன்றித் தன் மார்பில் அணிந்திருந்த மிக விலையுர்ந்த மாலையையும் பரிசிலாகத் தந்த கைவண்மையை உடையவனாக விளங்குகின்றான். திருத்தாமனார் என்ற புலவர் அவனது சிறப்பினை எண்ணியெண்ணி வியக்கின்றார்.

மாறோக்கத்து நப்பசலையார் குறிப்பிடும் அவியனின் விருந்தோம்பல்

பொருநன் ஒருவன் அவியன் என்ற வள்ளலின் பெருமனையை அடைந்தவுடன் அப்பொருநன் வறுமைத்திறம் ஒழியுமாறு, கள்ளினை மணம் கமழும் மடாரிற் பெய்து உண்ணச் செய்து, பாம்பின் தோலினையும் மூங்கிலின் உட்புறத்தே உள்ள தோலினையும் ஒத்த ஆடையைக் கொடுத்து உடுத்தச் செய்தான் அவனது சிறப்புடைய விருந்தோம்பும் பண்பினை,

"தேம்பாய் உள்ள தம்கமழ் மடர்உள,
பாம்பு உரி அன்ன வடிவின, காம்பின்
கழைபடு சொலியின் இழைஅணி வாரா
ஒண்பூங் கலிங்கம் உடீஇ"

(புறம். 383)

என்ற பாடலடிகளின் மூலம் அறியப்படுகின்றது.

அம்பர்கிழான் அருவந்தையின் விருந்தோம்பல்

"வறன்யான் நீங்கல் வேண்டி, என்அரை
நீல்நிறச் சிதாஅர் களைந்து,
வெளியது உடீஇ, என்பசி களைந்தோனே"

(புறம். 385)

என்ற புறப்பாடல், இரவலன் தன் வறுமையைப் போக்கிக் கொள்ள அரசன் முன் சென்றபோது அவன் வறுமையினை நீக்க இரவலன்தம் அரையில் உடுத்தியிருந்த நீலநிறமுள்ள கந்தையை நீக்கி வெள்ளிய ஆடை தந்து உடுத்தச் செய்து, பின்னர் அவனது பசித் துன்பத்தினைப் போக்கினான் என்று இவ்வரசனின் பெருமையைக் குறிப்பிடுகின்றது.

நெடுமானஞ்சியின் விருந்து

மாலை கழிந்த இரவு நேரத்தில் பொருநர் அதியமான் நெடுமானஞ்சியைச் சென்றடைந்தவுடன் அவர்களின் பழமையான ஆடையை நீக்கி, மலர் போன்ற புத்தாடையை அணியச் செய்து பின்னர் ஊன் துவையலையும் சோற்றையும் வெள்ளிக்கலத்தில் இட்டு அதனை உண்ணச் செய்தான். சுற்றத்தாரின் வறுமைத் துயரத்தைப் போக்க நெற்குவியலையும் கொடுத்தான் என்பது,

"..... ....என் அரை
முதுநீர்ப் பாசி அன்ன உடை களைந்து
திருமலர் அன்ன புதுமடிக் கொளீஇ

மகிழ்தரல் மரபின் மட்டே அன்றியும்
அமிழ்துஅன மரபின் ஊன்துவை அடிசில்
....
....
வான்அறி யலஎன் பாடுபசி போக்கல்
அண்ணல் யானை வேந்தர்
உண்மையோ அறியல் காண்புஅறி யலரே"

(புறம். 390)

இப்பாடல் மூலம் புலனாகின்றது. அதியமானின் கொடை நலத்தை, இணைப் பொருநன் கூற்றில் வைத்து, ஔவை பாடும் இப்பாடல் விருந்தோம்பலின் மேன்மையைக் குறிப்பிடுகின்றது.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் விருந்து

தன்னிடம் வந்த பாணர்களுக்குக் காலையிலும், மாலையிலும் பால் இட்டுத் தேனோடு சமைத்த வரகுச் சோற்றோடு முயலினது சூட்டிறைச்சியையும் தானும் தன் சுற்றமும் உண்ணும்படிச் செய்து பரந்த உள்ளத்தோடு பலகாலும் அன்பு மொழிகளைக் கூறிச் செல்வமனைத்தையும் வழங்கினான் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்று பாணன் கூறி அவனை வாழ்த்தி அவன் செய்த நன்றி என்றும் மறக்கற்பாலதன்று எனத் தெரிவித்தான் எனவும் ஆலத்தூர்கிழார்.

"காலை அந்தியும், மாலை அந்தியும்,
புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கம் தேனொடு மயக்கிக்
குறுமுயற் கொழுஞ்சூடு சிழித்த ஒக்கலொடு"

(புறம். 34)

என்னும் புறப்பாடல் மூலம் கிள்ளிவளவன்தன் விருந்தோம்பலில் சிறப்பினைத் தெரிவிக்கின்றார்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் விருந்தோம்பல்

இம்மன்னன், நெய் இட்டுச் சமைத்த சூட்டிறைச்சியையும் கட்டெளிவையும் உண்ணுமாறு செய்து, பூ வேலைபாடுகளமைந்த உடையை நல்கிப் பொருநனின் வறுமைத்துன்பம் நீக்கினான் என்று தாயங்கண்ணனார்,

"நெய்யுறப் பொரித்த குய்யுடை நெடுஞ்சூடு,
மணிக்கலன் நிறைந்த மணநாறு தேறல்,
பாம்புரித் தன்ன வான்பூங் கலிங்கமொடு,
மாரி யன்ன வண்மையின் சொரிந்து"

(புறம். 397)

என்ற பாடலின் மூலம் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் வள்ளன்மையைப் போற்றுகின்றார்.

சோழநாட்டுப்பிடவூர் கிழான்மகன் பெருஞ்சாத்தனின் விருந்து

"பெருஞ்செய் நெல்லின் கொக்குஉகிர் நிமிரல்
பசுங்கண் கருணைச் சூட்டொடு மாந்தி,
விளைவு ஒன்றோ வெள்ளம் கொள்க!"

(புறம். 395)

என்னும் பாடல், தன்னிடம் வந்து தடாரிப் பண் இசைத்துப் பாடிய பொருநனைக் கண்டு சிறிதும் காலம் தாழ்த்தாமல் அணுகி அவனுக்கு அணிகலன்களை நல்கியதோடு நெல்லரிசியாலான சோற்றொடு பொரிக்கறியும், சூட்டிறைச்சியும் உண்ணுமாறு செய்தான் பெருஞ்சாத்தன் என்பதை விளக்குகின்றது.

உலகமெங்கும் பசியால் வாடித் துயரம் அடைந்த காலத்தினும், கொக்கு நகம் போன்ற சோறும், சூடான இறைச்சியும், அளவற்றுத் தந்து உதவுகின்ற அவன் வாழ்க என்று புலவர் பாடியதை அறியமுடிகின்றது.

ஓய்மான் நல்லியாதனின் விருந்து

"நைந்துகரை பறைந்தஎன் உடையும் நோக்கி,
விருந்தினன் அளியன், இவன்எனப் பெருந்தகை
நின்ற முரற்கை நீக்கி, நன்றும்
அரவுவெகுண் டன்ன தேறலொடு, கூடுதருபு,
நிரயத் தன்னஎன் வறன்களைந்து அன்றே"

(புறம். 376)

என்ற புறப்பாடலில், பாணன் ஒருவன் ஞாயிறு மறைந்த வேளையில் நல்லியக்கோடனின் நன்மனையில் தடாரிப்பறையை இசைத்துப் பாடினான்; கண் இமைக்கும் நொடியில் விரைந்து சென்று அவன் பாடாதவாறு கையிலிருந்த தாளத்தை வாங்கிக் கொண்டான் ஓய்மான்; நைந்து கிழிந்திருந்த கந்தல் உடையை அகற்றிக் கள்ளும் கூடான இறைச்சியும் தந்து மேலும் வேண்டுவன கொடுத்துப் பாணனின் வறுமையை நீக்கினான் என்றெல்லாம் நன்னாகனார் நல்லியாதனின் விருந்து தன்மையைப் பாடியுள்ளமையை அறிய முடிகின்றது.

பல்வேறு மன்னர்கள், பாணன் முதலிய கலைஞர்களை விருந்தோம்பிக் காத்த பேராண்மையைக் குறிப்பிட்டுச் சிறப்பிக்கின்றன. புறநானூற்றுப் பாடல்கள் பல.

மதுரைக்காஞ்சியில் இடம் பெற்றுள்ள விருந்தோம்பல்

பத்துப்பாட்டினுள் ஒன்றான மதுரைக்காஞ்சி. முழுமையும் புறச் செய்திகளைக் கூறுகின்றது. இந்நூலுள் இடம் பெற்றுள்ள விருந்தோம்பல் குறித்த கருத்துகள் பல.

கோயில் விழாக்கள்

மதுரைமாநகரில் நாளங்காடி, அல்லங்காடி என்ற இருபெரும் அங்காடி வீதிகள் உள்ளன. அத்தெருக்களில் கட்டப்பட்டுள்ள பல்வேறு

கொடிகள் குறித்தும் கோயில் விழாக்கள் குறித்தும் மதுரைக்காஞ்சி சிறப்பிக்கின்றது.

"பல்வேறு குழாஅத்து இசை எழுத்து ஒலிப்ப

. . . . . .

பெருவரை மருங்கின் அருவியின் றுடங்கு"

(மதுரைக். 360 – 374)

என்னும் மதுரைக்காஞ்சிப் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன.

இக்கொடிகள் நாட்டின் அறநெறி பிறழா வாழ்வினைக் குறிப்பனவாகவும், மன்னனின் போர் வெற்றியை உரைப்பனவாகவும், மக்களின் இன்ப வாழ்வினைச் சுட்டுவனவாகவும், அவர்களின் தவம், கல்வி, கொடை ஆகிய பண்பு நலன்களை அறிவிப்பனவாகவும் அமைந்துள்ளன. கொடைப்பண்பு இயல்பாகவே விருந்தோம்பும் பண்பினை வளர்க்கும். இதில் 'கொடை' என்பது அங்கு வாழக்கூடிய மன்னன் மற்றும் மக்களினது 'விருந்தோம்பல்' பண்பினை விளக்குவதாக அமைந்துள்ளது.

உணவு வகைகள்

"சோறும் நாற்றமும் பலவின் சுளையும்
வேறு படக் கவினிய தேம் மாங்கனியும்,
பல்வேறு உருவின் காயும், பழனும்,
கொண்டல் வளர்ப்பக் கொடிவிடுபு கவினி,
மென்பிணி அவிழ்ந்த குறுமுறி அடகும்,
அமிர்து இயன்றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்,
புகழ்ப்படப் பண்ணிய பேர் ஊன் சோறும்,
கீழ்செல வீழ்ந்த கிழங்கொடு பிறவும்,
இன்சோறு தருநர் பல்வயின் நுகர"

(மதுரைக். 526–535)

என்னும் பாடலடிகளின் மூலம், மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளும்

பல்வேறு உருவின் காய்களும், இலைக்கறிகளும், கற்கண்டும், இறைச்சிச்சோறும், கிழங்கு, இனிய பாற்சோறும் வழங்குகின்ற அறச்சாலைகள் பல மதுரை நகரில் இருந்தன என்பதனை அறிய முடிகின்றது.

> **"பலாவுடன், பலாவின் சுளையும், மாங்கனியும், காயும், பழனும், கடிகையும், ஊன்சோறும், கிழங்கொடு இன்சோறு பிறவும் தருநர் எழுப்பும் ஓசை"[15]**

என்று வி. நாகராசன் குறிப்பிடுகின்றார்.

மதுரையின் அறச்சாலைகளில் மேற்குறிப்பிட்ட உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு விருந்தோம்பப்பட்டன எனவும், உணவினை உண்ணும் மக்களால் அறச்சாலையில் ஓசை ஏற்படுகின்றது எனவும் அறியப்படுகின்றன.

'கொழுங்கொடி வள்ளிக் கிழங்கு வீழ்க்கும்மே'

(புறம். 109)

'ஊன்துவை அடிசில்'

(பதிற்று. 45)

'கேழ் ஊன் குறை கொடுவல்சி'

(மதுரைக். 141)

'பைஞ் நிணம் பெருத்த பசுவெள் அமலை'

(புறம். 177)

என்னும் பாடலடிகளின் மூலம் விருந்தோம்பல் திறம் அறியப்படுகின்றது.

"செல்வத்துப் பயனே ஈதல்" என்ற உணர்வு புலவர்களால் மன்னர்களுக்கு அவ்வப்போது உணர்த்தப்பட்டுள்ளதை சங்க இலக்கியங்களின் வாயிலாகக் காணமுடிகின்றது.

> ***"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி***
> ***ஒருகுடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்***
> ***நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்***

கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே"

(புறம். 189)

என்ற பாடலடிகள் மூலம், உண்பது, உடுப்பது ஆகிய செயல் இரண்டிலும் அரசனும் ஆண்டியும் ஒன்றே என்பது புலனாகின்றது. பெற்ற செல்வத்தால் செய்ய வேண்டுவது ஈதலறமே என்பதை உலகோர்க்கு மேற்கூறப்பட்ட பாடல் உணர்த்துகின்றது. செல்வத்தைப் பெற்ற பயனால் ஈதலாகிய காரியத்தைச் செய்வதால் அறம் பொருள் இன்பமாகிய இம்மைப்பயனும், வீடாகிய மறுமைப் பயனும் கிடைக்கும் என்பதனையும் அறிய முடிகின்றது.

தொகுப்புரை

- பதிற்றுப்பத்து, புறநானூறு, மதுரைக்காஞ்சி ஆகிய சங்கப் புறநூல்களிலெல்லாம் சேர சோழ பாண்டியராகிய மூவேந்தர், குறுநிலமன்னர் ஆகியோரின் 'விருந்தோம்பல்' தன்மை, குறித்த பாடல்களைப் புலவர்கள் பலர் பாடியுள்ளனர்.

- புலவர், பாணர், கூத்தர், பொருநர், விறலியர், முதலானோர் அரசர்களிடம் ஆதரவு பெற்று வாழ்ந்த கலைஞர்கள். இவர்களே அக்காலத்தில் கல்வி கற்றுச் சமுதாயத்தில் இன்றியமையா அங்கத்தினர்களாக இருந்துள்ளனர். அரசர்களும் கல்வியைக் காப்பதற்காக இத்தகைய கலைஞர்களுக்கு உணவளித்துப் பொருட்களை வாரி வழங்கியுள்ளனர்.

- அரசர்கள் தம்மிடம் வந்த இரவலர்களுக்கு இறைச்சியுணவினை அளித்துள்ளனர். வெற்றி பெற்ற அரசன் ஊன்துவையடிசில் போன்ற உணவினைப் பெருவிருந்தாக வீரர்களுக்கு அளித்துள்ளான்.

- அரசர்களும் புலவர்கள் தங்களை விட்டு வேறு இடம் செல்லாத அளவிற்கு அவர்களுக்குப் பல சிறப்புகள் செய்து விருந்து கொடுத்து ஆதரித்தனர்.

- இரவலர்களின் கிழிந்த உடையானது பறவையின் சிறகைப் போலவும், நீரில் உள்ள பாசியைப் போலவும், நைந்து கிழிந்து இருந்தது. இத்தகைய உடைகளைக் களைந்து பட்டாடை, மூங்கில் உட்புறத்தே அமைந்த தோல் போன்ற மெல்லிய ஆடை போன்றவற்றை அரசர்கள் அவர்களுக்கு அளித்தனர். பாடினிக்கும், விறலிக்கும், பொன்னால் செய்யப்பட்ட அணிகலன்களைக் கொடுத்தனர்.

- இல்லற மகளிர் தம்மிடம் மிகக் குறைந்த அளவிலான உணவுப் பொருட்கள் இருப்பினும் அதனைச் சமமாகப் பகிர்ந்து விருந்தினர்க்கு அளித்தனர்; கணவன் வேந்து விடு தொழிலுக்குச் சென்ற நிலையில் பாணர்கள் தம் வீடு தேடி வந்தாலும் அவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் தம்மிடம் உள்ள உணவுப் பொருட்கள் கொண்டு விருந்தோம்பினர் தலைவியர்.

- விருந்தினர் வரவேண்டும் என்று நடுகல்லினைத் தொழுதுள்ளனர். வறுமையிலும் விருந்திடத் தன்னிடம் உள்ள வாள், கேடயம் போன்றவற்றை அடகு வைத்தனர்.

- ஒருநாள், இருநாள் மட்டுமன்று, எத்தனை முறை அரசர்களைக் காணச் சென்றாலும் அவர்கள் முதல் நாள் விருந்தோம்பியதைப் போலவே பிறநாட்களும் விருந்தோம்பி அனுப்பியுள்ளனர்.

- இரவலர்கள் மட்டுமல்லாது தம்மிடம் எவர் வந்தாலும் அவர்களுக்கு உணவளித்து அனுப்பும் பழக்கம் இருந்துள்ளது. பஞ்ச காலத்திலும் இரவலர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் வயிறு நிறைய உணவளித்து விருந்தோம்பி உள்ளனர்.

- அரசர்களைக் காணச்செல்லும் வழியெங்கும் பழமரங்களை வைத்திருந்தனர். பழமரங்களில் உள்ள பழங்களானது கலைஞர்களின் களைப்பினைப் போக்கியது.

- விருந்தினருக்கு அளிக்கப்படும் உணவானது இறைச்சி கலந்ததாக இருந்தது. இறைச்சி உணவினைச் சமைக்கப் பெரிய அட்டிற்சாலைகள் வைத்திருந்தனர். இறைச்சியைத் தாளிதம் செய்யும் புகையானது 'ஆவுதிப்புகையாக' இருந்தது. எப்பொழுதும் விருந்தினர் வந்துகொண்டிருப்பதால் இறைச்சியைத் தாளிக்கும் ஓசையானது அலையோசைக்குச் சமமாக விளங்கியது.

- விருந்துணவில் 'கள்' முக்கிய இடம் வகித்தது. அரசர்கள் விடியற்காலையிலும், மாலையிலும் கள்ளினைக் கொடுத்துள்ளனர். இரவலர்கள் கள்ளுண்டு தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர்.

- நீண்ட நாள் வாழச் செய்யும் அரிய கனி கிடைத்தாலும் அதனை உண்ணாமல் தன்னிடம் வரும் புலவர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தனர். புலவர்களுக்கு மட்டும் விருந்திடவில்லை. புலவனோடு சேர்ந்திருந்த 'கல்விக்கும்' விருந்து கொடுத்து மகிழ்ந்தனர்.

- அரசர்கள் வானம் நாணும் படி இரவலர்களுக்குப் பொன்னையும், பொருட்களையும் வாரி வாரி வழங்கினர். தேர், யானை, குதிரை போன்றவற்றையும் விருந்து முடிந்த பின்னர்க் கொடையாகக் கொடுத்தனர்.

- விருந்தினர்க்குக் களாப்பழம், விளாம்பழம், பலாப்பழம், தேன், பால், சுட்ட முயல் கறி, ஊன்துவையடிசில், பொறி கறிகள் போன்றவற்றை உணவுப் பொருள்களாகக் கொடுத்தனர்.

- சங்ககாலத்தில் பல்வேறு விழாக்கள் கொண்டாடப்பட்டமையை அறிய முடிகின்றது. விழாவின்போது பல அழகிய கொடிகள் கட்டப்பட்டிருந்தன. அந்நாட்டில் எண்ணற்ற அறச்சாலைகள் இருந்தன. இந்த அறச்சாலைகளில் பலா, மா, வாழை, காய்கள், கனிகள், கற்கண்டு, இறைச்சிச் சோறு, கிழங்கு போன்றன விருந்தாகக் கொடுக்கப்பட்டன. இவ்விடத்தில் விருந்து உண்ணுவோரின் ஆரவாரம் மிகுந்து இருந்தது. விருந்தினர்கள் அக்காலத்தில் திண்ணைகளில் குழுமி இருந்தனர். இல்லங்களும் சிறந்த அறச்சாலைகளாக விளங்கின.

- இவ்வாறாக விருந்தோம்பலின் இன்றியமையாமையையும் மேன்மையும் குறித்துச் சங்க இலக்கியப்பாடல்கள் பல குறிப்பிட்டுள்ளமையை இவ்வியலின் வாயிலாக தெள்ளத் தெளிவாக உணர முடிகின்றது.

XXXXX

அடிக்குறிப்புகள்

1. 'தொல்.பொருள்'. நூ. 125 (இளம்பூரணர் உரை).
2. தண்டாயுதம், இரா., 'சங்க இலக்கியம் எட்டுத்தொகை', ப. 123.
3. நீலாமணி, மு., 'தமிழ்-தமிழ் அகராதி', ப. 754.
4. 'மணிமேகலை தமிழ்ச்சொல் அகராதி', பக். 485 - 486.
5. பாலசுப்பிரமணியன், கு.வெ., 'சங்க இலக்கியத்தில் புறப்பொருள்' ப. 13.
6. பழனிச்சாமி, செ., 'புறநானூற்றில் தமிழ்ப்பண்பாடு', ப. 34.
7. இலக்குவனார், சி., 'இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்', ப. 36.
8. பாலசுப்பிரமணியன், கு.வெ., 'சங்க இலக்கியத்தில் புறப்பொருள்', ப. 27.
9. மோகனராசு, கு., 'தொல்காப்பியமும் திருக்குறளும் ஓர் ஒப்பாய்வு', ப. 144.
10. ஜம்புலிங்கம், அ., 'சங்க கால வேந்தர் சமுதாயப் பணி', ப. 53.
11. இராமநாத செட்டியார், லெ.ப.கரு., 'சங்கத் தமிழர் வாழ்வு', ப. 126.
12. ஆலிஸ், அ., 'பதிற்றுப்பத்து-மூலமும் உரையும்' - முன்னுரை, ப. 38.
13. சாமி சிதம்பரனார், 'எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும்' ப. 196.
14. ஆலிஸ், அ., 'பதிற்றுப்பத்து மூலமும் உரையும்', ப. 53.
15. நாகராசன், வி., 'பத்துப்பாட்டு இரண்டாம் பகுதி (மூலமும் உரையும்)', (மதுரைக் காஞ்சி) ப.132.

இயல் - நான்கு

சங்க இலக்கிய விருந்தோம்பல் உணர்த்தும் மனிதநேயம்

இயல் – நான்கு

சங்க இலக்கிய விருந்தோம்பல் உணர்த்தும் மனிதநேயம்

ஒரு மனிதன் தன்னைச் சார்ந்த மற்றொரு உயிரை நேசிக்கும் பண்பே மனித நேயத்தினை வெளிப்படுத்துகின்றது. மனிதன் மற்றொரு உயிரை நேசிக்காவிட்டால் மனித நேயமானது முற்றிலும் அழியும். இன்றைக்கும் உலகம் இயங்குகின்றது என்றால் அது தன்னலம் கருதாப் பிறநலம் கருதும் மனிதநேயத்தினாலே என்பதை அறிவோம்.

மனிதன் தனக்குக் கிடைத்ததை அப்படியே தானே அனுபவித்துக் கொள்ளாமல் அதனைப் பிறர்க்குப் பகிர்ந்து அளித்து இன்புற்று வாழ்ந்தான். ஒன்றனைப் பகிர்ந்து வாழும் வாழ்க்கையானது தன்னல நோக்கினை அழித்துவிடுகின்றது; பொதுநலம் வளர்ந்து சமுதாயத்தினை உயர்வடையுமாறு செய்கின்றது. தானும் தன்னைச் சார்ந்தோரும் வளர்வதற்குரிய நல்ல பண்புகளைக் கற்றுக்கொண்டான் மனிதன். நல்ல பண்புகளே மாசற்ற மனிதநேயத்தினை வெளிப்படுத்துகின்றன.

"பசி வந்தால் பத்தும் பறந்து போகும்" என்னும் பழமொழி மனித உணர்ச்சியின் உச்சநிலையைக் காட்டுகின்றது. இவ்வுணர்வின் ஆளுமையை அறிந்ததால்தான் அமுதமாயினும் பழஞ்சோறாயினும் பகிர்ந்துண்ணும் எண்ணம் மனிதனுக்குத் தோன்றியது. பகுத்துண்ணும் பண்பே மனிதன் மற்றொரு உயிரை நேசிக்கக் காரணமாக அமைந்த முதற் பண்பு எனலாம். பகுத்துண்ணும் பண்பே மனித நேயத்தினை வெளிப்படுத்தும் இன்றியமையாப் பண்பாகின்றது . மனிதநேயத்தின் மூலம்

'விருந்தோம்பல் பண்பு' மக்களிடையே தொன்றுதொட்டு இன்றுவரை நிலவிவருகின்றது. இப்பண்பின் மூலம் பசித்த வயிறு இல்லாத நிலையை உருவாக்க முற்பட்டனர். உழவுத் தொழிலின் மூலம் உணவுப் பொருட்களைப் பெருக்கினர். உணவுப் பொருட்களைக் கொண்டு தம்மை நாடி வரும் புதியவர்களுக்கு (விருந்தினர்களுக்கு) உணவு கொடுத்து மகிழ்ந்தனர்.

சங்க காலத்தில் நீண்ட பயணம் மேற்கொள்ளும்போதும் தங்குவதற்கும், உணவு உண்ணுவதற்கும் முன்பின் அறிமுகம் இல்லாதவர் வீடுகளுக்குச் சென்று தங்கி உணவு உண்டு இளைப்பாறினர். பிறகு தங்களின் பயணத்தினைத் தொடர்ந்தனர்.

மக்கள் தங்கள் வீட்டிற்கு வரும் புதியவர் (விருந்தினர்) எவராகிலும் அவர்களை இன்முகத்துடன் வரவேற்று உண்டி முதலியவற்றைக் கொடுத்து உபசரித்து அனுப்பி வைத்தனர். இவ்வாறு விருந்தோம்பலானது மக்களிடையே காலம்காலமாகத் தொன்றுதொட்டு வந்துள்ளது. இவ்விருந்தோம்பல் பண்பானது மனிதநேயத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. இப்பண்பினை,

> **"மனிதநேய வானத்தின் முழு நிலவாகத் திகழ்வது விருந்தோம்பலாகும். சிறந்த உள்ளங்கள் பரிசுத்தமானவை, அத்தகைய பரிசுத்தமானவர்களாலேயே விருந்தினரை அன்புடன் உபசரிக்க முடியும்"**[1]

என்று அலெக்ஸ் இருதயராசு குறிப்பிடுகின்றார்.

மனிதநேயம் இல்லாவிட்டால் இத்தகையதொரு அரியபண்பு வெளிப்பட்டே இருக்காது. தமிழர்கள் 'விருந்தோம்பல்' பண்பினை மேற்கொண்டொழுகுவதால் இன்று உலகநாடுகள் பலவும் போற்றும்படியாக வாழ்கின்றனர். சங்க இலக்கியங்கள் முழுவதுமே

மனிதநேயக் கருத்துகள் விரவிக்கிடக்கின்றன. அதில் விருந்தோம்பல் உணர்த்தக்கூடிய மனிதநேயத்தினைக் குறிப்பிடும் பாடல்கள் சில இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன.

மனிதனைப் போற்றும் மனித நேயமே 'மானிடத் தத்துவம்' ஆகும். சங்க இலக்கியங்களில் உள்ள மனிதநேயத்தினால் விளைந்த விருந்தோம்பல் பண்பானது எவ்வாறெல்லாம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்குப் பின்வரும் சான்றுகளைக் காணலாம்;

திருக்குறளில் அன்புடைமை, அருளுடைமை, ஒப்புரவு, ஈகை, வாய்மை, கண்ணோட்டம், சான்றாண்மை, குடிமை, பண்புடைமை ஆகிய அதிகாரங்கள் மனித நேயத்தின் ஊற்றாக வெளிப்பட்டுள்ளன. இவற்றுள் அன்புடைமை, அருளுடைமை, ஈகை, கொடை, பண்புடைமை போன்றவை விருந்தோம்பலுக்குத் தொடர்புடையவனவாக அமைந்துள்ளன.

சங்ககால மக்கள்தம் வாழ்க்கையில் விருந்தோம்பல் சிறப்பிடம் பெற்றதையும், அதனை வெளிப்படுத்தும் நிலைகளையும் ஆராய்ந்து தருவதாக இவ்வியல் அமைந்துள்ளது.

மனிதநேயம் சொல் விளக்கம்

மனிதநேயம் என்பது மனிதருக்கு மனிதர் இருக்கவேண்டிய தொடர்புறவு பற்றிய ஒருவிதமான மனநிலை ஆகும். மனிதநேயம், மனித உணர்வுகளின் அடிப்படையில் தோன்றுவது. காலம், இடம், சூழல் ஆகிய பின்னணிகளில் மனிதன் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்பதற்கான வரையறையைக் கண்டு அவன் மீது இரக்கப்பட்டு, அவன் துன்பத்தைக் களைந்திட விரைவதும் மனிதநேயமே. அது மட்டுமின்றி, அதைவிட மிகப் பெரிய பரந்துபட்ட ஒரு நெகிழ்ச்சியும் மனிதநேயமேயாகும். மனிதநேயம் என்ற இச்சொல்லுக்குப் பொருளைப் பல்வேறு அகராதிகள்

பல்வேறு விளக்கங்களைத் தருகின்றன, சான்றோர் பலரும் இதற்கான வரையறையைக் கொடுக்க முற்பட்டுள்ளனர்.

> **"மனிதநேயம் என்ற சொல்லுக்கு இணையாக இத்தாலி மொழியிலுள்ள Humanista என்ற சொல்லினைக் குறிக்கலாம். Humain என்னும் பழைய பிரெஞ்சுமொழிச் சொல்லிலிருந்து Human என்ற ஆங்கிலச் சொல் தோன்றியது. Humanus என்னும் லத்தீன் சொல்லிலிருந்து Humain தோன்றியது. பதினெட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் Humanism, Humanity, Humanitration போன்ற சொற்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. Humainsm என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக மனிதநேயம் என்னும் சொல் குறிப்பிடப்படுகிறது"[2]**

ஆங்கிலத் தமிழ் அகராதியில் ஏ.சி. செட்டியார், மனிதநேயம் என்பதற்கு

> **"மனித இன நலக்கோட்பாடு, மனித உலக வாழ்க்கை இயல், மனிதப் பொதுமை நல இயல், மனித இன பொதுச்சமய அமைதி, மனித மனஇயல், பண்பாய்வுத்துறை, பண்டைய கிரேக்க உரோம கலை இலக்கியப்பண்பு"**

என்று விளக்கமளிக்கிறார்.[3]

> **"மனிதனை மனிதன் மதித்துச் செலுத்தும் அன்பே மனிதநேயம்"[4]**

எனக் கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில் மனிதநேயம் என்னும் சொல் குறித்த விளக்கம் காணப்படுகின்றது".

> **"மனித நேயம் என்பது மனிதனை மனிதனாக மதிக்கும் மாண்பு"[5]**

என்று அ.கி. மூர்த்தி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

> **"Humane - இரக்கமுள்ள, Humanitarian Grounds - மனித**

அன்பு சார் காரணம் அல்லது ஆதாரங்கள், மனித நேயக்கூறுகள்"[6]

என்று ஆங்கிலத்தமிழ் அகராதி ஒன்று விளக்கம் தருகின்றது.

"தன்னை நேசித்தல், பிறமனிதர்களை நேசித்தல், பிற உயிர்களை நேசித்தல் என்ற மூன்று பொருள்களும் இணைந்து நிற்கும் பொழுதே மனிதநேயம் என்னும் இச்சொற்பொருள் முழுமைபெறும் எனத்தோன்றுகிறது என்பர்"[7]

கு. பகவதி அவர்கள் குறிப்பிடுகின்றார்.

"சமுதாயத்தில் தனிமனிதன் ஒருவரின் ஒரு செயல் எல்லாவிதங்களிலும் யாரேனும் ஒருவனுக்கோ அல்லது ஒன்றிற்கோ நன்மை விளையும் பொருட்டோ, நீடித்த இன்பம் கிடைக்கும் பொருட்டோ, துயர் களையப்படும் பொருட்டோ அமையுமென்றால் அது மனிதநேயத்தின் பாற்பட்டது"[8]

என்று ஆ. கார்த்திகேயன் குறிப்பிடுகின்றார். மனித நேயம் என்பது

"உயர்திணை, அஃறிணை என பகுத்துப் பாராமல் நேசிக்கக்கூடிய ஒட்டு மொத்தமான மனித நேயத்தினை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன"[9]

என்று கு. சுப்பையாபிள்ளை குறிப்பிடுகின்றார்.

"பெறற்கரிய பிறவியில் நாம் செயற்கரிய நல்ல பல செயல்களைச் செய்தல் வேண்டும். அதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது மனிதநேயமே ஆகும். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் அன்புள்ளங்களில் சுரப்பதுதான் மனிதநேயம் என்றும், மனித நேயம் என்பது மனிதன் கொண்டிருக்கும் நேயத்தைக் குறிக்கும். மனிதன் மனிதனிடத்துக் காட்டும் நேயத்தைக் குறிக்கும். மனிதன் மற்ற உயிர்களிடத்துக் காட்டும் நேயத்தையும் குறிக்கும்"[10]

என்று இரா. கமலா அவர்கள் குறிப்பிடுகின்றார்.

> **"மனித நேயம் என்பது நாடு, இனம், மொழி, என்ற எல்லைகளைக் கடந்து நிற்பது; மனித இனத்தின் நாகரீகப் பண்பாட்டு வளர்ச்சியோடு பிணைந்து நிற்பது. மனித நேயம் என்பது ஓர் உயரிய பண்பாடு. இப்பண்பாட்டினால் மக்களிடையே அன்பு வளரும்; ஏற்றத்தாழ்வுகள் நீங்கும்; ஒப்புரவு நிலைக்கும் மனித ஆற்றல்கள் உயரும்; மனித மதிப்புகள் (Human Values) போற்றப்பெறும்; இனம், மொழி, நிறம், மதம் ஆகியவற்றால் வேற்றுமைப்பட்டுக் கிடக்கும் மக்கள் ஒன்றுபடுவர்; உலகமக்களிடையே ஒற்றுமை ஓங்கும்; மானுடம் போற்றுவதே மனிதநேயம் எனப்படும்"[11]**

என்று பேராசிரியர் க. ராதா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

> **"மனிதநேயம் என்பது ஒரு மனிதன், மற்றொரு மனிதன் மீது அன்பு செலுத்துவதாகும்; கருணைகாட்டுவதாகும். முடிந்தமட்டிலும் பிறருக்கு நாம் உதவி செய்பவராகவும், நன்மை புரிபவராகவும் இருக்கவேண்டும். 'நன்மையின் பாலும், பக்தியின் பாலும் (உங்களில்) ஒருவருக்கொருவர் (ஒத்துழைப்பு) உதவிகரமாக இருப்பீர்களா என்று இறைவன் திருக்குரானில் மனிதநேயத்தின் மகத்துவத்தைப்பற்றித் தெளிவாகக் கூறி இருக்கின்றான். மேலும், யார் மனிதர்களுக்கு இரக்கம் காட்டவில்லையோ அவர்கள் மீது இறைவன் இரக்கம் காட்ட மாட்டான் என்று இறைத்தூதர் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மனிதநேயத்தின் மாண்பினைப் பற்றி விரிவாகக் கூறியிருக்கின்றார்கள்"[12]**

என்று ஹாஜி எஸ். அப்துல்காதர் குறிப்பிட்டுள்ளார்.

மதத்தில் மனிதநேயம்

இந்து, இசுலாமியம், கிறித்துவம் ஆகிய மூன்று மதங்களுமே மனிதநேயத்தினைக் குறித்துக் குறிப்பிடுகின்றன. மனிதனை மனிதன்

நேசிக்க வேண்டும்; பிற உயிர்களுக்குத் துன்பம் தருதல் கூடாது; முடிந்தவரை உலகில் உள்ள உயிரினங்களுக்கு உதவி புரிதல் வேண்டும்; 'நன்மையும் தீமையும் பிறர்தர வாரா' என்பதைப் போல நன்மை செய்தால் மறுபிறப்பில் நன்மை நம்மை வந்தடையும் என்று அனைத்து மதங்ககளுமே குறிப்பிடுகின்றன. மதங்கள் கூறக்கூடிய நற்கருத்துகள் வேறு வேறு வழிகளில் கூறப்பட்டாலும் சொல்லும் கருத்தின் உண்மை ஒன்றாகவே உள்ளன.

பகவத்கீதை

> **"அஞ்சாமை, உள்ளத் தூய்மை, ஞானயோகத்தில் உறுதி, ஈகை, தன்னடக்கம், யோகம், சாத்திரம் படைத்தல், தவசு, நேர்மை, தீங்கு இழையாமை, உண்மை, சினமின்மை, துறவு, அமைதி, கோள் சொல்லாமை, உயிர்களிடத்து இரக்கம், பிறர் பொருள் விரும்பாமை, இனிமை, நாணம், மனம் சலியாமை, தைரியம், பொறை, மனஉறுதி, தூய்மை, வஞ்சகமின்மை, செருக்கின்மை ஆகிய இவைகளே தெய்வ சம்பத்துடன் பிறந்தவனுக்கு இயல்பாகின்றன என மனித மாண்புகளை எடுத்துரைக்கிறது பகவத்கீதை"[13]**

என்று ஆர். சுப்புலட்சுமி குறிப்பிடுகின்றார்.

இசுலாம்

மனித சமூகத்திற்கு இறைச்செய்தியைச் சொல்ல அவதரித்தவர் முகமது நபி. இறைத்தூதரான நபிகளின் மொழிக் கூறுகளில் மனிதநேயம் இழையோடுகின்றது. மனிதர்கள் அனைவரின் வாழ்வும் செம்மைப்பட இறைவனின் வழி நடத்துதலின் பேரில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர் நபிகள் நாயகம் ஆவார்.

> **"உண்மை பேசுங்கள்; கொலை, கொள்ளைகள் நடத்துவதை விட்டுவிடுங்கள்; அனாதைகளின் சொத்துகளை அபகரிக்காதிருங்கள், அண்டை வீட்டாருக்கு உதவுங்கள், விபசாரம் மற்றும் தீய பேச்சுகளை விட்டு விலகியிருங்கள் போன்ற கருத்துக்களை இசுலாம் குறிப்பிடுகின்றது".[14]**

என்று ஆ. கார்த்திகேயன், 'மனித நேயமும் அண்ணல் நபி (சல்) அழகிய வரலாறும் என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

கிறித்துவம்

மனித வாழ்க்கையின் நோக்கம் பிறருக்காக வாழ்வதே என்பதாகும். அவ்வாறு வாழ்ந்து காட்டியவர் இயேசுபெருமான். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டச் சொன்ன அகிம்சைவாதியாவார். ஆதிக்க வெற்றிக்குப் பதில், சேவை உணர்வுகள் கொண்டு ஆட்சிசெய்யும் சமுதாயத்தை உருவாக்குவதே அவரது வாழ்வின் நோக்கம். அன்பு நெறியே அவரது போதனையின் திரட்டு.

> **"தீட்டு, தீண்டாமை பழக்க வழக்கங்களை உடையவர் யூதர். அதனால் யூதரல்லாதோருடன் சமபந்தி என்பதை அவர்கள் அறியாதவர்கள். ஆனால் இவர்கள் கிறித்துவத்தைத் தழுவிய உடனே இத்தகைய செயல்களை வலிந்து விரட்டினர். யூதரல்லாத கிறித்துவருடன் யூதக் கிறித்துவர்கள் சமத்துவ உறவு கொண்டாடி மகிழ்ந்தனர். ஏழை பணக்காரன், அடிமை, ஆண்டான் ஆகிய பாகுபாடும் வெகுவாகத் தகர்க்கப்பட்டது. இனவர்க்கம் சமயம் கலாச்சாரம் இன்னபிற பாகுபாடுகளுக்கு முடிவு கட்டப்பட்டது. சமத்துவம், நீதி, அன்பு ஆகிய விழுமங்களுக்குக் கட்டுண்டு புதிய மானுடம் தோன்றியது"[15]**

என்று அருள்திரு தியான் சந்திகார் தினமணி நாளிதழில் 25.12.01 அன்று குறிப்பிட்டிருக்கின்றார்.

மனிதர்களை நல்வழிப்படுத்தும் மதங்கள் வேறானாலும் அவை குறிப்பிடும் கருத்துக்கள் ஒன்றே. இதனையே திருமூலர், **'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'** என்று குறிப்பிடுகின்றார். இதன் மூலம் 'இறைவன் ஒருவனே' என்ற கருத்தானது இதில் முன்வைக்கப்படுகின்றது. எல்லா மதமும் மனிதநேயத்தினையே வலியுறுத்துகின்றன என்பதனை அறிய முடிகின்றது.

பண்டைய காலத்தில் பெரும்பாலும் விருந்தினராக வந்தவர் புலவர், பாணர், பொருநர், விறலி, கூத்தர் முதலியோர் ஆவார். இவர்கள் ஆடல் பாடல்களில் வல்ல கலைஞர்கள் எனினும் வறுமையில் வாடினர். இவர்களின் துன்பத்தை அரசர்கள் தீர்த்தனர். இக்கலைஞர்கள் தங்களின் திறமையைத் தம்மை ஆதரிக்கும் அரசர்களிடம் காட்டிப் பொன், பொருள் முதலியன பெற்று வாழ்க்கை நடத்தினார்கள். இக்கலைஞர்கள் தம்மை ஆதரிக்கும் அரசனைக் காண நீண்ட தூரப் பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்ததால் அவர்களுக்குத் தேவையான உணவு, உறைவிடம் முதலியன மக்களால் அளிக்கப்பெற்றன.

இக்கலைஞர்கள் தனியாகவும், ஒரு கூட்டமாகவும் செல்வது வழக்கமாக இருந்துள்ளது. பல ஊர்களைக் கடந்து சென்று மன்னர்களின் ஆதரவுபெற்று வாழ்ந்தனர்.

கலைஞர்கள் தாங்கள் கற்ற கலைத்திறமையைக் கொண்டு வாழ்வு நடத்தினார்கள். தங்களை விரும்பாத மன்னனை நாடாமல் இருந்தனர் என்பதனையும் அறிய முடிகின்றது.

"சங்ககால அரசர்கள் புலவர்களைப் போற்றி வாழ்ந்தனர். அவர்களுக்கு வரையாது வழங்கினர். கூத்தர், பாணர்,

பொருநர், விறலியர் ஆகியோரைப் புரத்தலைப் பாண்கடன் என்று கொண்டனர்"[16]

என்று க. கைலாசபதி குறிப்பிடுகின்றார்.

புலவர்கள் அரசர்களைக் காண்பதற்கு முன் ஈரும் பேனும் நிறைந்த தலையையும், வியர்வையால் நனைந்து கிழிந்த ஆடையையும் அணிந்திருந்தனர். இத்தகைய வறுமை நிலையில் உள்ள புலவர்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களின் கிழிந்த ஆடையை மாற்றி நல்ல பூ வேலைப்பாடு மிக்க ஆடையை அளித்தனர் மன்னர். பின்னர் அவர்களுக்குப் பசி தீர ஆட்டிறைச்சி உணவினை அளித்துள்ளனர்.

விருந்துணவில் மது முக்கிய இடம் பெற்றிருந்தது. பல நாள் புலவர்கள் தங்கி விருந்துண்டனர். அவர்களை என்றும் தலைநாள் போன்றே கவனித்தனர். பிறகு அவர்களைப் பிரிய மனமில்லாமல் வருத்தத்தோடு பிரிந்தனர். கலைஞர்களுக்குத் தேவையான பட்டத்து யானை தேர், பொன் போன்ற பல்வேறு பொருட்களைத் தேவையான அளவு வழங்கி வழி அனுப்பி வைத்தனர் மன்னர். கலைஞர்களுக்கு மன்னர் விருந்தோம்பல் செய்து பரிசுப்பொருட்களைக் கொடுத்து அனுப்பியுள்ளனர். புலவர்கள் வறுமையால் வாடியபோது வள்ளல்கள் அவர்களுக்குச் செல்வத்தை அளித்தனர். அவர்கள் அச்செல்வத்தைப் பெற்று வளமான வாழ்க்கை வாழும்போது, அச்செல்வத்தை அப்படியே வைத்துக்கொள்ளாமல் அதனைத் தனது சுற்றத்தாருக்கும் தன்னைப்போல் வறுமையில் வாடுவோர்க்கும் வாரி வழங்கினர். பிறருக்குக் கொடுக்கும் இப்பண்பு அவர்களின் பரந்த உள்ளத்தைக் காட்டுகின்றது. தன்னைப்போன்று பிறரை நேசிக்கும் அவர்களின் உள்ளமானது உயர்ந்த மனிதநேயத்தினை வெளிப்படுத்தியுள்ளது.

தொல்காப்பியத்தில் மனிதநேயம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை முதலான ஐந்து நிலங்களிலும் நடைபெற்ற குடும்பங்களில் ஒரு குடும்பத்தின் இன்பவாழ்வை விவரித்து வந்த தொல்காப்பியர்,

"காமம் சான்றக் கடைக் கோட் காலை
ஏமம் சான்ற மக்களோடு துவன்றி
நயம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

(தொல். நூ. 1138)

என்னும் நூற்பாவில் வாழ்க்கையின் பயன் எவை? எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆண், பெண், இருவர் வாழக்கூடிய வாழ்க்கையின் விளைவாகப் பிறந்த மக்கள் உற்றாரும் உறவினருமாகி நல்லவர்களின் தொடர்பு, அதனால் சிறந்தது பயிற்றலாகிய புதிய வினைப்பாடு, என்னும் இவற்றின் அடிப்படையினில் வளர்த்துக் காட்டப்படுவதுதான் முறையான மனிதநேயம். இரண்டு பேருக்காக வாழத் தொடங்கியவர்கள் உலகத்துயிர் அனைத்திற்காகவும் வாழவேண்டும் எனும் கோட்பாட்டை இலக்கணமாக வகுத்து தந்துள்ளதை அறிய முடிகின்றது.

இல்வாழ்க்கையின் அடிப்படைகளில் ஒன்று மனிதநேயமாக அமைந்துவிடுகின்றது. அந்த வாழ்க்கையின் நடைமுறை ஒவ்வொன்றும் மனிதநேயத்தின் அடிப்படையில் அமைந்துள்ளதை,

"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்று ; தன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே"

(நற். 210)

என்னும் நற்றிணைப் பாடலடிகள், உண்மையான செல்வம் எது? என்பது குறித்துக் கூறுகின்றது. தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையரை முயங்கியமையால் அவள் சினமுற்றாள்; அவளது சினம் தணியத் தலைவன் தோழியை அணுகினன்; அவளும் தலைவி ஊடல் நீங்குமாறு, 'தலைவனைப் பெற்ற அனைத்தும் செல்வமாகாது' என்றும் 'அடைந்தாரைக் காத்தலே செல்வமாகும்' என்றும் தலைவனுக்கு அறிவுறுத்துகிறாள். மனிதன் வாழ்க்கை நோக்கத்திற்கே அரியதோர் அடிப்படை இலக்கணத்தை வகுத்துத் தருகின்றது. இதுவும் மனிதநேய அடிப்படையில் அமைந்துள்ளது.

பகுத்துண்ணும் மனிதநேயம்

சங்ககாலத்தில் வாழ்ந்த நானில மக்கள் தங்களுக்குக் கிடைத்த பொருட்களைக்கொண்டு தம்மிடம் வரும் விருந்தினர்களை விருந்தோம்பினர். குறைந்த உணவே இருந்தபோதிலும் அதனைப் பகிர்ந்து உண்ணும் மனப்பக்குவம் கொண்டிருந்தனர்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை"

(குறள். 322)

என்பது வள்ளுவர் வாக்கு. உணவைப் பிறருக்கும் பகிர்ந்து கொடுத்தல், எல்லாவற்றிலும் தலையாய பண்பாகும் என்கிறார்.

தனக்கு அரியபொருள் கிடைத்தாலும் அதனைப் பிறர்க்குக் கொடுக்காது தனித்துண்ணும் செயல் தகுதியற்றதாகக் கருதப்பட்டது.

வறுமையில் வாடிய புலவர் தங்களைச் சார்ந்துவாழும் மக்களுக்கு வள்ளல்களிடம் பெற்றுவந்த பரிசுப்பொருட்களைத் தாம் மட்டும் அனுபவிக்காது அனைவருக்கும் கொடுக்கும் பண்பானது பெருமைக்குரியதாய் அமைந்துள்ளது என்பதனை,

"பெற்றது மகிழ்ந்து, சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு, கூம்பாது வீசி,"

(புறம். 47)

என்னும் இப்பாடல் வழி அறிய முடிகின்றது. தம்மிடம் உள்ளதைப் பிறரோடு பகிர்ந்துண்டு வாழ்வதற்கென்றே பலவற்றையும் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனையே ஆண்மை எனக் கருதிச் சங்கத்தமிழர் வாழ்ந்தனர் என்பதை,

'பகுத்தூண் தொகுத்த வாண்மை'

(பதிற்று. 3ஆம் பத்து, 38 : 14)

என்று பதிற்றுப்பத்து மொழிகின்றது.

அரசர்களும் தம்மிடம் உள்ளவற்றைப் பகுத்துண்டு வாழும் பண்புடையராக விளங்கியதைப் போல, மக்களும் தம்மிடம் உள்ளவற்றைப் பகுத்துண்டு வாழ விரும்பினர். இதனையே,

"செந்நீர்ப் பொதுவினைச் செம்மல் மூதூர்த்
தமதுசெய் வாழ்க்கையின் இனிய துண்டோ"

(நற். 130)

என்னும் நற்றிணைப் பாடல் உணர்த்துகின்றது.

பகிர்ந்துண்ணும் வாழ்க்கையைப் புலவர்கள் மற்றும் அரசர்கள் விரும்பியதைப் போலவே மக்களும் அப்பண்பினைப் பின்பற்றி வாழ்தலையே சிறப்புடையதாகக் கருதினர்.

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள"

(குறள். 527)

என்னும் குறளின் வழி காக்கையின் பகிர்ந்துண்ணும் பண்பு புலப்படுகின்றது. பறவை இனமாகிய காக்கை கூடத் தன்இனத்தை அழைத்துத் தனக்குக் கிடைத்ததைப் பகிர்ந்து உண்ணும் பண்பினை

வெளிப்படுத்துகின்றது; பறவையினம் கூட பகிர்ந்துண்ணும் பண்பினைக் கொண்டுள்ளது என்று திருவள்ளுவர் சுட்டிக் காட்டுகின்றார்.

"சுற்றத்தால் சுற்றப்பட வொழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்"

(குறள். 524)

என்னும் குறட்பாவின் மூலம் பகுத்துண்டு வாழும் சிறந்த பண்பினால் தன்னலம் அழிந்து பொதுநலம் வளர்ந்து சமுதாயம் சிறப்போடு உயிர்ப்படைகின்றது என்பதனை உணரலாம். இத்தகைய பகிர்ந்துண்ணும் எண்ணமானது மனிதனுக்குள்ளே உள்ள மனிதநேயத்தினை வெளிப்படுத்தியுள்ளது.

'பகுத்து உண்டால் பசி தீரும்' என்னும் எளிய பழமொழியும் இந்த கருத்தையே வலியுறுத்துகின்றது.

". . . . . கானவன்
வில்லின் தந்த வெண் கோட்டு ஏற்றை
புனைஇருங் கதுப்பின் மனையோள் கொண்டி
குடிமுறை பகுக்கும் நெடு மலை நாடே"

(நற். 336)

என்ற பாடலின் மூலம் தலைவியிடம் அமைந்துள்ள பகுத்துண்ணல் பண்பினை அறிய முடிகின்றது. கானவன் தினையைத் தின்ற பன்றியை அம்பினால் கொன்று, அதனைக் கொண்டு வந்து தன் மனைவியிடம் தருகிறான். அவன் மனைவி தனது சுற்றத்தாருக்கு முறையுடன் பகுத்துக் கொடுக்கிறாள். தினம் வேட்டையாடி உண்ணும் உணவிலும் பிறருக்கு பகிர்ந்து அளித்துப் பெற்ற இன்பத்தினைக் காணமுடிகின்றது.

அரசர்கள் அளிக்கக்கூடிய விருந்து சிறப்பானதாகக் கருதப்பட்டாலும் அதைவிடத் தாழ்ந்த சாதாரண குடிமக்களின் விருந்தும் சிறப்பானதாகவே கருதப்பட்டது. பசி என்று வந்தவுடன் அரசன் விருந்து,

குடிமக்களது விருந்து எனப் பாராமல் பசிக்காக மட்டும் உண்டனர். பிறர் கொடுக்கக்கூடிய உணவில் ஏற்றத்தாழ்வு பாகுபாடு எதையும் பார்க்காமல் உண்டுள்ளனர். விருந்து கொடுப்பவர்களுக்கும் கொள்பவர்களுக்கும் உள்ள நெருக்கமானது சிறந்த மனிதநேயத்தினை வெளிப்படுத்தியதால் அக்காலகட்டத்தில் சிறந்த விருந்தோம்பல் நடைப்பெற்று வந்துள்ளதை அறிய முடிகின்றது.

மனிதநேயத்திற்குப் பொருள் தேவை

கணவன், மனைவி சேர்ந்து நடத்தும் இல்லற வாழ்வுக்குப் பொருள் மிகவும் தேவையான ஒன்றாகக் கருதப்பட்டது. தன்னிடம் உள்ள பொருளைக் கொண்டு தம்மிடம் வரும் புதியவரை விருந்தோம்பினர். பொருள் இல்லாமல் புதியவரை (விருந்தினரை) விருந்தோம்புதல் முடியாது. அதனால் ஒவ்வொருவரும் பொருளின் தன்மையை உணர்ந்திருந்ததால்தான் பொருளுக்காக ஆண்களும் வினையை மேற்கொண்டனர். கணவன் பொருள் ஈட்டிவந்தான். மனைவியானவள் அப்பொருளைக் கொண்டு சுற்றத்தினரைப் பேணிக்காப்பவளாக விளங்கினாள்.

> ***"அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள்இல்லார்க்கு***
> ***இவ்வுலகம் இல்லாகி யாங்கு"***

(குறள். 247)

என்ற குறளின் மூலம் பொருட்செல்வத்தின் மேம்பாடும் உணரப்படுகின்றது. பொருளைக்கொண்டு தன்னால் முடிந்தவரை பிறர்க்கு உதவி செய்யும் நோக்குடையவர்களாக இருந்துள்ளனர் என்பதையும், தாம் வாழக்கூடிய வாழ்க்கை சிறிது காலமாக இருந்தாலும் அதிலும் தம்மை நாடிவரும் விருந்தினரைப் பேணிக்காக்கும் நோக்குடையவர்களாக விளங்கினர் என்பதனையும் அறிய முடிகின்றது.

"அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்"

(அகம். 155)

இப்பாடலின் வழியே அறத்தொடு ஈட்டிய செல்வமே சிறந்தது என்பது உணரப்படுகின்றது. எந்தக் காலத்திலும் பாவநெறியில் செல்லாத வாழ்க்கையும், பிறர் வீட்டு வாயிலில் சென்று இரவாத மேம்பாடும் ஆகிய இவ்விரண்டும் அறவழியில் ஈட்டிய பொருளினைப் பற்றிக் குறிப்பிடுவதை அறிய முடிகின்றது.

பொருளைத் தேடிக் கொள்ளவேண்டும் என்னும் வாழ்க்கை நெறி பிறருக்கு உதவி புரிந்திட வேண்டும் என்ற மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்டது. இதனையே,

"பிறர்க்கென முயலும் பேர்அருள் நெஞ்சமோடு
காமர் பொருள் பிணி போகிய"

(நற். 186)

என்ற நற்றிணைப் பாடல் உணர்த்துகின்றன. திருமண வாழ்வின் பயனை உணர்த்துகின்றது இப்பாடல். விருந்தோம்பல் பண்பிற்குப் பொருள் முக்கியமானதாகக் கருதப்பட்டது. ஈட்டிய அப்பொருளைத் தான் மட்டும் அனுபவிக்காமல், தம்மிடம் வரும் சுற்றத்தினரைப் பேணிக்காப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டது என்பதனைப் பற்றி பல்வேறு தமிழ் இலக்கியங்களில் சான்றோர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பொருளீட்டலின் பயன் ஈதல்

"செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புந பலவே"

(புறம். 189)

என்னும் உறுதிக்கோட்பாடு, செல்வம் ஈட்டுவதன் பயனே பிறருக்கு ஈந்து மகிழ்வதுதான் என்னும் கருத்தினை வலியுறுத்துகின்றது.

பண்டைத் தமிழர் சமுதாயத்தில் அடிப்படைத் தேவைகளுக்கு மேற்பட்ட செல்வமானது நண்பர்களைப் பெருக்கிக்கொள்ளவும் உற்றார் உறவினரின் துன்பத்தைத் துடைக்கவும் பயன்படவேண்டும் என்று தமிழர்கள் கருதப்பட்டது.

'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்' (குறுந். 63) என்ற பாடலடிகள் அறம் பெற ஈதலும், இன்பம் பெற துய்த்தலும், ஆகிய செயல்கள், அவற்றின் காரணமாகிய பொருள் இல்லாத வறியவனிடம் காணப்படுவதில்லை என்பதனை உணர்த்துகின்றன. பொருளைத் தேடியவன் தான் துய்ப்பதைவிட மற்றவர்களுக்கு அதனை ஈந்து மகிழவேண்டும் என்பதையே முதன்மை ஈதல் அறமாகக் கருதினான்.

பொருளின் இன்றியமையாமையை உணர்ந்த மக்கள், பொருள் தேடும் நெறியினை வாழ்க்கை நெறிகளுள் ஒன்றாக வலியுறுத்துகின்றனர். அதனால் தமிழ் இலக்கியம் உற்றாரையும், உறவினரையும், பொருட்செல்வம் இல்லாது வாடி மெலியும் பிறரையும் தாங்கி நலம் செய்வதற்காகவே குடும்பத் தலைவன் பொருள் தேடிவரவேண்டும் என்பதனை ஆங்காங்கே எடுத்து இயம்புகின்றது.

"அறன் கடைப்படாஅ வாழ்க்கையும், என்னும்
பிறன் கடைச் செலாஅச் செல்வமும் - இரண்டும்
பொருளின் ஆகும் புனையிழை என்று நம்
இருளேர் ஐம்பால் நீவியோரே -
நோய் நாம் உழக்குவம் ஆயினும், தாம் தம்
செய்வினை முடிக்க தோழீ"

(அகம். 155)

என்னும் அகப்பாடல் தலைவன் வினைமேற்கொள்ளும் அறத்தினைப் புலப்படுத்தி நிற்கின்றது. தலைவியின் பிரிவுத்துன்பம் பெரியது என்றாலும், தலைவன் ஈட்டக்கூடிய செல்வமானது அறன் கடைப்படாத (பாவ

நெறியில் செல்லாத) வாழ்க்கையையும் பிறரிடம் சென்று இரவாத நல்ல வாழ்க்கையும் அத்துன்பத்தினைக் காட்டிலும் சிறந்த பொருளாகும் என்பதனை உணர்த்துகின்றது.

கொடுப்பதே புகழ்

மனிதன் புகழ் பெறுவதற்கு எத்தனையோ வழிகள் உண்டு. அவை நல்ஆட்சியாலோ, கல்வியாலோ, வீரத்தாலோ, வாணிபத்தாலோ புகழீட்டலாம். இருப்பினும் கொடைக்கும், ஈகைக்கும் எப்பொழுதும் மக்களிடையே நிலைத்த புகழ் உண்டு. இத்தகைய புகழினை நிறுவித் தாம் மாய்ந்த மேம்பட்ட சான்றோர் பெருமக்களும் வாழ்ந்த மண் தமிழ்மண்.

அதனால்தான் சங்ககாலத்தில் வாழ்ந்த கடையெழு வள்ளல்கள், மற்றும் குறுநில மன்னர்கள் போன்றோர், நம்மை நாடி வந்தவர்களுக்கு இல்லையென்னாது பசியை நீக்கிப் பொன்னும், பொருளும், வழங்கி புகழுடையவர்களாக விளங்குகின்றனர். மகாபாரதக் கர்ணன் கொடையில் சிறந்தவனாகப் போற்றப்படுகின்றான்.

இத்தகைய கொடை வள்ளல்கள் தன் புகழுக்காக மட்டும் கொடுத்து வாழ்ந்தனர் எனக் கருதுதல் கூடாது. இயற்கையிலேயே அவர்களிடம் மனிதநேயம் நிலைத்து இருந்ததனால் கொடுத்துக் கொடுத்து இன்றளவும் அவர்கள் புகழுடையவர்களாகத் திகழ்கின்றனர். இவர்கள் எதிர்பாராமல் கொடுத்த கொடையின் தன்மையால் காலங்கடந்து சென்ற பின்பும், இவர்தம் கொடைப் புகழ் மறையாமல் இன்றளவும் இம்மன்னா உலகத்து நிலைத்து வாழ்கின்றது.

இல்லை என வந்தோருக்கு இல்லையெனக் கூறாது வாரி வழங்கிய தமிழர்தம் கொடையானது அவர்களை இன்றளவும் புகழுடைய வள்ளல்களாக உலவச் செய்திருக்கின்றது. தனக்கு நிலையான

புகழ்கிடைக்கும் என்று நினைத்துப் பிறர்க்கு உதவி செய்யவில்லை. கொடை வள்ளல்களின் மனதில் எப்பொழுதும் பிறருக்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணமே நிலைத்திருந்தது.

பெருஞ்சோறு அளித்த உதியன், கர்ணன், பாரி, காரி, ஓரி, பேகன், ஆய் போன்ற வள்ளல்கள் பெயர் இன்றளவும் மக்களின் மனதில் நீங்காத இடம்பிடித்துள்ளன.

'தோன்றின் புகழோடு தோன்றுக'

(குறள். 236)

என்னும் குறளுக்கு ஏற்றவாறு இவர்கள் வாழ்ந்தனர் என்பதனை, அவர்கள் அடைந்த கொடையின் புகழால் அறியமுடிகின்றது.

அறமே தலையாய பண்பு

'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை'

(குறள். 221)

என்னும் குறள் மனிதநேயத்தினைக் காட்டுகின்றது.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று கூறிய இராமலிங்க அடிகளாரின் வாக்கானது எல்லா உயிர்க்கும் எல்லாம் கிடைக்கவேண்டும் என்ற பரந்த மனிதநேயத்தினை இங்கே பறைசாற்றி நிற்கின்றது. மனித நேயத்தினால் கிடைக்கக்கூடிய அழியாப் புகழுக்குத் தலைமை இடம் கொடுத்திருக்கின்றார்கள் தமிழர்கள்.

"உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்"

(குறள். 232)

என்ற குறளானது ஈகையுடையவர் அடையும் புகழினைக் குறிப்பிடுகின்றது.

"ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை"

(மணிமேகலை 11 : 93 – 94)

எனக் கூறும் இப்பாடலடிகள் மனிதநேய அடிப்படையில் பிறரது பசியைக் களையவேண்டும் என்று உறுதியான வாழ்க்கை நெறியை வலியுறுத்துகின்றன.

விருந்திற்காக வாணிபம் செய்தனர்

சங்ககாலத் தமிழர் வறுமையுடையவர்களின் வறுமையைக் களைந்து அவர்கள் நல்வாழ்வு வாழ வழி வகுத்துக் கொடுத்தனர். பிறர் துயரம்தீர பிறர் உதவக்கூடிய செயலானது ஒருபெரிய மனிதநேய நிகழ்ச்சியையே வரைந்து காட்டுகின்றது.

உற்றார் உறவினரோடும் மற்றும் நண்பர்களோடும் கூடியிருந்து அவர்கள் துன்பத்தில் இருக்கும்போது அவர்களின் துன்பம் துடைக்கவேண்டும் என்று நினைத்தனர். பிறர் துயர் துடைப்பதற்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கு இன்பம் தருவதற்கும் பொருளைத் தேடித்திரட்ட வேண்டும் என்ற கருத்தானது மனிதநேய உணர்வினை வெளிப்படுத்துகின்றது.

"பெற்றவர் தேடி வைத்த பெருஞ்செல்வம் உண்டென் றாலும்
மற்றும்தான் தேடவேண்டும், மாந்தன்சீர் அதுவே யன்றோ?"

(குடும்பவிளக்கு: பகுதி 4:13–14)

எனப் பாரதிதாசனும் தனது குடும்பவிளக்கில் அறவழியில் பொருளீட்டுவது மனிதருக்கு பெருமை தரும் எனக் குறிப்பிடுகின்றார்.

"ஈதலும் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்
செய்வினை கைம்மிக வெண்ணுதி யவ்வினை"

(குறுந். 63)

என்ற குறுந்தொகைப் பாடலடிகள் பொருளீட்டாத வறியவரைக் குறித்துக் கூறுகின்றன. அறம் பெறுதல் பொருட்டு ஈதலும், இன்பம் பெறுதல் பொருட்டுத் துய்த்தலும் ஆகிய செயல்கள், அவற்றின் காரணமாகிய

பொருள் இல்லாத வறியவனிடம் காணப்படுவதில்லை. ஆகையால், பொருள் தேடுவதற்குரிய செயல்கள், ஏனைய தொழில்களை விடச் சிறப்புடையதாகக் கருதமுடிகின்றது.

புதிதாகப் பொருள்தேடி மற்றவர்களுக்குக் கொடுத்து அவர்களுடன் கூடி மகிழ்ந்துள்ளதை தமிழ் இலக்கியங்கள் மூலம் அறியமுடிகின்றது. பொருள் கொண்டு பிறர் துயரத்தினைப் போக்க நினைத்தவர்கள் சங்கத்தமிழர்கள். **"குந்தித் தின்றால் குன்றும் குறையும்"** என்னும் பழமொழி, தானே உழைத்த செல்வத்தைக் கொண்டு மற்றவர்களுக்கு ஒருவன் உதவவேண்டும். அவ்வாறு உதவாமல் தன் முன்னோர் வைத்துவிட்டுச்சென்ற செல்வத்தைக் கொண்டு உதவும்போது அச்செல்வமானது குறையும் என்பதனை அப்பழமொழி உணர்த்துகின்றது. உட்கார்ந்து செய்யும் செயலானது சிறப்பானதன்று. முன்னோரால் ஈட்டி வைத்த பொருள் கொண்டு இல்லறம் நடத்துதல் முறையன்று என்பது பண்டையர் கொள்கை என்பதனை,

'உள்ளது சிதைப்போ ருளரெனப் படாஅர்'

(குறுந். 283)

என்னும் குறுந்தொகைப் பாடல் 'தான் முயன்று தேடாது, தம் முன்னோரால் தேடி வைக்கப் பெற்றுத் தம்பால் உளதாகிய செல்வத்தை அழிப்பவர் உயிர் உள்ளவராக உலகோரால் எண்ணப்படார்' என்று கூறுகின்றது. உள்ளது சிதைப்பின், இல்லோராய் உயிர் வாழ்தல், இயல்பாகவே வறியவராயினர் என்று குறிப்பிடுகின்றது.

அதனால் தான் மற்றவர்களின் துயரைத் துடைக்கத் தன்னால் இயன்றவரை தான் தேடிய புதியபொருள்களைக் கொண்டு மற்றவர்களின் வறுமைத் துயரினைப் போக்கியுள்ளனர். சங்கத் தமிழரின் பொருள் தேடும் வாழ்க்கையானது பிறர்க்கு உதவி செய்துவாழ்தல் வேண்டும் என்னும் உயரிய எண்ணத்தினை வெளிப்படுத்துகின்றது.

தனியொருவன் தனக்கும், தன்னைச் சார்ந்தோருக்கும் மட்டும் பொருள் தேடிச் செல்லவில்லை. தன்னிடம் துன்பம் என்று எவர் வந்தாலும் அவர்களின் துயரம் போக்குவதற்காகவே பொருள் தேடியுள்ளான். **"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு"** என்று இடைக்காலத்தில் தோன்றிய பழமொழியால் பழங்காலத் தமிழர்களின் வாழ்க்கையை உணரமுடிகின்றது. வீடு செழிக்கவும், நாடு வளம்பெறவும், தமிழன் அந்தக் காலத்தில் கடல் கடந்து ரோம், சீனா, கிரேக்கம், எகிப்து, போன்ற நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டு இருந்ததை வரலாற்றுக் குறிப்புகள் நமக்கு உணர்த்துகின்றன.

விருந்தினர்களைப் பேணிக்காப்பதற்காகவே கடல்கடந்து வாணிபம் செய்தல் என்ற எண்ணமானது பிறர்க்குக் கொடுக்க வேண்டும் என்னும் மனிதநேயத்தினை வெளிப்படுத்துகின்றது. விருந்தினரை விருந்தோம்புவதில் தமிழர்களுக்கு நிகர் தமிழர்களே என உலகநாடுகள் பல போற்றுகின்ற நிகழ்வினை அனைவரும் அறிவோம். நம்நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொண்ட வெளிநாட்டு யாத்திரிகர்களின் வரலாற்றுக் குறிப்பின் மூலம் இதனை அறிகின்றோம்.

புலவனின் மனிதநேயம்

சங்ககாலத்தில் புலவன் ஒருவன் தன்னை ஆதரிக்கும் அரசனிடம் சென்று தன் திறமையைக் காட்டிப் பரிசுப்பொருட்களைப் பெற்றுவருவான். அவ்வாறு பெற்று வந்த பரிசுப் பொருட்களைத் தான்மட்டும் வைத்துக்கொள்ளாமல் தன்னைப்போல் வறுமையில் வாடும் சுற்றத்தாருக்கும் தன்னிடம் வருபவர்களுக்கும் கொடுத்து உதவினான். இத்தகைய இளகிய மனம் அக்காலப் புலவர்களிடம் இருந்துள்ளதை நமது இலக்கியங்களின் மூலம் அறியமுடிகின்றது.

"நின் நயந்து உறைநர்க்கும், நீ நயந்து உறைநர்க்கும்
பல் மாண் கற்பின் நின் கிளை முதலோர்க்கும்
கடும்பின் கடும் பசி தீர யாழ நின்
நெடுங் குறையெதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது, என்னோடும் கூழாது,
வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி - மனை கிழவோயே!
பழம் தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்து வேல் குமணன் நல்கிய வளனே

(புறம். 163)

இப்புறப்பாடலில் புலவன் ஒருவனது பகுத்துண்ணல் திறம் போற்றப்படுகின்றது. குமணவள்ளலிடம் சென்று தன் திறமையைக்காட்டி அரசனைப் புகழ்ந்து பாடுகின்றான் அவன். குமணவள்ளல் புலவனின் கல்விப்புலமை கண்டு பல காலம் வாழக்கூடிய அளவில் பொன், பொருட்கள், வாரி வழங்கி வழியனுப்பி வைக்கின்றான். பரிசுப் பொருட்களைப் பெற்று வந்த புலவன் அவற்றினைத் தன் மனைவியிடம் கொடுத்துத் "நின்னை அன்பு செய்து வாழும் மகளிர்க்கும் நீ அன்பு செய்து ஒழுகும் மகளிர்க்கும், பல குணங்களும் உடைய கற்பினையுடைய நின் சுற்றத்து மூத்த மகளிர்க்கும் அளிப்பாயாக என்றும், நம் சுற்றத்தின் பசி நீங்க நினக்கு நெடுநாள் கடன் தந்து உதவியோர்க்கும் மற்றும் இன்ன தன்மையர் என்று கருதாதும், என்னோடு கேளாதும் வளமுடன் வாழலாம் என்று பாதுகாத்து வைத்துக்கொள்ள நினையாதும் நீயும் எல்லோருக்கும் வழங்கி மகிழ்வாயாக" என்று கூறுவதை அறியமுடிகின்றது. அப்புலவனின் செம்மாந்த திறம் இப்பாடலின் மூலம் விளங்குகின்றது.

சங்கப்புலவர்கள் தான் வறுமையால் வாடி நின்றபோது தனக்கு உதவி செய்தவர்களுக்கும் மற்றும் சுற்றத்தினருக்கும் உதவ எண்ணினர். தாம் கொண்டு வந்த பொருள்களை, தன் மனைவியிடம் கொடுத்துப் பொருட்களை யார் யாருக்குக் கொடுக்கலாம் என்று கூறுகையில்

"இன்னார்க்கு என்னாது என்னொடும் சூழாது, எல்லோருக்கும் வழங்குவாயாக மதி மனைகிழவோயே" என்றும் தம்மிடம் வருகிறவர்களுக்கெல்லாம் நானும் கொடுப்பேன், நீயும் கொடுக்கவேண்டும் என்று தன் மனைவியிடம் கூறுவதாக இச்சங்கப் பாடல் அமைந்துள்ளது.

யாரும் தன்னிடம் எதுவும் இல்லை என்று இரங்கி நிற்கக் கூடாது, எனக் கருதும் தலைவனின் உணர்வு போற்றத்தக்கது. இல்லாதவர்க்குக் கொடுக்கவேண்டும் என்று அவன் இதயம் துடிக்கிறதே அந்தத் துடிப்பே அவனது மனிதநேயத்தினை வெளிப்படுத்துகின்றது.

இதன் மூலம் தமிழ்ப் புலவர்கள் தனக்குக் கிடைத்த ஒன்றை அப்படியே வைத்துக்கொள்ளாமல் அதனை மனிதநேயத்தோடு எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று எண்ணிப் பகிர்ந்து அளித்து வாழ்க்கை நடத்தியுள்ளனர். **'தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'** என்ற பொது நல நோக்கானது புலவர்களின் மனிதநேயத்தை வெளிப்படுத்துகின்றது.

எதிர்பார்ப்பு இல்லா மனிதநேயம்

தம்மைச் சார்ந்தோருக்கு உண்டாகும் துன்பதைத் தவிர்ப்பதே ஒரு மனிதனுக்கு உயர்ந்த பெருமையைத் தரும். இங்கு உயர்ந்த பெருமை என்பது தம்வீடு தேடிவரும் புதியவர் யார்வந்து பசியோடு நின்றாலும் அவர்களுக்கு 'விருந்திட்டு' அனுப்புவதே ஆகும்.

சங்ககாலத்தில் ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் உதவியை நாடுவது தவிர்க்க முடியாதது. ஏதாவது ஒருவகையில் ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களின் உதவியை நாடவேண்டிய நிலைமை இருந்துள்ளது. என்பதனை,

"மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு - நீருலையுள்
பொன்தந்து கொண்டு புகாவாக நல்சினாள்
ஒன்றுறா முன்றிலோ இல்"

(பழமொழி நானூறு. 381)

என்ற பாடல் தெளிவுறுத்துகின்றது. மழையென்பதே ஒன்று இல்லாமல் வற்றியிருந்த காலத்திலும், பாரியின் மகள் தம்மிடம் வந்து இரந்த பாணனுக்கு, நீரையுடைய உலையுள் பொன்னைப் பெய்து, அதனைக் கொண்டு வந்து உணவாகக் கொடுத்தாள். 'ஒன்று உறா முன்றிலோ இல்' என்ற பழமொழியில் இருந்து ஒரு பொருளும் இல்லாத வீடோ இல்லை என்பதனை உணரமுடிகின்றது.

நாட்டில் மழை பெய்யாது வறண்டு பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் பாரிமகள் தன்னிடம் உள்ள பொன்னையே சமைத்து உணவாகக் கொடுத்தாள் என்ற கருத்தின் மூலம் தன்னிடம் வந்து இரந்து நிற்பவர்களுக்கு இல்லை என்று மறுத்துக் கூற இயலாமல் தம்மால் இயன்ற ஒரு பொருளையாவது கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எதிர்பார்ப்பு இல்லா மனித நேயத்தினை வெளிப்படுத்தியுள்ளது.

வசதியாக வாழ்கிறவர்கள் கூட எதிர்பாராத சூழ்நிலைகளில் ஏற்படும் இன்னல்களால் வளம்குன்றித் தடுமாறுவது உலகில் நடைபெறக்கூடிய செயல். இதற்கு உதாரணமாகப் பாரி மகளிரைக் குறிப்பிடலாம் **'முல்லைக்குத் தேர் கொடுத்த'** பாரியின் மகளிர் தனது தந்தை, நாடு முதலிய எல்லா உடைமைகளையும் இழந்து காட்டில் வாழ்ந்தனர். வறுமை நிலையிலும் தம்மிடம் வருபவர்களுக்கு இல்லை என்று கூறாமல், இருப்பதைப் பிறருக்கு அளித்தனர்.

வையாவிக் கோப்பெரும் பேகன் தன்னிடம் பசியுடன் வருபவர்களுக்கு இல்லையென்னாது இன்முகத்துடன் அவர்களுடைய

பசியைக் களைந்தான் என்பதனைக் கீழ்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றது.

"காரென் ஒக்கல், கடும்பசி, இரவல!
வென்வேல் அண்ணற் காணா ஊங்கே"

(புறம். 141)

பேகனுடைய கைவண்மை மறுபிறவியில் கிடைக்கக் கூடிய நன்மையை நோக்கியதன்று; பிறருடைய வறுமை நோக்கியே அமைந்துள்ளது என்னும் உயரிய கருத்தினை,

"எத்துணை ஆயினும் ஈத்தல் நன்று' என,
மறுமை நோக்கின்றோ அன்றே,
பிறர், வறுமை நோக்கின்று, அவன்கை வண்மையே"

(புறம். 141)

என்ற இப்புறப்பாடல் வழி அறிய முடிகின்றது. இத்தகைய சிறப்புப் பண்புகளைப் பெற்றுள்ள பேகன் தன்னிடம் நாடி வரும் வறியவர்களுக்கு மட்டுமல்லாமல் மயிலுக்குப் போர்வை தந்து உதவிய பாங்கு அவனின் எதிர்ப்பார்ப்பு இல்லாத மனிதநேயத்தினை வெளிப்படுத்தியுள்ளது. **"படா அம் மஞ்சைக்கு ஈத்த எம் கோ"** (புறம். 141) என்று சிறப்பிக்கப்படுகின்றான் அவன்.

மனிதநேயத்துக்கு எதிர்பார்ப்புகள் இருக்கக்கூடாது. சொல்லப் போனால் பயன் கருதிய மனித நேயத்தையே யாரும் விரும்பவில்லை எனலாம். வள்ளல்கள் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழவேண்டும் என்று மக்கள் கருதிய காலம் நற்காலம். **'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'** என்ற பாடலடி மன்னன் மக்களுக்கு முன்மாதிரியாக விளங்கினான் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. பிறரின் வறுமையைப் போக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்ட ஈகை முழுமையும் பிறர் நலத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவ்வாறு எந்தவிதப் பலனையும் எதிர்பாராமல் செய்யக்கூடிய செயலில் மாசற்ற

மனிதநேயமானது காணப்படுகின்றது.

> ***"இம்மைச் செய்தது மறுமைக்கும் ஆம் எனும்***
> ***அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்***
> ***பிறரும் சான்றோர் சென்ற நெறியென***
> ***ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே"***

(புறம். 134)

இப்பாடலானது சங்ககால மன்னன் ஆய் என்பவனது கொடைத்தன்மையைச் சுட்டி நிற்கின்றது. இம்மையிலும் மறுமையிலும் பெறக் கருதிய புகழ், துறக்கம் ஆகிய பயனைக் கருதாது ஈதலே சிறந்த அறம் என அவனது கொடை மேம்பாட்டின் இயல்பினைச் சிறப்பிக்கின்றது இப்பாடல். சங்ககாலத் தமிழர் வாழ்வு மனிதநேய உணர்வுக்கு ஆதாரமாக இருப்பதையும் புலப்படுத்துகின்றது இப்புறப்பாடல்.

பிறருக்குச் செய்யக்கூடிய உதவி (ஈகை) பிறர் துயர் துடைக்கும் நோக்கைக் கொண்ட செயலாக இருக்கவேண்டும். இத்தகைய உதவி செய்யும் மனிதநேயத்தை வலியுறுத்துவதோடு அவற்றைக் கடைப்பிடிக்கும் சான்றோரையே, தலைவன் முதல் குடிமக்கள் வரை எல்லோரும் பின்பற்றி வாழ வேண்டும் என்ற உணர்வுடையோராய் வாழ்ந்தனர் தமிழர்.

தம்மிடம் ஏதோ ஒரு உதவிகேட்டு வரும்போது பொருள் இருக்கிறதா இல்லையா என எண்ணிப் பார்க்காமல் அவர்தம் துன்பத்தினைப் போக்குவதற்கு யாராவது உதவவேண்டும் என எண்ணி 'உதவி செய்து வாழ்வதே சிறந்த மனிதநேயமாகக்' கருதப்படுகின்றது. இச்சிறந்த மனிதநேயத்தின் வெளிப்பாடாக அமைந்ததே மற்றவர்களிடம் எந்தவித எதிர்பார்ப்பு இல்லாமல் அவர்களுக்கு விருந்தளிக்கும் பழக்கம். இப்பண்பு மிகச்சிறந்த மனிதநேய வெளிப்பாடாக அமைந்துள்ளதை நமது இலக்கியங்களும் வலியுறுத்துகின்றன.

புகழை விரும்பாத மனித நேயம்

கண்டீரக் கோப்பெரு நள்ளி புகழுக்காகப் பிறருக்கு உதவி செய்யவில்லை. பசியாலும், வறுமையாலும் துன்பமுற்று வரும் இரவலர்களின் இன்னல்கள் நீங்கக் கொடுத்து உதவினான். இவனுடைய உயர்ந்த மனிதநேயப் பண்பாட்டினை,

"மார்பில் பூண்ட வயங்குகாழ் ஆரம்
மடைசெறி முன்கைக் கடகமோ டீத்தனன்
எந்நா டோவென நாடுஞ் சொல்லான்
யாரீ ரோவெனப் பேருந் சொல்லான்
பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே"

(புறம். 150)

என்னும் புறப்பாடல் வழி அறிய முடிகின்றது. பசியின் மயக்கத்தாலும், நடந்த களைப்பாலும் இரவலன், தனது சுற்றத்துடன் பலா மரத்தடியில் தங்கினான். அங்கே வந்த வேட்டுவன் ஒருவன் விலங்கின் ஊனைத் தீயில் சுட்டு அவர்களுக்கு உண்ணக் கொடுத்தான். பிறகு தான் அணிந்திருந்த முத்து வடங்களையுடைய ஆரத்தையும், முன் கையில் அணிந்திருந்தன கடகத்தையும் கொடுத்தான். அவன் பெயரையும், நாட்டையும், கேட்கும்போது வேட்டுவன் பதில் கூறாமல் சென்று விட்டான். இவர்கள் சென்ற வழியில் பிறரைக் கேட்டு அவர்கள் மூலமாக, 'கண்டீரக்கோப் பெருநள்ளி' அவன் என்பதனை அறிந்து கொண்டனர் அவ்இரவலர்கள்.

விருந்தினரை மனிதநேயத்தோடு பார்த்தல்

விருந்தினர்களை விருந்தோம்ப செய்ய பொருள் மட்டும் முக்கியமானதாகக் கருதப்படவில்லை. அவர்களுக்கு அடிப்படையாக உள்ளன்பு வேண்டும் என்று கருதியவர்கள் சங்கத் தமிழர்கள்.

ஒருவருக்குத் துன்பம் ஏற்பட்டு அவர் மற்றவருடைய உதவியை நாடிச் செல்லும்போது உதவி புரியும் நிலையில் உள்ளவர்கள், உதவியை

நாடி வருபவரின் மனம் சிறிதும் நோகாதபடி நடந்து கொள்வதையே சிறந்த மனிதநேயமாகக் கருதினார்கள். இதனையே,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

(குறள். 90)

என்று குறிப்பிடுகின்றார் வள்ளுவர்.

தம்வீடு தேடி வரும் விருந்தினர்களை அன்புடன் அழைத்து இனிய மொழிகளால் பேச வேண்டும். அவர்களுக்குச் செய்யத்தக்க உதவிகளைச் செய்து விருந்தோம்ப வேண்டும். 'அனிச்சம்' என்பது ஒருவகை மலர்; அம்மலரை முகர்ந்தவுடன் வாடும் தன்மை கொண்டது; இந்த அனிச்ச மலருக்கு ஒப்பானவர்கள் விருந்தினர்; அதனால் திருவள்ளுவர் விருந்தினரை அனிச்சமலரோடு ஒப்பிட்டுள்ளார். விருந்தினரை அன்புடன் நோக்காமல் சிறிது முகம் மாறினாலும் விருந்தினரின் முகம் வாடிவிடும். அதனால், விருந்தினரை அன்புடன் நோக்கும் செயலே மிகச்சிறந்த மனிதநேயமாகக் கருதப்படுகின்றது.

தன் உயிரையும் கொடுக்கும் அரசன்

புறாவுக்காகத் தனது தசையைக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியின் மனிதநேயமானது இன்றைக்கும் எடுத்து இயம்பும்படி உள்ளது. தன், தம்பியிடமே ஆட்சி உரிமையைப் பறிகொடுத்துவிட்டுக் காட்டிலே வாழ்ந்து வந்தான் குமண வள்ளல். நாட்டைப் பறித்துக்கொண்டு அண்ணனைக் காட்டுக்கு அனுப்பிய தம்பி, அண்ணனின் தலைக்கும் விலை வைக்கின்றான். அந்நிலையில், தம்முடைய வாழ்வில் வறுமை சூழ்ந்துவிட்டது என்று கூறி, வந்து நிற்கிறார் புலவர் பெருஞ்சித்திரனார். அப்புலவனின் வறுமையைப் போக்க நினைத்த குமணவள்ளல் 'என் தலையைக் கொய்து கொண்டுபோய் என் தம்பியிடம் காட்டி அவன் தரும் பொருளைக் கொண்டு உன் வறுமையைப் போக்கிக் கொள்' என்று கூறுகின்றான்.

"பாடு பெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என்
நாடு இழந்ததனினும் நனி இன்னாது' என,
வாள் தந்தனனே தலை எனக்கு ஈயத்
தன்னின் சிறந்தது பிறிது ஒன்று இன்மையின்"

(புறம். 165)

என்னும் இப்புறநானூற்றுப் பாடலின் மூலம் குமண வள்ளலின் கொடைத்தன்மை புலப்படுத்துவதை அறிய முடிகின்றது. தன் உயிரையே நல்கி, புலவனின் வறுமையைத் தீர்க்க முனைந்த குமணனின் மனிதநேயப் பெருவீரம் தமிழ் வரலாற்றிலேயே மிகச் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது.

எப்பொருளும் நிலையில்லாத உலகத்தில் நிலைபெற்று இருத்தல் புகழ் ஒன்றேயாகும். அத்தகைய புகழ்தரும் செயலைச் செய்து நிலைபேறு பெறுதல் வேண்டும். அவ்வாறு செய்யாதோர் இவ்வுலகில் தொடர்பின்றி மறைந்துபோயினர். இக்கருத்தினை,

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே"

(புறம். 165)

என்ற புறப்பாடல் புலப்படுத்துகின்றது.

பிறரின் துன்பங் களைய உயிர்கொடுத்துப் புகழ் கொள்ளுதல் சிறந்த மனிதநேயத்தினைக் காட்டுகின்றது. புலவனின் வறுமை தீரத் தன் தலையைக் கொடுக்கத் துணிந்த குமணவள்ளலின் மாபெரும் மனிதநேயப் பண்பானது வரலாற்றில் சிறப்பிடம் பெறுவது மட்டும் அல்ல; இன்றைக்கும் பேசப்பட்டு வருகின்றது.

"அரிய பெரிய செயல்கள் நடைபெறுவதற்குத் தங்கள் உயிரே தேவைப்படுகின்றது. என்றாலும் மனிதநேயச் சான்றோர்கள் அதையும் எடுத்து வழங்கிவிடத் தயங்கமாட்டார்கள்"[17]

என்று முனைவர் சாலினி இளந்திரையன் குறிப்பிட்டுள்ளார்.

பாராட்டும் மனிதநேயம்

பண்ணன் என்னும் சிறுகுடிக்கிழான் தன்நாட்டில் உள்ள பசியின் பஞ்சத்தினைப் போக்கினான் என்னும் கருத்தினைக் கீழ்காணும் பாடல் வாயிலாக அறியலாம்.

"வெள்ளி தென்புலத்து உறைய விளைவயல்
பள்ளம் வாடிய பயன்இல் காலை. . .
இரும்பறைக் கிணைமகன் சென்றவன், பெரும்பெயர்,

. . . . . பொருந்தி

தன்நிலை அறியுநன்ஆக அந்நிலை
இடுக்கண் இரியல் போக உடைய
கொடுத்தோன் எந்தை"

(புறம். 388)

என்னும் புறநானுற்றுப்பாடல் பண்ணனது ஈகைத்திறத்தினைப் பறைசாற்றி நிற்கின்றது. வெள்ளியாகிய விண்மீன் தென்திசையில் நிற்கின்றதையும், அதனால் விளைகின்ற நிலங்களும் நீர் நிலைகளும் வற்றிய பயனில்லாத காலத்தில், கிணைப்பறை இசைக்கும் கிணையன், தன் வறுமையை அறிவித்த அப்பொழுதே, அவனுற்ற பசித்துன்பம் கெடுமாறு, பண்ணன் தன்னிடம் உள்ளவற்றைக் கொடுத்ததையும் புலப்படுத்துகின்றது இப்பாடல்.

இயற்கையின் சூழலை எவராலும் மாற்ற முடியாது. **"மாதம் மும்மாரி பொழியும்"** நாடானது பஞ்சமில்லாமல் செல்வச் செழிப்புடன் இருக்கும். ஆனால் மழை தவறினால் அந்நாட்டில் பஞ்சமானது ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட பஞ்சநிலையிலும் பண்ணன் தன் நாட்டு மக்களுக்கு உணவளித்துள்ளான் என்ற செய்தியானது அவனின் மனித நேயப் பண்பினை வெளிப்படுத்தியுள்ளது.

பண்ணனின் பசி ஒழிப்புச் செயல் அரியதொரு சாதனையாக நாட்டு மக்களாலே எடுத்துப் பேசப்பட்டது. இந்தச் செய்தியைக் கேள்வியுற்ற சோழநாட்டு மன்னனாகிய குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பண்ணனைப் பாராட்டி மகிழ்கின்றான். தான் ஒரு மன்னன், பண்ணன் தன் குடிமக்களிலே ஒருவன் என்கிற உண்மையைக் கூட மறந்து, இவனே பண்ணனைத் தேடிச் செல்கின்றான். வழியெல்லாம் பண்ணனின் ஈரநெஞ்சம் செய்த ஈகை நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்றுப் பாராட்டுவதை,

> ***"யான்வாழும் நாளும் பண்ணன் வாழியே***
> ***பாணர் காண்கஇவன் கடும்பினது இடும்பை***
> ***யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந் தன்ன***
> ***ஊண்ஒலி அரவம் தானும் கேட்கும்,***
> ***பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி,***
> ***முட்டை கொண்டு வன்புலம் சேரும்***
> ***சிறுநுண் எறும்பின் சில்ஒழுக்கு ஏய்ப்ப***
> ***சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்***
> ***இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும்"***

(புறம். 173)

இப்புறப்பாடல் மூலம் அறியமுடிகின்றது. பழங்கள் பழுத்த மரத்தில் பறவை இனம் நாடி வந்து கனியுண்டு மகிழ்ந்து ஒலியினை எழுப்புவது போல, பண்ணனின் இல்லத்தில் பலரும் உணவு உண்பதால் ஆரவாரம் உண்டாகின்றது. பருவகாலத்தில் மழை பொழியும் முன் எறும்புகள் தம் முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலத்தினை அடைய சாரைசாரயாகச் செல்லுவதைப்போல, சோற்றினைக் கையில் கொண்டு பெருஞ்சுற்றத்தோடு சிறார்கள் செல்கின்றனர். அவர்களைக் கண்டு, பசிநோய் தீர்க்கும் மருத்துவனாகிய பண்ணன் இல்லம் அருகிலா தூரத்திலா என்று அரசன் அறிய விழைந்தான். இத்தகைய பண்புகளைக் கொண்டு பரிசிலரின் வறுமையைத் தீர்க்கின்ற பண்ணனைப் பார்த்து

"யான் உயிர் வாழும் நாளையும் நீ பெற்று வாழவேண்டும்" என்று வாழ்த்துகிறான்.

தன் ஆட்சியின் கீழ் வாழும் ஒரு குடிமகன் தன்நாட்டில் நிலவிய பசியின் பஞ்சத்தினைப் போக்கிய செயலை அறிந்த அரசன் வெளிப்படையான மனதுடன் வாழ்த்திப் பாராட்டும் செயலானது அம்மன்னனின் மாசற்ற மனிதநேயத்தை உணர்த்துகின்றது. பசியினால் வாடியவர்களுக்கு உணவளித்த பண்ணனின் மனிதநேயமும் பாராட்டும்படி உள்ளது.

அதியமானின் மனிதநேயப் பண்பு

புறநானூற்றில் ஔவையார் 22 பாடல்கள் அதியமான் நெடுமாஞ்சியைப் பற்றிப் பாடியுள்ளார்.

"**இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத் தமியர் உண்ணலும் இலர்**" என்று கூறுவதிலிருந்து அமிழ்தம் கிடைத்தாலும் அதனைத் தனித்து உண்ணமாட்டார்; தம்மிடம் வரும் விருந்தினருக்கும் அளித்து உண்ணுவர் சான்றோர் எனத் தெரியலாகின்றது.

இதனைப்போன்று நெடுங்காலம் வாழச்செய்யும், கிடைத்தற்கரிய நெல்லிக்கனியைத் தான் உண்டு பயன் பெறாமல் அதியமான் ஔவையாருக்குக் கொடுத்தான். ஔவையிடம் உள்ள தமிழினைக் காப்பாற்றவே அதியன் இச்செயலைச் செய்தான் புலவர்களைத் தம் உயிரினும் பெரிதாகப் போற்றிக் காத்தனர்.

அதியமானின் பகிர்ந்துண்ணுகிற இந்தப் பண்பினைப் பற்றி

"உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடன் உண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்"

(புறம். 95)

என்னும் புறநானூற்றுப் பாடல் உணர்த்துகின்றது. 'செல்வமுடையராய் இருக்கும்போது உணவு கொடுத்தும், இல்லாதபோது இருப்பதைப் பகிர்ந்து உடன் உண்ணுபவர் வறியோர்; அவ்வறியவர் சுற்றத்திற்குத் தலைவனும், தலைமை சான்றவனுமாகியவன் அதியமான்' என்று, ஔவையார் அதியமான் நெடுமானஞ்சியைப் பற்றிக் கூறுவதை அறிய முடிகின்றது.

அதியமான் நெடுமானஞ்சியைப் பற்றி,

"சிறுகட் பெறினே எமக்கு ஈயும் மன்னே,
பெரிய கட் பெறினே,
யாம் பாட, தான் மகிழ்ந்து உண்ணும் மன்னே
சிறு சோற்றானும் நனி பல கலந்தன் மன்னே!
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கு ஈயும் மன்னே"

(புறம். 235)

என்னும் பாடலடிகள், அதியமானின் ஈகைக் குணத்தை மேலும் புலப்படுத்துகின்றன. தனக்கு 'கள்' இல்லாது குறைவாக இருப்பினும் இரவலர்க்குத் தருவான்; மிகுதியாக இருப்பின் முதலில் இரவலர்க்குத் தந்து பின் உண்பான்; உணவு எத்தகைய அளவில் இருந்தாலும் பலருக்கும் தந்து தானும் உண்பான் என்றும் ஔவையார் இக்கருத்தினைப் புலப்படுத்துகின்றார்.

'நாரால் அளிக்கப்பட்ட தேறலைச் சிறிது கலத்தில் கொடுத்தாலும் கொள்வானோ' என்று ஔவை அதியமானின் பண்பு நலனைப் பற்றி கூறுவதை அறியமுடிகின்றது.

என்றும் கொடுக்கும் நிலை

"இன்று செலினும் தருமே; சிறு வரை
நின்று செலினும் தருமே; பின்னும்
முன்னே தந்தனென் என்னாது, துன்னி

வைகலும் செலினும் பொய்யலன் ஆகி
யாம் வேண்டியாங்கு எம் வறுங் கலம் நிறைப்போன்"

(புறம். 171)

என்னும் புறநானூற்றுப் பாடல், பிட்டங்கொற்றன் கொடை வளத்தைப் பற்றியது. இவ்வரசனிடம் ஊர்களைப் பரிசாகக் கொடுக்கும் பெரிய நாடோ, ஒட்டுமொத்தமாக இரவலரின் வறுமையை ஒழிக்கும் பெரும் செல்வவளமோ இல்லை. ஆனாலும் தன்னிடம் வந்து இரந்து நின்ற ஒருவன் மற்றொருவனிடம் போய் கை ஏந்தக்கூடாது என்ற எண்ணம் கொண்டவன். அதனால் தம்மிடம் வரும் இரவலர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும், எத்தனை முறை கொடுத்தாலும், மீண்டும் எந்நேரம் அவர்கள் வந்து கேட்டாலும் அவர்களுக்கு வாரி வழங்கும் உள்ளம் படைத்தவன்.

"ஒருநாள் செல்லலம்; இரு நாள் செல்லலம்
பலநாள் பயின்று, பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன்"

(புறம். 101)

என்னும் பாடலும் வள்ளல் தன்மையை எடுத்துக் கூறுகின்றது. 'அதியமான் நெடுமானஞ்சியும் ஒருநாள், இருநாள், மறுநாள் என இரவலர் பலரொடு பல நாள் சென்றாலும் தலைநாள் போன்றே உபசரிப்பு செய்யும் உள்ளம் கொண்டவன்' என்று ஔவையார் பாடியுள்ளார்.

சங்ககாலத்தில் அரசர்கள் தங்களிடம் வரும் புலவர்கள் எத்தனை நாள் எத்தனை முறை சென்றாலும் அவர்களை மனிதநேயத்தோடு விருந்தோம்பி உள்ளனர். என்பதனை அறிய முடிகின்றது.

அதியமானின் பகிர்ந்துண்ணும் பண்பும், புலவர் நீண்டநாள் வாழவேண்டும் என்று நினைத்த அவனது உணர்வும் மனிதநேயத்தினைக் காட்டுகின்றது.

சோழன் நலங்கிள்ளியின் மனித நேயம்

"வண்ணம் நீவிய வணங்குஇறைப் பணைத்தோள்,
ஒள்நுதல், விறலியர் பூவிலை பெறுக! என
மாட மதுரையும் தருவான் எல்லாம்
பாடுகம் வம்மினோ பாசில் மாக்கள்"

(புறம். 32)

என்னும் புறப்பாடல் வழி, சோழன் நளங்கிள்ளியின் மனிதநேயத்தை அறிய முடிகின்றது. இல்லை என்று தம்மிடம் வந்த இரவலர்களுக்கு மதுரை போன்ற தலைநகரங்களையும் கொடையாகக் கொடுக்கத் தயங்க மாட்டான் அவன்.

"நாரரி நறவின் நாள்மகிழ் தூங்குந்து;
போது அறியேன், பதிப்பழகவும்,
தன்பகை கடிதல் அன்றியும், சேர்ந்தோர்
பசிப்பகை கடிதலும் வல்லன் மாதோ"

(புறம். 400)

என்னும் புறப்பாடலும் அவனது சிறப்பினைப் பாடுகின்றது. சோழன் நலங்கிள்ளியிடம் புலவர், பாணர், விறலியர், ஆகியோர் சென்றனர்; இரவலர்தம் பசி தீர உண்டனர்; பின்னர் அவர்களின் கிழிந்த உடையை நீக்கிப் புத்தாடை தந்து உடுத்தும் படிச் செய்தான் சோழன்; சிறப்பு மிக்க அணிகலன்களையும் கொடுத்தான். இப்பாடலின் வழி சோழன் நலங்கிள்ளியின் உவந்து அளிக்கும் மனித நேயத்தினை அறிய முடிகின்றது.

எயினரின் மனிதநேயம்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களுக்குக் கிடைத்ததைக் கொண்டு விருந்தோம்பல் செய்துள்ளனர். குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்து பாலையாக மாறிய நிலத்தில் வாழ்ந்தவர்கள் எயினர்.

பாலை நிலத்தவரான எயினர்க்கு உணவு கிடைப்பது அரிது. உணவுக்காக அவர்கள் புற்றரிசியை எடுத்துச் சமைத்து உண்பர். புற்றரிசி என்பது எறும்புப் புற்றில் சேர்த்து வைக்கும் அரிசியாகும். இப்புற்றரிசியைத் தனது சுற்றத்தாருடன் சேர்ந்து சென்று எடுப்பர். எடுத்து அதனை மற்ற விலங்குகளிடமிருந்து பாதுகாத்து வைத்தனர்.

கொடும் பாலைநிலத்தில் நீர் கிடைப்பதும் அரியதாகும். நிலம் வன்னிலம்; வறட்சி மிக்கது. கிணறு ஆழமாகத் தோண்டியிருப்பினும் கல்லூற்றாகவே இருப்பதால் தண்ணீர் சிறிதளவே கிடைக்கும். அதுவும் பருகுவதற்கு இனிய நன்னீராக இராது உவர்நீராகவே இருக்கும். இத்தகையை நீர் கொண்டு புற்றரிசிச் சோற்றைச் சமைத்துத் தன் சுற்றத்தாருடன் உண்ணும்போது விருந்தினர்கள் வந்தால் அவர்களையும் அன்புடன் அழைத்துப் புற்றரிசிச் சோற்றுடன் கருவாடு கலந்து அனைவருக்கும் கொடுப்பார்கள்.

இவ்விதம் எயினர் மக்கள் தங்களுக்குத் கிடைத்ததற்கரிய உணவு கிடைத்ததைத் தான் மட்டும் உண்ணாமல் தன்னிடம் வரும் விருந்தினருக்கும் கொடுத்து உபசரித்துள்ளனர் என்று (பெரும்பாண். பாடல் 98-104) பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. இவர்கள் வன்னிலத்தில் வாழ்ந்தாலும் அவர்களின் உள்ளமானது மென்மையுடையதாக இருந்துள்ளது. எயினரின் விருந்தோம்பல் சிறந்த மனிதநேயத்தினைக் காட்டுகின்றது.

மீனவர்களின் மனித நேயம்

மீன்பிடித் தொழிலானது மீனவனின் உயிருக்கு உத்திரவாதம் அளிக்கக்கூடியதாக இல்லை. இருப்பினும் அத்தொழிலில் ஈடுபடுபவர் தனக்குக் கிடைத்ததை வைத்து விருந்தோம்பல் செய்கின்றனர். இப்பண்பானது தாம் உயிரோடு இருக்கும் வரை பிறருக்கு உதவி செய்யவேண்டும் என்ற மனிதநேயத்தினைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

"...அடைந்ததற்கு
இனையல் என்னும் என்ப - மனை இருந்து,
இருங்கழி துழவும் பனித்தலைப் பரதவர்
திண்திமில் விளக்கம் எண்ணும்
கண்டல் வேலிக் கழிநல் ஊரே"

(நற். 372)

என்ற நற்றிணைப் பாடலின் மூலம் இதனை அறிய முடிகின்றது.

இதற்கு உரை கூறும்போது, **"திமிலிற் பரதவர் ஏற்றிய விளக்குகளை எண்ணுதல் கரையேறியவுடன் எத்தனை பேர் விருந்தோம்புதற்கு உரியர் என்றறிய என்பார் பின்னத்தூரார்"**[18] என்று குறிப்பிட்டுள்ளார் கு.வெ. பாலசுப்பிரமணியன்.

ஊடல் கொள்ளாத மனிதநேயம்

அக்காலத்தில் கணவன், மனைவி இருவரிடையே இருந்த ஊடலைத் தீர்க்கும் வாயிலாக விருந்தினர் இருந்துள்ளனர். தொல்காப்பியர் பன்னிரண்டு வாயில்களுள் ஒருவராக விருந்தினரைச் சுட்டுவர். ஊடி நின்ற தலைவியைத் தேற்ற விரும்பிய தலைவன், தனக்கு விருந்து வராதா என ஏங்கும் நிலையை,

"எல்லி வந்த நல்லிசை விருந்திற்குக்
கிளரிழை அரிவை நெய்துழந்(து) அட்ட
விளர்ஊன் அம்புகை எறிந்த நெற்றிச்
சிறுநுண் பல்வியர் பொறித்த
குறுநடைக் கூட்டம் வேண்டு வோரே"

(நற். 41)

என்னும் நற்றினைப் பாடல் எடுத்துக்காட்டுகின்றது. தலைவியின் புன்னகையைக் காண்பதற்காக விருந்தினர் வரமாட்டாரா எனத் தலைவன் வருந்துகின்றான். ஊடல் தீர்ந்து இல்லறம் நடத்தி விருந்து

ஓம்பிப் புகழ் அடைதற் பொருட்டாகவும் விருந்தோம்பல் இருந்திருப்பதைச் சங்க இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

"எமக்கே வருகதில் விருந்தே! சிவப்(பு) ஆன்று
சிறு முள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம் காண்கம்மே"

(நற். 120)

என்னும் இந்நற்றிணைப் பாடல், 'தலைவன் ஒருவன் பரத்தையின் காரணமாய்ப் பிரிந்து, பின்னர்த் தலைவியின் ஊடலைத் தணிவிப்பதற்காக விருந்தினரோடு வந்ததால் தலைவியானவள் தலைவன் மீது கோபம் கொள்ளாமல் முறுவல் கொண்ட முகத்தினளாய் அவர்களை வரவேற்று விருந்திட்டாள்', என்பதனை உணர்த்துகின்றது.

"இகல்அமர் ஆட்டி எதிர்நின்று விலக்கி, அவர்
எழுதுவரிக் கோலம் முழுமெயும் உறீஇ,
விருந்தொடு புக்க பெருந்தோள் கணவரொ(டு)
உடன்உறவு மரீஇ, ஒழுக்கொடு புணர்ந்த
வடமின் கற்பின், மனையுறை மகளிர்"

(சிலம்பு. 5. இந்திரவிழவூர் எடுத்த காதை 225 – 229)

என்னும் சிலப்பதிகாரப் பாடல் அடிகளிலிருந்து கணவன் மனைவி ஊடல் தீர்ந்து விருந்தோம்பிய பான்மையை எடுத்துக் கூறுகின்றது. கணவன் மார்பகம் முழுவதும் பரத்தையர் தம் முலைகளின் மீது எழுதிய தொய்யல் முதலியன படிந்திருப்பதைக் கண்டு கணவனுடன் ஊடல் கொள்கிறாள் தலைவி ஒருத்தி கணவன் விருந்தினரோடு வந்திருப்பதைக் கண்டவுடன் ஊடலை எல்லாம் ஒழித்து விருந்தினரையும் கணவனையும் பேணுகின்றாள் என்னும் நிகழ்வு கணவன் மனைவியிடையே உள்ள ஊடலைத் தீர்க்கும் வாயிலாக விருந்தினர் செயல்பட்டனர் என்பதைத் தெரிவிக்கின்றது.

"ஓர் உயிர் ஈர் உடல்" என்று வாழும் தலைவி, தலைவன் மற்ற பெண்ணுடன் தொடர்பு கொண்டுள்ளான் என்பதை அறிந்து தலைவன்

மீது ஊடல் கொள்ள நேரிடுகின்றது. இந்த ஊடலானது நீண்டு விட்டால் தலைவன் தலைவியிடையே இடைவெளியானது அதிகமாக நேரிடும். அதனால் தலைவன் விருந்தினருடன் வந்ததால் தலைவி ஊடல் கொள்ளாமல் கோபத்தினை விடுத்தாள். விருந்தினர்கள் வருந்துவார்களே என எண்ணி அதனால் அக்கோபத்தினைக் வெளிக்காட்டாமல் அவர்களை அன்புடன் ஏற்று விருந்தோம்பியதைப் புலப்படுத்துகின்றது இப்பாடல்.

அடகு வைத்து விருந்திட்ட மனிதநேயம் (வாள், கேடயம்)

தலைவன் வினையை மேற்கொள்வதே பொருள் ஈட்டி விருந்தினரைப் பேணுவதற்காக என்று சங்கப் பாடல்கள் பல கூறுகின்றன.

'ஆற்றார்க்(கு) ஈவதாம் ஆண்கடன்'

(நாலடி. 98)

என்று ஆண்மகனின் விருந்து செய்யும் கடமையை நாலடியாரும் குறிப்பிடுகின்றது.

சங்கத்தலைவன் ஒருவன் விருந்தோம்புதற்காகத் தனது வாள், கேடயம் போன்றவற்றை அடகு வைத்து விருந்தோம்பினான் என்பதை,

"நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன்; இன்(று) இக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம் இதுகொண்(டு)
ஈவதிலாளன் என்னாது நீயும்"

(புறம். 316)

என்னும் புறநானூற்றுப் பாடல் உணர்த்துகின்றது. இன்றைக்குப் பட்டங்கள் எவ்வளவு முக்கியமானதாக கருதப்படுகிறதோ அந்த அளவிற்கு வாள், கேடயம் ஒரு வீரனுக்கு முக்கியமானதாக அன்று கருதப்பட்டது. இத்தகைய நிலையில் தன்னிடம் வந்த விருந்தினருக்காக அத்தகைய உயர்ந்த

பொருட்களை அடகு வைத்து விருந்து செய்தது மிகச் சிறந்த மனித நேயத்தை வெளிப்படுத்துகின்றது.

அஃறிணை உயிர்களுக்கு அளித்த விருந்து

மனிதன் தன்னைச் சார்ந்த மனிதனை நேசிப்பது மனித நேயமாகும் எனினும் அதைக் காட்டிலும் மனிதன் மனிதனை மட்டுமின்றி தன்னைச் சார்ந்த சிறு உயிர்களையும் நேசிப்பதும் சிறந்ததொரு மனிதநேயமாகக் கருதப்பட்டது. சங்ககாலத்தில் மக்கள் விருந்தோம்பல் பண்பினால் மனிதநேயத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். மனிதன் தன்னைச் சார்ந்த மனிதனுக்கு அளிக்கும் விருந்தோம்பலில் மனிதநேயமானது வெளிப்பட்டுள்ளது. மனிதன் அஃறிணை உயிர்களுக்கும் விருந்தோம்பி மனிதநேயத்தினை வெளிப்படுத்தியுள்ளான் என்பதனை வெளிப்படுத்தும் சங்கப் பாடல்கள் பலவுள்ளன.

"உமணர் தந்த உப்பு நொடை நெல்லின்
அயனி மா இன்று அருந்த"

(நற். 254)

என்னும் நற்றிணைப் பாடலின் வழி விருந்தினருடன் வந்த குதிரைக்கும் விருந்து கொடுக்கப்பட்டுள்ளமை அறிவுறுத்தப்படுகின்றது.

"மூடமுதிர் பலவின் இடன்மருள் பொரும்பழம்
கால்கெழு குறவர் காதல் மடமகள்
கருவிரல் மந்திக்கு வருவிந்து அயரும்

(நற். 353)

என்ற நற்றிணைப் பாடல் அடிகளிலிருந்து குறவர் மடமகள் குரங்கிற்குப் பலாவின் சுளைகளைக் கொடுத்து விருந்து செய்கின்றாள் என்பதும்,

"நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து
உகுபலி அருந்திய தொகுவிரற் காக்கை"

(நற். 343)

என்னும் இப்பாடலடிகளின் மூலம் அறியப்படுகின்றது. ஆலமரத்தடியில் உணவு சமைத்து அதனைக் காக்கைக்கு விருந்தாகக் கொடுக்கின்றனர் என்னும் உண்மையும்,

> ***". . . . . வலி முறு கூகை***
> ***மை ஊன் தெரிந்த நெய் வெண் புழுக்கல்***
> ***எலி வான் சூட்டோடு மலியப் பேணுதும்"***

(நற். 83)

என்னும் பாடல் அடிகளினின்றும் தெரியவருகின்றது. வரிகளிலிருந்து களவுக் காலத்தில் தலைவன் இரவு நேரத்தில் தலைவியைச் சந்திக்கின்றான். தலைவியானவள் இரவில் கூகை, கூவாமல் இருக்கக் கூகைக்கு விருந்து கொடுக்கின்றாள். சங்ககாலத்தில் மக்கள் அஃறிணை உயிர்களான குதிரை, குரங்கு, காகம், கூகை போன்றவற்றிற்கும் உணவளித்தமை சிறந்ததோர் மனிதநேயத்தினைக் காட்டுகின்றது. **'காக்கை குருவி எங்கள் சாதி'** என்று பாரதி பாடிய நிகழ்வு அஃறிணை உயிர்களின் மீது சங்க இலக்கிய மாந்தர் காட்டிய மனித நேயத்தினை நினைவுறுத்துகின்றது.

தொகுப்புரை

- ஒரு மனிதன் தன்னைச் சார்ந்த மற்றொரு உயிரை நேசிக்கும் பண்பே மனிதநேயத்தினை வெளிப்படுத்தியுள்ளது.

- தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும் மற்றும் உள்ள இலக்கியங்களிலும் மனித நேயம் பற்றிப் பேசப்படுகின்றது. அன்பு இல்லாதவர் மனித நேயத்தினை வெளிப்படுத்த முடியாது. அன்பே வாழ்க்கைக்கு அடிப்படை. அன்பினை வெளிப்படுத்துவதால் மனிதநேயம் சார்ந்த பண்புகள் வெளிப்படுகின்றன.

- மனித நேயம் என்ற சொல் பற்றி அகராதிகள் சற்றேறக் குறைய ஒரே பொருளினைக் குறிப்பிடுகின்றன. இம்மனித நேயத்தினைப் பற்றிப் பேராசிரியப் பெருமக்கள் பலரும், மதத் தலைவர்களும் பிற சான்றோர்களும் சிறந்த கருத்துக்கள் பலவற்றைப் புலப்படுத்தியுள்ளனர்.

- சங்க காலத்தில் அரசர், புலவர், மக்கள் போன்றோர் மனித நேயத்தினை வெளிப்படுத்தும் விதத்தில் விருந்தோம்பல் செய்துள்ளதற்கு இலக்கியங்களில் சான்றாதாரக் குறிப்புகள் உள்ளன.

- சங்ககால மக்கள் தனக்குக் கிடைத்த பொருட்களைத் தாம் மட்டும் உண்ணாமல் பிறர்க்கும் பகுத்துண்டு வாழ்ந்தனர். இவ்வாறு பகுத்துண்ணும் பண்பில் மனித நேயமானது மிகுதியாக வெளிப்பட்டுள்ளது.

- விருந்தோம்புதல் செய்வதற்குப் பொருள் மிக முக்கியமானதாகக் கருதப்பட்டது. பொருளுக்காக வினையை மேற்கொண்டு

வாழ்ந்தனர். இப்பொருளைத் தாம் மட்டும் வைத்து இன்புற்றால் போதும் என்ற எண்ணம் சங்க கால மக்களுக்கு எழவில்லை. பிறருக்கு உதவி செய்யப் பொருள் தேவைப்பட்டது. மனித வாழ்வில் பொருளின் தேவை மிக முக்கியமாகக் கருதப்பட்டது. பொருளின் பயன் ஈதல். பிறருக்கு ஈவதால் மனித நேயம் வளர்கின்றது. தனக்குக் கிடைத்த உணவுப் பொருட்களைப் பகிர்ந்து கொண்டு வாழும் வாழ்க்கையில் மனிதனின் பகிர்ந்துண்ணும் மனித நேயத்தினைக் காணமுடிகிறது.

- கடையெழு வள்ளல்களின் வள்ளல் தன்மை, கர்ணன் கொடைத்தன்மை இன்றைக்கும் மண்ணில் உள்ளோர் புகழும்படி உள்ளது. அறத்தின் காரணமாக ஈகை, கொடை, புகழ் போன்றவை நிகழ்கின்றன. பிறருக்குக் கொடுக்கக்கூடிய எண்ணமானது அவ்வள்ளல்களின் அறத்தினை வெளிப்படுத்தும் மனித நேயமாக இருக்கின்றது.

- தான் உழைக்காமல், தம் முன்னோர் கொடுத்த தன்னிடம் உள்ள பொருட்களைப் பிறருக்கு அப்படியே தானம் செய்தால் பொருள் வளமானது குறையும் தன்மை கொண்டதாகி விடும். இது வறுமைக்கு வழி வகுக்கிறது. அதனால் தமிழர் விருந்தோம்புவதற்காக **'திரைகடல் ஓடியும் திரவியம் தேடினர்'**. தமிழர் விருந்தில் பரந்துபட்ட மனிதநேயத்தினை வெளிப்படுத்துகின்றனர் என்பதனைச் சங்கப் பாடல்கள் பலவற்றின் வழி அறியமுடிகின்றது.

- வறுமையில் வாடிய புலவன் தனக்குக் கிடைத்த பொருட்களை வைத்துக்கொள்ளாமல், மனைவியை அழைத்து எல்லோருக்கும் கொடுக்கும்படிக் கூறுகின்றான். இப்புலவனின் கொடுக்கும் மனித நேயமானது பாராட்டத்தக்கதாக இருக்கின்றது.

- மனிதநேயமானது எதிர்பார்ப்பு இல்லா மனிதநேயமாக அமைய வேண்டும். புகழுக்கோ, தற்பெருமைக்கோ செய்யப்படும் உதவியானது நல்ல மனிதநேயத்தினை வெளிப்படுத்தாது என்பதனை அறியமுடிகின்றது. தம்மிடம் வரும் விருந்தினரை அனிச்ச மலருக்கு ஒப்பிட்டுள்ளனர். விருந்தினரை மனிதாபிமானத்தோடு பார்த்து விருந்தோம்பி உள்ளனர்.

- சங்க காலத்தில் புலவர்களுக்கும் அரசர்களுக்கும் இடையே ஒரு நல்ல உறவுமுறையானது இருந்தது. அரசர்கள் தவறு செய்து விட்டால் அதனைப் புலவர்கள் தட்டிக் கேட்டனர். சங்ககால அரசன் ஒருவன் (குமண வள்ளல்) வறுமையுற்ற காலத்திலும் தங்களால் முயன்றவரை தன்னை நாடிவந்த புலவனை ஆதரிக்கத் தன் தலையையும் கொடுக்கத் தயங்கவில்லை. அரசர்கள் புலவருக்காகத் தன் உயிரையும் கொடுக்கும் மனிதநேயமானது பாராட்டக்கூடியதாக விளங்குகின்றது.

- குடிமகன் ஒருவன் தனது குடிமக்களுக்கு உணவு இல்லாத சமயம் தன்னிடம் உள்ள உணவுப்பொருட்களைக் கொண்டு அவர்களின் வறுமையைப் போக்கினான். இதனை அறிந்த அரசன் தான் செய்ய வேண்டிய கடமையை அக்குடிமகன் செய்ததை எண்ணி மகிழ்ந்து மனம் உவந்து பாராட்டினான்.

- கிடைப்பதற்கு அரிய நெல்லிக்கனியைப் பெற்ற அதியமான் கல்வியில் சிறந்து விளங்கிய ஔவைக்குக் கொடுத்து மகிழ்ந்தான். அக்கால அரசர்கள் புலவர்களைத் தன் உயிரினும் மேலாக நேசிக்கும் பண்புடையவர்களாக இருந்துள்ளமையை அறிய முடிகின்றது. புலவர்களைப் புரப்பதன் வாயிலாக கல்வியை வளர்க்க முடியும் என்று எண்ணியுள்ளனர். அக்காலத்தில் அரசர்கள் தம்மை நாடி புலவர்களுள் எப்பொழுது வந்தாலும் விருந்து கொடுத்து ஆதரித்துள்ளனர்.

- பாலை நிலத்தில் வாழக்கூடிய எயினர் விருந்தானது சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது. கிடைப்பதற்கு அரிய புற்றரிசிச் சோற்றினை உண்டனர். இதனையே தன்னிடம் வரும் விருந்தினருக்கும் கொடுத்து மகிழ்ந்தனர்.

- மீனவர்களின் வாழ்க்கையானது மிகவும் துயருடைய வாழ்க்கையாகும். இத்தகைய துயரம் மிகுந்த வாழ்க்கையில் உயிருக்கு உத்திரவாதம் கிடையாது. இப்படிப்பட்ட நிலையிலும் விருந்திட்ட அவர்களின் மனிதநேயமானது பாராட்டக்கூடியதாய் உள்ளது.

- சங்ககாலத் தலைவன் ஒருவன் வாள், கேடயம் போன்றவற்றை அடகு வைத்து விருந்தோம்பினான். தன்னிடம் பொருள் இல்லாத நிலையிலும் இல்லை என்று சொல்லாமல் விருந்தோம்பிய மனித நேயம் சிறப்புடையதாக விளங்குகின்றது.

- மகளிர் தம்இல்லம் வரும் விருந்தினருக்கு விருந்தோம்ப தனது ஊடலினைக் கைவிட்டனர். தன் உயிராக நினைத்த தலைவன் வேறு ஒரு பெண்ணிடம் தொடர்கொண்டுள்ளதை அறிந்து தலைவி கோபம்கொள்ள, தலைவன் விருந்தினருடன் வந்ததனால் ஊடல் கொள்ளாமல் விருந்தினரை அன்புடன் அழைத்து விருந்தோம்பியதை அறிய முடிகின்றது. இத்தகைய மனிதநேயப் பண்பும் ஊடல் தீர்க்கும் கருவியாய்ச் செயல்பட்டுள்ளது.

- விருந்தினருடன் வந்த கால்நடைகளுக்கும் விருந்து கொடுத்த சங்ககால மக்களின் மனிதநேயம் பாராட்டும்படி அமைந்துள்ளது. மனிதன் தன்னைச் சார்ந்த மனிதர்களை மட்டும்அன்றிப் பிற உயிரினங்களையும் நேசித்துள்ளான் என்பதனை அறிய முடிகின்றது.

அடிக்குறிப்புகள்

1. அலெக்ஸ் இருதயராசு, அ.ம., 'திருக்குறளில் மனித நேயம்', ப. 26.
2. அன்னம்மாள், எஸ்., 'இலக்கியங்களால் மனிதரும் மதிப்பு மாற்றங்களும்', ப. 4.
3. டாக்டர் செட்டியார், ஏ.சி., 'ஆங்கிலத் தமிழ் அகராதி'. ப. 505
4. க்ரியாவின் 'தற்காலத் தமிழ் அகராதி', ப. 820.
5. மூர்த்தி, அ.கி., லியோவின் அகராதி, ப. 528.
6. ஆங்கில - தமிழ் அகராதி (English-Tamil Dictionary) Glossary of Legal Administration) சட்ட நிருவாக அருஞ்சொல் திரட்டு, ப. 98.
7. பகவதி, கு., 'மனித நேயம் கொடை' வெள்ளிக்கருத்தரங்கு, ப. 1.
8. கார்த்திகேயன், ஆ., 'மனிதநேயமும் அண்ணல் நபி (சல்) அழகிய வரலாறும்', ப. 1.
9. சுப்பையா பிள்ளை, கு., 'கணினி மொழி ஆய்வில் மனிதநேயம்', ப. 1.
10. கமலா, இரா., 'தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம்', வெள்ளிக்கருத்தரங்கு, ப. 1.
11. ராதா, க., 'ஆளுமைத்திறனும் மனித மேம்பாடும்' ப. 131.
12. அப்துல் காதர், ஹாஜி. எஸ்., 'இசுலாமியத்தில் மனிதநேயம்', ப. 311.
13. சுப்புலட்சுமி, ஆர்., 'சங்க இலக்கியங்களில் மனித நேயம்', ப. 8.
14. கார்த்திகேயன், அ., 'மனிதநேயமும் அண்ணல் நபி (சல்) அழகிய வரலாறும்', ப. 5.

15. அருட்திரு தியான் சந்திகார், தினமணி நாளிதழ், 25.12.01.

16. கைலாசபதி, க., 'ஒப்பியல் இலக்கியம்', ப. 21.

17. சாலினி இளந்திரையன், 'சங்கத்தமிழரின் மனிதநேய மணி நெறிகள்', ப. 95.

18. பாலசுப்பிரமணியன், கு. வெ., 'நற்றிணை' (மூலமும் உரையும்), ப. 688.

இயல் - ஐந்து

இன்றைய மனிதநேயமும் தமிழரின் விருந்தோம்பலும்

இயல் – ஐந்து

இன்றைய மனிதநேயமும் தமிழரின் விருந்தோம்பலும்

காலம் காலமாகத் தொடர்ந்து வரும் விருந்தோம்பல் பண்பு இன்றைய காலகட்டத்தில் முற்றிலும் அழிந்துவிடாமல் தேய்ந்துகொண்டு வருகின்றது. மனிதநேயத்தின் வெளிப்பாடாக அமைந்த விருந்தோம்பல் பண்பு இன்றைய சூழலில் அரிதாகக் காணப்படுவதற்குச் சில காரணங்களைக் குறிப்பிடலாம். மக்கள்தொகைப் பெருக்கம், வளர்ந்து வரும் அறிவியல் சாதனங்களின் அரிய கண்டுபிடிப்புகள், விலைவாசி ஏற்றம், தன்னலப்போக்கு, குடும்பங்கள் பிரிதல், வேலைச்சுமை, வேளாண்மை நிலங்களை விலைநிலங்களாக மாற்றல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

சங்ககாலத்தில் முன்பின் அறிமுகம் இல்லாத புதியவர் 'விருந்தினர்' என்று அழைக்கப்பட்டனர். அக்கால மக்கள் தங்கள் வீடுதேடிவரும் புதியவர்களை விருதோம்பவே சில விதிமுறைகளைப் பின்பற்றினர். பசி என்று தம் வீடு தேடி வந்தவர்களின் வாய்க்கு ருசியான உணவு வகைகளைச் சமைத்துக் கொடுத்து உண்ணச் செய்தனர். அக்கால மக்கள் விருந்தினருக்குச் சமைக்கப் பெரிதும் ஆர்வம் கொண்டிருந்தனர். சங்ககாலத்தில் அரசர்கள் விருந்தினருக்குச் சமைப்பதற்காக அட்டிற் சாலைகள் பலவற்றை உருவாக்கியிருந்தனர். அவற்றினில் சமையல் தொழில் புரிவோர் பலர் பணியாற்றினர். பெரும்பாலும் அட்டிற்சாலைகளில் ஆண்களே பணிபுரிந்தனர். ஆண்கள் பெரிய பாத்திரங்களைக் கொண்டு சமைப்பதில் திறமை உடையவர்களாகவும் வல்லவர்களாகவும் திகழ்ந்தனர்.

சங்க காலத்தில் விருந்தினர்களைப் பெரிதும் விரும்பி விருந்து செய்யும் பண்பினைப் போற்றி வளர்த்தனர். தம் வீட்டிற்கு விருந்தினர்

வரவில்லையே என்று எதிர்நோக்கி ஏங்கினர். தன் வீட்டிற்கு விருந்தினர் வரவேண்டும் என்று தெய்வத்தினைத் தொழுதனர். கணவன் மனைவி இடையிலான ஊடலினைத் தீர்ப்பதற்கு விருந்தினர் வரமாட்டார்களா என ஏங்கி நின்ற குடும்பங்களும் இருந்தன. எந்நேரத்திலும் விருந்தினர் வந்தாலும் அவர்களை ஏற்று நடத்தும் பண்பினைப் பேரின்பமாகக் கருதினர். வறுமை நிலையிலும் தன் உடைமைகளை விற்று விருந்தோம்பல் பண்பினைச் சிறக்கச் செய்தனர். விருந்தினர்களுக்குப் பலவகைப்பட்ட அசைவ உணவு வகைகளையும், தாங்களே தயாரித்த 'கள்' வகைகளையும் கொடுத்து மகிழ்ந்தனர். தங்கள் வீட்டில் விருந்தினர் வந்ததனால் ஊடல் கொள்ள பொழுதின்றி இருக்கின்ற நிலையில் விருந்து செய்வதில் கவனம் செலுத்தினர். இது போன்று விருந்தினர்களுக்கு விருந்து செய்வதில் பெரிதும் அக்கறை கொண்டவர்களாக விளங்சினர்.

இன்றைய காலகட்டத்தில் விருந்தோம்பல் தேய்ந்து கொண்டு வருவதற்குக் காரணம் விருந்து கொடுப்பவரது உணர்வும் விருந்தினை ஏற்பவரது உணர்வும் வேறுபடுவதலாகும். இதனால் விருந்தோம்பல் குறைந்து காணப்படுகின்றது எனலாம். விருந்து கொடுப்பவரின் மனநிலையும், விருந்து ஏற்பவரின் மனநிலையும் ஒத்துப்போகாத தன்மையை மட்டும் குறிப்பிடுவது சரியன்று. இருவர்க்கிடையேயான மனிதநேயமானது குறைந்து காணப்படுவதால் இப்பண்பு தேய்ந்து வருகின்றது எனலாம். அன்றைய காலகட்டத்தில் மனிதர்கள் முழுமனதோடு மனிதநேயத்தினைப் போற்றியவர்களாகக் காணப்பட்டனர். அதனால் எவ்வகையான விருந்து கொடுத்தாலும் விருந்தினர் அதை உள்ளன்போடு ஏற்றனர். விருந்து கொடுத்தவர்களிடமும் தம்மை நாடி வந்தவரின் பசியைப் போக்கவேண்டும் என்னும் உணர்வே முழுமையாக நிலைத்திருந்தது. இவ்விருவர்களுக்கிடையேயான மனிதநேய ஒற்றுமைப் பண்பே 'பார்' எங்கிலும் தமிழரின் விருந்தோம்பல் பண்பினைப் பறைசாற்றி இம்மண்ணில் நிலைத்திருக்கச் செய்திருக்கின்றது.

பிற நற்பண்புகள் பிறப்பதற்குத் தாய்ப்பண்பாக இருந்தது 'விருந்தோம்பல்' என்னும் இப்பண்பே. இத்தகைய சிறப்புப் பெற்ற விருந்தோம்பல் முழுமையான மனித நேயத்தினை வெளிப்படுத்தியுள்ளது. தன்னைப்போன்று பிறரை மட்டுமன்றி தன்னைவிடக் கீழே உள்ள ஓரறிவு உயிரினத்தையும் நேசிக்கக்கூடியவனாக இருப்பவனே 'மனிதநேயம் கொண்டவன்' என்று குறிப்பிடலாம்.

மனிதன் தன்னைப் போன்று பிற மனிதனையும் நேசிக்கக்கூடிய பண்பினையே மனிதநேயப்பண்பு என்று குறிப்பிடுகின்றோம். அகராதியாசிரியர்கள் பலர் மனிதநேயம் என்னும் அச்சொல்லுக்கு விளக்கம் தருவதைக் காணலாம். 'மனிதநேயம்' என்ற சொல்லுக்கு 'மனிதன் பிற மனிதனை நேசிப்பது ' என்ற ஒரே பொருளையே பெரும்பாலான அகராதியாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மனிதநேயத்தினை மரத்திற்கு ஒப்பாகக் குறிப்பிடலாம். பிற நற்பண்புகள் மனிதனிடையே வளர்வதற்குரிய வேர்ப்பண்பாக விளங்கிய விருந்தோம்பல் பண்பு இன்றைக்குச் சில காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பாதிப்பு மனிதனை வளர்ப்பதற்கு வழி செய்வனவாய் அமையவில்லை. அக்காலத்தில் மனிதநேயத்தினை முழுமையாக வெளிப்படுத்திய விருந்தோம்பல் பண்பிற்குத் தற்போது பாதிப்பு ஏற்பட்டுள்ளமையை உணரமுடிகின்றது.

வழிகாட்டுதலில் மனிதநேயம்

சங்ககாலத்தில் புலவர்களுக்கு ஆதரவாக விளங்கியவர்கள் அரசர்களும் பொதுமக்களுமே. விருந்தினர் என்போர் பெரும்பாலும் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் போன்ற கலைஞர்களே. இக்கலைஞர்கள் வறுமையில் வாடும்போது தங்களை ஆதரிப்போரிடம் சென்றனர். இவர்கள் செல்லக்கூடிய வழியில் உள்ள மக்கள் மனிதநேய

உந்துதலால் இவர்களுக்கு விருந்தோம்பி உள்ளனர். பின்னரே தாம் நாடிச் சென்ற அரசன் விருந்தோம்பியுள்ளான்.

சங்ககாலத்தில் போக்குவரத்து வசதியானது மிகுந்த அளவில் இல்லை. பெரும்பாலும் மக்கள் கூட்டம் கூட்டமாக ஆங்காங்கே ஒரு சமூகமாக வாழ்ந்து கொண்டிருந்தனர். ஒரு சமூகத்தில் வாழும் மக்களைச் சந்திக்க வெகுதூரம் செல்ல வேண்டியிருந்தது. இம்மக்களைச் சென்றடையும் புதியவர்கள் (விருந்தினர்) பெரும்பாலும் தங்களின் கால்நடைகள் மூலமாகவே பயணம் செய்துள்ளனர். தாமாக நடந்துசென்றும் பயணம் மேற்கொண்டனர். அவர்களால் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டுமே உணவினை எடுத்துச் செல்ல முடிந்தது. இவர்கள் கொண்டுவந்த உணவு தீர்ந்துபோன பிறகு தனது பசியினைப் போக்கிக்கொள்ள முன்பின் அறிமுகம் இல்லாதவர் வீடுகளுக்குச் செல்ல வேண்டியநிலை ஏற்பட்டது.

மக்களும் முன்பின் அறிமுகம் இல்லாத புதியவர்களை (விருந்தினர்) அன்புடன் அழைத்து அவர்களுக்கு உண்டி, உறைவிடம் கொடுத்து ஆதரித்து அனுப்பினர். இவ்வாறு விருந்தோம்பல் பண்பானது மக்களின் வாழ்வில் கலந்த ஒன்றாகவும், தலையானதாகவும் கருதப்பட்டு வழிவழியாக அவர்களால் சீரும், சிறப்புமாகப் போற்றப்பட்டு வந்தது.

சங்கப் புலவர்கள் தாங்கள் இயற்றிய பாடல்களின் பாடுபொருளாக பெரும்பாலும் காதலும், வீரமுமே சிறந்து விளங்கின. அவை இரண்டுமே தமிழரின் இரு கண்களாகப் போற்றப்பட்டன. காதலும், வீரமும் கண்களாக விளங்கியதுபோல் 'விருந்தோம்பலானது' அவர்களின் உயிர்நாடியாக விளங்கியுள்ளதை இலக்கியச் சான்றாதாரங்களின் வாயிலாக அறியமுடிகின்றது.

சங்கப் புலவர்கள் பெரும்பாலும் விருந்தோம்பல் பண்பினைப் பற்றி தனது படைப்புகளில் பல்வேறு இடங்களில் வெளிப்படுத்தியுள்ளனர்.

காரணம் புலவர்களே அக்காலத்தில் வறுமையுற்ற நிலையில் இருந்தனர். மன்னனைப் பாடிப் பரிசில் பெற விழைந்து பயணம் செய்யும் இவர்களே மக்களுக்குப் புதியவர்களாக (விருந்தினர்) இருந்தனர். விருந்தினரை ஏற்று நடத்திய மக்களின் விருந்தோம்பல் பண்பினைப் பற்றிப் புலவர்கள் தனது படைப்பின்மூலம் படைத்துக்காட்டினர்.

புலவர்கள் பெரும்பாலும் தமது உணவிற்காகவும், உறைவிடத்திற்காகவும் அரசரையோ, வள்ளல்களையோ நம்பி வாழ்ந்தனர். புலவர்களை ஆதரிக்க அரசர்களும் ஆர்வம்கொண்டு விளங்கினர். இதற்குக் காரணம் அந்தக் காலத்தில் கல்வி கற்றவர்கள் இவர்களே; அரசனை நல்வழிப்படுத்தியவர்களும் இவர்களே.

'கற்றவர்க்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு'

என்பது போல கல்வி கற்ற புலவர்களுக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பாக விருந்தோம்பல் செய்யப்பட்டது.

சங்க காலத்தில் புலவர்கள் பொதுநோக்கு எண்ணம் கொண்டவர்களாக இருந்தனர். தான் வறுமையுற்ற காலத்தில் அரசனை நாடிச் செல்லும் வழி அறியாதவராயும் இருந்தனர். பரிசில் பெற்ற புலவன் மன்னனிடம் செல்வதற்கான வழியின் அமைப்பினையும், அவ்வழியில் மக்களால் விருந்தோம்பல் செய்யப்பட்ட தன்மையினையும் பரிசில் பெறப்பட்ட புலவனிடம் கூறுவதாக இலக்கியம் காட்டுகின்றது.

அரசனிடம் ஆதரவு பெற்ற புலவன், தன்னைச் சார்ந்த மற்றொரு புலவனிடம் 'நீயும் என்னைப்போல் வறுமை நீங்கி வாழவேண்டுமானால் இத்தகைய வள்ளல் தன்மை வாய்ந்த அரசனால் ஆதரிக்கப்பெற்றுப் பொன், பொருட்களைக் கொண்டுவந்து தனது சுற்றத்தினரின் வறுமையை நீக்கி வாழலாம் என்று கூறினான். புலவர்கள் ஒரு பொதுநல நோக்குடன் வாழ்ந்தனர்.

'யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக' என்பது போல பரந்த நோக்குடையவர்களாகவும், தன்னைப்போல் பிறரையும் நேசித்ததாலும் அவர்களிடம் மனிதநேயமானது இயல்பாகவே மகுதியாக அமைந்திருந்தது.

தான் மட்டும் வளமான வாழ்வு நடத்தினால் போதும் என்று நினைத்திருந்தால், புலவனின் மனிதநேயமானது முற்றிலும் அழிந்திருக்கக்கூடும். அதனால், அவர்கள் சுயநலநோக்குடன் வாழாமல், தனக்குக் கிடைத்த பொருட்களைத் தன்னைச் சார்ந்தோருக்கும் பிறருக்கும் கொடுத்ததாகச் சங்க இலக்கியங்கள் பகர்கின்றன. இன்றைக்கு உலக நாடுகளின் மத்தியில் செவ்வியல் இலக்கியங்களில் தமிழ் மொழியும் ஒன்று என்று சிறப்பிப்பதற்குக் காரணம் பல இருப்பினும், அரசன் மற்றும் தமிழ்மக்களின் விருந்தோம்பலினால் விளைந்த மனிதநேயமும் காரணமாக அமைந்துள்ளது. விருந்தினை ஏற்ற புலவன் வறிதே இருக்காமல் மனிதநேயத்தோடு பாடியதால் செவ்விலக்கியங்களான சங்க இலக்கியங்கள் நமக்குக் கிடைத்துள்ளமை இங்கே சுட்டிக்காட்டப்படுகின்றது.

'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறு' என்று ஔவை சொல்வதைப்போல் புலவர்கள் எத்திசையின்கண் சென்றாலும் அவர்களுக்கு விருந்து கொடுத்து ஆதரிக்கும் தன்மையினைக் கொண்டவர்களாகத் தமிழர் இருந்துள்ளனர் என்பதனைச் சங்கப்பாடல்கள் எடுத்துக் காட்டியுள்ளன.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

(புறம். 192)

என்னும் கணியன் பூங்குன்றனாரின் பொன்மொழியானது ஒட்டு மொத்த மக்களின் மனிதநேயத்தினை வெளிப்படுத்தியுள்ளது.

புலவன் தான் கூறவேண்டிய கருத்துகளை ஒருவருக்கு மட்டும் கூற விழையவில்லை என்பதும் பொதுவாக உலக மக்களுக்கே கூற விழைந்ததையும் இக்கணியன் பூங்குன்றனாரின் பாடல்வழி அறியமுடிகின்றது.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் .....'

(குறள். 972)

என்னும் திருக்குறளிலும் மனிதநேயத்தினைக் காணலாம்.

விருந்தினர் என்போர்

உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களையே இன்றைக்கு விருந்தினர் என்று அழைக்கும் நிலையுள்ளது. புதியவர்கள் அறிமுகமான பிறகே விருந்தினர் ஆகின்றனர். புதியவரே விருந்தினராக இருந்த காலம் போய்ப் பழகியவர்களையும், தன் சுற்றத்தாரையும் விருந்தினர் என்று அழைக்கும் நிலை தற்காலத்தில் நடைமுறையில் உள்ளது.

"நூறு விழுக்காடு மக்கள் விருந்தினர் என்பவர் உற்றார் உறவினர்களையே குறிக்கும்"[1]

என்று பேராசிரியர் ஏகாம்பரம். ஆ., அவர்கள் தனது களஆய்வில் 'தமிழரின் விருந்தோம்பல், (அன்றும், இன்றும்) என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய காலச்சூழலில் அக்கம் பக்கத்தினருடன் பழகக்கூடிய வாய்ப்பானது மிகக்குறைந்தே காணப்படுகின்றது. அன்று வறுமையுற்ற புலவனின் துயர்துடைக்க மற்றொரு புலவன் அவனை வழிபடுத்தினான். தன்னை ஆதரித்த மக்கள், அவர்கள் வசித்த இடத்தின் அமைப்பு, வழியின் அருமைப்பாடு போன்றவற்றை எல்லாம் அவனிடம் கூறினான்.

இன்றைக்கு பக்கத்துத் தெருவில் குழாயில் தண்ணீர் வருகின்றதா என்று கேட்டால், அதற்குப் பதில் கூறுபவர்கள் மிகக் குறைவு. காரணம் தண்ணீர் வருகின்றது என்று கூறினால் கூறுபவர்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் போய்விடுமோ என்ற சுயநலம் மக்களிடம் ஓங்கி உள்ளதைக் காணமுடிகின்றது.

எந்த வசதியும் இல்லாத ஒரு காலக்கட்டத்தில் மனிதநேயமானது ஒரு பெரிய ஆலமரமாக இருந்தது. இன்றைக்கு மனிதநேயமானது மிகவும் குறைந்தே காணப்படுகின்றது.

மனிதநேயத்தினால் ஏற்பட்ட சேமிப்புக் கிடங்குகள்

தன்னிடம் வரும் விருந்தினர்களை விருந்தோம்புவதற்கே வேளாண் தொழில் புரிந்தனர் எனலாம். காட்டுப்பகுதிகளை அழித்து வேளாண்தொழில் செய்யக் காரணம் உணவுப் பொருட்களைப் பெருக்குவதற்காகவே. உணவுப் பொருட்களைக்கொண்டு விருந்தினரை விருந்தோம்பிப் பஞ்சமில்லா வாழ்க்கை நடத்த எண்ணினர் என்பதை,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு"

(குறள். 81)

என்னும் குறட்பாவழி அறியலாகின்றது. வள்ளுவர் குறிப்பிடுவதிலிருந்து இல்வாழ்க்கை வாழ்தலின் பயனே வேளாண் தொழில் புரிந்து விருந்தோம்புதற்கு என்று அறியமுடிகின்றது.

சங்ககாலத்தில் தமிழகத்தினை ஆண்ட அரசர்கள் மக்களின் நலனில் பெரிதும் அக்கறை காட்டினர். எனவேதான் மக்களும் **'மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி'** என்று மன்னனை முழுதும் நம்பி வாழ்ந்தனர். மன்னர்களின் செங்கோலாட்சி நிலவிய காலமாக இருந்தது அக்காலம்.

பஞ்சம் ஏற்பட்ட காலங்களில் மக்களின் வறுமையைத் தீர்க்க அரசர்கள் தங்களின் அரண்மனைகளில் தானியக் கிடங்குகளை அமைத்து, அதில் விளையும் பொருட்களைச் சேர்த்து வைத்தனர். சேமித்து வைக்கப்பட்ட விளைப்பொருட்களையும், தானியங்களையும் வறுமையால் வாடுவோர்க்கு வழங்கியுள்ளனர்.

> **"பஞ்சம் இந்தியா முழுவதிலும் அடிக்கடி தோன்றுவதுண்டு. இந்நிலைமைக்குத் தமிழ்நாடு விலக்கன்று. பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்தாற்போல் பஞ்சம் நிலவியதுண்டு. இவ்வாறு சங்ககாலம், சோழர் காலம், பல்லவர் காலம் என்னும் காலங்களில் எல்லாம் பஞ்சம் நிலவியுள்ளது"**[2]

என்று ந. சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.

"சோழநாடு சோறுடைத்து" என்ற அடைமொழியும் உண்டு. அத்தகைய அளவில் வேளாண்தொழிலில் விளைச்சல் கண்ட தமிழகத்திலும் பன்னிரண்டு ஆண்டுகள் பஞ்சம் நிலவி உள்ளது. இப்பஞ்சத்தினைத் தீர்க்க தானியக் கிடங்குகள் பயன்பட்டன. தானியக் கிடங்குகளின் மூலம் வறுமையில் வாடுவோரின் துயர்துடைக்க எண்ணினர். எண்ணியதற்கு மன்னரும் மக்களும் அவர்கள் வறுமையைப் போக்க அவர்களிடையேயான மனிதநேயமே அடிப்படைக் காரணம் எனலாம்.

> **"சோழர் ஆட்சிக் காலத்தில் வரி வசூலிப்பதற்காகக் கிராமங்களுக்குச் செல்லும் அரசாங்க அதிகாரிகளுக்குக் கிராமத்தார் ஒரு கலம் அரிசி, ஐம்பது தேங்காய்கள், ஒரு கட்டு வெற்றிலை, ஒரு பிடி உப்பு, ஒரு உரி மிளகு முதலியவற்றைத் தரவேண்டும் என்றும் வரி தண்டுபவர்களுக்குச் சோறு போடும் கடமை 'எச்சோறு' எனவும் அழைக்கப்பட்டது."**[3]

என்று ந. சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.

"சோழர் ஆட்சிக்காலத்தில் வரிவசூல் செய்வதன் பொருட்டு நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் 'எச்சோறு' என்ற பெயரில் பல பொருளைக் கொடுக்கவேண்டும் என்ற ஒரு நிலை இருந்ததும் விருந்தோம்பல் முறை வளர்வதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்"[4]

என்று முனைவர் ஆ. ஏகாம்பரம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

ஒருவரின் பசியைத் தீர்க்க ஒரு குடும்பம் போதும். ஒரு ஊரின் பசியைத் தீர்க்க அவ்வூர் மக்கள் எல்லாம் சேர்ந்து தானியங்களை தானியக்கிடங்குகளில் சேமித்து வைத்தனர். இத்தகைய வழியில் கொடிய பஞ்சத்திலிருந்து தங்களையும், தன்னைச் சார்ந்தோரையும் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்பதனைத் தமிழர்கள் உணர்ந்துள்ளனர். நிலம் வைத்திருப்போர் குறிப்பிட்ட அளவு தானியங்கள் கொடுக்க வேண்டும் என்ற சட்டங்களும் இயற்றக் காரணம் பிறரின் பசியினைத் தீர்க்கும் மனிதநேயமே என்பதை அறியமுடிகின்றது.

உழவுத்தொழிலின் நிலை

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'(குறள்.1031) என்பார் திருவள்ளுவர். உழவன் ஏர் பிடிக்கவில்லை என்றால் உலக மக்களுக்குச் சோறு கிடையாது. உழவுத்தொழிலே உணவுப்பொருட்களை அளிக்கக்கூடியதாக அமைந்துள்ளது. உணவு இல்லையென்றால் உலகத்தில் உயிரினங்கள் உயிர்வாழ முடியாது. அதனால் திருவள்ளுவர் உழவுத்தொழிலின் சிறப்பினைக் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைக்கு மக்கள்தொகைப் பெருக்கத்தினால் உழவுத்தொழில் செய்யும் நிலங்களானது விலை நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. உழவு நிலங்கள் எல்லாம் நாகரிக மோகத்தால் கூறுபோட்டு விற்கப்படும் நிலையைக் கண்கூடாய்ப் பார்க்கமுடிகின்றது.

சங்ககாலத்தில் உணவுப்பொருட்கள் பண்டமாற்று முறையில் பரிமாறிக்கொள்ளப்பட்டது. ஒரு இடத்தில் விளைந்த பொருட்களை மற்றொரு இடத்தில் உள்ளவர்களுக்குக் கொடுத்து உதவினர்.

இன்றைக்கு விலைநிலங்களாக மாற்றம் அடைந்ததினால் உணவுப்பொருட்களின் பற்றாக்குறையினால் விலையானது அதிகரித்துள்ளது. உணவுப்பொருட்களை விலைகொடுத்து வாங்கக்கூடிய சூழலில் சிலருக்கு வருமானம் ஒரு பற்றாக்குறையாக உள்ளது. இதனால் மக்களிடையே விருந்தோம்பல் பண்பானது குறைந்து காணப்படுகின்றது.

'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' என்ற பழமொழியின் மூலம் வேளாளனின் விருந்தோம்பல் பண்பினை அறியமுடிகின்றது. இங்கு பயிர்த்தொழில் செய்பவனே வேளாளன் எனப்படுகின்றான்.

> **"வேளாளரல்லாத பிறர் பிறருக்கு உதவி செய்தல் அரிதாயிருக்கின்றது. எனவேதான் ஈகையும் விருந்தோம்பல் பண்பும் வேளாளரிடம் மிகுதியாகக் காணப்படுகின்றது."**[5]

அக்காலத்தில் வேளாண்தொழில் நிரந்தரத்தொழிலாகக் கருதப்பட்டது. வேளாண்தொழில் மூலம் மிகுதியான உணவுப் பொருட்களைப் பெருக்கினர்.

தற்காலத்தில் வேளாண்தொழில் புரிபவர்கள் பலர் தங்களின் நிலங்களை விற்றுவிட்டு நகரப்பகுதியில் ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றனர். பலருக்கு விருந்தளித்த வேளாண்மக்கள் ஒரு சிலர் இன்றைக்கு உணவில்லாமல் அன்றாட வாழ்க்கை நடத்துபவர்களாகவும் உள்ளனர் எனலாம்.

விளைநிலங்கள் மாறும் நிலை

தமிழகத்தில் உழவுத்தொழில் குறைந்தமைக்குக் காரணங்கள் பலவுண்டு. பாகப்பிரிவினை என்னும் ஒரு பழக்கத்தினால் உழவன் ஒருவனுக்குப் பத்து ஏக்கர் நிலம் இருந்தது என்றால் அதனை அவரது ஐந்து மக்களுக்கும் பிரித்துக் கொடுத்தால் எவ்வாறு பயிர்த்தொழில் செய்யமுடியும்? நிலம் குறைந்து கொண்டே வருமல்லவா?

உடன்பிறந்தாரிடம் பாகப்பிரிவினை என்னும் பெயரால் பங்காளிச் சண்டைகளும் ஏற்படுகின்றன. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காத தன்மையால் தங்களின் நிலங்களை விலைநிலங்களாக மாற்றுகின்றனர். புதிய உறவுகளைத் தேடிக்கொள்ளும் சூழலில் பாகப்பிரிவினையால் பழைய உறவுகளை இழக்கின்றனர். உடன்பிறந்த அண்ணன் தம்பியை பங்காளி எனச் சொல்லும் பழக்கமும் உள்ளது.

“அஞ்சு வயசுல அண்ணன் தம்பி
பத்து வயசுல பங்காளி”

என்ற பழமொழி தமிழகத்தில் நிலவுகின்றது.

விளைச்சல் தரக்கூடிய நிலங்கள் எல்லாம் தொழிற்சாலைகளாக உருவாக்கப்படுகின்றன; குடியேற்றப் பகுதிகளாக மாற்றம் அடைந்துள்ளன. இதனால் உணவுப்பொருள் பற்றாக்குறை ஏற்பட்டு விருந்தோம்பல் என்னும் பண்பு குறைந்து கொண்டு வருகிறது.

இத்தகைய சூழலில் மனித நேயமானது குறைந்து கொண்டே வருகின்றது. வாழும் குடும்பங்களிலும் விருந்தோம்பல் பண்பு வலுவிழந்து கொண்டே வருகிறது.

திருமண வாழ்க்கையில் விருந்து பெறும் இடம்

அக்காலத்தில் ஆண், பெண் சேர்ந்து வாழும் இல்லற வாழ்க்கையில் விருந்தோம்பலானது ஒரு சிறந்த அறமாகக் கருதப்பட்டது.

திருமணம் செய்துகொள்வதே தம்மிடம் வரும் விருந்தினரைப் பேணிக்காக்கவே என்ற எண்ணம் உடையவர்களாகத் திகழ்ந்தனர்.

"வருநர்க்கு வரையா வளநகர் பெற்று
மலரத் திறந்த வாயில் பலர் உணப்
பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்
வசைஇல் வான்திணைப் புரையோர் கடும்பொடு
விருந்து கண்டு எஞ்சிய மிச்சில், பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவது"

(குறிஞ்சிப்பா : 201 – 207)

என்னும் சங்கப்பாடலில் விருந்தினது மேன்மை வெளிப்படுத்தப் பட்டுள்ளது. திருமணம் செய்து வாழும் வாழ்க்கையானது 'தன் வீடு தேடி வரும் விருந்தினரை விருந்தோம்பி பின்னர் எஞ்சியதைத் தானும் தன் தலைவியும் உண்டு நல்வாழ்வு நடத்தவே' என்பதனை குறிஞ்சிப்பாட்டின்மூலம் அறிய முடிகின்றது.

இன்றைக்குக் காதல் திருமணமாக இருந்தாலும், பெற்றோர் நடத்தி வைக்கும் திருமணமாக இருந்தாலும் ஏதோ ஒரு எதிர்பார்ப்பில் நடைபெறுகின்றது. தாங்கள் சேர்ந்து வாழக்கூடிய வாழ்க்கையில் கணவனோ, மனைவியோ ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் வாழ்க்கையை மேற்கொள்ளாததால் கணவன், மனைவி பிரிந்து வாழும் சூழலும் ஏற்பட்டுள்ளது.

இன்றைக்குக் கணவன் மனைவி வாழும் குடும்பத்திலும் யாரும் வரக்கூடாது என்ற எண்ணம் நிலவுகின்றது. யார் என்றால் கணவனுக்குப் பிடிக்காத மனைவி வீட்டார், மனைவிக்கு பிடிக்காத கணவன் வீட்டார், இருவரும் விட்டுக்கொடுத்து வாழாத குடும்பத்தில் விருந்தோம்பல் நடப்பது மிகக்குறைவாகக் காணப்படுகின்றது.

பெரும்பாலும் இன்றைய திருமணத்தில் விருந்தினரைப் பேணவோ, சுற்றத்தினைப் பேணிக்காக்கவோ முடியாது என்ற நிலை

நிலவுகின்றது. ஒருசிலர் குடும்பவாழ்வில் சுயநலம்தான் முழுக்க முழுக்க காணப்படுகின்றது எனலாம்.

கணவன், மனைவி இருவர்களுக்கிடையே உள்ள எதிர்பார்ப்பானது செல்வத்தை நோக்கிச் செல்வதால் திருமணமானது ஒரு வாணிபம் நடைபெறும் இடமாக உள்ளது. வியாபாரத்தில் இலாபத்தினை மட்டும் எதிர்பார்க்கக்கூடிய சூழலில் மனிதநேயமே அழிந்து விடுகின்றது.

இரவில் விருந்து

சங்ககாலத்தில் விருந்தினருக்கென்று ஒரு நேரத்தையோ, காலத்தையோ வரையறுத்துக் குறிப்பிடவில்லை. எந்நேரத்தில் வந்தாலும் விருந்தினருக்கு செய்யத்தக்கனவற்றைச் செய்து வழியனுப்பி வைத்தனர் என்பதனை,

"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே"

(நற். 142)

என்னும் நற்றிணைப் பாடலடிகள் மூலம் உணரப்படுகின்றது. சங்ககால மகளிர் இரவு நேரத்தில் விருந்தினர் வந்தால் அவர்களிடம் இனிய மொழிகளைக் கூறி விருந்து புரந்தனர் என்பது புலனாகின்றது.

விருந்தினர் இரவில் வந்துவிட்டனரே என்று மனம் வருந்தாமலும் சோம்பலாக இல்லாமலும் பலவகை உணவுப்பொருட்களைக் கொடுத்து ஆதரித்தனர். இன்றைக்கு இரவில் விருந்தினர் வந்தால் விருந்து கொடுப்போர் சரிவர விருந்தோம்பல் செய்வதில்லை. வந்துவிட்டனரே என்று மனதளவில் வருத்தம் கொள்கின்றனர். விருந்தினர் எனத் தான் விரும்பும் உறவினரையும் தன் நெருங்கிய சுற்றத்தாரையும் நண்பர்களையும் மட்டுமே குறிப்பிடுகின்றனர். இவர்களே ஏதோ ஒரு

சூழலில் இரவில் தன் சுற்றத்தாரின் வீட்டிற்குச் சென்றுவிட்டால் விருந்து கொடுப்போரின் மனநிலையைக் கண்டு வருத்தம் கொள்கின்றனர்.

பெரும்பாலும் இரவில் விருந்தினராகச் செல்வது தவறான ஒரு பழக்கம் என்று எண்ணுகின்றனர். அதனால் இரவில் விருந்தினராகச் செல்வதைப் பெரும்பாலும் தவிர்க்கின்றனர். இரவில் விருந்தாகச் செல்ல நேர்ந்தாலும் அவர்கள் வீட்டில் தங்காமல் இரவோடு, இரவாகத் தனது இல்லத்திற்கு வந்துவிடுகின்றனர். காலம் தாழ்த்தி வரும் கணவனுக்கு இரவு உணவு அளிக்காமல் மனைவியானவள் கணவனை வெளியில் சென்று உணவகத்தில் உண்டுவிட்டு வருமாறு கூறிவிடுகின்றாள். இன்றைக்கு அலுவலக வேலையின் காரணமாகக் காலதாமதமாகச் செல்லும் கணவன்மார்களுக்கு 'கையேந்திபவன்', என்று அழைக்கப்படும் இரவு உணவுக்கடைகளில்தான் உணவு கிடைக்கின்றன. கணவனுக்கு விருப்பத்துடன் உணவு சமைக்கும் காலம் மாறி அந்திக் கடைகளின் பெருக்கம் அதிகரித்துள்ளன.

தன் கணவன் உணவகத்தில் சாப்பிட்டால் உடல்நலக்குறைவு ஏற்படுமே என்ற எண்ணம் தோன்றுவது இல்லை. இத்தகைய சூழலில் கணவன் மனைவி பலரிடையே நெருக்கமான அன்பானது நாளடைவில் குறைந்து விடுவதால் மனிதநேயம் அற்றுப்போகின்றது.

விருந்தினரை உபசரிக்கும் முறை

தம் வீடு தேடி வரும் விருந்தினரை உபசரிப்பதற்கென்றே அக்கால மக்கள் சில வழிமுறைகளைக் கையாண்டனர். தன் வீட்டிற்கு விருந்தினர் வந்தால் அவர்களை இன்முகத்துடன் வரவேற்றுக் கை, கால் கழுவத் தண்ணீர் கொடுத்தும், இருக்க மணையோ, பாயோ கொடுத்தும் அமரச் செய்தனர். அமரச்செய்யும் இடத்தினைப் பசுவின் சாணம், தண்ணீர் தெளித்துத் துடைத்துத் தூய்மையாக வைத்திருந்தனர். பிறகு இலையில்

உணவு பரிமாறி அருகில் இருந்து விருந்தோம்பிய நிகழ்வுகளை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

விருந்தோம்பும் முறையைப் பற்றித் திருக்குறளிலும், ஆசாரக் கோவையிலும், அபிதான சிந்தாமணியிலும் குறிப்புகள் காணப்படுகின்றன.

"இன்சொல் அளாவல் இடம்இனி தூண்யாவர்க்கும்
வன்சொல் களைந்து வகுப்பானேல் - மென்சொல்
முருந்து ஏய்க்கும் முட்போல் எயிற்றினாய் நாளும்
விருந்து ஏற்பர் விண்ணோர் விரைந்து"

(ஏலாதி. 7)

என்று இப்பாடல் விருந்தில் பின்பற்ற வேண்டிய முறைகளைக் குறித்துக் கூறுகின்றது. விருந்தினர் ஆக வருகின்றவர்கள் அனைவரிடம் இனிய சொற்களையே பேச வேண்டும்; தங்குவதற்கு வசதியான இடம் அளிக்க வேண்டும்; ஆடை அணி முதலியவற்றையும் அளிக்கவேண்டும்; இனிய உணவு அளிக்கவேண்டும். கடுஞ்சொல் அற்ற இனிய சொற்களாலேயே அவர்களோடு பேசவேண்டும். இந்த முறையில் விருந்தினர்களைப் பாதுகாக்கின்றவன் தேவர்களாலேயே விருந்தினராக ஏற்றுக் கொள்வதற்குரியவனாவான் என்று மேற்கண்ட ஏலாதிப்பாடல் விருந்தினரை உபசரிக்கும் முறையைக் குறிப்பிடுகின்றது.

"இருக்கை யெழலும் எதிர்செலவும் ஏனை
விடுப்ப வொழிதலோடு இன்ன-குடிப்பிறந்தார்
குன்றா வொழுக்கமாகக் கொண்டார் கயவரோ(டு)
ஒன்றா வுணரற்பாற்(று) அன்று"

(நாலடி. 143)

என்ற பாடலடிகள் விருந்தினர் வந்தால் இல்லறத்தார் இருக்கையை விட்டு எழுந்து உள்ளன்போடு வரவேற்கவேண்டும் என்ற குறிப்பினைப் புலப்படுத்துகின்றன.

"முறுவல் இனிதுரை கால்நீர் இணைபாய்
இடக்கையோடு இவ்வைந்து மென்ப தலைச்சென்றார்க்கு
ஊணொடு செய்யும் சிறப்பு"

(ஆசாரக்.கோ. 54)

என ஆசாரக் கோவையும் விருந்தோம்பல் முறைகளைக் கூறுகின்றது. இன்றைக்கு விருந்தினரை உபசரிக்கும் முறையில் மாற்றங்கள் காணப்படுகின்றன. ஒருசில சடங்கு நடத்தும் இடத்தில் விருந்து உபசரிக்கும் முறையைப் பின்பற்றி வருகின்றனர். விருந்து உபசரிக்கும் முறையில் ஏழடிச்சென்று வழியனுப்பும் பழக்கம் இருந்தது. ஆனால் இன்று ஏழடி என்பது மறைந்து பின் சென்று வழியனுப்பும் பழக்கம் மட்டும் உள்ளது. இன்றுள்ள பலர் இம்முறையை அறந்திலர்.

இன்றைக்குத் தம்மிடம் வரும் விருந்தினர்களைத் தேநீர் கொடுத்து விருந்தோம்புவது பழக்கமாகிவிட்டது. தேநீர் கொடுத்து விருந்தாளியை மகிழ்ச்சியடையச் செய்கின்றனர். தேநீரோடு ஒருசில தின்பண்டங்களைக் கொடுக்கின்றனர். இயந்திர வாழ்க்கையை நடத்தும் மனிதர்கள் இத்தகைய தேநீர் விருந்தையே பெரும்பாலும் விரும்புகின்றனர்.

திருமணம், காதுகுத்துதல், போன்ற மங்கல நிகழ்ச்சிகளில் விருந்து உபசரிப்பு முறை சற்று மாற்றத்துடன் அவரவர் பழக்கத்திற்கு ஏற்றவாறு காணப்படுகின்றது.

தலைவனின் விருந்தோம்பல் பண்பினைத் தலைவி கூறுதல்

சங்க காலத்தில் தலைவன் கொண்டுவந்த பொருட்களைக் கொண்டு தனது சுற்றத்தினரையும், விருந்தினரையும் ஏற்று நடத்தும் பண்பினைக் கொண்டவளாகத் தலைவி திகழ்ந்தாள்.

தலைவன் வினையின் காரணமாகத் தலைவியை விட்டுப் பிரிந்த நிலையில் தலைவி தலைவனை நினைத்து வருத்தம் கொள்ளாமல் தம் வீடு தேடி வரும் விருந்தினரை விருந்தோம்பி அனுப்பினாள்.

"புறவும் இதனும் அறவும் உண்கெனப்
பெய்தற்கு எல்லின்று பொழுதே; அதனால்
முயல்சுட்ட வாயினும் தருகுவோம்; புகுந்தது
ஈங்குஇருந் தீமோ முதுவாய்ப் பாண!
கொடுங்கோட்டு ஆமான் நடுங்குதலைக் குழவி
புன்றலைச் சிறாஅர் கன்றெனப் பூட்டும்
சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்,
வேந்துவிடு தொழிலொடு சென்றனன், வந்து, நின்
பாடினி மாலை யணிய,
வாடாத் தாமரை சூட்டுவன் நினக்கே"

(புறம். 319)

என்னும் புறப்பாடலில் தலைவனின் நற்பண்புகள் கூறப்படுகின்றன. தலைமகள் பாணனை நோக்கிச் சீறூர் மன்னன் நெருநல் வேந்துவிடு தொழிலோடு சென்றனன். அதனால் சிறு தினை உணவும், புறா, பறவை, சுட்ட முயலிறைச்சி ஆகியனவும் தருகின்றோம். 'நீ உண்பாயாக, எனக் கூறி, வேந்தன் ஏவிய தொழிலை மேற்கொண்டு தலைவன் சென்றுள்ளான். அவன் வந்ததும், நின் பாடினிக்கு பொன்னரி மாலையும், உனக்கு பொற்றாமரைப் பூவும் தருவான் என்று கூறுவதன் மூலம், தலைவனின் விருந்தோம்பும் மாண்பினைத் தலைவி உணர்த்துகின்றாள்.

"வேட்டச் சிறாஅர் சேட்புலம் படராது,
படமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்கு நிணம் பெய்த தயிர்க்கண் விதவை,
யாணர் நல்லவை பாணரொடு, ஓராங்கு
வருவிருந்து, அயரும் விருப்பினள்"

(புறம். 326)

என்னும் புறநானூற்றுப் பாடலடிகள் விருந்தினருக்கு அளிக்கப்பட்ட விருந்தின் தன்மையைப் புலப்படுத்துவதாய் உள்ளது. தலைவி வேட்டுவச் சிறுவர்கள் நெடுந்தொலைவு சென்று வேட்டையாடாமல், அருகில் உள்ள

அழகான மடுக்கரையில் பிடித்துக்கொண்டு வந்த உடும்பின் இறைச்சியைச் சமைத்துத் தயிரோடு கூழையும் பிற நல்ல உணவுப் பொருட்களையும் செய்து பாணர்க்கும் உடன்வந்த விருந்தினர் பலருக்கும் தலைவி விருந்து கொடுத்தாள் எனபதனைப் புலப்படுத்தும் பாடல் இது.

பரத்தையின் காரணமாகத் தலைவியை விட்டுப்பிரிந்த தலைவன் மீண்டும் தலைவியைக் காணவருகின்றான். தம் வீடு தேடி வருகின்ற விருந்தினரைக் கவனிப்பதிலேயே நேரத்தினைக் கழிப்பதால் தலைவி தலைவனுடன் ஊடல் கொள்ள நேரமின்றிப் போயிற்று என்று கூறுவதை அறியலாம்.

சங்க காலத்தில் தலைவன் இல்லாத நிலையிலும் தலைவி வந்த விருந்தினரை 'மனிதநேயத்தோடு' அழைத்து விருந்து செய்தாள். சங்க காலத்துச் சூழ்நிலையும் மனநிலையும் இன்றைய தலைவியர்க்கு இல்லை.

கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் சென்றால்தான் குடும்பத்தினை இன்றைய சூழலில் நடத்த முடியும். கணவன் கொண்டுவரும் வருவாய், குறைவாக இருப்பதினால் தனக்கும் தன் பிள்ளைகளுக்குமே சரியாக இருப்பதால் பெரும்பாலும் விருந்தினர்களின் வருகையைப் பலர் விரும்புவதில்லை.

இன்றைக்கும் தலைவன் இல்லாத நிலையில் பெண்கள் விருந்து செய்கின்றனர். விருந்து என்பதனைத் தேநீர் விருந்தோடு முடித்துக் கொள்கின்றனர்.

> "கணவன் இல்லாத சமயம் ஓர் உறவினர் விருந்துக்கு வந்துவிட்டால் மனைவியால் தனியாக விருந்தைக் கவனிக்க முடியாது. அப்படியே கவனித்தாலும் அதைச் சமுதாயம் வேறு கண்கொண்டு பார்க்க வாய்ப்புள்ளது."[6]

என்று முனைவர் பொ. சத்தியபாமா அவர்கள் "தமிழியலின் எதிர்காலவியல்" என்னும் கட்டுரைத் தொகுப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைக்கு ஒரு சில மனிதர்களின் மத்தியில் மனைவியானவள் தனியே விருந்தளிப்பதைத் தவிர்க்கவேண்டிய சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றாள். இத்தகைய காலச்சூழலில் புதியவரை விருந்தோம்புவது மிக அரிதாகக் கடினமானதாகக் காண முடிகின்றது

.....யென உரைத்தன்றி நல்கி, தன்மனைப்
பொன்போல் மடந்தையைக் காட்டி, இவனை
என்போல் போற்று என்றோனே அதற்கொண்டு
அவன் மறவ லேனே

(புறம். 395)

என்று சங்கத் தலைவன் ஒருவன் தனது மனைவியைப் பார்த்து, 'என்னை எவ்வாறு கவனித்துக் கொள்வாயோ அதைபோல் இவ்விருந்தினரையும் கவனித்துக்கொள்' என்றான். சங்ககாலத்தில் ஆண்கள் பரந்த உள்ளம் கொண்டவர்களாக இருந்துள்ளனர் எனும் குறிப்பு இப்புறப்பாடலில் உள்ளது.

இன்றைக்குக் கணவன் மனைவியுடன் சேர்ந்திருக்கின்ற நிலையில் 'தன்னைப்போல் விருந்தினரைக் கவனித்துக்கொள்' என்று கணவன்மார்கள் ஒருபோதும் மறந்தும் கூறுவது கிடையாது. அத்தகைய அளவில் சமுதாயம் காணப்படுகின்றது. இத்தகைய நிலையில் மனைவியானவள் கணவன் இல்லாத நேரத்தில் விருந்து அளிப்பதைத் தவிர்க்கவேண்டியுள்ளது.

ஊடல் தீர்த்தவர் விருந்தினர்

குடும்ப வாழ்வில் தலைவன், தலைவி இருவரிடையே ஊடல் ஏற்பட்டால் அவர்களின் ஊடலைத் தீர்க்கும் வாயில்களில் ஒன்றாக விருந்தினர்கள் செயல்பட்டனர்.

சங்கத் தலைவன் ஒருவன் தன் தலைவியின் ஊடலைத் தீர்க்க விருந்தினர் யாரேனும் தமது இல்லத்திற்கு வரமாட்டார்களா என ஏங்கும் நிலையை,

“..... நப்புலந்து
அட்டிலோளே அம் மா அரிவை -
எமக்கே வருகதில் விருந்தே சிவப்புஆன்று,
சிறு முள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம் காண்கம்மே”

(நற். 120)

எனக் கூறும் நற்றிணைப் பாடல் வழியே அறிய முடிகின்றது.

“இம்மை மாறி மறுமை யாயினும்
நீ ஆகியர் எம் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே”

(குறுந். 49)

என்ற பாடல் தலைவி தலைவனின் காதல் தன்மையைக் காட்டுகின்றது. கணவன், மனைவி உறவு திடீரென்று ஒருநாளில் ஏற்படுவதன்று. பல பிறவிகளில் தொடர்ந்து வரவேண்டும் எனக் கருதினர். முற்பிறவிகளில் கணவன் மனைவியராக வாழ்ந்தவர்களே ஊழின் வலிமையால் மீண்டும் கூடி வாழ்கின்றனர் என்னும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இன்றைக்கும் பெரும்பாலான கணவன், மனைவி அவ்வாறே கருதுகின்றனர். **‘திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது’** என்ற நம்பிக்கை இன்றும் உண்டு.

தலைவி தன் தலைவனை உயிருக்கு நிகராக நேசிக்கக் கூடியவளாக இருக்கும்போது தன் கணவன் இன்னொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டுள்ளான் என்பதை அறிந்து தலைவி ஊடலில் இருக்கும்போது, விருந்தினர் வந்தால் அவர்களை அன்புடன் அழைத்து விருந்து உபசரிக்கின்றாள்.

தன் கணவனை இன்னொருத்திக்கு விட்டுக்கொடுக்காத தலைவி விருந்தினருக்காக தனது ஊடலினை விட்டுக்கொடுக்கின்றாள். சங்க காலத் தலைவியர் விருந்தினர்களை எப்பொழுதும் விட்டுக்கொடுக்கக் கூடியவர்களாக இருந்ததில்லை என்பதை அறியமுடிகின்றது. விருந்தினருக்காக தனது ஊடலைக் கைவிடுத்து விருந்தோம்பும் தலைவியின் மனிதநேயம் பாராட்டக்கூடியதாக உள்ளது.

இன்றைக்கு விருந்தினர்கள் ஊடல் தீர்ப்பவர்களாகக் கருதப்படுவதில்லை. விருந்தினர்களால் கணவன் மனைவி இடையே பிரிவு ஏற்படுகின்றது. விருந்தினர் என்போர் உறவுமுறை கொண்டவர்களாக உள்ளனர். உறவினர்களால் தங்களுக்குத் தொல்லை என்று எண்ணுகின்றனர். கணவன் விரும்பாத மனைவியின் உறவுக்காரரோ, மனைவி விரும்பாத கணவனின் உறவுக்காரரோ வீட்டிற்கு வந்துவிட்டால் அவர்களைக் கவனிக்காமல் போட்டிப்போட்டுக் கொண்டு சண்டைபோடும் கணவன் மனைவியிடையே பிரிவு ஏற்படுகின்றது. ஒரு சில குடும்பங்களில் இப்பிரிவே நிரந்தரப்பிரிவாக மாறி மணவிலக்கு வரை சென்றுவிடுகின்றது.

> ***"ஊடுதல் காமத்திற்(கு) இன்பம் அதற்(கு) இன்பம்***
> ***கூடி முயங்கப் பெறின்"***

(குறள். 1330)

என்ற குறட்பா, ஊடல் காமச் சுவையைக் கூட்டுவது என்பதனை உணர்த்துகின்றது. எனினும் நெடிய ஊடல் கூடலைச் சிறுமைப் படுத்திவிடும் என்பதையும் நன்கு உணர்ந்தனர். அதனால் ஊடல் தீர்க்கும் வாயில்களில் ஒன்றாக விருந்தினரைக் கருதினர்.

இன்றைக்கு அத்தகையதொரு நிலை முற்றிலும் மாறிக் காணப்படுகின்றது. கணவன் மனைவி இடையே விருந்தினர்களால் பெரிதும் இடையூறு ஏற்படும் என்றும் விருந்தினர்களாலேயே குடும்பத்தில்

குழப்பம் உண்டாகும் என்றும் எண்ணுகின்றனர். இதனைக் குறித்துக் கூறுகையில்,

> **"தலைவனும், தலைவியும் ஊடல் கொண்டு இருக்கையில் தமது இல்லத்திற்கு விருந்தினர் வந்தால் அங்கு ஊடல் தீர்ந்து விருந்தினரைப் பேணும் கடமையில் ஈடுபடுவர். இக்கருத்தினைக் இக்காலத்துக் கணவன், மனைவியரது விருந்தோம்பல் பண்புகளுடன் ஒப்பிட்டுப் பார்த்ததில் கணவனைச் சார்ந்த விருந்தினர் வந்தால் மனைவி ஒரு மாதிரியாகவும், மனைவியைச் சார்ந்த விருந்தினர் வந்தால் கணவன் ஒரு மாதிரியாகவும் நடந்துகொண்டு அடுத்து வேற்றுமைகள் உருவாவதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்"[7]**

என்று சி. இராணி அவர்கள் இன்றைய விருந்து அளிப்பவரின் ஊடல் தன்மையினைக் குறிப்பிட்டுள்ளார்.

ஊடல் தீர்ப்பவர்களாகக் கருதப்பட்ட விருந்தினர் இன்றைக்கு ஊடலுக்குக் காரணமானவர்களாக மாறியுள்ள சூழ்நிலையானது உருவாகிவிட்டது. முன்பின் அறியாத விருந்தினருக்காகத் தனது வாழ்க்கையை விட்டுக்கொடுத்து வாழ்ந்தவர் காலம் மாறி, தனது உறவுக்காரர்களை விட்டுக்கொடுத்து வாழ்கின்றவர் காலமாக இன்று மாறியது. இச்சூழலில் இவர்களிடையே 'மனிதநேயப் பண்பானது' குறைந்து கொண்டு வருகின்றது என்றே கூறலாம்.

வறுமையில் விருந்தோம்பிய மனிதநேயம்

சங்க காலத்தில் விருந்தோம்பலினை எந்நிலையிலும் செய்யக்கூடிய நிலையில் மக்கள் இருந்தனர். தம் வீடு தேடி வருபவரிடம், 'தன்னிடம் எந்தப் பொருளும் இல்லை, அதனால் விருந்து செய்ய முடியாது' என்று கூறுவதை இழிவான செயலாகக் கருதினர். அதனால்

தன்னிடம் இருக்கும் எந்தப் பொருளாயினும், அதனை விற்றாவது விருந்து அளித்தனர் என்பதனை,

"நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும் புடைப் பழவாள் வைத்தனன் இன்று இக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம் இது கொண்டு
ஈவதிலாளன் என்னாது நீயும்"

(புறம். 316)

என்னும் பாடலடிகள் சங்கத் தலைவனின் உயந்த பண்பினைப் புலப்படுத்துகின்றது. ஒருவன் விருந்தினருக்காகத் தனது பழமையான வாளினையும் கேடயத்தையும் அடகு வைத்து விருந்திட்டான். அடுத்த நாள் விருந்தினர் வந்தனர். தன்னிடம் எதுவும் இல்லா நிலையில் தனது சிறிய யாழினை பணையம் வைத்து விருந்திட்டான். இல்லாத நிலையிலும் தமது உடைமைகளை இழந்து விருந்திட்ட மனிதநேயப் பண்பினை அக்கால மக்களிடம் காண முடிகின்றது.

"வரகும் தினையும் உள்ளவை எல்லாம்
இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென
குறித்து மாறு எதிர்ப்பை பெறா அமையின்
குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து
சிறிது புறப்பட்டன்றோ இலளே"

(புறம். 333)

என்னும் புறப்பாடலில், வேட்டுவக்குடிப் பெண்ணொருத்தி விருந்திடத் தன்னிடம் வேறு பொருட்கள் இல்லாததால் விதைக்காக வைத்திருந்த தினையை உரலிற் இட்டுக் குத்தி விருந்தினரை உபசரித்தாள் என அறிய முடிகின்றது.

சேக்கிழார் புராணத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் செய்த விருந்தோம்பலைக் காட்டிலும் இளையான்குடி மாற நாயனாரின் விருந்தோம்பலானது மிகச்சிறப்பாகப் போற்றப்படுகின்றது.

இளையான்குடி மாறநாயனர் ஏதும் இல்லா நிலையில் வயலில் விதைத்திருந்த விதை நெல்லைக் கொண்டு விருந்திட்டுள்ள நிகழ்வையும் இறைவனே மனமிரங்கி அவர்களுக்கு வீடுபேறு அளித்தமையையும் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். மக்கள் வறுமையிலும் விருந்திட்டுள்ளனர். இவர்தம் விருந்தோம்பலானது மனிதநேயத்தினை வெளிப்படுத்தும் சிறந்த பண்பாக விளங்கியது.

இன்றைக்கு மக்கள் வறுமை நிலையில் விருந்தோம்பல் செய்வதில்லை. இருப்பினும் தனது சுற்றத்திற்கு விருந்திட அக்கம், பக்கத்தில் கடன் வாங்கி விருந்திட்டால் அவர்களை அக்கம்பக்கத்தினர் ஏளனம் செய்கின்றனர். 'கடன் வாங்கி விருந்திட வேண்டுமா? அப்படிப்பட்ட விருந்தினைச் செய்யாமல் இருப்பதே நல்லது' என்றும் கூறுகின்றனர்.

இன்றைக்குக் கடன்பட்டு விருந்தோம்புதலைச் சமுதாயத்தினர் வெறுக்கின்றனர். வறுமையில் வாடுவோர் பிறருக்கு விருந்திடுவது அரிதாக உள்ளது.

'தனக்கு மிஞ்சினால்தான் தானமும் தருமமும்'

என்ற பழமொழி ஒன்று உண்டு. இன்றைக்கு விருந்தளிப்பவர் சூழ்நிலையானது மாறி வருகின்றது.

விருந்தினர்க்கு மனித நேயத்தோடு அளிக்கும் பரிசுப் பொருட்கள்

சங்ககாலத்தில் விருந்தினர்களாக வந்தவர்கள் பாணன், பொருநன், விறலி, பாடினி போன்றோர்கள். இவர்களாலேயே இசை பெரிதும் போற்றப்பட்டுள்ளமையைச் சங்க கால இலக்கியத்தின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

இவர்கள் விருந்தினராகச் செல்லும் வீடுகளில் உணவு உண்ட பிறகு ஆடிப் பாடி, அவர்களை மகிழ்வித்தனர். இவர்களே அக்கால மக்களின் பொழுதுபோக்குக் கலைஞர்களாக விளங்கியுள்ளனர்.

இக்கலைஞர்களுக்கு அரசர்களும், மக்களும் விருந்திடுவதோடு மட்டுமல்லாது அவர்களுக்குப் பரிசுப் பொருட்களையும் வழங்கியுள்ளனர் என்பதனை அறியமுடிகின்றது.

அரசர்கள் இத்தகைய கலைஞர்களுக்குத் தேர், குதிரை, யானை, பொன், பொருட்களை வாரி வழங்கினர். பொற்றாமரைப் பூவும், பொன்னரி மாலையும் வழங்கினர். இத்தகைய பரிசுப்பொருட்களை அன்றைக்கு மக்கள் மனம் உவந்து கொடுத்தனர். பிறருக்குக் கொடுக்கக்கூடிய பண்பு அவர்தம் மனிதநேயத்தினைக் காட்டுகின்றது.

இன்றைக்கு விருந்தினர்களுக்கு விருந்து மட்டும் அளிக்கப் படுகின்றது. ஒரு சில இடங்களில் வீட்டிற்குத் திரும்பிச் செல்லும்போது பரிசுப்பொருட்கள் கொடுத்து அனுப்புகின்றனர்.

திருமணம், வளைகாப்பு மற்றும் விசேட தினங்களில் விருந்தினர்களாக வருபவர்களுக்குத் தங்களால் முடிந்த அளவில் வீட்டிற்குச் செல்லும்போது அவர்களுக்குத் தேங்காய், பூ, பழம், சிறுசிறு பாத்திரங்கள் என ஏதோ ஒன்றை அன்பளிப்புப் பொருட்களாகக் கொடுத்து அனுப்புகின்றனர்.

இத்தகைய அன்பளிப்புப் பொருட்களானது இன்றைய சூழலில் மனிதநேயத்தின் அடிப்படையில் வழங்கப்படுவதும் இல்லை; ஏற்கப்படுவதும் இல்லை. அவை தற்பெருமைக்காகவே வழங்கப் படுகின்றன என்பதனை நடைமுறையில் காண முடிகின்றது.

ஆண்களின் நிலை

சங்க காலத்தில் ஆண்மகன் ஒருவன் வினையை மேற்கொள்வதே விருந்தினரைப் பேணிக்காப்பதற்காகவே என்னும் நிலை இருந்தது.

"ஆற்றார்க்(கு) ஈவதாம் ஆண்கடமை"

(நாலடி. 98)

என்று ஆண்மகனின் கடமையை நாலடியார் குறிப்பிடுகின்றது.

இன்றைக்கு இத்தகையதொரு நிலை முற்றிலும் மாறிக் காணப்படுகின்றது. இன்றைக்கு ஆண்மகன் ஊதியம் ஈட்டுவதே தன் குடும்பத்தை மட்டும் காப்பாற்றுவதற்காகவே. ஒருசில ஆடவர் தன் குடும்பத்தைக் கூட காப்பாற்ற முடியாத சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதை ஒரு சில இடங்களில் காணலாம்.

விருந்தினர் என்போர் இன்றைக்கு உறவுமுறைக்காரர்களே. அதனால் உறவுமுறைக்காரர்களின் முன், வசதிபடைத்தவனாக மட்டும் உயர்ந்து நிற்கவேண்டும் என்ற எண்ணத்தில் பொன், பொருட்களைச் சேர்த்து வைத்து வாழ்கின்றனர். பிறருக்குக் கொடுக்கக்கூடிய எண்ணமானது கட்டாயமாக ஏற்படுவதில்லை. அதனால் ஆண்கள் இன்றைக்கு விருந்தினருக்காகப் பாடுபடுவது அவசியமில்லாத ஒன்றாக மாறிவிட்டது எனலாம். இத்தகைய சூழ்நிலையில் ஒரு சில ஆண்களிடையே மனிதநேயமானது தேய்ந்தநிலையில் காணப்படுகின்றது. இன்றைக்கு ஆண்கள் தன் மனைவி மக்கள் போன்றவர்களுக்காக மட்டுமே உழைத்துச் சேர்த்துவைக்கும் சூழல் உருவாகி உள்ளது. இன்றைய குடும்பத் தலைவர்களிடம் பொது நலநோக்கு ஒரு சிலருக்கே இருப்பதனால் அவர்கள் பிறருக்கு உதவி செய்யவேண்டும் என்று எண்ணுகின்ற எண்ணத்தை தன்னார்வக்

குழுக்களின் மூலமும், தொண்டு நிறுவனங்களின் மூலமும் நிறைவு செய்து கொள்கின்றனர். ஒரு சில குடும்பத் தலைவர்கள் தன் குடும்பம் என்று சுயநலநோக்கோடு வாழ்க்கை நடத்திவருகின்றனர்.

இன்றைய ஆண்கள் விருந்தினர்க்காக என வாழவேண்டிய நிலையில் அவர்கள் இல்லை. தன் குடும்பத்தினை மட்டுமே உழைத்துக் காப்பாற்றுபவனாக உள்ளான் என்பதனை இங்கே பதிவு செய்ய வேண்டியுள்ளது.

பெண்களின் நிலை

விருந்தினர் வரவேண்டும் என்று நடுகல்லினைத் தொழுத நிலை அன்றைய நிலை இன்றைய பெண்களிடம் முற்றிலும் காணப்படவில்லை. இன்றைக்கு விருந்தினர்களால் பெண்களுக்கு மிகுதியான தொல்லை. அதிலும் அலுவலக வேலைப் பார்க்கும் பெண்களுக்குப் பெரும் தொல்லையாகவே விருந்தினர் உள்ளனர்.

அன்றைக்கு தலைமகன் கொண்டு வந்த பொருட்களைக் கொண்டு தலைவி தனது சுற்றத்தினர், விருந்தினரைப் பேணிக்காப்பவளாக இருந்தாள். இன்றைக்கு அத்தகையதொரு நிலை இல்லை.

ஆண், பெண் இருவரும் சேர்ந்து ஊதியம் ஈட்டினால் மட்டுமே தம் குடும்பத்தினை உயர்த்தி நிறுத்தமுடியும் என்ற சூழ்நிலையானது தற்போது உருவாகியுள்ளது. பெண்கள் இன்றைக்கு விருந்தினருக்காக நேரம் ஒதுக்குவது என்பது இயலாத நிலை. ஆண் இல்லாத குடும்பத்தில் பெண்கள் விருந்தோம்பல் மேற்கொண்டால் அப்பெண்ணைச் சமுதாயமானது தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கக்கூடிய சூழ்நிலை உள்ளது.

அறிமுகம் இல்லாதவர் பசியுடன் தன்வீடு தேடி வந்துவிட்டால் அவர்களை மனிததேயத்துடன் அழைத்துத் தனியாக விருந்தோம்ப இயலாத நிலையில் பெண்கள் உள்ளனர். காரணம், பொன், பொருளுக்கு ஆசைப்படும் கயவர்களினால் வீடுகளில் தனியாக உள்ள பெண்களுக்கு ஆபத்து இருந்துகொண்டே இருக்கின்றது. பெண்கள் தனது உறவினர்களுக்கும் தனியாக விருந்து கொடுத்தால் அதை வேறு கண்கொண்டு பார்க்கும் சில சிக்கல்களினால் பெண்கள் தனியாக விருந்து அளிக்க முடியாத நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் பெண்கள் விருந்தோம்பல் செய்யும் நிலையினை வெறுக்கின்றனர், மனிதநேயத்தின் வெளிப்பாடாக அமைந்த விருந்தோம்பல் இன்றைக்கு இதுபோன்ற ஒருசில காரணங்களால் பெண்களிடையே குறைந்து கொண்டே வருகின்றது.

ஒருசில பெண்கள் தன் கணவன் கொண்டுவந்த தின்பண்டங்களைப் பிறர் கண்ணில் படாதவாறு மறைத்து வைத்துத்தம் குடும்பத்தினர் மட்டுமே உண்ணும் பண்புடையவர்களாக உள்ளனர். தனது குழந்தைகளுக்கும் அத்தகையதொரு பண்பினைக் கற்றுத் தருகின்றனர்.

ஆனால் சங்கத்தலைவி ஒருத்தியின் வீட்டில் பண்டங்கள் குறைவாக இருந்தாலும் இத்தகைய நிலையில் விருந்தினர் வந்தபோது விருந்தினர் அனைவரையும் பந்தலில் உட்கார வைத்து அப்பண்டங்களை உணவாக அளித்து மகிழ்ந்தாள் என்பதை,

"தவச்சிறிது ஆயினும் மிகப்பலர் என்னாள்
நீள்நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்
இற்பொலி மகடூஉப் போல....."

(புறம். 331)

என்ற புறப்பாடலால் அறிய முடிகின்றது.

ஒரு சில பெண்கள் தன் மாமியார் மாமனார் போன்ற முதியவர்களை கவனிக்கும் பொறுப்பினைச் சுமையாக எண்ணுகின்றனர். முன்பின் அறிமுகம் இல்லாதவர்களுக்கு விருந்தோம்பல் செய்யும் காலம் மாறித் தன் சொந்தங்களைக் கவனிப்பதில் ஆர்வம் காட்டாமல், அவர்களை முதியோர் இல்லங்களில் சேர்க்கும் அவல நிலையையும் தற்போது காணமுடிகின்றது.

முதியவர்களைப் பேணிக்காக்கும் தகுதிகளை இழந்த ஒருசில குடும்பங்களில் மனிதநேயமானது அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இத்தகைய குடும்பங்களில் விருந்தினர்களைக் கவனிப்பது என்பது சற்று அரிதாகவே காணப்படுகின்றது.

நாட்டுப்புறங்களில் விருந்தோம்பலும், மனிதநேயமும்

நாட்டுப்புறங்களில் நடைபெறும் விருந்தானது நகரத்தைவிடச் சற்று வேறுபாடுடையது. வீட்டுக்கு விருந்தினர் வந்தால் அவர்களை அன்புடன் அழைத்துப் பாயை எடுத்துப்போட்டு அமரச் செய்வார்கள். பின்னர் குடிநீரோ அல்லது மோரோ, தேநீரோ பருகக் கொடுப்பார்கள். பிறகு உணவிட்டு உபசரிப்பது வழக்கமாகி இருக்கின்றது.

> **"விருந்தினர் வீட்டுக்கு வந்தால் அவரை முதன் முதலில் வாங்க, வாங்க இப்பொழுதுதான் வரீங்களா என்று வரவேற்றுப் பின் வீட்டினுள் அழைத்துச் சென்று பாயை எடுத்துப்போட்டு, அமரச் செய்து பின் ஏதாகிலும் வயிற்றுக்குத் தேநீரோ, குடிநீரோ கொடுத்து உணவுக்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்ற செய்தியினைக் களப்பகுதியாகிய சித்தலம்பட்டுக் கிராமத்தில் மேல்சாதி, கீழ்ச்சாதி மக்களிடையே பெறப்பட்ட தரவுகளின் வாயிலாக அறியமுடிகின்றது"**[8]

என்று முனைவர் ஆ. ஏகாம்பரம் அவர்கள் தமிழரின் விருந்தோம்பல்

(அன்றும், இன்றும்) என்னும் நூலில் நாட்டுப்புற மக்களின் விருந்தோம்பலினைக் குறிப்பிட்டுள்ளார்.

"ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது பழமொழி. தமிழ்நாட்டில் நாட்டுபுறங்களில் சிறு ஊர்கள் பல உள்ளன. பொதுவாக இவ்வூர்களில் மக்கள் பேசும் மொழியும், விருந்தோம்பும் முறையும் இடத்திற்கு இடம் வேறுபட்டு இருப்பினும் பெரும்பான்மையான ஊர் மக்கள் தங்கள் வீடுகளுக்கு வரும் விருந்தினரை அன்புடன் அழைத்து உட்கார வைத்துப் பிறகு நீரோ, மோரோ, தேநீரோ அளிக்கின்றனர். இதனை அவர்தம் விருந்தோம்பும் பண்பாக அறியமுடிகின்றது.

நாட்டுப்புறமக்கள் தங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர்களுக்கு இறைச்சி உணவினை அளிப்பது குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியங்களிலும் விருந்தினருக்கு இறைச்சி உணவு கொடுப்பது சிறப்பாகக் கருதப்பட்டுவந்தது. அன்று விருந்துணவில் இறைச்சி உணவுக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. விருந்தினர் இறைச்சியுணவினைப் பெரிதும் விரும்பி உண்டனர் என்பதனை,

..... அறிநர்
கீழ்மடைக் கொண்ட வாளையும், உழவர்
படை மிளிர்ந்திட்ட யாமையும், அறைநர்
பெருந்துறை கரும்பில் கொண்ட தேனும்
நீர்தரு மகளிர்கு குற்ற குவளையும்,
வன்புலக் கேளிர்க்கு வருவிருந்து அயரும்
மென்புல வைப்பின் நல்நாட்டுப் பொருந

(புறம். 42)

என்னும் பாடல் மூலம் உணரப்படுகின்றது. வீட்டுக்கு வந்த விருந்தினர்க்கு வாளை மீனையும், ஆமைகளையும், தேனையும், செங்கழுநீர்ப் பூவினையும் கொடுத்து விருந்தோம்பினர் என்பதனை புறநானூற்றுப் பாடல்வழி அறியமுடிகின்றது.

நாட்டுப்புறங்களில் உள்ள பெரும்பாலான வீடுகளில் திண்ணைகள் காணப்படுகின்றன. இத்திண்ணைகளில் முன்பின் அறிமுகம் இல்லாத வழிப்போக்கர்கள் இரவு நேரங்களில் தங்கிச் செல்வது வழக்கமாகி உள்ளதை அறியலாம். பகலிலும் ஒருசிலர் நடந்த களைப்பின் காரணமாகப் படுத்துச்செல்வதும் உண்டு. மனிதநேயம் கொண்ட ஒரு சிலர் அவர்களுக்குக் குடிக்க நீரோ, மோரோ, தேநீரோ கொடுக்கின்றனர். ஒருசிலர் உணவும் கொடுக்கின்றனர். தற்போது நாட்டுப்புறங்களிலும் விருந்தோம்பல் பண்பு குறைந்து வருகின்றது.

'முதல் நாள் தையிலை, 'இரண்டாவது நாள் கையிலை, மூன்றாவது நாள் தரையில்' என்ற பழமொழி இன்றைக்கு விருந்தினரின் நிலையை உணர்த்துகின்றது.

முதல் நாள் விருந்தினருக்குத் தைத்த இலையில் உணவிட்டனர் என்றும், இரண்டாம் நாள் கையில் உருண்டை பிடித்துத் தந்தனர் என்றும், மூன்றாவது நாள் வெறும் தரையிலேயே என்ற நிலையில் விருந்து செய்தனர் என்றும் உணரலாம். இந்த பழமொழி வாயிலாக விருந்தினரின் நிலையும், விருந்து கொடுத்தோரது நிலையும் புலப்படுத்தப்படுகின்றன.

நகர மக்களின் விருந்தும் மனிதநேயமும்

நகரத்தில் பெரும்பான்மையான மக்கள் அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் வாழ்கின்றனர். அவர்கள் அக்கம், பக்கத்தினருடன் பழக்கக்கூடிய வாய்ப்பும், நேரமும் குறைவாகக் காணப்படுகின்றன. அன்றைய காலத்தில் விருந்தினர்களே தொலைத்தொடர்புச் சாதனங்களாக இருந்தனர். இன்றைக்கு அத்தகையதொரு நிலை காணப்படுவதில்லை.

மனிதனின் அரிய கண்டுபிடிப்பால் உலகத்தில் எந்த மூலையிலும் வாழும் மக்களுடன் தொடர்புகொண்டு பேசும் நிலை உருவாகிவிட்டது.

உலகில் எங்கு என்ன நடந்தாலும் உடனே வீட்டில் இருந்து பார்க்கக்கூடிய அளவில் தொலைத்தொடர்புச் சாதனங்கள் பெருகிவிட்டன.

அறிவியல் சாதனைகளின் நடுவில் இயந்திர வாழ்க்கை வாழக்கூடிய மனிதனுக்குத் தனது விருந்தினருடன் உட்கார்ந்து பேசும்நிலையும், விருந்தினரை உபசரிக்கும் நிலையும் மாறிப்போய் விட்டது எனலாம். நேரமின்மையைக் காரணமாகக் குறிப்பிடலாம்.

விருந்தினராக இன்றைக்கு வருபவர்களாக உறவினர், நண்பர் என்று அவர்களை மட்டுமே குறிப்பிடலாம். இத்தகைய உறவினர்களையும், நண்பர்களையும் பெரும்பாலும் கைப்பேசியிலேயே தொடர்பு கொள்கின்றனர். இவர்களின் விருந்து பராமரிப்பானது கைப்பேசியிலேயே முடிந்து விடுகின்றது. ஒருசில காரணத்தினால் தவிர்க்கமுடியாத சூழலில் விருந்தினை ஏற்றே ஆகவேண்டும் என்ற சூழ்நிலையில் ஒரு குடும்பத்தில் ஒருவர் (அ) இருவர் மட்டுமே செல்கின்றனர். குடும்பத்தோடு செல்வதை தொந்தரவாகக் கருதுகின்றனர்.

ஒரு சில வீடுகளில் விருந்தினருக்குத் தேநீர், மாச்சில்லு (Biscuit) மட்டும் கொடுத்து அனுப்பிவிடுகின்றனர். விருந்து ஏற்போரும் இதனையே பின்பற்றுகின்றனர். உட்கார்ந்து நிதானமாகப் பேசும் மனநிலையும், நேரமும் குறைந்தே வருகின்றது.

> **"ஒரு குடும்பத்தில் காலை, மதியம், இரவு என மூன்று வேளைகளிலும் அனைவரும் ஒன்றாகக் கூடி உணவு உண்ண நேரம் இருப்பதில்லை. தந்தை எப்பொழுது சாப்பிட வருவார்? என்று மகனோ, மகளோ கேட்டுத் தெரிந்து கொள்ளும் அளவு அவர்களுக்குள்ளே ஒரு நீண்ட இடைவெளி உருவாகி வருவதால் விருந்தோம்பல் பண்பாடு குறைய ஆரம்பித்து வருகின்றது"**[9]

என்று கூறுகிறார் முனைவர் பெ. சத்தியபாமா அவர்கள்.

நகரத்தில் வாழ்வோரின் நிலையானது முற்றிலும் மாறியுள்ளது. ஒரு குடும்பத்தில் மூவர் உள்ளனர் என்றால் அம்மூவருமே சேர்ந்து உண்ணும் சூழ்நிலையானது நேரமின்மை காரணமாக மாறிவருகின்றது. இத்தகைய சூழ்நிலையில் விருந்தினரைக் கவனிக்கும் நிலையானது மிகவும் குறைந்து காணப்படுகின்றது.

"விருந்தும் மருந்தும் மூன்று நாள்" என்று பழமொழி கூறுவார்கள். ஆனால் நகரத்தில் விருந்தோம்பலானது மூன்று நிமிடத்தில் முடியும் நிலையில் உள்ளது என்றே குறிப்பிடலாம்.

நகர மக்கள் ஒரு சிலர் மனிதநேயம் கொண்டு முன்பின் அறிமுகம் இல்லாதவர்களிடம் இரக்கம் கொண்டு வீட்டிற்கு அழைத்து உணவிட்டு உபசரித்தால் அப்புதியவர் வீட்டில் உள்ள பொருட்களை களவாடிச் சென்று விடுகின்றனர். ஒருசில சமயம் விருந்து கொடுப்பவர்கள் உயிரையும் கொடுக்கவேண்டிய நிலையினைச் செய்தித்தாள்களின் மூலம் அறியலாம்.

முன்பின் அறிமுகம் இல்லாதவர்களை வீட்டில் சேர்த்து விருந்து கொடுத்தால், விருந்தினை ஏற்றபின் வீட்டில் உள்ள பொருட்கள் களவாடப்படுகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் காவல் நிலையத்தில் புகார் செய்யமுடியாத சூழ்நிலையில் மக்கள் வாழ்கின்றனர். முன்பின் அறிமுகம் இல்லாதவர்களுடன் நட்பு வைத்துக்கொள்வது முட்டாள்தனம் என்னும் சூழ்நிலையானது நகரத்தில் உருவாகியுள்ளது. சமூகத்தில் தீமையை விளைவிக்கக்கூடியவர்களால் விருந்தோம்பல் பண்பானது சிறந்து விளங்குவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடுகின்றது.

நிகழ்ச்சிகளில் விருந்தோம்பல்

திருமணம், இறப்பு, வளைகாப்பு, காதணி விழா, பிறந்த நாள் விழா, திருவிழாக்கள் போன்ற நிகழ்ச்சிகளில் விருந்தோம்பல் மரபு பின்பற்றப்படுகின்றது.

இத்தகைய விருந்தோம்பலில் பெரும்பாலும் உற்றார், உறவினர், நண்பர்கள் முக்கிய இடம்பெறுகின்றனர். இதைத்தவிர பிறந்தநாள் விழா, சுப நிகழ்ச்சிகள், அவல நிகழ்ச்சிகள், பட்டமளிப்பு விழா, நூல் வெளியீட்டு விழா, போன்ற விழாக்களிலும் விருந்தானது நடைபெறுகின்றது. இத்தகைய நிகழ்ச்சிகளில் விருந்தோம்பலானது தவறாமல் நடைபெறுகின்றது.

அன்றைய காலத்தில் விருந்தோம்பலில் பங்குகொண்டு வாழ்த்திச் சென்றனர். விருந்தினராக வருவோரின் உள்ளத்தினை மட்டும் பார்த்தனர். அதாவது விருந்தினராக வந்தவர் வாயாற உண்டு வயிறார வாழ்த்திச் செல்வதையே நிறைவாகக் கருதினர்.

இன்றைக்கு அத்தகையதொருநிலை முற்றிலும் மாறியுள்ளது. விருந்தினராகச் செல்லுவோர் விருந்து கொடுப்பவர்களுக்கு ஏதாவது கொடுக்கவேண்டும் என்று எண்ணுகின்றனர். அதனால் தங்களால் முடிந்தவரையில் விருந்து கொடுப்போரின் தகுதிக்கேற்றவாறு விருந்தினர் பதிலுக்கு ஏதாவது ஒன்றினைச் செய்கின்றனர்.

> **"விருந்தினராகச் செல்பவர்கள் செல்லும் இடங்களுக்குப் பெரும்பாலும் வெறுங்கையோடு செல்வது கிடையாது. அவ்வாறு செல்வதும் முறையற்ற செயலாகக் கருதப்படுகின்றது. இவ்வாறாகவே விருந்தினர்களாக வருபவர் ஏதாகிலும் பொருட்கள் எடுத்துக் கொண்டும், தின்பண்டங்கள் வாங்கிக் கொண்டும் வரவேண்டும் என்று வீட்டார் எதிர்பார்க்கின்றனர்"[10]**

என்று முனைவர் ஆ. ஏகாம்பரம் அவர்கள் தமிழரின் விருந்தோம்பல் (அன்றும், இன்றும்) என்ற நூலில் விருந்துகொடுப்பவர், பெறுபவர் ஆகிய இருவரைப் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

இன்றைக்கு மங்கலநிகழ்ச்சிகளிலும், அவல நிகழ்ச்சிகளிலும் விருந்துகொடுப்பவர், விருந்து ஏற்பவர் ஏதோ ஒரு எதிர்பார்ப்புடன் விருந்தினை அளிப்பதும் ஏற்பதுமாய் விருந்தானது நிறைவு பெறுகின்றது என்பதனை அறியமுடிகின்றது.

சடங்குகளில் விருந்தோம்பல் உணர்த்தும் மனிதநேயம்

மனிதன் பிறந்தது முதல் இறக்கின்ற வரையிலும் ஏதாவது ஒரு சடங்கு முறைக்குட்பட்டே வாழ்கின்றான். அத்தகைய சடங்கு முறையில் மிகவும் தேவையான ஒன்றாக விருந்தோம்பல் பண்பு கருதப்படுகின்றது.

திருமணம், இறப்பு, வளைகாப்பு, காதணிவிழா, பிறந்த நாள் விழா திருவிழாக்கள் மற்றும் பண்டிகைகள் போன்ற நாட்களில் விருந்தோம்பலானது நடைபெறுகின்றது. இறந்த வீடுகளில் விருந்திடுவதற்குக் காரணம், இறந்துபட்டோரின் ஆவியானது அமைதியடையும் என்ற நம்பிக்கை தமிழர்களிடையே இருந்தமையே.

ஒரு வீட்டில் இறந்துவிட்ட ஒருவரின் உறவினர் மற்றும் நண்பர்கள் அவரவர் பழக்கத்திற்கு ஏற்றவாறு இறந்தவரின் உடலினை அடக்கம் செய்து வருவதைப் பார்க்கின்றோம். இறந்தவர் வீட்டில் உணவு எதுவும் செய்யக்கூடாது. அதனால் அவர்களின் உறவுமுறைக்காரர்கள் உணவு சமைத்து, இறந்தவர்களின் வீட்டிற்குக் கொடுப்பார்கள். இதனை இறந்தவர்களின் வீட்டில் இருக்கின்றவர்களுக்கு அளிப்பார்கள். வரும் உறவினர் உண்ணுவர். இதனைத் 'துக்கச்சோறு' என்று அழைக்கின்றனர்.

இறந்தவர்களுக்குப் பதினைந்தாம் நாள் சில சடங்குகள் செய்வது வழக்கம். இதனைக் 'கருமாதி' என்ற பெயரில் அழைக்கின்றனர். இறந்தவர்களுடைய ஆன்மா சாந்தம் அடைவதற்காக இச்சடங்கு செய்யப்படுகின்றது எனலாம். கருமாதி நிகழ்ச்சியில் 'விருந்து' மிக முக்கியமாக இடம்பெறுகின்றது.

திருமணம் செய்யும் வீட்டில் விருந்து நடைபெறுகின்றது என்பதனை சங்க காலத்திலேயே அறிய முடிகின்றது.

> **"திருமணக் காலங்களில் பொழுது புலர்ந்து கவின்பெறு காலை நேரம் உழுத்தங்களியும், பெருஞ்சோறும் வழங்குவதற்கு ஆயத்தம் செய்து வைக்கப்பட்டுள்ளன"**[11]

என்று தம் இலக்கியத்தில் மேற்கோள் காட்டியுள்ளார் சி. இலக்குவனார்.

திருமண நிகழ்ச்சியில் விருந்தோம்பலானது மிகமுக்கியமாக இடம்பெற்றுள்ளது. இது போன்றே காதணி விழா, வளைகாப்பு, பிறந்தநாள் விழா, திருவிழாக்கள் போன்றவற்றை நடத்துகின்றனர். இவ்விழாக்களிலும் விருந்தோம்பும் பண்பு மேம்பட்டதாகக் கருதப்பெறுகின்றது.

பிறருக்கு அளிக்கப்படும் உணவு அன்னதானத்திற்குச் சமம். அன்னதானம் அளிப்பதால் தனக்கு நன்மை கிட்டும் என்ற நம்பிக்கை மக்களிடையே இன்றும் உள்ளது. இதுபோன்ற சடங்குகளில் உணவு உற்றார், உறவினருக்கு மட்டும் உணவு அளிக்கப்படவில்லை. முன்பின் அறிமுகம் இல்லாதவர்க்கும் அளிக்கப்படுகின்றது. இந்த நிகழ்ச்சிகளின் வாயிலாக இன்றும் மனிதநேயமானது இப்பண்பினை, வெளிப்படுகின்றது. இப்பண்பினை,

> **"அடியார்கள் பிறந்த நாள், மறைந்த நாள் கண்டு கொண்டு அன்னதானம் அளிக்கும் அடியவர்களும் இருக்கின்றார்கள். தமது பிறந்தநாளில் அன்னதானம் செய்யும் அன்பர்களும் உண்டு. பெற்றோர்கள் மறைந்த நாளில் ஏழை எளியவர்க்கு அன்னம் ஊட்டுவதனைப் பெரியோர்களும் வழிபாடாகவே கருதுகின்றனர். மாணவர் விடுதிக்கும், முதியோர்க்கும் இனிப்புகளும் விருந்தும் கொடுக்கின்ற உத்தமர்களையும் காணலாம். கோயில்களில் நிரந்தர அன்னதானத் திட்டங்கள் நண்பகல் விருந்துக்கு வழிவகை செய்கின்றது"**[12]

என்று அ. வ. பொன்னையன் தனது 'வியப்பூட்டும் விருந்துகள்' என்னும் கட்டுரை நூலின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

மேற்குறிப்பிட்ட விருந்துகள் அனைத்தும் மனிதநேயத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

மனிதநேயத்தினை வெளிப்படுத்தும் அன்னதானம்

அன்றைய காலத்தில் கோயில்கள் ஒரு தொண்டு நிறுவனமாகச் செயல்பட்டன. கோயில்களின் மூலம் கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. திருவிழாவின்போது ஏழை, எளிய மக்களுக்கு விருந்து அளிக்கப்பட்டதை **"திருந்து விருந்து அயர்வும்"** (பரிபாடல்.17) என்னும் பரிபாடல் வழியே அறிய முடிகின்றது. அன்றைக்கு 'மக்களுக்குச் செய்யும் தொண்டானது மகேசனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதப்பட்டது.

இதன் அடிப்படையில்தான் சேக்கிழார் அறுபத்து மூன்று நாயன்மார்களின் விருந்தோம்பலைத் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தில் பலவிடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களும் சிவனுக்குச் செய்யும் தொண்டினைச் சிவனடியார்க்குச் செய்து மகிழ்ந்ததைக் காணமுடிகின்றது. சிவனடியார்களை அன்புடன் அழைத்து அறுசுவை உணவு கொடுத்து விருந்து செய்து வீடு பேறு பெற்றதை பெரியபுராணம் மூலம் அறிய முடிகின்றது.

> **'சைவ நாயன்மார்களில் ஒருவரான அமர்நீதி நாயனார் என்பவர், தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருநல்லூரில் திருமடம் அமைத்து, பழையாறைப் பகுதிகளிலே நடைபெறும் திருவிழாக் காலங்களில் வருகின்ற இறையடியார் கட்கெல்லாம் திருவமுது படைத்திருக்கிறார் என்றால், சோறு போடும் தொண்டு எவ்வாறு மக்களால் போற்றப்பட்டது என்பதற்குரிய சான்றுகளாக உள்ளன'**[13]

என்று மு. நடராசன் குறிப்பிடுகின்றார்.

திருவள்ளுவர் விருந்தைப் பற்றி,

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

(குறள். 86)

என்னும் குறட்பாவில் குறிப்பிடுகிறார்.

கோயில்களில் இறைவனுக்கு ஆடம்பர பூசைகளும், வேள்விகளும் நடத்துகின்றனர். மக்கள் இறைவனுக்குச் செய்யும் செலவினைக் குறைத்துக்கொண்டு அல்லல்படும் அனாதைப் பிள்ளைகளுக்கும், முதியோர்க்கும் கொடுத்துஉதவவேண்டும் என்னும் மனிதாபிமான நோக்குடன் சில கோயில்களின் மூலமும் தொண்டு நிறுவனங்களின் மூலமும் உதவி செய்கின்றனர்.

வள்ளலார் இராமலிங்க அடிகளார், உயிர்க்கொலை செய்தல் கூடாது என்று உயிரினங்களைக் காக்க முற்பட்டவர். கடவுள் ஒருவரே என்று எல்லா மதங்களின் கொள்கையும் ஒன்றாகக் கூறுகின்றது. அதனால் எல்லாருக்கும் உதவக்கூடிய **'சமரச சுத்த சன்மார்க்கத்தை'** நிறுவியவர் வள்ளலார்.

வடலூரில் **"சமரச சுத்த சன்மார்க்க சங்கம்"** என்னும் அமைப்பின் மூலம் எல்லார்க்கும் உணவு கிடைக்க வேண்டும்; இதனையே முக்கிய இறைத் தொண்டாகக் கருதி **"சத்திய தருமச் சாலை"**யை நிறுவியவர். 'சத்திய தருமச்சாலை'யில் அனைவருக்கும் இன்றும் உணவளிக்கப்படுகின்றது.

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன் பசியால் இளைத்தே
வீடுதோ ரிரந்தும் பசியறா தயர்ந்த
வேற்றாரைக் கண்டுளம் பதைத்தேன்
வாடிய பிணியால் வருந்துகின் றோர்என்

நேர்உறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின்மா கைலாய் ஏழைக ளாய்நெஞ்
சிளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்"

(திருவருட்பா : பிள்ளை பெரு விண்ணப்பம். 5)

என்ற பாடலின் மூலம் வள்ளலாரின் அருள் உள்ளம் வெளிப்படுகின்றது.

இன்றைக்கு மனிதாபிமான அடிப்படையில் கோயில்களில் மதியப்பொழுதில் அன்னதானம் கொடுக்கப்படுகின்றது.

> **"சான்றோர்கள் தாம் மட்டும் உணவைத் தனித்து உண்ணமாட்டார்கள். விருந்தினரோடு உண்பதில் மனநிறைவு அடைகின்றவர்களும் இருக்கின்றார்கள். பசித்தவர்க்கு உணவு தந்து உண்பித்து, அவர்கள் முகத்தில் தோன்றும் மனநிறைவைக் கண்டு மகிழும் புண்ணியர்களும் இருக்கின்றார்கள்"[14]**

என்று அ. பெ. பொன்னையன் தனது'வியப்பூட்டும் விருந்துகள்' என்னும் கட்டுரையின் முன்னுரைப் பகுதியில் குறிப்பிடுகின்றார்.

பிறருக்கு உதவ வேண்டும் என்னும் மனிதாபிமானம் உள்ளம் கொண்டவர்களால் 'அன்னதானம்' போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மனித நேயத்தினை வெளிப்படுத்தும் உணவுத்திட்டம்

'கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'

என்பர். சங்ககாலப் புலவர்கள் வறுமையில் வாடினாலும் கல்வி கற்றவர்களாகத் திகழ்ந்துள்ளனர். புலவர்களை அரசர்கள் ஆதரித்தமைக்கு அடிப்படைக் காரணம் புலவர்களிடம் உள்ள கல்விக் கலையைக் காப்பற்றவே ஆகும். அதனால்தான் அரசர்கள் தம்மிடம் வரும் புலவர்களை அன்புடன் அழைத்து விருந்துகொடுத்துப் பின், பொன், பொருட்களையும் கொடுத்து ஆதாரித்துள்ளனர்.

புலவர்களை விருந்தோம்புவதன் உள்நோக்கம் அவர்களிடம் இருந்த கல்வியைக் காப்பாற்றவே. கல்வி கற்றவர்களாலே மனித நேயத்தினை வெளிப்படுத்த முடியும் என்பது அவர்களின் நோக்கமாக இருந்ததை இதன் வாயிலாக அறிய முடிகின்றது.

அசோகர் ஆட்சியில் மனிதநேயம்

இரண்டாயிரத்து முன்னூறு ஆண்டுகட்கு முன்பு இந்தியாவின் பெரும் பகுதியை ஆண்ட மன்னர் அசோகர். இவர் ஆட்சிக்காலத்தில் பயணிகளுக்குத் தங்க இடவசதியும், உணவும் அளிக்கப்பட்டது. அவர்களுக்கு மருத்துவ வசதியும் அளிக்கப்பெற்றது.

> **"சீனநாட்டைச் சேர்ந்த யுவான் - சுவாங், பாசியான் இத்சிங் போன்ற வரலாற்றுத்துறை மாணவர்கள், இந்திய நாட்டுப் பல்கலைக் கழகங்களிலே தங்கி உண்டு பௌத்த மதத் தத்துவங்களைப் பயின்று, வரலாற்றுச் சம்பவங்களை ஆங்காங்கே சென்று கண்டு புத்தகங்களை எழுதி உலகுக்குக் கொடுத்ததை வரலாறு படிக்கும் மாணவர்கள் மறக்கமுடியாதன்றோ"**[15]

என்று மு. நடராசன் குறிப்பிடுகின்றார்.

அசோகர் காலத்தில் கல்வி கற்றவர்களுக்குத் தங்க இடவசதி, உணவு போன்றன அளிக்கப்பட்டுள்ளதை வரலாறு பதிவு செய்துள்ளது. இத்தகைய வரலாற்றுக் குறிப்பின் மூலம் அசோகரின் மனிதநேயப் பண்பினை அறியமுடிகின்றது.

மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னன் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுகொண்டிருந்தபோது, காஞ்சிமாநகரில் பல பௌத்தப் பள்ளிகளும், காஞ்சிக் கடிகை என்ற வேதாகமப் பல்கலைக்கழகமும் இருந்ததாகக் குறிப்பு உள்ளது.

"இத்தகைய பள்ளிகளில் உள்ளூர், வெளியூர் மாணவர்களுக்குச் சாதி, சமய வேறுபாடு பாராமல் தங்க இடமும், உணவு வகைகளும் கொடுக்கப் பட்டன"[16]

என்பதைப் "பல்லவர் வரலாறு" என்ற நூலிலே மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுகின்றார் என்று மு. நடராசன் குறிப்பிடுகின்றார்.

மேற்குறிப்பிட்ட தரவுகளின்மூலம் பல்லவர் ஆட்சிக்காலத்திலும் கல்வி கற்ற மாணவர்களுக்குத் தங்க இடவசதி, உணவு அளிக்கப்பட்டதன் மூலம் இவர்களின் மனிதநேயமானது வெளிப்படுகின்றது. தமிழகத்திலே உள்ள சைவ மடாலயங்களில் எல்லாம், குருகுலம் என்ற பெயரால் கல்விப் பசி கொண்ட மாணவர்களைத் திரட்டிக் கல்வி விருந்து செய்து வருகின்றனர்.

திருப்பனந்தாள், திருவாவடுதுறை, பேரூர், மயிலம், கரந்தை, வாலாஜாபாத் இந்துமத பாடசாலை போன்ற பல குருகுலங்கள் சைவசமயநெறிகளைப் பயிற்று வந்ததோடு மட்டுமின்றி, கல்வியிலே கரை கண்ட மேதைகள் பலரை உருவாக்கியுள்ளன. இன்றைக்கு இத்தகைய சைவ மடங்களில் மாணவர்களுக்குத் தங்க இடவசதி, உணவு ஆகியன கொடுத்து ஆதரிப்பதோடு மட்டுமல்லாது கல்வி கற்றுத் தருவதையும் அறியமுடிகின்றது.

தமிழ்நாட்டில் சத்துணவுத் திட்டத்தின் மூலம் தமிழகப் பள்ளிகள் முழுவதும் மாணவர்களுக்கு உணவு கொடுத்துக் கல்வியை வளர்க்கின்றனர். இன்றைக்கு இவை கல்வியை வளர்ப்பதற்குக் காரணமான மனிதநேயத்தின் வெளிப்பாடாக அமைந்த திட்டங்களாகும்.

கல்வி பயில்பவருக்கு அந்தந்தக் கால நிலைகளுக்கேற்ப செல்வ அருளுடையவர்களாலும், பண்பு, அன்புடையவர்களாலும் பேருதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. கல்விப் பணி சிறக்க, உண்ண உணவும், தங்க இடமும், கற்க நூல்களும், அணிய ஆடைகளும் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்பதற்கு எண்ணற்ற சான்றாதாரங்கள் உள்ளன.

வறுமையினால் ஏழை மக்கள் பலர் கல்வி அறிவு பெற வசதி இயலாத நிலையில் இருந்தனர். இதன் காரணத்தினால் கல்லாமை அதிகமாகி, மக்கள் அறியாமை இருளிலே மூழ்கி இருந்தனர். இந்நிலையை மாற்றவும் அனைவரும் கல்வி கற்கவும் அரசாங்கம் ஒரு புதிய திட்டத்தினை மனிதநேய அடிப்படையில் கொண்டு வந்தது. அத்திட்டமே மத்திய உணவு சத்துணவுத் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் கல்வி எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய எளிய பொருளானது.

இந்தச் சத்துணவுத்திட்டத்தின் மூலம் முதியவர்களுக்கும், கணவனை இழந்த பெண்களும்கூட மதியம் ஒருவேளை உணவினைக் பெறுகின்றனர். இத்திட்டத்தின்மூலம் இன்றைக்குத் தமிழ்நாட்டில் கற்றவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகிக்கொண்டு வருவதைக் காணமுடிகின்றது.

உறவினை மேம்படுத்தும் மனிதநேயம்

இன்றையக் காலகட்டத்தில் தமிழரின் விருந்தோம்பல் பண்பு பிற மொழி, பிற இனம், பிற நாட்டு மக்களிடம் காணப்பட்டாலும், அப்பண்பு தமிழரது விருந்தோம்பல் பண்பாட்டின் பிரதிபலிப்பாகவே உள்ளது.

தமிழர்களின் மரபில் வந்த சிங்கப்பூர், மலேசியா வாழ் மக்கள் மிகச்சிறப்பாக இன்றும் விருந்து தருவதில் அவர்களுக்கு நிகர் அவர்களே என்று சொல்லும் அளவிற்குத் திகழ்ந்து வருகின்றனர். தாய்த்தமிழகத்திலிருந்து வருகைபுரியும் அறிஞர்பெருமக்களையும், சுற்றுலாப் பயணிகளையும், நண்பர்களையும் பல தமிழ்க் குடும்பங்கள் தங்களின் விருந்தாகக் கொண்டு அவர்களை விருந்தோம்பிச் சிறப்பிக்கின்றனர். மேலும் தமிழர்களின் விழாக்கள் பல அவற்றுள்ளும் குறிப்பாக தீபாவளி விழாவும், தமிழ் இசுலாமியரின் ரம்சான் பண்டிகையும் குறிப்பிடத்தக்கதாய் உள்ளன.

தீபாவளிப் பண்டிகையின் போது இந்துக்கள் சீனர்களையும் மலாய்க்காரர்களையும் இசுலாமியரையும் விருந்துக்குத் தம் இல்லத்திற்கு அழைப்பது போல தமிழ் இசுலாமியர் அவர்தம் பண்டிகையின் போது மற்ற இனத்தவர்களை இல்லத்திற்கு அழைத்து விருந்து தருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இத்தகைய விருந்து கொடுக்கும் வழக்கமானது பிறரிடம் நல்லுறவினை வளர்க்கும் மனிதநேயத்தின் மேம்பாட்டினைக் காட்டுகின்றது.

நவநாகரிகத்தைப் பின்பற்றும் அயல்நாடுகளில் கூட தமிழ்ப் பண்பாடு பாதுகாக்கப்பட்டு வருவதை மேற்கூறிய கருத்துக்களின்வழி உணரமுடிகின்றது. விருந்தோம்பல் பண்பினது சிறப்பினை உணர்ந்திருக்கும் அயல்நாட்டுத் தமிழர்களின் மனிதநேயம் போற்றத்தக்க ஒன்றாகும்.

தமிழகத்தில் வாழும் தமிழர்களே விருந்தோம்பல் பண்பினை மறந்து வந்தாலும் வெளிநாட்டுத்தமிழர் அப்பண்பினைத் தம் தலைசிறந்த பண்பாகக் கொண்டு வாழும் உயர்வினைக் காணமுடிகின்றது.

தொகுப்புரை

- வளம்பெற்ற புலவன், வறுமையில் வாடும் புலவனுக்கு மனிதநேயத்தோடு வழியின் அருமைப்பாடுகளைக் கூறிச் செல்வம் பெற்று வளமுடன் வாழ வழிகாட்டுகின்றான். அந்தக் காலத்தில் புலவர்கள் பொதுநோக்குக் கொண்டவர்களாக வாழ்ந்தனர். இன்றைக்கு அத்தகையதொரு நிலைமை மாறிவருகின்றது. அக்கம் பக்கத்தில் நடப்பது என்னவென்று தெரியாமல் வாழும் சூழலில் சுயநலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

- அரசர்கள் சேமிப்புக் கிடங்குகளின் மூலம் தானியங்களைச் சேர்த்து வைத்துப் பஞ்ச காலங்களில் பொதுமக்கள் பசியைப் போக்கினர் என்பதனை வரலாற்றுச் செய்திகளின் மூலம் அறியமுடிகின்றது.

- மக்கள்தொகைப் பெருக்கத்தினால் உழவுத்தொழிலானது பாதிக்கப்பட்டுள்ளது. உழுநிலங்கள் எல்லாம் இருப்பிடங்கள் என்ற பெயரால் துண்டாக்கப்படுகின்றன. இதனால் உழுநிலங்கள் எல்லாம் விலைநிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் உணவுப்பொருட்களின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டு விலைவாசி ஏற்றத்தினால் பெரும்பாலான இடங்களில் விருந்தோம்பல் செய்யமுடியாமல் குறைந்துகொண்டு வருகின்றது.

- சங்க காலத்தில் திருமண வாழ்வில் விருந்தோம்பலானது சிறப்புற்று இருந்தது. ஆனால் இன்றைய நாளில் ஒருசில இடங்களில் திருமணமானது வணிகமாக மாறியுள்ளதால் அக்குடும்பத்தில் வாழும் ஒரு சிலரால் விருந்தானது சிறக்காமல் குறைந்து காணப்படுகின்றது.

- மனிதநேயத்தின் வெளிப்பாடாக அமைந்த விருந்தோம்பல் பண்பால் சங்க காலத்தில் இரவிலும் விருந்தினரை ஏற்று நடத்தினர்.

இன்றைக்கு இரவில் விருந்தினருக்கு விருந்து செய்வதனைச் சுமையாகக் கருதுகின்றனர். விருந்தினரும் இரவில் விருந்தினராகச் செல்வதைத் தவிர்க்கின்றனர். மாலை நேரத்தில் நடைபெறும் சுபநிகழ்ச்சிகளில் விருந்தானது நடைபெறுகின்றது.

- விருந்தினரை உபசரிப்பு செய்வதற்கென்றே சில முறைகளைத் தமிழர் பின்பற்றுகின்றனர். தற்போதும் அத்தகைய விருந்தோம்பும் முறை சில இடங்களில் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றது.

- சங்க காலத்தில் தலைவன் இல்லாத நிலையிலும் தலைவியானவள் மனிதநேயத்தோடு விருந்தோம்பல் செய்துள்ளாள். ஒரு சில காரணத்தினால் தலைவியானவள் தலைவன் இல்லாத நிலையில் விருந்தினை ஏற்று நடத்தவில்லை.

- அன்று முதல் இன்று வரை தலைவன் தலைவி சேர்ந்து அளிக்கும் விருந்தே சிறப்பிடம் தருகின்றது. ஒரு சில காரணத்தினால் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லாததால் தனி நிலையில் விருந்து கொடுப்பதைத் தவிர்க்கின்றனர். ஒரு சில பெண்கள் அன்றைக்குக் கணவன் இல்லாத நிலையிலும் விருந்தளித்திருக்கின்றனர்.

- அன்றைக்கு ஊடல் தீர்க்கும் வாயில்களுள் ஒருவராக விருந்தினர் இருந்தனர். இன்றைக்கு விருந்தினரே ஊடலுக்குக் காரணமாக அமைவதோடு மட்டுமல்லாது குடும்பங்கள் பிரிவதற்குக் காரணமானவர்களாக மாறியுள்ள சூழ்நிலை உருவாகியுள்ளது எனலாம்.

- அன்றைக்கு வறுமையில் கடன்பட்டும், அடகுவைத்தும் விருந்தோம்பியதைச் சிறப்பு என்றனர். இன்றைக்கு கடன்பட்டோ, அடகுவைத்தோ விருந்திட்டால் விருந்து கொடுத்தவர்களையும், விருந்தினை ஏற்றோரையும் ஏளனம் செய்யும் நிலையில் சமுதாயம் மாறியுள்ளது.

- சங்ககாலத்தில் விருந்தினருக்குப் பரிசுப் பொருட்கள் அளிக்கப்பட்டன. இந்நாளில் அன்பளிப்பின் பெயரால் ஒருசில இடங்களில் தற்பெருமையை வெளிப்படுத்தும் வகையில் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

- சங்ககாலத்தில் விருந்தோம்பல் செய்ய ஆண்கள் பொருளுக்காக வினையை மேற்கொண்டனர். பொருள் ஈட்டி விருந்தினரைப் பேணிக் காப்பதே ஆணின் கடமையாகக் கருதினர். பெண்களும் சுற்றத்தினைக் காப்பவளாக இருந்தாள். இன்றைக்கு அத்தகையதொரு நிலை மாறியுள்ளது. சில ஆண்கள் தனது குடும்பத்திற்குப் பொன்னும், பொருளும் சேர்க்கின்றனர். சில பெண்கள் கூட்டுக் குடும்பத்தினைத் தனிக் குடும்பமாக மாற்றுகின்றனர். தனிக் குடும்பங்களுள்ளும் கணவன், மனைவி தனித்தனியே வாழும் சூழ்நிலையும் இன்று உருவாகியுள்ளது. இதனால் முதியோர் இல்லங்களில் தாய், தந்தையர் கவனிப்பாரற்ற அவலநிலை பெருகிவருகின்றது.

- நாட்டுப்புறம் மற்றும் நகர அளவில் விருந்தானது சற்று வேறுபட்டுக் காணப்பட்டாலும் விருந்தினராக வருவோர் உறவினர்களே. இன்றைக்கு விருந்தினருக்கு நேரமின்மைக் காரணத்தினால் தேநீர், மாச்சில்லு (பிஸ்கட்) போன்றவற்றையே விருந்தாக அளிக்கின்றனர். விருந்தினரும் இதனையே விரும்புகின்றனர்.

- இன்றைக்குத் தமிழரின் இன்ப துன்ப நிகழ்ச்சிகளில் விருந்தானது அளிக்கப்படுகின்றது. பிறந்தநாள், இறந்தநாள் போன்ற நாட்களில் சிலர் முன்பின் அறிமுகம் இல்லாதவர்க்கு அன்னதானம் அளிக்கின்றனர். ஒருசில மனிதாபிமானம் கொண்ட பெரியோர்கள், மடங்கள், கோயில்கள், தன்னார்வக் குழுக்கள், தொண்டு

நிறுவனங்கள், போன்றவற்றின் மூலம் வயதானவர்களுக்கும், அனாதைகளுக்கும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் உணவு, உறைவிடம் கொடுத்து ஆதரிக்கின்றனர். தற்காலத்தில் கோயில்களில் அன்னதானத் திட்டம் அரசாங்கத்தாலேயே கொண்டு வரப்பட்டுள்ளது.

- அரசர்கள் கல்வி கற்ற புலவர்களுக்கு விருந்து கொடுத்து ஆதரித்துள்ளனர். புலவர்களை ஆதரிப்பதற்குக் காரணம் கல்வியை வளர்ப்பதற்காக மட்டுமல்ல, கல்வியோடு தொடர்புடைய நமது பண்பாட்டினை வளர்ப்பதற்காகவுமாகும். அதனால் நமது முன்னோர்கள் மனிதநேயத்தோடு செயல்பட்டார்கள் என்பதனை உணர்ந்தனர். மனிதநேயத்தோடு கல்விக்குச் செய்யும் தொண்டாகக் கல்வி கற்றவர்களுக்கு உணவு அளித்து, உடை கொடுத்து, அதனோடு தொடர்புடைய பிறவசதிகளை செய்து அளித்துள்ளமையைக் காணமுடிகின்றது. மனிதநேயத்தின் வெளிப்பாடாக அமைந்த விருந்தோம்பல் பண்பாட்டினையும் வளர்த்து வந்தனர்.

- இன்றைக்கு விருந்தோம்பும் பண்பு மறைந்து கொண்டே வந்தாலும் சில இடங்களில் மட்டும் அப்பண்பு இருந்து வருகின்றதையும் காணமுடிகின்றது. முற்றிலும் மறைந்துவிடாமல் விருந்தோம்பல் பண்பு இன்றும் தொடர்ந்து வரும் நிலையினை அயல்நாட்டுத் தமிழர்களிடையே பின்பற்றப்பட்டு வரும் உயர்ந்தோங்கிய சிறப்பினை அறியமுடிகின்றது.

ᴘᴘᴘᴘᴘ

அடிக்குறிப்புகள்

1. ஏகாம்பரம், ஆ., 'தமிழரின் விருந்தோம்பல்' (அன்றும், இன்றும்) இலக்கிய வெளியீடு, ப. 44.
2. சுப்பிரமணியன், நா., 'தமிழக வரலாறு' (கி.பி. 1565 வரை) ப. 227.
3. சுப்பிரமணியன், நா., 'தமிழக வரலாறு' (கி.பி. 1565 வரை) ப. 209.
4. ஏகாம்பரம், ஆ., 'தமிழரின் விருந்தோம்பல்' (அன்றும், இன்றும்) இலக்கிய வெளியீடு, ப. 26.
5. மறைமலையடிகள் 'வேளாளர் நாகரிகம்', ப. 2.
6. சத்தியபாமா, பொ., 'தமிழியலின் எதிர்காலவியல்' பாகம். 5, பக். 12- 13.
7. இராணி, சி., 'விருந்தோம்பல் மாண்பு', ப. 4.
8. ஏகாம்பரம், ஆ., 'தமிழரின் விருந்தோம்பல்' (அன்றும், இன்றும்), ப. 42.
9. சத்தியபாமா, பொ., 'தமிழியலின் எதிர்காலவியல்' பாகம் 5, ப. 12.
10. ஏகாம்பரம், ஆ., 'தமிழரின் விருந்தோம்பல்' (அன்றும், இன்றும்), ப. 58.
11. இலக்குவனார், சி., 'இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்', ப. 55.
12. பொன்னையன், அ. வ., 'வியப்பூட்டும் விருந்துகள்' நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ப. 1 - 5.
13. நடராசன், மு., 'தானத்தில் சிறந்தது அன்னதானம்', சீனிவாச பதிப்பகம், பக். 9 - 10.
14. பொன்னையன், அ.வ., 'வியப்பூட்டும் விருந்துகள்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், ப. 5.

15. நடராசன், மு., 'தானத்தில் சிறந்தது அன்னதானம்', சீனிவாச பதிப்பகம், ப. 9.

16. மேற்படி, ப. 18.

முடிவுரை

முடிவுரை

'சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்' (ஆற்றுப்படை நீங்கலாக) என்னும் ஆய்வினை மேற்கொண்டதன் அடிப்படையில்

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று"

(குறள். 49)

என்ற வள்ளுவரின் கருத்திற்கேற்ப நம் முன்னோர்கள் வாழ்ந்து வந்த பான்மையை நன்கு அறிய முடிகின்றது.

"உண்டால் தின்றால் உணவு
கொண்டால் கொடுத்தால் உறவு"

என்ற பழமொழிக்கேற்ப விருந்தோம்பல் என்னும் பண்பின் மூலமாக அறிமுகமில்லாதவரிடமும் உறவு ஏற்படுத்திக் கொண்ட தன்மையைக் காண முடிகின்றது. இவ்வாறு ஒருவர் இல்லத்தில் வருவோரும் போவோருமாக இருந்ததால் அங்கு தீயவர்கள் நுழைய வாய்ப்பில்லாமல் இருந்தது. இன்று விருந்தோம்பல் பண்பு அருகிய நிலையில் ஆங்காங்கே மக்கள் தனிமையில் வாழ்வதால் முறையற்ற செயல்கள் நிகழ வழிவகுக்கின்றது.

விருந்தோம்பல் பண்பு சற்று அருகிய நிலையில் மீண்டும் நம் சமுதாயத்தில் விருந்தோம்பல் போன்ற அறப்பண்புகள் நம் மக்களிடையே தளிர்விட்டுத் தழைக்குமானால் நாட்டில் நன்மையே உண்டாகும். இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு உணவு அளிப்பதன் மூலம் சமத்துவம் பெருகும்.

தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில் செழித்து வளர்ந்த மரபுகளில் ஒன்றான விருந்தோம்பல் அமைப்பிலும் செயற்பாட்டிலும் நோக்கத்திலும் பல பரிமாணங்களைப் பெற்றுத் தன் வடிவை மாற்றிக் கொண்டு நாளுக்கு நாள் தேய்ந்து வருகிறது.

சங்க காலத்தில் முன் பின் அறியாதவர் எவர் வந்தாலும் அவரை விருந்தினராக மதித்து அவர்களுக்கு உண்டி, உடை, உறையுள் முதலியவற்றைக் கொடுத்து விருந்தோம்பி உள்ளனர். இன்றைய கால கட்டத்தில் உற்றார், உறவினர், நண்பர்களை மட்டுமே விருந்தினராகக் கருதும் மனநிலை ஏற்பட்டுள்ளது. புதியவரையே விருந்தினர் என்று கருதிய மனப்போக்கு மாறி அறிமுகமானவரை 'விருந்தினர்' என்று எண்ணும் நிலை உருவாகியுள்ளது.

விருந்தினர்களை உபசரிப்பதற்குத் தமிழர்கள் சில முறைகளைப் பின்பற்றியுள்ளனர். வந்த விருந்தினர்களிடம் இன்மொழிகளைக் கூறி இன்முகத்துடன் வரவேற்றுப் பாய் விரித்து, இருக்க மணை கொடுத்துப் பின்பு உணவிட்டனர். உணவை உண்டு முடித்ததும் கைகழுவ நீர் கொடுத்து வெற்றிலைப் பாக்கும் அளித்தனர். உணவானது பெரும்பாலும் வாழை இலைகளில் பரிமாறப்பட்டது. விருந்துணவில் வாழையிலையின் பங்கு மிக முக்கிய ஒன்றாகும். விருந்தோம்பல் முறைகளில் விருந்தினராக வந்தவரை வரவேற்று அமரச்செய்து முதலில் நீர் அருந்தக் கொடுக்கும் முறை மட்டும் இன்றளவும் தொடர்கின்றது.

சங்க காலம் முதல் இக்காலம் வரை இடம் பெற்றுள்ள விருந்தோம்பலின் இயல்புகளும் பண்புகளும் இவ்ஆய்வேட்டில் விளக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியத்தில் விருந்தினர் என்போர் புதியவர், பாணர், கூத்தர், விறலி போன்றோராவர். இக்கலைஞர்களும் இல்லத்திற்கு வருகைபுரியும் புதியவரும் விருந்தினர் என அழைக்கப்பட்டனர்.

'நீதிநூல் காலத்தில்' விருந்தினை அறமாகச் செய்தனர். விருந்தினரை உபசரிப்பதற்கு ஒரு முறையும் வைத்து இருந்தனர். விருந்தினை ஒரு நம்பிக்கையாகவும் செய்தனர். அற இலக்கியங்கள் முழுமையும் விருந்தோம்பல் அறத்தினை வலியுறுத்தியுள்ளன.

காப்பியக் காலத்தில் விருந்தினர் எனப்படும் அறவோர், அந்தணர், துறவோர் ஆகியோருக்கும் உணவு அளித்துள்ளனர். உடல் ஊனமுற்றோருக்கு அளிக்கப்படும் 'உணவு' சிறப்புடையதாகக் கருதப்பட்டது. பக்தி இலக்கியத்தில் விருந்தினர் என்போர் இறையடியார்களாகவும் விளங்கினர். இறைவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதி சிவனடியார்களுக்கு விருந்தோம்பல் செய்தனர். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று வாழ்ந்த காலகட்டம் அது.

மக்களுக்குச் செய்யும் உதவியே இறைவனுக்குச் செய்யும் தொண்டு என எண்ணினர். சிவனடியார்களுக்கு அறுசுவை உணவு கொடுத்து விருந்தோம்பினர். அறுபத்து மூன்று நாயன்மார் பற்றிய குறிப்பு திருத்தொண்டர் புராணத்தில் இடம் பெற்றுள்ளது. இளையான்குடி மாற நாயனாரின் விருந்தோம்பலே சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது. குகன் இராமனை விருந்தோம்பும் விதத்தினைக் குறித்துக் கம்பராமாயணத்தில் இருந்து அறிந்துகொள்ள இயலும். தற்கால இலக்கியத்திலும் கவிஞர் பலர் விருந்தோம்பல் குறித்துப் பாடிய பாடல்களுள் பாரதியாரின் விருந்தோம்பல் குறித்த பாடல்கள் குறிப்பிடத்தக்கன. பாரதிதாசன் தனது 'குடும்ப விளக்கு'ப் பகுதியில் விருந்தோம்பல் பற்றிக் குறிப்பிட்டுள்ளமையின் மூலமாக விருந்தோம்பல் பண்பில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினை நன்கு அறிய முடிகின்றது.

"சங்க அகஇலக்கியம் உணர்த்தும் விருந்தோம்பல்" குறித்த கருத்துகள் இவ்ஆய்வேட்டினுள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. கணவன், மனைவி, சேர்ந்து நடத்தும் இல்லறத்தில் விருந்து சிறப்புடையதாகக் கருதப்பட்டது. விருந்தினர்கள் ஊடல் தீர்ப்பவர்களாகவும், பொழுது போக்குக் கலைஞர்களாகவும் இருந்துள்ளமையை அறிய முடிகின்றது. தலைவியை விட்டுப் பிரிந்த தலைவனை நினைத்து வருந்தினாலும் தன்னிடம் வரும் விருந்தினருக்கு விரும்பி விருந்து அளித்துச்

சிறப்பித்துள்ளாள் தலைவி என்பதை சங்க இலக்கியம் வாயிலாக அறியமுடிகின்றது.

தலைவன் வினையின் காரணமாகப் பிரிந்து மீண்டும் வரும்போது தலைவியானவள் விருந்தினராகத் தலைவனை ஏற்றுக் கொள்வதையும் தலைவனுக்காகத் தலைவி ஆர்வத்துடன் சமைப்பதையும் இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

விருந்து கொடுக்கும் வளமனைகள் இருந்தன. தமிழரின் திருமணத்தில் விருந்து முக்கிய இடம் பெற்றிருந்தது. தலைவன், தலைவி தனது சுற்றத்தினரைக் காக்கை கூவி அழைப்பது போல் அழைத்தாள். தன் தலைவன் வரவைக் கரைந்து சொன்ன காக்கைக்கு நெய் கலந்த சோற்றினை விருந்தாகக் கொடுத்தாள். விருந்தினருக்கு மாமிச உணவு சமைக்கப்பட்டது. விருந்து உணவில் 'கள்' முக்கிய இடம் பெற்றுள்ளது. தினைச்சோறு, கனி வகைகள் இடம் பெற்றிருந்தன. பட்டினப்பாலையின் மூலம் அன்னமளிக்கும் அறச்சாலைகள் ஆங்காங்கே இருந்தமையைக் காணமுடிகின்றது. விருந்தினருக்குச் சமைப்பதற்காக பெரிய அட்டிற் சாலைகள் இருந்தன.

'சங்கப் புறஇலக்கியத்தில் விருந்தோம்பல்' என்னும் தலைப்பில் அமைந்த இயல் மனிதனின் புறவாழ்வில் விருந்து பெறும் சிறப்பினைச் சுட்டிக் காட்டுவதாக அமைந்துள்ளது. அரசர்கள் போர் மீது சென்று பொன் பொருட்களைக் கொண்டு தனது நாட்டு மக்களைப் பசிப் பிணியிலிருந்து காத்தனர். வெற்றி பெற்ற வீரர்களுக்கு அரசன் 'ஊன்துவை அடிசிலை' விருந்தாகக் கொடுத்தான். வினையின் மேற்சென்ற தலைவனை நினைத்து வருந்திய தலைவியின் இல்லத்தில் விருந்தோம்பல் நடைபெற்றிருக்கின்றது. மீண்டும் தலைவன் இல்லம் வந்த பின்பும் தலைவனும் தலைவியும் சேர்ந்தும் அச்சிறப்பினைச் செய்தனர்.

புலவர்கள் தங்களை ஆதரிக்கும் அரசர்களிடம் சென்று வளமான வாழ்வு பெற்றனர். அரசர்கள் புலவர்களை மட்டும் ஆதரித்ததன் மூலம் கல்விச் செல்வத்தினைச் சிறப்புற வளர்த்தனர். அரசர்கள் அளித்த விருந்தினைப் பற்றிப் புலவர்கள் தனது பாடல்களின் மூலம் குறிப்பிடுகின்றனர். அரசர்கள் புலவர்களுக்குப் பல பரிசுப் பொருட்களைக் கொடுத்து ஆதரித்தனர்.

'சங்க இலக்கிய விருந்தோம்பல் உணர்த்தும் மனிதநேயம்' என்னும் இயல் அரசர், மக்கள் ஆகியோரிடையே மனிதநேயத்தின் வெளிப்பாடாக அமைந்த விருந்து முதலிய செய்திகளை வெளிப்படுத்தி உள்ளது.

மனித நேயத்தினை வெளிப்படுத்தும் பகுத்துண்ணும் பண்பினது மேன்மை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. விருந்தோம்பல் செய்வதற்குத் தேவையான அடிப்படைப் பொருட்களின் இன்றியமையாமை எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பண்டைத் தமிழர் பொருளை ஈட்டி வர அண்டை நாடுகளோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். தம்மிடம் உள்ள பொருட்களை வைத்துப் புகழுடைய வாழ்க்கை வாழ புலவர்களும் அரசர்களும் எதிர்பார்ப்பு இல்லாத மனித நேயத்தினை வெளிப்படுத்தியுள்ளனர். புலவர்களுக்காக அரசர்கள் தம் தலையையும், உயிரையும் கொடுக்க முன்வந்துள்ளனர். அரசர்கள் தானம் செய்த பல ஊர்கள், யானை, குதிரை, தேர் மற்றும் பொன்னாலான பொருட்கள் ஆகியன குறித்து விளக்கமாக இவ்ஆய்வேட்டில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

தன் பகுதி மக்களின் பசியைத் தீர்த்த பண்ணன் என்ற சிறு குடி மன்னனை அரசன் பாராட்டுகின்றான். சங்ககாலத்தில் மனித நேயத்தினை வெளிப்படுத்தும் விருந்தினை மக்கள் கடன் கொண்டும் செய்தனர்.

விருந்தினருடன் வந்த குதிரை, குரங்கு போன்ற விலங்கினங்களுக்கும் சிறப்புச் செய்துள்ளமையை இவ்ஆய்வின்வழியே அறிய முடிகின்றது.

இன்றைய மனிதநேயமும், தமிழரின் விருந்தோம்பலும் தற்போதைய நிலையினில் இந்நாளைய மனிதர்களிடையே எவ்வாறெல்லாம் நடைபெற்று வருகின்றது என்பதையும் விளக்குவதாக இவ்ஆய்வு அமைந்துள்ளது.

இந்நாளினில் விருந்து கொடுக்கும் பழக்கம் குறைந்து வருகின்றமையைக் காணமுடிகின்றது. விலைவாசி ஏற்றம், தன்னலப்போக்கு, மக்கள் தொகைப்பெருக்கம், அறிவியல் ஊடகங்களின் ஆக்கிரமிப்பு போன்ற செல்வாக்கின் காரணமாக ஏற்பட்டுள்ள மோசமான விளைவுகளை அறிய முடிகின்றது. இதைத் தவிர விளை நிலங்கள் தொழிற்சாலைகளாகவும் குடியிருப்புப் பகுதிகளாகவும் மாறி வருகின்ற போக்கினையும் இதனால் உழவுத் தொழிலானது பாதிப்படைந்து உணவுப் பொருட்களின் பற்றாக்குறையும் ஏற்படுகின்ற நிலையினையும் உணர முடிகின்றது.

இவ்ஆய்வினில் நாட்டுப்புற மக்களின் விருந்து, நகர மக்களின் விருந்து ஆகியவற்றினிடையே காணும் வேறுபாடு குறிப்பிடப் பட்டிருக்கின்றது. அம்மக்களிடையேயான விருந்தோம்பல் பண்பின் வேறுபாடும் உணர்த்தப்பட்டுள்ளது. தமிழரின் விருந்தோம்பல் இன்றைய சூழ்நிலை மாற்றத்தினால் தேய்ந்தும் மங்கியும் காணப்படுகின்ற நிலையை அறிய முடிகின்றது. தமிழரின் இன்ப துன்ப நிகழ்ச்சிகளிலும் விருந்து பெரிதும் போற்றப்படுகின்ற நிலையினை எல்லாம் வெளிப்படுத்தியுள்ளது இவ்ஆய்வு. இன்றைக்கு மனித நேயத்தினை வெளிப்படுத்தும் அன்னதானத் திட்டம், சத்துணவுத்திட்டம் போன்ற திட்டங்களின் மேன்மையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அக்காலகட்டத்தில் உணவிற்காகத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட மனிதன் கிடைப்பது சிறிது எனினும் தானும் உண்டு அதனைப் பகிர்ந்து பிறர்க்கும் அளித்து நிறைவு பெற்றான். செல்வர் வறியவர் என்னும் பாகுபாடு இருப்பினும் அனைவரும் தங்களால் இயன்றவரை விருந்தோம்பினர். விருந்து கொடுக்க முடியாத நிலையில் கடன் பெற்று விருந்தோம்பினர். விருந்தோம்பும் பழக்கத்தினை ஒழுக்கமாகவும், சமூக மதிப்பாகவும் எண்ணினர். விருந்தினர் பலநாள் தங்கியிருந்தாலும் அவர்களை முதல் நாள் விருந்தோம்பல் செய்து உபசரித்தது போன்றே இறுதிநாள்வரை உபசரித்தனர்.

இன்று பொருள் வசதி மிகுதியாக இருந்தும் விருந்தினர்களாக வரும் உறவினர்களை ஒரு சுமையாகக் கருதும் சூழல் நிலவுகின்றது. பொருள் வளம் மிகுந்து வரும் காலகட்டத்தில் தேவைக்கேற்ற வருமானத்தைத் தேடி ஓடும் மக்களுக்குக் காலமின்மையும் விருந்தினரைப் பாரமாகக் கருதும் அவலநிலையும் ஏற்பட்டுள்ளது. அதிக செலவுகளைச் சமாளிக்க நடுத்தர வர்க்கத்தினருக்கு இவ்விருந்தினர் வருகை வருத்தம் அளிக்கின்றது. பண பலம் கொண்ட மேல் வர்க்கத்தினர் விருந்தினருக்குப் போதிய உணவையும் இருப்பிடத்தையும் அளித்தாலும் அவர்களை ஒரு பொருட்டாக மதிப்பது இல்லை. சமூகத்தில் நன்மதிப்பு பெறும் நோக்குடன் விருந்தோம்பும் தன்னலப்போக்கும் உடையவராக இருப்பவர்களையும் காண முடிகின்றது.

பிறநாட்டவரிடமிருந்து தமிழனை வேறுபடுத்தும் அடையாளமான 'விருந்தோம்பல் பண்பு' இவ்விதம் மாற்றமும் தேய்வும் பெற்று வருவது கருத்தில் கொள்ளத்தக்கது.

மேலைப் பண்பாட்டுப் பழக்கம், மாறி வரும் காலச்சூழல், வளர்ந்து வரும் அறிவியல் ஊடகங்களின் ஆக்கிரமிப்பு முதலியவை

தமிழ்ப்பண்பாட்டுத் தடத்தினைச் சிறிது மாற்றியுள்ளது. தமிழ்ப்பண்பாட்டின் சிறப்புக்குரியதும் போற்றத்தக்கதுமான உயரிய பண்பாடாகிய விருந்தோம்பல் மாறுதலுக்கு உட்பட்டாலும் பண்பாட்டு வரலாற்றில் தன் பதிவுகளை நிறைத்து வருகின்றது.

பொருளைத் தேடி அலையும் மனிதனுக்குப் புதிய உறவுகளைத் தேடிக் கொள்வதும் பழைய உறவை வலுப்படுத்துவதும் அரிய செயலாகின்றது. இருப்பினும் புதியவர்களுக்கு விருந்தளிக்கும் பழக்கமானது அன்று முதல் இன்று வரை தொடர்ந்து நடைபெற்றுவரும் போக்கையும் காணமுடிகின்றது.

இக்காலகட்டத்தில் பிறந்த நாள் விழா, இறந்தவர் நினைவு விழா, கோயில் விழா ஆகியனவற்றில் மாற்றங்கள் பல ஏற்படினும் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில் சிறந்த பண்பான விருந்தோம்பல் என்பது இன்றுவரை தொடர்ந்து வரும் ஒரு சிறந்த செயலாகவே கருதப்பட்டும் வருகின்றது. தமிழரின் பண்பாடாகிய விருந்தோம்பல் பண்பானது சங்ககாலந் தொட்டு இந்நாள்வரை வழங்கி வருமாயினும் தற்காலத்தில் அருகிய வழக்காகவே காணப்படுகின்றது. இவ்வுயர்ந்தோங்கிய பண்பு அழிந்து விடாமல் காத்து வருதல் ஒவ்வொரு தமிழரின் கடமையாகக் கருதப்படுதல் வேண்டும்; விருந்தோம்பி மனமகிழ்ந்து நிறைவுடன் வாழ்தல் நற்பயனை விளைவிக்கும்; மனித நேயத்தை மென்மேலும் வளர்க்கும்; மண்ணுலகில் மனிதம் தழைத்து ஓங்கும்.

விருந்தோம்பல் பண்பு குறித்து வருங்காலத்தில் மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுத் தலைப்புகளும் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன:

மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுத் தலைப்புகள்

- தமிழர் உணவு முறையில் இடம் பெற்றுள்ள அறிவியல் கருத்துகள்.
- தமிழகத்தில் விருந்தினர்கள் பற்றிய வரலாற்று நோக்கியல் ஆய்வு.
- தமிழர் உணவுப் பொருட்களில் இடம் பெற்றுள்ள உயிர்ச்சத்துகள் குறித்த ஆய்வு.
- தமிழரின் விருந்திற்கும், மேலை நாட்டவரின் விருந்திற்கும் உள்ள ஒப்புமை.
- தமிழர் உணவு குறித்து மேலை நாடுகளில் கள ஆய்வு முறையில் ஆய்தல்.
- விருந்தோம்பலுக்குரிய காலம், இடம், சூழல் போன்றவற்றை ஆய்வு செய்தல்.
- தமிழர் விழாக்களில் விருந்து பெறும் இடத்தை களஆய்வு செய்தல்.
- மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை 'விருந்து' என்னும் பண்பினுக்குக் கொடுக்கப்படும் மேன்மையான இடம்.
- தமிழர் கதைகளில் இடம் பெற்றுள்ள விருந்தோம்பல் குறித்த செய்திகள்.
- தமிழ் இலக்கிய விருந்து பற்றிய கருத்துகளை உலக இலக்கியங்கள் பலவற்றுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்தல்.

XXXXX

துணைநூற்பட்டியல்

துணைநூற்பட்டியல்

முதன்மை ஆதாரங்கள்

	பரிமணம், அ.மா., **பாலசுப்பிரமணியன், கு.வெ.,** (பதிப்பாசிரியர்கள்)	**சங்க இலக்கியத் தொகுதி முழுவதும்** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை - 600 098. மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 2007.
1.	**ஆலிஸ், அ.,** (உரையாசிரியர்)	**பதிற்றுப்பத்து (மூலமும் உரையும்)** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை - 600 098. மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 2007.
2.	**சுப்பிரமணியன், பெ.,** **பாலசுப்பிரமணியன், கு.வெ.,** (உரையாசிரியர்கள்)	**பரிபாடல்** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 41-பி, சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை - 600 098. மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 2007.
3.	**செயபால், இரா.,** (உரையாசிரியர்)	**அகநானூறு** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை - 600 098. மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 2007.
4.	**நாகராசன், வி.,** (உரையாசிரியர்)	**குறுந்தொகை** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை - 600 098. மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 2007.

5. **நாகராசன், வி.,**
(உரையாசிரியர்)
பத்துப்பாட்டு
இரண்டாம் பகுதி,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ தொழிற்பேட்டை,
அம்பத்தூர், சென்னை - 600 098.
மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 2007.

6. **தட்சிணாமூர்த்தி, ஆ.,**
(உரையாசிரியர்)
ஐங்குறுநூறு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ தொழிற்பேட்டை,
அம்பத்தூர், சென்னை - 600 098.
மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 2007.

7. **விசுவநாதன், அ.,**
(உரையாசிரியர்)
கலித்தொகை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ தொழிற்பேட்டை,
அம்பத்தூர், சென்னை - 600 098.
மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 2007.

8. **பாலசுப்பிரமணியன், கு.வெ.,**
(உரையாசிரியர்)
நற்றிணை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ தொழிற்பேட்டை,
அம்பத்தூர், சென்னை - 600 098.
மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 2007.

9. **பாலசுப்பிரமணியன், கு.வெ.,**
விசுவநாதன், அ.,
நாகராசன், வி.,
அரோக்கியசாமி, இரா.,
திலகவதி, க.,
சத்தியநாராயணன், வெ.,
(உரையாசிரியர்கள்)
புறநானூறு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ தொழிற்பேட்டை,
அம்பத்தூர்,சென்னை - 600 098.
மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 2007.

துணைமை ஆதாரங்கள்

1. **அண்ணாமலை, மு.,** **நமது பண்பாட்டில் நாட்டுப்புற இலக்கியம்**
மருதமலையான் பதிப்பகம்,
சென்னை – 14.
முதற்பதிப்பு, அக்டோபர் 1984.

2. **அலெக்ஸ் இதயராசு, அ.மா.,** **திருக்குறளில் மனிதநேயம்**
தென்றல் நிலையம்,
12 பி, மேல சன்னதி,
சிதம்பரம் – 608 001.
முதற்பதிப்பு, செப்டம்பர் 2003.

3. **அழகுகிருஷ்ணன், பொ.,** **சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும்**
ஐந்திணைப் பதிப்பகம்,
சென்னை – 5.
முதற்பதிப்பு, அக்டோபர் 1988.

4. **அழகம்மை, கே.பி.,** **சமூக நோக்கில் சங்க மகளிர்**
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை – 108.
முதற்பதிப்பு, ஆகஸ்ட் 2001.

5. **அறவாணன், க.ப.,** **தமிழரின் தாயகம்**
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை – 113.
முதற்பதிப்பு, ஜூன் 1984.

6. **ஆறுமுகம், அ.,** **சங்க இலக்கியத்தில் குடும்பம் உடைமை அரசு**
பாவேந்தர் பதிப்பகம்,
4/91, சீரகம் திருமழபாடி
அரியலூர் மாவட்டம், திருச்சி – 621 851.
முதற்பதிப்பு, நவம்பர் 1994.

7. **இதயகீதம் இராமானுஜம்** — **இலக்கியத்தில் மனிதநேயம்**
கலைவாணி புத்தகாலயம்,
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்,
16/2 ராஜாபாதர் தெரு,
பாண்டிபஜார்,
தி.நகர், சென்னை – 17.
முதற்பதிப்பு, டிசம்பர் 1992.

8. **இலக்குவனார், சி.,** — **இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்**
வள்ளுவர் பதிப்பகம்,
புதுக்கோட்டை.
முதற்பதிப்பு, 1972.

9. **இராணி, சி.,** — **விருந்தோம்பல் மாண்பு**
விஜய் பதிப்பகம்,
2/94, செருவாவிடுதி தெற்கு,
பட்டுக்கோட்டை,
தஞ்சாவூர் – 614 628.
முதற்பதிப்பு, அக்டோபர் 2007.

10. **இராசமாணிக்கனார், மா.,** — **தமிழர் நாகரிகம் பண்பாடு**
பாரி நிலையம்,
சென்னை – 108.
ஒன்பதாம் பதிப்பு, 1989.

11. **இராஜகோபாலாச்சாரியார்** — **மகாபாரதம்**
வானதி பதிப்பகம்,
சென்னை – 17.
பத்தொன்பதாம் பதிப்பு, 1991.

12. **இராமநாத செட்டியார், லெ.ப. கரு** — **சங்கத் தமிழர் வாழ்வு**
முத்தையா பதிப்பகம்,
சிதம்பரம்.
முதற்பதிப்பு, 1967.

13. **இராமநாத செட்டியார், லெ.ப.கரு.,** — **நோக்கு**
முத்தையா பதிப்பகம்,
சிதம்பரம்.
மூன்றாம் பதிப்பு, சூன் 1974.

14. **இராமகிருஷ்ணன்,ஆ.,** — **தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்**
சர்வோதய இலக்கியப் பண்ணை,
மதுரை – 625 001.
இரண்டாம் பதிப்பு, செப்டம்பர் 1996.

15. **ஏகாம்பரம், ஆ.,** — **ருந்தோம்பல் அன்றும் இன்றும்,**
இலக்கிய வெளியீடு,
முதற்பதிப்பு, ஏப்ரல் 2003.

16. **கந்தசாமி, இல. செ.,** — **வேளாண்மையும் பண்பாடும்**
தமிழ்நாடு வேளாண்மை
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்.
முதற்பதிப்பு, 1974.

17. **கம்பன் அறநிலை** — **கம்பராமாயணம் (சுந்தரகாண்டம்)**
வர்த்தமானன் பதிப்பகம்,
சென்னை – 17.
முதற்பதிப்பு, 1996.

18. **கல்யாணசுந்தரனார், திரு.வி.,** — **பெண்ணின் பெருமை**
புனித புத்தக நிலையம்,
முதற்பதிப்பு, 1973.

19. **கல்யாணசுந்தரனார், திரு.வி.,** — **நாயன்மார் வரலாறு**
பூம்புகார் பதிப்பகம்,
63, பிராட்வே,
சென்னை – 108.
முதற்பதிப்பு, மார்ச் 1994.

20. **கலைவாணி. ந.,** **மாந்தைப் பள்ளு**
அப்பர் பதிப்பகம்,
சிவனருள் நிலையம்,
3/401, வள்ளலார் தெரு,
அண்ணாநகர், ஆவடி, ஐ.எ. எஃப்,
சென்னை – 17.
முதற்பதிப்பு, 2009.

21. **கவிக்கோ அப்துல் ரகுமான்** **இரகசியம் பூ**
நேஷ்னல் வெளியீட்டாளர்,
தி. நகர், சென்னை – 17.
முதற்பதிப்பு, 2005.

22. **கணேசன், பி.சி.,** **வள்ளுவர் உணர்த்தும் இல்லற தர்மம்**
தாமரை புத்தகம் வெளியிடுவோர்,
சென்னை – 87.
முதற்பதிப்பு, 1991.

23. **காந்தி, கா.,** **தமிழர் எண்ணங்கள்**
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 113.
முதற்பதிப்பு, மார்ச் 1983.

24. **காமாட்சி, பி.,** **பெரியபுராணம் காட்டும்**
சமுதாய நிலை
இரத்தினா பதிப்பகம்,
திண்டுக்கல் – 624 008.
முதற்பதிப்பு, ஜனவரி 1993.

25. **கைலாசபதி, க.,** **ஒப்பியல் இலக்கியம்**
குமரன் வெளியீட்டாளர்,
வடபழனி, சென்னை – 26.
முதற்பதிப்பு, 1999.

26. **கோவிந்தன், கா.,** **பண்டைத் தமிழர் போர் நெறி**
வள்ளுவர் பண்ணை,
சென்னை – 35.
இரண்டாம் பதிப்பு, டிசம்பர் 1984.

27. **கோவிந்தசாமி, மு.,** **பாரதிதாசன் கவித்திறன்**
(மீனாட்சி மகளிர் கல்லூரி நூலகம்),
பதிப்பு ஆண்டு இல்லை.

28. **சசிவல்லி** **தமிழர் திருமணம்**
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 113.
முதற்பதிப்பு, மே 1985.

29. **சண்முகசுந்தரம், வை.,** **ஏலாதியும் தமிழ்ப்பண்பும்**
ஸ்ரீமகள் நிறுவனம்,
சென்னை – 1.
முதற்பதிப்பு, ஆகஸ்ட் 1957.

30. **சண்முகப்பிள்ளை** **சங்கத்தமிழர் வாழ்வியல்**
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 113.

31. **சண்முகம்பிள்ளை, மு.,** **பதினெண் கீழ்க்கணக்கு**
(தெளிவுரையுடன்)
9, பாரதி நகர் முதல் தெரு,
தி.நகர், சென்னை–17.
இரண்டாம் பதிப்பு, மே 2003.

32. **சரளா ராசகோபாலன்** **சங்க இலக்கியத்தில் தோழி**
ஒளிப்பதிப்பகம்,
சென்னை – 18.
முதற்பதிப்பு, டிசம்பர் 1986.

33. சாலினி இளந்திரையன் — **சங்கத்தமிழரின் மனிதநேய மணிநெறிகள்**
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 113.
முதற்பதிப்பு, பிப்ரவரி 1995.

34. சிதம்பரனார், சாமி., — **எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும்**
இலக்கிய நிலையம்,
9, சௌராஸ்டிரா நகர்,
7வது தெரு, சென்னை – 94.
இரண்டாம் பதிப்பு, 1964.

35. சிதம்பரனார், சாமி., — **பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்**
இலக்கிய நிலையம்,
9, சௌராஸ்டிரா நகர்,
7வது தெரு, சென்னை – 94.
இரண்டாம் பதிப்பு, 1974.

36. சிதம்பரனார், சாமி., — **தொல்காப்பியத் தமிழ்**
பாரி நிலையம், சென்னை – 108.
நான்காம் பதிப்பு, சூலை 1986.

37. சிதம்பரனார், சாமி., — **பத்துப்பாட்டும் பண்டைய தமிழரும்**
அறிவுப் பதிப்பகம்,
இராயப்பேட்டை, சென்னை – 14.
இரண்டாம் பதிப்பு, ஆகஸ்டு 2006.

38. சாமிநாதய்யார், உ.வே., — **பத்துப்பாட்டு மூலமும் உரையும்**
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை – 18.
முதற்பதிப்பு, 1986.

39. **சுந்தரமூர்த்தி, இ.,** **இலக்கியமும் பண்பாடும்**
தென்னிந்தியக் கல்வி நிறுவனம்.
முதற்பதிப்பு, 1991.

40. **சுந்தரராசன், சே.,** **பாவேந்தரின் குடும்பவிளக்கு விளக்கவுரையுடன்**
முல்லை நிலையம்,
9, பாரதி நகர் முதல் தெரு,
தி. நகர், சென்னை – 17.
முதற்பதிப்பு, 2004.

41. **சுப்புரெட்டியார், ந.,** **தமிழ் இலக்கியங்களில் அறம், நீதி, முறை**
ஐந்திணைப் பதிப்பகம்,
275, பாரதிசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை – 5.
முதற்பதிப்பு, டிசம்பர் 1988.

42. **சுசீலா கோபாலகிருஷ்ணன்,** **சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்**
பாலாஜி பதிப்பகம்,
மதுரை – 625 020.
முதற் பதிப்பு, பிப்ரவரி 1987.

43. **செந்துறைமுத்து** **சங்ககால சமுதாய சிந்தனைகள்**
அருண்மொழிப் பதிப்பகம்,
சேலம் – 636 001.
முதற்பதிப்பு, 1989.

44. **தட்சிணாமூர்த்தி** **தமிழர் நாகரிகமும் பண்பாடும்**
யாழ் வெளியீடு,
சென்னை – 40.
முதற்பதிப்பு, செப்டம்பர் 1994.

45. தண்டாயுதம், இரா., **சங்க இலக்கியம் எட்டுத்தொகை**
தமிழ்ப் புத்தகாலயம்,
முதற்பதிப்பு, 1978.

46. திராவிடமணி, பொ., **அகநானூற்றில் இல்லற மாண்பு**
பொதிகைப் பதிப்பகம்,
21, அல்லித்தெரு, தங்கம் நகர்,
தஞ்சாவூர் – 613007.
முதற்பதிப்பு, அக்டோபர் 2007.

47. துரை இராசாராம் இராமசுப்பிரமணியம், வ. த., **வில்லிபாரதம் (மூலமும் தெளிவுரையும்)**
வில்லிபுத்தூர் ஆழ்வார்
மூன்றாம் பாகம்,
பூம்புகார் பதிப்பகம்,
127 (ப. எ.63), பிரகாசம் சாலை,
பிராட்வே, சென்னை – 600 108.
முதற்பதிப்பு, சூலை 2001.

48. செல்வராசு, நா., **சங்க இலக்கியமும் சமூகவியலும்**
மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை – 108.
முதற்பதிப்பு, அக்டோபர் 2002.

49. செல்வராசு, வே., **நாட்டுப்புறத் தெய்வங்களும் திருவிழாக்களும்**
ஜெயா பதிப்பகம்,
செல்லம் குடில், மரூர்பட்டி அஞ்சல்,
நாமக்கல் – 637019.
முதற்பதிப்பு, ஆகஸ்ட் 2008.

50. நடராஜன், மு., **தானத்தில் சிறந்தது அன்னதானம்**
சீனிவாசப் பதிப்பகம்.
முதற்பதிப்பு, ஜனவரி 1993.

51. **நவநீத கிருஷ்ணன், சு.,** **கம்பராமாயணத்தில் காணப்பெறும் சமுதாயப் பழக்கங்கள்**
பாக்கியலட்சுமி பதிப்பகம்,
புதிய எண்; 8(10//1),
கணபதி நகர், ஓரகடம்,
அம்பத்தூர், சென்னை – 53.
முதற்பதிப்பு.

52. **நமச்சிவாயம், சே.,** **தமிழர் உணவு**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
தரமணி, சென்னை – 113.
இரண்டாம் பதிப்பு, 1981.

53. **பக்தவத்சல பாரதி, ஆ.பெ.,** **பண்பாட்டு மானிடவியல்**
மெய்யப்பன் பதிப்பகம்,
53, புதுத்தெரு,
சிதம்பரம் – 608 001.
முதற்பதிப்பு, நவம்பர் 1990.

54. **பகவதி, கு.,** **தமிழர் ஆடைகள்**
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 113.
இரண்டாம் பதிப்பு, 1980.

55. **பழனிச்சாமி. செ.,** **புறநானூற்றில் தமிழர் பண்பாடு**
வாணி பதிப்பகம்,
402, அளகேசன் சாலை,
கோவை – 641 011.
முதற்பதிப்பு, ஏப்ரல் 1989.

56. **பாலசுப்பிரமணியன், கு. வே.,** **சங்கஇலக்கியத்தில் புறப்பொருள்**
உமா பதிப்பகம்,
கும்பகோணம்.
முதற்பதிப்பு, டிசம்பர் 1986.

57. **பாலசுப்பிரமணியன், பி.,** **தமிழக வரலாறு**
நறுமலர் பதிப்பகம்,
சென்னை – 29.
இரண்டாம் பதிப்பு, திசம்பர் 1985.

58. **பாலதண்டாயுதம், கே.,** **இலக்கியத்தில் மனிதநேயம்**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
பிரைவேட் லிமிடெட்
41–பி, சிட்கோ தொழிற்பேட்டை,
சென்னை – 600 098.
மூன்றாம் பதிப்பு, மார்ச் 1992.

59. **பிள்ளை, கே.கே.,** **தமிழக வரலாறு மக்கள் பண்பாடும்**
உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 113.
மறுபதிப்பு, 2002.

60. **புலியூர்க்கேசிகன்** (உரையாசிரியர்) **மணிமேகலை**
பாரி நிலையம்,
சென்னை – 108.
முதற்பதிப்பு, மார்ச் 1961.

61. **புலியூர்க் கேசிகன்** (உரையாசிரியர்) **கலிங்கத்துப்பரணி**
பாரி நிலையம், சென்னை – 108.
முதற்பதிப்பு, மார்ச் 1958,
எட்டாம் பதிப்பு, சனவரி 1979.

62. **புலியூர்க்கேசிகன்** (உரையாசிரியர்) **திருக்குறள் பரிமேலழகர் உரை,**
பாரி நிலையம்,
சென்னை – 108.
ஐந்தாம் பதிப்பு, மே 1993.

63. **புலியூர்க்கேசிகன்** (உரையாசிரியர்)
தொல்காப்பியம்
பாரி நிலையம்,
சென்னை 108.
பதினொன்றாம் பதிப்பு, 2001.

64. **பொன்னுசாமி, மு.,**
சங்க இலக்கியத்தில் மெய்ப்பாட்டு இலக்கியம்
இந்து பதிப்பகம், கோயம்புத்தூர்.
முதற்பதிப்பு, 1998.

65. **பொன்னுசாமி, மு.,**
பழமொழி பண்பாடு
இந்து பதிப்பகம்,
கோயம்புத்தூர்.
முதற்பதிப்பு, 2000.

66. **பொன்னையன், அ,வ.,**
வியப்பூட்டும் விருந்துகள்
நியூ செஞ்சரி புக் ஹவுஸ்,
41-பி, சிட்கோ தொழிற்பேட்டை,
அம்பத்தூர், சென்னை - 98.
முதற்பதிப்பு, சூன் 2008.

67. **மகாலிங்கம், ப.,**
திரு.வி.க.வின் சமுதாய நோக்கு
செல்லம் பதிப்பகம், 12, நிழற் சாலை,
அசோக் நகர், சென்னை - 83.
முதற்பதிப்பு, 1999.

68. **வசந்தமலர்**
ஔவையார் நீதிநூல்கள்
கார்த்திகா பதிப்பகம்,
17/ஏ, முத்துமாரியம்மன் கோயில் தெரு,
இலட்சுமிபுரம், குரோம்பேட்டை,
சென்னை - 600 004.
முதற்பதிப்பு, டிசம்பர் 1995.

69. ராஜா உசேன், என்.,
ராதா, க.,
ஆளுமைத்திறனும் மனித மேம்பாடும்
உதயா பதிப்பகம்,
வில்லுக்குறி, நாகர்கோவில்,
குமரிவட்டம் – 629180.
இரண்டாம் பதிப்பு, 2007.

70. ஜம்புலிங்கம், அ.,
சங்ககால வேந்தர்களின் சமுதாயப்பணி
இந்து பதிப்பகம், சிதம்பரம் – 608 001.
முதற்பதிப்பு, ஏப்ரல் 2003.

71. ஜெயபாரதி, பு.,
ஹைக்கூ வடிவில் திருக்குறள் கருத்துக்கள்
மித்ராஸ் வெளியீடு,
4,2 வது குறுக்கு மகாலிங்க தெரு,
மகாலிங்கபுரம், சென்னை – 34.
முதற்பதிப்பு, ஆகஸ்ட் 2008.

72. ஜெகதீசன், ஆ.,
பாரதி பாரதிதாசன் சமூகச் சிந்தனைகள்
ராமையா பதிப்பகம்,
ஜி–4, சாந்தி அடுக்கம்,
3 ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 14.
முதற்பதிப்பு, மார்ச் 2008.

73. ஜோஸபின் டோரதி
ஔவையின் அறமொழிகள்
எழில்மதி பதிப்பகம்,
67, ஜீவன் நகர், முதல் மாடி,
ஆதம்பாக்கம், சென்னை – 88.
முதற்பதிப்பு, 2001.

அகராதிகள்

1. **இராமசுப்பிரமணியன், வ.த.,** — **திருமகள் தமிழ் அகராதி**
திருமகள் நிலையம்,
தி. நகர், சென்னை – 17.
முதற்பதிப்பு, ஏப்ரல் 2001.

2. **இன்னாசி, சூ.,** (பதிப்பாசிரியர்) — **வீரமாமுனிவர் அருளிய சதுரகராதி**
மாதா பதிப்பகம்,
சென்னை – 92.
முதற்பதிப்பு, மே 1989.

3. **கதிரைவேற்பிள்ளை, ந.,** — **தமிழ் மொழியகராதி**
ஆசியக்கல்வி நிறுவனம்,
புதுதில்லி.
பத்தாம் பதிப்பு, 1998.

4. **கந்தையாபிள்ளை, ந.சி.,** — **செந்தமிழ் அகராதி**
சைவ சித்தாந்தக் கழகம்,
சென்னை – 1.
இரண்டாம் பதிப்பு, 1957.

5. **கழகப் புலவர் குழுவினர்** — **கழகத் தமிழ் அகராதி**
திருநெல்வேலி தென்னிந்திய சைவ
சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை –18.
முதற்பதிப்பு, ஏப்ரல் 1964.

6. **கோபாலன். ப.,** — **தமிழ் இலக்கியக் கலைச்சொல் அகராதி**
ஐந்திணைப் பதிப்பகம், சென்னை 5.
முதற்பதிப்பு, அக்டோபர் 1989.

7. **சங்கரலிங்க முதலியார், நெல்லை எஸ்.,** — **வெள்ளிவிழா தமிழ்ப்பேரகராதி – 3**
தமிழ்மண் பதிப்பகம்,
2, சிங்காரவேலர் தெரு,
தி.நகர், சென்னை – 17.
முதற்பதிப்பு, 1935.

8. **சந்திரன், வீ.** — **ஆங்கில – தமிழ் அகராதி**
ராஜகுமாரி வெளியீட்டாளர்,
4/36, முகப்பேர் மேற்கு,
சென்னை – 58.
முதற்பதிப்பு, 2004.

9. **சந்தியாநடராசன்** — **மதுரைத்தமிழ்ப் பேரகராதி**
சந்தியா பதிப்பகம்,
பிளாட் ஏ, நீயுடெக்,
57–53 வது தெரு,
அசோக்நகர், சென்னை – 84.
முதற்பதிப்பு, டிசம்பர் 2004.

10. **சிங்காரவேலு முதலியார், ஆ.,** — **அபிதான சிந்தாமணி**
ஆசியக் கல்வி நிறுவனம்,
புதுதில்லி,
முதற்பதிப்பு 1988.

11. **சிதம்பரநாத செட்டியார், ஏ.,** — **ஆங்கிலத் தமிழ் அகராதி**
சென்னைப் பல்கலைக் கழகம்,
இரத்னம் அச்சகம்,
சென்னை – 1.
முதற்பதிப்பு, 1965.

12. **சுப்பிரமணியம், பா. ரா.,** — **கிரியாவின் தற்கால தமிழ் அகராதி**
கிரியா பதிப்பகம்,
சென்னை.
முதற்பதிப்பு, ஜனவரி 1992.

13. **நிலாமணி, மு.,**
தாக்கர், கலா கே.,
(தொகுப்பாசிரியர்)

தமிழ் – தமிழ் அகராதி
நல்லறப் பதிப்பகம்,
21, விவேகானந்தர் தெரு,
தியாகராய நகர்,
சென்னை – 17.
முதற் பதிப்பு, 2005.

14. **பதிப்புக் குழுவினர்**

தமிழ்ப் பேரகராதி தொகுதி – 6
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை – 5.
முதற் பதிப்பு 1982.

15. **பதிப்புக் குழுவினர்**

வாழ்வியற் களஞ்சியம் தொகுதி – 4
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.
முதற் பதிப்பு, 1991.

16. **மூர்த்தி, அ, கி.,**

லியோவின் அகராதி
(முத்தமிழ் அகர வரிசை)
லியோ புத்தக வெளியீட்டாளர்,
50, முதல்நெடுஞ்சாலை (தரைத்தளம்)
சி.ஐ.டி.நகர், சென்னை – 35.
இரண்டாம் பதிப்பு, டிசம்பர் 2008.

17. **லேனா தமிழ்வாணன்**

மணிமேகலைத் தமிழ்ச்
சொல்லகராதி
மணிமேகலை பிரசுரம்,
தி. நகர், சென்னை – 17.
முதற்பதிப்பு, 1979.

18. **லாசரஸ், ஜி. பி.,**

செந்தமிழ் அகராதி
ராஜேஸ்வரி புத்தக நிலையம்,
4, முத்து கிருஷ்ணன் தெரு,
பாண்டிபஜார், தி. நகர், சென்னை – 17.
முதற்பதிப்பு, நவம்பர் 2007.

19. **வின்சுலோ, எம் .,** **தமிழ் ஆங்கில அகராதி**
ஆசியக் கல்வி நிறுவனம்,
புதுதில்லி.
முதற்பதிப்பு, ஆகஸ்ட் 1983.

ஆய்வுக் கட்டுரைகள்

1. **கிருஷ்ணமூர்த்தி, ச.,** **தமிழ் இலக்கியத்தில் மனிதநேயம்**
(பதிப்பாசிரியர்) கருத்தரங்குக் கட்டுரைகள்,
வெள்ளிக் கருத்தரங்கு,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி – 113.
முதற்பதிப்பு, 2006.

கமலா, இரா., **தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம்**

கார்த்திகேயன், ஆ., **மனிதநேயமும் அண்ணல்**
நபி (ஸல்) அழகிய வரலாறும்

சுப்பையா பிள்ளை **கணினி மொழி ஆய்வில் மனிதநேயம்**

பகவதி, கு., **மனிதநேயக்கொடை**

2. **பழனிசாமி, கருவை.,** **விருந்தோம்பல் – ஒரு**
பொருளதார உத்திமுறை
பன்னிரண்டாவது கருத்தரங்கு
ஆய்வுக் கோவை தொகுதி – 3,
இந்தியப்பல்கலைக் கழகத்
தமிழாசிரியர் மன்ற வெளியீடு,
அண்ணாமலைநகர் – 608 002.
முதற்பதிப்பு, 1980.

3. செல்வராசு, நா., சிலம்பு., **சங்க இலக்கியம் (சமூகவியல் கட்டுரைகள்)**
அனிச்சம் இலக்கிய வட்டம் 97,
97, பசனை மடத் தெரு,
மஞ்சினி நகர், முத்தியால்பேட்டை,
புதுச்சேரி - 605 003.
முதற்பதிப்பு, மே 1996.

4. ஜெயதேவன், வ., சிராஜ், உன்னிஸா நாசர் (தொகுப்பாசிரியர்கள்) **தமிழியலின் எதிர்காலவியல் பாகம் - 5**
கலைஞன் பதிப்பகம்,
19, கண்ணதாசன் சாலை,
தி. நகர், சென்னை - 17.
முதற்பதிப்பு, 2006.

சத்தியபாமா, பொ., **பண்பாடு விருந்தோம்பல்**

ஆய்வேடுகள்

1. அன்னம்மாள், எஸ்., **இலக்கியங்களில் மனிதரும் மதிப்பு மாற்றங்களும்**
தமிழ்த்துறை,
செல்லம்மாள் மகளிர் கல்லூரி,
பச்சையப்பன் அறக்கட்டளை,
கிண்டி, சென்னை - 600 032.
சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெற்ற ஆய்வேடு,
ஆகஸ்ட், 2005.

2. இராசகோபாலன், நா., **வில்லி பாரதத்தில் மனித மாண்பியல்**
தமிழ்த்துறை,
தேசியக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி
சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெற்ற ஆய்வேடு, 1981.

3. **சுப்பிரமணியன், க.,** — **தமிழ்ப் பண்பாட்டில் பாரதச் செல்வாக்கு**
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை – 5.
அக்டோபர் 1995.

4. **சுப்புலட்சுமி, ஆர்.,** — **சங்க இலக்கியத்தில் மனித நேயம்**
தமிழ்த்துறை,
அண்ணா ஆதர்ஸ் மகளிர் கல்லூரி
சென்னை – 40.
சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெற்ற ஆய்வேடு,
ஏப்ரல் 1995.

5. **ரேகா பானு, ந.,** — **சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்,**
தமிழ்த்துறை,
திரு. கொளஞ்சியப்பா அரசு கலைக்
கல்லூரி, விருதாச்சலம் – 606001.
சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு
அளிக்கப்பெற்ற ஆய்வேடு,
அக்டோபர் 1994.

இதழ்கள்

அருள்திரு தியான் சந்திகார்

தினமணி நாளிதழ் தலையங்கப் பகுதி (25.12.2001).

சிறப்பு மலர்

அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஏழாம் மாநாடு 2007.

கவிக்கோ. அப்துல் ரகுமான்
தக்கலை பஷீர்
சேதுகுடியன்
ஷாஜஹான், எஸ். எஸ்.,
(பதிப்பாசிரியர்கள்)

இஸ்லாமிய இலக்கியக் கழகம்
27, உட்ஸ் சாலை,
அண்ணாசாலை,
சென்னை – 600 002.
முதற் பதிப்பு, 2007.

பின்னிணைப்புகள்

சங்க இலக்கிய விருந்தோம்பல் தொடர்பான காட்சிகள்

1. இனிதெனக் கணவனுண்டலின் நுண்ணிதின் மகிழ்ந்தன்று (குறுந்.167)
2. எம் வறுங்கலம் நிறைப்போன் (புறம்.171)
3. விருந்துவரக் கரைந்த காக்கை (குறுந்.210)
4. விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் (குறிஞ். பா.201-207)
5. விருந்து அயர் விரும்பினள் (நற். 374)
6. விளக்கம் எண்ணும் கண்டல் வேலிக் (நற். 372)
7. கொடுங் கண் காக்கைக் கூர் வாய்ப் பேடை (நற்.367)
8. தான் தர உண்ட நனை நறவு (பதிற்று: 4ஆம் பத்து)
9. நல் மனை நனி விருந்து (நற்.250)
10. பிழி நொடை கொடுக்கும் (பதிற்று: 3ஆம் பத்து)
11. பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கை (அகம்.141)
12. கை வண்மைக் கடுமான் கோதை (புறம் : 54)
13. மெய்ம்மலி உவகையின் உகுபனி (குறுந்.398)
14. தேரொடுவந்த விருந்து எதிர்கோடல் (ஐங். 482)
15. விருந்து அயர் விரும்பினள் (நற்.361)

இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்தன்று



முளிதயிர்ப் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கழுமத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவ னுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே!

(குறுந். 167)

எம் வறுங்கலம் நிறைப்போன்



"இன்று செலினும் தருமே; சிறுவரை
நின்று செலினும் தருமே; பின்னும்
'முன்னே தந்தனென்' என்னாது, துன்னி
வைகலும் செய்யினும் பொய் கலன் ஆகி
யாம் வேண்டியாங்கு எம் வறுங்கலம் நிறைப்போன்"

(புறம். 171)

விருந்துவரக் கரைந்த காக்கை



"திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யின், தொண்டி"
முழுவதுடன் விளைந்த வெண்ணெய் வெஞ்சோறு
கலந்து ஏந்தினும் சிறிது என் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே"

(குறுந்தொகை. 210)

விருந்து உண்டு எஞ்சிய மிச்சில்



"வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப,
மலரத் திறந்த வாயில் பலர் உண,
பைந்நிணம் ஒழுகிய நெய்ம்மலி அடிசில்
வசைஇல் வான்திணைப் புரையோர் கடும்பொடு
விருந்து உண்டு எஞ்சிய மிச்சில், பெருந்தகை
நின்னோடு உண்டலும் புரைவது".

(குறிஞ். பா:201-207)

விருந்து அயர் விரும்பினள்

"..... அம் மா அரிவை
விருந்து அயர் விருப்பொடு விருந்தினள் அசைஇய
முறுவல் இன் நகை காண்கம்!"

(நற். 81)

"விருந்து அயர் விருப்பினள் வருந்தும்
திருந்துகுழை அரிவைத் தேமொழி நிலையே?"

(நற். 374)

விளக்கம் எண்ணும் கண்டல் வேலி



“ ... ‘அடைந்ததற்கு
இனையல் என்னும்’ என்ப – மனை இருந்து,
இருங் கழி துழவும் பனித் தலைப் பரதவர்
திண் திமில் விளக்கம் எண்ணும்
கண்டல் வேலிக் கழி நல் ஊரே“”

(நற். 372)

கொடுங் கண் காக்கைக் கூர் வாய்ப் பேடை

"கொடுங் கண் காக்கைக் கூர் வாய்ப் பேடை
நடுங்கு சிறைப் பிள்ளை தழீஇ, கிளை பயிர்ந்து,
கருங் கண் கருனைச் செந்நெல் வெண் சோறு
சூருடைப் பலியொடு கவரிய, குறுங் கால்
கூழுடை நல் மனைக் குழுவின இருக்கும்."

(நற். 367)

தான் தர உண்ட நனை நறவு

"புன் கால் உன்னம் சாய தெண் கண்
வறிது கூட்டு அரியல் இரவலர்த் தடுப்ப
தான் தர உண்ட நனை நறவு மகிழ்ந்து
நீர் இமிழ் சிலம்பின் நேரியானே"

(பதிற்று: 4ஆம் பத்து)

நல் மனை நனி விருந்து

"நல் மனை நனி விருந்து அயரும்
கை தூவின்மையின் எய்தாமாறே"

(நற்: 280)

பிழிநொடை கொடுக்கும்

"காந்தள்அம் கண்ணிக் கொலை வில் வேட்டுவர்
செங்கோட்டு ஆமான் ஊனொடு காட்ட
மதனுடை வேழத்து வெண் கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழி நொடை கொடுக்கும்
குன்று தலைமணந்த புன்புல வைப்பு"

(பதிற்று. 3ஆம் பத்து)

பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கை

புதுமண மகடூஉ அயினிய கடிநகர்ப்
பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇ,
கூழைக் கூந்தற் குறுந்தொடி மகளிர்
பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்து
பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கை,

(அகம் - 141)

கை வண்மைக் கடுமான் கோதை

"இரவலர்க்கு எண்மை யல்லது புரவு எதிர்ந்து
வானம் நாண, வரையாது, சென்றோர்க்கு
ஆனாது ஈயும் கவி கை வண்மைக்
கடுமான் கோதை"

(புறம். 54)

மெய்ம்மலி உவகை



"அரும்பெறற் காதலர் வந்தென, விருந்து அயர்வு
மெய்ம்மலி உவகையின் எழுதரு
கண்கலிழ் உகுபனி அரக்குவோரே"

(குறுந்தொகை : 398)

தேரொடுவந்த விருந்து எதிர்கோடல்



"எல்லினை வருதி; எவன் குறித்தனை? எனச்
சொல்லாதிருப்பேனாயின் ஒல்லென
விரி உளைக்கலிமான் தேரொடுவந்த
விருந்து எதிர்கோடலின் மறப்பல் என்றும்"

(ஐங். : 482)

விருந்து அயர் விரும்பினள்

"தந்தன நெடுந்தகை தேரே; என்றும்
அரும் படர் அகல நீக்கி,
விருந்து அயர் விரும்பினள் திருந்து இழையோளே"

(நற் : 361)

நீதி நூல் இலக்கியத்தில் விருந்தோம்பல் தொடர்பான காட்சிகள்

பொருளடக்கம்

1. உழந்தும் உழவே தலை
2. விருந்து ஏற்பர் விண்ணோர்
3. விருந்து புறத்ததாத் தானுண்டல்

உழந்தும் உழவே தலை

சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை

"ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமென்றே – ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

(நல்வழி. 13)

விருந்து ஏற்பர் விண்ணோர்



"இன்சொல் அளாவல் இடம்இனி தூண்யாவர்க்கும்
வன்சொல் களைந்து வகுப்பானேல் – மென்சொல்
முருந்து ஏய்க்கும் முட்போல் எயிற்றினாய் நாளும்
விருந்து ஏற்பர் விண்ணோர் விரைந்து"

(ஏலாதி பாடல்.7)

புறத்ததாத் தானுண்டல்

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவாமருந்து
எனினும் வேண்டற்பாற்(று) அன்று"

(குறள். 82)

காப்பிய இலக்கியத்தில் விருந்தோம்பல் தொடர்பான காட்சி

1. மடைமையிற் காதலற்கு ஆக்கி
2. விருந்தெதிர் கோடல் இழந்த என்னை
3. உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோர்
4. ஊனமுற்றோருக்கு அளித்த விருந்து

மடைமையிற் காதலற்கு ஆக்கி

மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்
திருமுகம் வியர்த்தது; செங்கண் சேந்தன;
கரிபுற அட்டில் கண்டனள் பெயர
வைஎரி மூட்டிய ஐயை தன்னொடு
கையறி மடைமையிற் காதலற்கு ஆக்கித்....

(சிலப்பதிகாரம் கொலைக்களக் காதை: 16)

விருந்தெதிர் கோடல் இழந்த என்னை

"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

(சிலம்பு. கொலைக்களக்காதை. 16)

“உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோர்”

“உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே”

(மணிமேகலை.11)

ஊனமுற்றோருக்கு அளிக்கும் விருந்து



"காணார் கேளார் கால்முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்"

(மணிமே 11 : 95-96)